★
REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK

2023 டிசம்பர் 1 வெள்ளிக்கிழமை

# தினகரன்
THINAKARAN தினகரன்

வரு. 91 இல. 285 | Friday 01, December, 2023 | 28 பக்கங்கள் | 50/-

## ஆபரண தங்கத்தின் விலை அதிகரிப்பு



நாட்டில் தங்கத்தின் விலையில் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதாக, சந்தை நிலவரங்கள் தெரிவிக்கின்றன. நேற்றைய (30) நிலவரப்படி, தங்கத்தின் விலை புதிய உச்சத்தை எட்டியுள்ளது.

06

## சர்வதேச நாணய நிதியத்தின்
# இரண்டாம் தவணை கடன் இம் மாதம் கிடைக்கும்

### பாராளுமன்றில் ஆற்றிய விசேட உரையில் இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க நம்பிக்கை



**IMF இன் ஒத்துழைப்புடன் நாட்டை வெகுவிரைவில் மீளக் கட்டியெழுப்ப முடியுமென்றும் நேற்று தெரிவிப்பு**

**லோரன்ஸ் செல்வநாயகம்**

சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்புடன் வங்குரோத்து நிலையிலுள்ள நாட்டை வெகுவிரைவில் மீளக் கட்டியெழுப்ப முடியுமென்றும் இரண்டாம் தவணைக் கடனை டிசம்பர் மாதம் பெற்றுக்கொள்ள முடியுமென்றும் நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

சர்வதேச நாணய நிதியத்தின் இரண்டாம் தவணைக் கடனை பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கைகள் வெற்றியளித்துள்ளதாக தெரிவித்த அவர், தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள மறுசீரமைப்பு திட்டங்களில் எவ்வித மாற்றமும் ஏற்படாது என்றும் சபையில் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று விசேட கூற்றொன்றை முன்வைத்து உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். இது தொடர்பில் அவர் சபையில் மேலும் தெரிவிக்கையில்,

06

## வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் திறைசேரிக்கு ரூ.700 கோடி பங்களிப்பு

### அமைச்சர் மனுஷ ஜனாதிபதியிடம் கையளிப்பு



தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார, 400 கோடி (04 பில்லியன்) ரூபா காசோலையை திறைசேரியிடம் கையளித்தார். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் நடைபெற்ற சந்திப்பில், அமைச்சர் மனுஷ நாணயக்கார இக்காசோலையை

06

## ஜனாதிபதி ரணில் நேற்று டுபாய் பயணமானார்



டுபாயில் நடைபெறவுள்ள COP 28 அரச தலைவர்கள் மாநாட்டில் பங்கேற்பதற்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்று (30) காலை நாட்டிலிருந்து புறப்பட்டுச் சென்றதாக ஜனாதிபதி ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

நேற்று 30 முதல் டிசம்பர் 12 வரை

06

## போதகர் ஜெரோம் CIDயில் 08 மணி நேர வாக்குமூலம்



மதங்கள் குறித்து சர்ச்சை கருத்துக்களை வெளியிட்ட போதகர் ஜெரோம் பெர்னாண்டோ, நேற்று (30) காலை குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் (CID) ஆஜரானார். சுமார் 8 மணி நேரம் நீடித்த

06

## நத்தார், புத்தாண்டை முன்னிட்டு Expo Mela விற்பனை கண்காட்சி

### சுதந்திர வர்த்தக வலயத்தில் டிசம்பர் 07–14 வரை

நத்தார் பண்டிகையையும் புதுவருட ஆரம்பத்தையும் முன்னிட்டு FTZMA விற்பனை வலயத்திட்ட கண்காட்சி கட்டுநாயக்க சுதந்திர வர்த்தக வலயத்தில் நடத்தப்படவுள்ளது. இக்கண்காட்சி, டிசம்பர் 07 புதன்கிழமை பி.ப.06.30 மணிக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது.

இலங்கை மக்கள் மற்றும் வெளிநாட்டு உல்லாசப் பயணிகளை கவரும் வகையில் நூறு மலிவு விற்பனை கூடங்களை உள்ளடக்கியதாக இது ஆரம்பிக்கப்படவுள்ளது. மூன்று ஏக்கர் நிலப்பரப்பில் இவ்விற்பனைக் கூடங்கள் உள்ளடக்கப்பட்டிருக்கும். இவ்விற்பனை கூடங்கள் டிசம்பர் 14 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளதாக போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், ஊடகத்துறை அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

இது தொடர்பான செய்தியாளர் சந்திப்பு அரச தகவல்

06

## கடற்றொழில் துறை அபிவிருத்திக்கு அமெரிக்க அரசு உதவிகள் வழங்கும்



### அமெரிக்க தூதுவர் ஜூலி சங் அமைச்சர் டக்ளஸிடம் உறுதி

இலங்கையின் கடற்றொழில் துறையை அபிவிருத்தி செய்வதற்காக தொழில்நுட்ப ரீதியிலும் பொருளாதார ரீதியிலும் உதவிகளை வழங்குவது தொடர்பில் ஆராய்வதாக, இலங்கைக்கான அமெரிக்க தூதர் ஜூலி சங் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் தெரிவித்தார்.

இலங்கைக்கான அமெரிக்க தூதர் ஜூலி சங் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை

06

## வங்காள விரிகுடாவில் தாழமுக்கம்: நான்கு மாகாணங்களில் மழை



வங்காள விரிகுடா கடல் பிராந்தியத்தின் தென்கிழக்குப் பகுதியில் வளிமண்டலவியல் தளம்பல் நிலை காணப்படுவதால், நாடு முழுவதிலும் மழையுடனான வானிலை அதிகரித்துக் காணப்படும் என எதிர்பார்க்கப்படுவதாக சிரேஷ்ட வானிலை அதிகாரி கலாநிதி மொஹமட் சாலிஹீன் தெரிவித்தார்.

வானிலை குறித்து அவர் மேலும் கூறும் போது,

வடக்கு, கிழக்கு மற்றும் வடமத்திய மாகாணங்களில் அடிக்கடி மழை அல்லது இடியுடன்

06

### பாராளுமன்ற சிறப்புரிமையின் கீழ்
## அமைச்சரவை தீர்மானங்களை கேள்விக்குட்படுத்த முடியுமா?
### சட்ட மாஅதிபரிடம் ஜனாதிபதி அலுவலகம் கேள்வி



அமைச்சரவையில் எடுக்கப்பட்ட தீர்மானம் தொடர்பில் பாராளுமன்ற சிறப்புரிமையின் கீழ் கேள்வி எழுப்ப முடியுமா? என, சட்ட மாஅதிபரிடம் ஜனாதிபதி அலுவலகம் வினவியுள்ளது.

வரவு செலவுத் திட்ட விவாதத்தின் போது சில பாராளுமன்ற

06

## இலங்கையின் கடன்மறுசீரமைப்பு தொடர்பான இணக்கப்பாடு

### அமெரிக்க தூதுவர் வரவேற்பு

உத்தியோகபூர்வ கடன் வழங்குநர்கள் குழுவுடன் கடன் மறுசீரமைப்பு தொடர்பான இலங்கையின் உடன்படிக்கை குறித்து மகிழ்ச்சியடைவதாக இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஜூலி சங் தெரிவித்துள்ளார்.

இது குறித்து தனது டுவிட்டர் தளத்தில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

கடன் மறுசீரமைப்பு மற்றும் உறுதியான பொருளாதாரக் கொள்கைகள் தொடர்பான உடன்படிக்கை, சர்வதேச நாணயநிதியத்தின் அடுத்த தவணையை சரியான நேரத்தில் வெளியிடுவதற்கு முக்கியமானது. இது இலங்கை மக்களுக்கு நன்மையளிக்கும். தொடர்ச்சியான பொருளாதார ஸ்திரப்படல், மீட்சி மற்றும் பொது சேவைகளை மேம்படுத்துவதற்கு தேவையான நிதி உதவியை வழங்கும். இது இலங்கையின் பொருளாதார ஸ்திரத்தன்மைக்கான

06

## தெங்கு வருவாயை அதிகரிக்க திட்டம்

### 05 வருட வேலைத்திட்டம் ஜனவரியில்

**(லோரன்ஸ் செல்வநாயகம்)**



தேங்காய் ஏற்றுமதி மூலம் கிடைக்கும் வருமானத்தை (02 பில்லியன்) 200 கோடி ரூபாவாக அதிகரிக்கும் இலக்கிலான திட்டத்தை நடைமுறைப்படுத்த தீர்மானித்துள்ளதாக விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

06

## பாராளுமன்றத்தில் தெரிவிக்கப்படும் கூற்றுக்கு வழக்கு தொடர முடியாது

### உரிய கவனம் செலுத்தப்படுமென்கிறார் சபாநாயகர்



**(லோரன்ஸ் செல்வநாயகம்)**

பாராளுமன்றத்தில் தெரிவிக்கப்படும் கூற்றொன்றை அடிப்படையாகக் கொண்டு நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்ய முடியாதென, சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

பாராளுமன்ற அதிகாரங்கள் மற்றும் சிறப்புரிமைகள் சட்டத்துக்கிணங்க பாராளுமன்றத்தில் தெரிவிக்கப்படும் கூற்றொன்றை அடிப்படையாகக்கொண்டு வழக்குத் தொடுக்க முடியாதென சபையில் குறிப்பிட்ட அவர்,

06

## சுகாதார அமைச்சின் நிறுவனங்கள் தனியார் மயப்படுத்தப்படமாட்டாது

### மருந்து தட்டுப்பாட்டுக்கு வெகு விரைவில் தீர்வு



**(லோரன்ஸ் செல்வநாயகம்)**

சுகாதார அமைச்சின் கீழ் செயற்பட்டு வரும் எந்த ஒரு நிறுவனமும் தனியார் மயப்படுத்தப்பட மாட்டாதென சுகாதார அமைச்சர் ரமேஷ் பத்திரண பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

அரச மருந்தாக்கற் கூட்டுத்தாபனம் உட்பட எந்த நிறுவனமும் தனியார் மயப்படுத்தப்பட மாட்டாதென தெரிவித்த அவர், அது தொடர்பில் எந்த தீர்மானமோ அல்லது நடவடிக்கைகளோ மேற்கொள்ளப்படவில்லை.

இதை பொறுப்புடன்

06

## அரசியல் அநாதையாக்கும் நோக்கிலே எனக்கு சுகாதார அமைச்சு தரப்பட்டது

### அதனை வைத்தே உச்சத்தை தொட்டேன்

**(லோரன்ஸ் செல்வநாயகம்)**



அரசியல் அநாதையாக்கும் நோக்கத்திலேயே 2010 ஆம் ஆண்டு தமக்கு சுகாதார அமைச்சர் பதவி வழங்கப்பட்டதாகவும் எனினும், அப்பதவியை வைத்து ஜனாதிபதி பதவி வரை செல்ல முடிந்ததாகவும் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

சர்வதேச நாடுகளில் இலங்கையின் சுகாதார சேவை பெரும் வரவேற்பைப்பெற்று வரும் நிலையில், அந்த நிலையை தொடர்ந்தும் பாதுகாப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும்

06

### 2023 இல் கடற்படையின் சுற்றிவளைப்பில்
## 21,000 மில். ரூபா பெறுமதியான 4,406 Kg போதைப்பொருள் மீட்பு

கடற்படையினர் இவ்வருடத்தில் 21 ஆயிரம் மில்லியன் ரூபா பெறுமதியான போதைப்பொருட்களை கைப்பற்றியுள்ளனர்.

இதுவரை மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்புக்களில், சுமார் 21,000 மில்லியன் ரூபா பெறுமதியான போதைப்பொருள் கைப்பற்றப்பட்டதாகவும் கடற்படை தெரிவித்துள்ளது. இந்த ஆண்டு ஜனவரி முதல் நவம்பர் 26 வரை மேற்கொள்ளப்பட்ட சோதனையில் 20,576 மில்லியன் ரூபா பெறுமதியான போதைப்பொருட்கள் கைப்பற்றப்பட்டதாக கடற்படை குறிப்பிட்டுள்ளது. 3,641 கிலோ 15 கிராம் கேரள கஞ்சாவும்

06

## வயோதிப கணவன், மனைவி படுகொலை: 05 பவுண் நகையும் திருட்டு

### வவுனியா, செட்டிகுளம் பகுதியில் சம்பவம்

**(வவுனியா விசேட நிருபர்)**

வவுனியா, செட்டிகுளம் பகுதியில் வீட்டில் தனியே இருந்த வயோதிப கணவனும், மனைவியும் வெட்டிப் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். இச்சம்பவம் அப்பகுதியில் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

இச்சம்பவம் செட்டிகுளம் பகுதியில் நேற்று (30) இடம்பெற்றுள்ளது. இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது, செட்டிகுளம் பிரதான வீதியில் இவர்களது மகன் கடையொன்றை நடத்தி

06

## சுகாதாரத் துறையில் மலையகத்தை புறக்கணிக்காது நிதியை வழங்கவும்

### வளப்பற்றாக்குறை நிலவும் வைத்தியசாலையில் அரசின் கவனம் அவசியம்

**லோரன்ஸ் செல்வநாயகம்**



சுகாதாரத்துறைக்காக அரசாங்கம் ஒதுக்கும் நிதி எவ்வித பாரபட்சமுமின்றி மலையக பெருந்தோட்ட பகுதிகளுக்கு சம அளவில் செலவிடப்பட வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் வடிவேல் சுரேஷ் சபையில் தெரிவித்தார்.

சுகாதாரத்துறைக்கான நிதி ஒதுக்கீட்டு விவாதத்தில் உரையாற்றிய அவர், சுகாதாரத் துறையின்

06

## அரிசி ஆலை ஊழியர்களுடன் சென்ற பஸ் நேற்று விபத்து

### 30 பேர் காயம்; நால்வர் கவலைக்கிடம்



பொலனறுவையிலிருந்து வெலிகந்த சிங்கபுர பிரதேசத்தில் தனியார் அரிசி ஆலை ஊழியர்களை ஏற்றிச் சென்ற பஸ் விபத்துக்குள்ளானதில், முப்பது பேர் காயமடைந்துள்ளனர்.

வெலிகந்த முத்துவெல்ல பிரதேசத்தில் வீதியை விட்டு விலகி பள்ளத்தில் கவிழ்ந்ததில் இவ்

06

91 ஆண்டுகால பாரம்பரியத்துடன் தமிழ் பேசும் மக்களின் தேசிய குரல்

# நகர்வலம்



### மேல் மாகாண STF முன்னாள் பணிப்பாளர் தலைமையில்

## இ.போ.ச ஊழல்,மோசடிகள் குறித்து விசேட விசாரணைகள் விரைவில்

இலங்கை போக்குவரத்து சபையில் இடம்பெற்ற மோசடிகள் மற்றும் ஊழல்கள் தொடர்பில் விசாரணை நடத்துவதற்காக மேல் மாகாணத்திற்கு பொறுப்பாக இருந்த பொலிஸ் விசேட அதிரடிப் படையின் முன்னாள் பணிப்பாளர் கடந்த வாரம் நியமிக்கப்பட்டுள்ளாரென்றும் விரைவில் அதற்கான விசாரணைகள் ஆரம்பிக்கப்படுமென்றும் போக்குவரத்து அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.

இலங்கை போக்குவரத்து சபையின் வெற்றிடங்களுக்காக இணைத்துக் கொள்ளப்பட்ட புதிய சாரதிகள் மற்றும் நடத்துனர்கள் குழுவுக்கான நியமனக் கடிதங்கள் வழங்கும் நிகழ்வு அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்த்தன தலைமையில் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. அங்கு உரையாற்றிய அமைச்சர்,

"உலகின் பல நாடுகளில் கல்வி, சுகாதாரம் போன்ற சேவைகளை பணம் கொடுத்தே பெற வேண்டியுள்ளது. இலங்கையில் இலவச சுகாதார வசதிகள், கல்வி போன்றவற்றை வழங்குவதற்காக வரி செலுத்தும் மக்களின் பணம் பெருமளவு செலவிடப்படுகிறது. அரசாங்கம் அடுத்த மூன்றாண்டுகளுக்கு எந்த நிறுவனத்திற்கும் ஆட்சேர்ப்பு நடவடிக்கையில் ஈடுபடாது.



அரச வருமானம் அரச ஊழியர் சம்பளம், ஓய்வூதியம் மற்றும் சமுர்த்தி உள்ளிட்ட மானியங்களை வழங்கிய பிறகு, வரி வருமானம் மிஞ்சுவதில்லை, யார் அரசாங்கத்தை நடத்தினாலும், இந்த செயல்பாடுகளை மட்டுமே செய்ய முடியும். அபிவிருத்தி நடவடிக்கைகள் உட்பட மூலதனச் செலவுகள் கடன்களை பெற்று பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.

சுதந்திரம் பெற்றதில் இருந்து ஒவ்வொரு அரசாங்கமும் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் இவ்வாறே கடன்களை பெற்றுள்ளது.

அரசியல் ரீதியாக மிகவும் வளர்ச்சியடையாத கருத்தை, இளைஞர்கள் மற்றும் மாணவர்களிடம் விதைப்பதன் மூலம் நாட்டின் வங்குரோத்து நிலையின் யதார்த்தத்தைப் புரிந்து கொள்ள முடியாது. இதனால் நஷ்டத்தில் இயங்கும் அரச நிறுவனங்களை மூட வேண்டிய நிலை உருவாகியுள்ளது. இலங்கை போக்குவரத்து சபை 2024ஆம் ஆண்டுக்குள் இலாபம் ஈட்டாவிட்டால் தனியார் மயமாகும் அபாயம் உள்ளது. தற்போதைய நிலைமையில் பணத் தட்டுப்பாடு இருந்தாலும் பணத்தை அச்சிடுவதற்கு சட்டப்படி அதிகாரம் இல்லை. எனவே, பழைய பழக்கவழக்கங்களையும், பழைய முறையையும் கடைப்பிடிக்க முடியாது. புதிய தலைவர் நியமிக்கப்பட்ட போது, முப்பத்தொன்பது இ.போ.ச டிப்போக்களுக்கு சம்பளம் கொடுக்க முடியாத நிலைமை காணப்பட்டது. செயல்படுத்தப் பட்ட திட்டத்தின் காரணமாக அவ் எண்ணிக்கை ஒன்பதாகக் குறைக்கப்பட்டுள்ளது.

எல்லா சந்தர்ப்பத்திலும், இலங்கைப் போக்குவரத்துச் சபையின் சேவையை நாட்டின் பொது மக்கள், நாட்டின் எதிர்கால சந்ததியாக விளங்கும் பாடசாலை மாணவர்கள் பெற்றுக்கொள்கின்றனர். எனவே, இந்த கௌரவமான பொறுப்பை பாதுகாப்பாக நிறைவேற்றுவது அனைவரினதும் கையில் உள்ளது. எதிர்வரும் ஆண்டில் பல டிஜிட்டல் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு இலங்கை போக்குவரத்து சபை செயற்பட்டு வருகின்றது என்றார்.

### பாணந்துறை அல் பஹ்ரியாவில் இன்று

## தேசகீர்த்தி மக்கீன் ஹாஜியார் ஞாபகார்த்த மூன்று மாடிக் கட்டடத்துக்கு அடிக்கல்



(பாணந்துறை மத்திய குறூப் நிருபர்)

பாணந்துறை அல் பஹ்ரியா தேசிய பாடசாலையில் நிர்மாணிக்கப்படவுள்ள "தேசகீர்த்தி ஏ.டபிள்யு.எம். மக்கீன் ஹாஜியார் ஞாபகார்த்த" புதிய மூன்று மாடிக் கட்டட தொகுதிக்கான அடிக்கல் நாட்டு விழா இன்று (01)வெள்ளிக்கிழமை காலையில் கல்லூரி வளாகத்தில் இடம்பெறவுள்ளது.

கல்லூரி அதிபர் எம்.ஐ.எம். ரிஸான் தலைமையில் இடம்பெறவுள்ள இந்த விழாவில் தொழிலதிபர்களான மில்பர் மக்கீன், மிஸ்வர் மக்கீன், சிமர் மில்பர் ஆகியோர் விசேட அதிதிகளாக கலந்துகொண்டு அடிக்கல்லை நட்டி வைப்பார். தொட்டவத்தை பள்ளிவாசல்கள் தர்மகர்த்தா எம்.ஏ.எம். ரிஸான், பள்ளிவாசல்கள் பரிபாலன சபைத் தலைவர் எம்.என்.எம். தாஹிர் பாஸி, பிரதேச சபையின் முன்னாள் தலைவர் இபாஸ் நபுஹான் மற்றும் பெற்றோர்கள் உள்ளிட்ட பிரமுகர்கள் பலரும் நிகழ்வில் கலந்து கொள்ளவுள்ளனர்.

மறைந்த மெக்ஸன்ஸ் குழுமத்தின் ஸ்தாபகத் தலைவர் பிரபல தொழிலதிபரும் பாணந்துறை தொட்டவத்தை பள்ளிவாசல்களின் முன்னாள் ஆயுட்கால தர்மகர்த்தாவுமான தேசகீர்த்தி மர்ஹூம் மக்கீன் ஹாஜியாரின் நினைவாக அவரின் குடும்பத்தினரால் இந்த மூன்று மாடிகள் கொண்ட "தேசகீர்த்தி ஏ.டபிள்யு.எம்.மக்கீன் ஹாஜியார் ஞாபகார்த்த" கட்டிட தொகுதி அமைக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

## லேக்ஹவுஸில் 25 வருடம் பூர்த்தி செய்தோர் கௌரவிப்பு



லேக்ஹவுஸ் நிறுவனத்தில் 25 வருட சேவையை பூர்த்தி செய்த ஊழியர்களுக்கு தங்க விருது வழங்கி பாராட்டும் நிகழ்வு (29) லேக் ஹவுஸ் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. லேக் ஹவுஸ் தலைவர் பேராசிரியர் ஹரேந்திர காரியவசத்திடமிருந்து தங்க விருதுகளை பெற்றனர். டி.டி.எஸ்.எம் விஜேரத்ன, (விநியோகப் பிரிவு 29 வருடங்கள்), கே.டபிள்யூ. எஸ்.எல். கரதன, (களஞ்சியப் பிரிவு 28 வருடங்கள்), எல்.பி.ஏ.எஸ். குமார, (விநியோகப் பிரிவு 28 வருடங்கள்), கே.எம்.டபிள்யூ.கே கஸ்தூரி (விற்பனைப் பிரிவு 28 வருடங்கள்), எம்.ஏ.ஆர் ரஞ்சன் (விற்பனைப் பிரிவு 28 வருடங்கள்) நிகழ்வில் தலைவர் உட்பட பணிப்பாளர் குழு மற்றும் பத்திரிகை ஆசிரியர்கள் உள்ளிட்ட செயலணி குழுவினரும் கலந்து கொண்டனர்.



முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் 78 ஆவது பிறந்த தினத்தை முன்னிட்டு, அநுராதபுரம் ருவன்வெலிசாய விகாரைக்கு விஜயம் செய்து மதவழிப்பாட்டு நிகழ்ச்சியில் கலந்து கொண்டார். இந்நிகழ்வில் வடமத்திய மாகாண முன்னாள் முதலமைச்சர் எஸ்.எம். ரஞ்சித் சமரகோன் மற்றும் வடமத்திய மாகாண ஆளுநர் மஹிபால ஹேரத், பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.எம். சந்திரசேன உட்பட பலரும் கலந்து கொண்டனர். (படம்: கல்நேவ தினகரன் விசேட நிருபர் )

## பாகிஸ்தான் பல்கலை வைத்திய பீடத்திற்கு

### முஷ்னி அஹமட் தெரிவு

அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்



அநுராதபுரம், அழுத்கம வரலாற்றில் அலி தம்பி முஷ்னி முஹமட் பாகிஸ்தான் பல்கலைக்கழக வைத்திய பீடத்திற்கு தெரிவு செய்யப்பட்டுள்ளார். இவர், அல்லாமா இக்பால் புலமைப்பரிசில் திட்டத்தின் கீழ் பாகிஸ்தான் கராச்சியில் அமைந்துள்ள இக்றா பல்கலைக்கழக Bahria (Medical) கல்லூரிக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளார். இவர் பாடசாலை காலத்தில் பல்வேறு திறமைகளை வெளிப்படுத்தியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. இக்கிராமத்திற்கும் சமூகத்திற்கும் பெருமை சேர்த்துள்ள இவருக்கு அழுத்கம மக்கள் வாழ்த்துக்களை தெரிவித்துள்ளதோடு, இவர் அலி தம்பி (அல் ஹாபிழ்), ஹாறுன் பீவீ ஆகியோரின் சிரேஷ்ட புதல்வராவார்.

## கெகிராவ முஸ்லிம் வித்தியாலயத்தில் 10 மாணவர்கள் சிறந்த பெறுபேறு



( கல்நேவ தினகரன் விசேட நிருபர் )

வெளியான ஐந்தாம் தர புலமைப் பரிசில் பரீட்சையில் கெகிராவ கல்வி வலயத்தில் அ/ கெகிராவ முஸ்லிம் மகா வித்தியாலயத்திலிருந்து பரீட்சைக்கு தோற்றிய 10 மாணவர்கள் சித்தியடைந்துள்ளதாக பாடசாலை அதிபர் சுலைஹா பேகம் தெரிவித்தார்.

பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களில் எம்.என். நுஸ்ரி 172, எஸ். தனன்ய ஸ்வேதா 172 , எம்.ஆர். ரீமா 166 , எம்.ஐ. பாத்திமா ஹிஸ்மா 158 , எம்.ஏ.பர்ஹா 155 , ஏ.எச். ஹம்தி 150, எம்.எப். ஐத் அஹமத் 147, ஆர்.எப்.எப்.ரஹ்லா 147 , எம். எம். ஷெசா மரியம் 145 புள்ளிகள் பெற்று சித்தியடைந்துள்ளனர்.

## மலேசிய சர்வதேச போட்டியில் பங்கேற்கவுள்ள யுசிமஸ் மாணவர்கள்

அபாகஸ் இனை அடிப்படையாகக் கொண்டு மூளை விருத்தி மற்றும் மனக்கணித ஆற்றலை வளர்க்கும் பயிற்சி நெறியினை வழங்கும் உலகப் புகழ் பெற்ற யுசிமஸ் (UCMAS) நிறுவனம் உலகில் 80இற்கு மேற்பட்ட நாடுகளிலுள்ள மாணவர்களை ஒருங்கிணைத்து எதிர்வரும் 3ஆம் திகதி மலேசியா, கோலாலம்பூரில் சர்வதேச மட்டப் போட்டியினை நடத்தவுள்ளது. இப்போட்டியில் பங்கேற்பதற்காக இலங்கை முழுவதும் யுசிமஸ் (UCMAS) அபாகஸ் மூல பயிற்சி நெறியினைப் பயிலும் மாணவர்களிலிருந்து திறமை அடிப்படையில் தெரிவு செய்யப்பட்ட 62 மாணவர்களைக் கொண்ட குழுவொன்று பங்கேற்கவுள்ளது. கடந்த காலங்களில் பல இலங்கை மாணவர்கள் தமது திறமைகளை இந்த அரங்கில் நிரூபித்துள்ள நிலையில் இந்த ஆண்டு இலங்கை யுசிமஸ் (UCMAS) நிறுவனத்தின் புதிய பிரதம நிறைவேற்று அதிகாரியும் தேசிய உரிமையாளருமான விஜய் சிவசங்கரின் வழிகாட்டுதலின் கீழ் பல புதிய சாதனைகளைப் படைப்பதற்காக மாணவர்கள் தயாராகி வருகின்றனர்.

இப்போட்டியில் பங்குபற்றும் மாணவனின் தாயாரான திருமதி ஜெகநாதன்; யுசிமஸ் (UCMAS) மூல கற்கை நெறி எனது மகனின் கணிதத் திறனை மேம்படுத்தியதோடு மட்டுமல்லாது அவனது தன்னம்பிக்கையையும் உயர்த்தியுள்ளது. அவன் யுசிமஸ் (UCMAS) கற்கை நெறியைப் பயில ஆரம்பிப்பதற்கு முன்னர் பாடசாலை மட்டத்தில் மட்டுமே வெற்றிகளை ஈட்டி வந்தான். ஆனால், தற்போது பாடசாலை மட்டத்திலும் தேசிய மட்டத்திலும் வெற்றியீட்டியது மட்டுமன்றிச் சர்வதேச மட்டத்திலும் கால் பதித்துத் தன்னை நிரூபிக்கத் தயாராகின்றான். இதற்காக இலங்கை யுசிமஸ் (UCMAS) நிறுவனத்துக்கும் ஆசிரியர்களுக்கும் எனது நன்றிகள்." என தெரிவித்தார். இலங்கை யுசிமஸ் (UCMAS) நிறுவனம் இலங்கை முழுவதும் 50இற்கு மேற்பட்ட கிளைகளுடன் 2500இற்கு மேற்பட்ட மாணவர்களுடன் மிகவும் தனித்துவமாகவும் வெற்றிகரமாகவும் இயங்கிவருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## கலேவல உம்மு ஐமன் அரபுக் கல்லூரி பட்டமளிப்பு விழா நாளை

(மாத்தளை சுழற்சி நிருபர்)

மாத்தளை மாவட்டத்தில் கலேவல நமடகாவத்தையில் அமைந்துள்ள உம்மு ஐமன் முஸ்லிம் மகளிர் அரபுக் கல்லூரியின் மூன்றாவது பட்டமளிப்பு விழா நாளை 2ஆம் திகதி சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது. மேற்படி கல்லூரியின் தலைவரும் பணிப்பாளருமான மௌலவி அஷ்ஷேஹ் எஸ்.ஏ.எம்.ஜவ்பர் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் நிபோன் பிளாஸ்டிக் நிறுவனத்தின் தொழிலதிபர் டி.ஜீ.ஜீ.எஸ்.எம்.எம். நிஸைஹர் பிரதம அதிதியாகவும் உம்மு ஐமன் முஸ்லிம் மகளிர் அரபு கல்லூரியின் முன்னாள் தலைவர் பபூடெக்ஸ் உரிமையாளர் ஏ.எஸ்.



எம்.ஹனீப் விசேட அதிதியாகவும் கலந்து சிறப்பிப்பார்.

பாணந்துறை இப்னு உமர் கற்கைப் பீடத்தின் சிரேஷ்ட விரிவுரையாளர் அஷ்ஷேஹ் முப்தி எம்.எப்.எம். ரியாஸ் மற்றும் கண்டி கடுகல ஜும்ஆ மஸ்ஜித் பேஷ் இமாம் அஷ்ஷேஹ் எம்.எப்.ஷஹீட் ரமழான் ஆகியோர் இந்நிகழ்வில் விசேட பேச்சாளர்களாக கலந்து கொள்ளவுள்ளதாக விழா ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

### பம்பலப்பிட்டி சரஸ்வதி

## மண்டபத்தில் நாவலர் குருபூசை

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் பெருமானின் குருபூசை எதிர்வரும் 4ஆம் திகதி மாலை 4.30 மணிக்கு பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் சபையின் ஏற்பாட்டிலும் இந்து வித்தியாவிருத்தி சங்கம், அகில இலங்கை இந்து மாமன்றம், இலங்கை சைவநெறிக் கழகம், ஈழத்து திருநெறி தமிழ் மன்றம், இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் ஆகியவற்றின் பங்களிப்புடன் குருபூசை நடைபெறவுள்ளது. மாணவர்களின் நிகழ்வுகளும் நடைபெறவுள்ளதுடன், சைவ அன்பர்கள் அனைவரையும் குருபூசையில் கலந்துகொள்ளுமாறு, ஏற்பாட்டாளர்கள் கேட்டுக்கொண்டுள்ளனர்.

## எழுத்தாளர் எம்.ஏ. ரஹீமா எழுதிய 'சூல்சோறு' சிறுகதைத் தொகுப்பு

### வெளியீட்டு விழா கொழும்பில்

மூத்த எழுத்தாளர் எம்.ஏ.ரஹீமா எழுதிய 'சூல்சோறு' சிறுகதைத் தொகுப்பு வெளியீட்டு விழா எதிர்வரும் 10 ஆம் திகதி கொழும்பு அல் ஹிதாயா முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் காலை 9.30 மணிக்கு தமிழ்மாமணி அல் அஸூமத்தின் தலைமையில் நடைபெறும்.




இந்த நிகழ்வில் பாத்திமா முஸ்லிம் மகளிர் கல்லூரி அதிபர் எம்.எச். மும்தாஜ் பேகம் பிரதம அதிதியாக கலந்து கொள்வதோடு சிறப்பு அதிதியாக மேர்சி லங்கா திட்ட முகாமையாளர் எம்.எச்.எம். ஷபூக் (மறைந்த எழுத்தாளர் எம்.எம்.எம்.ஷம்ஸின் புதல்வர்) கலந்து சிறப்பிக்கவுள்ளார். கௌரவ அதிதிகளாக எழுத்தாளர் திக்குவல்லை கமால், தினகரன் சிரேஷ்ட ஊடகவியலாளரும் ஜனாதிபதி ஊடகப் பிரிவு ஊடக அதிகாரியுமான ஷம்ஸ் பாஹிம் மற்றும் மறைந்த எழுத்தாளர் ஏ. இக்பாலின் புதல்வி எம்.ஜே.பி. மலீஹா ஆகியோர் கலந்து கொள்கின்றனர்.

நூலின் முதற்பிரதியை ஷம்ஸ் சபூக் பெற்றுக் கொள்வார். நூலாசிரியர் பற்றிய அறிமுகத்தை சிரேஷ்ட அறிவிப்பாளர் புர்கான் பீ இப்திகார் நிகழ்த்த இருப்பதோடு நூல் திறன் நோக்கு எழுத்தாளர் அஷ்ரப் சிஹாப்தீனினால் நிகழ்த்தப்படும். திருகோணமலை அஷ்ரபா நூர்தீன் மற்றும் வாழைத்தோட்டம் வஸீர் ஆகியோரின் கவிவாழ்த்தும் இடம்பெற உள்ளதோடு கவிஞர் நாச்சியாதீவு பர்வீன் நிகழ்ச்சிகளை தொகுத்து வழங்குவார்.

### கல்பிட்டியில்;

## மாணவர்கள் கௌரவிப்பு

(புத்தளம் தினகரன் நிருபர்)

புத்தளம் கல்பிட்டி நாவற்காடு றோமன் கத்தோலிக்க தமிழ் வித்தியாலயத்தில் 2023 ஆம் ஆண்டில் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் தோற்றி சித்தி அடைந்த மாணவர்களையும், வெட்டுப்புள்ளிகளுக்கு மேல் பெற்ற மாணவர்களையும் பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வொன்று எதிர்வரும் 04 ஆம் திகதி திங்கட் கிழமை நடைபெறவுள்ளதாக அதிபர் பீ.ஜெனட்ராஜ் தெரிவித்துள்ளார்.

அத்துடன் அன்றைய தினம் பாடசாலையின் ஆரம்ப பிரிவினரால் "மின்னும் தாரகைகள்" எனும் சஞ்சிகையும் வெளியிடப் படவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# அரசின் பத்து ஆண்டுகள் பழமையான வாகனங்களை ஏலத்தில் விட வேண்டும்

## புதியவற்றை வாங்காமல் வாடகைக்கு பெறுவது சிறந்தது

பத்தாண்டுகளுக்கு மேல் பழைமையான அரச வாகனங்களை ஏலத்தில் விட்டு, அரசுக்கு தேவையான வாகனங்களை வாடகை அடிப்படையில் பெற வேண்டுமென போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் ஊடகத்துறை அமைச்சர்,கலாநிதி பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.

நவம்பர் 19 ஆம் திகதி சர்வதேச பாதிக்கப்பட்டோர் தினத்தை முன்னிட்டு, தேசிய வீதி பாதுகாப்பு சபையினால் செயல்படுத்தப்பட்ட வீதி விபத்துக்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் வழங்கும் நிகழ்வில் உரையாற்றுகையிலே அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

இத்திட்டத்தின் கீழ் வீதி விபத்துக்களினால் பாதிக்கப்பட்டு நிரந்தர ஊனமுற்ற இருபத்தைந்து பேருக்கு 37,50,000 ரூபா வழங்கப்பட்டது.

நிகழ்ச்சித் திட்டத்துடன் இணைந்து விபத்து மற்றும் விபத்துக்குப் பின்னரான முகாமைத்துவம் தொடர்பான விசேட விரிவுரை கொழும்பு தேசிய வைத்தியசாலையின் விபத்துப் பிரிவின் பணிப்பாளர் டொக்டர் ஏ.ஐ. . ஜாகொடவினால் நிகழ்த்தப்பட்டது. இங்கு பேசிய அமைச்சர், தற்போது அரசிடம் சுமார் 84,247 வாகனங்கள் உள்ளன. இவற்றில் 47,074 வாகனங்கள் அதாவது 56 வீதம் பத்து வருடங்களுக்கும் மேற்பட்ட பழமையானவை. எனவே, இவை கராஜ் உரிமையாளர்கள், வாகனம்



பழுதுபார்ப்பவர்கள் மற்றும் உதிரி பாகங்கள் விற்பனை செய்பவர்களுக்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கும். பத்து ஆண்டுகளுக்கு மேல் பழமையான வாகனங்கள் அனைத்தையும் தனியாருக்கு ஏலத்தில் விற்று, அரசுக்குத் தேவையான நவீன வாகனங்களை வாங்காமல், தேவைக்கேற்ப வேறு தரப்பினரிடம் வாடகை அடிப்படையில் பெறுவது காலத்துக்கு உகந்தது.

இதனால் அரசுக்கு பெருமளவு பணம் மீதமாகும். தற்போதும் தனியார் துறையில் சுற்றுலா விடுதிகள் உள்ளிட்ட வணிகர்கள் வாடகை அடிப்படையில் வாகனங்களை பெற்று வருகின்றனர். எனவே, ஒரு நல்ல வாகனத்தை பராமரிக்கவும், நல்ல வீதி கட்டமைப்பை பராமரிக்கவும், நிறுவனங்களுக்கு இடையேயான ஒருங்கிணைப்பை வளர்த்து, 2024 ஆம் ஆண்டை சாலை விபத்துகளை குறைக்கும் ஆண்டாக மாற்ற அனைவரும் உறுதியளிக்க வேண்டுமென்றார்.



தமிழ் பாடசாலையின் அபிவிருத்தி, ஜப்பான் மொழியை மாணவர்களுக்கு கற்பித்தல் மற்றும் ஜப்பானில் எமது இளைஞர்களுக்கான வேலைவாய்ப்பு தொடர்பான கோரிக்கைகளை முன்வைத்து, இலங்கைக்கான ஜப்பான் தூதுவர் ஹிதாகி மிசுகோஷியை அவரது இல்லத்தில் கல்வி இராஜாங்க அமைச்சர் அருணாச்சலம் அரவிந்த குமார் சந்தித்து மகஜர் ஒன்றை கையளித்தார். இச்சந்திப்பு மிகவும் ஆக்கப்பூர்வமானதாகவும், பயனுள்ளதாகவும் அமைந்ததாக இராஜாங்க அமைச்சர் தெரிவித்தார்.

## சிரேஷ்ட ஊடகவியலாளர், லேக்ஹவுஸ் முன்னாள் CAO காலமானார்



சிரேஷ்ட ஊடகவியலாளரும் லேக்ஹவுஸ் நிறுவனத்தின் முன்னாள் பிரதம நிர்வாக அதிகாரியுமான ரேஹான ஆர்யரத்ன தனது 80 ஆவது வயதில் காலமானார்.

உடல்நலக்குறைவு காரணமாக நேற்று முன்தினம் இவர்,காலமானதாக உறவினர்கள் தெரிவித்துள்ளனர்.

பிரதம நிர்வாக அதிகாரியாக நியமிக்கப்படுவதற்கு முன்னர் 37 வருடங்களுக்கும் மேல், எமது சகோதர

06

## மரக்கறி தோட்டத்தில் மின்சாரம் தாக்கி தந்தை, மகள் பரிதாப பலி

(கம்பளை நிருபர்)

மரக்கறி தோட்டத்தை பாதுகாப்பதற்காக போடப்பட்டிருந்த மின்சார கம்பியில் சிக்கி 32 வயதுடைய தந்தையும் 02 வயது 10 மாதமும் மகளும் உயிரிழந்துள்ளனர்.

கம்பளை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கொத்மலை, கொட்டகேபிட்டிய மைப்பல கிராமத்தில் இச்சம்பவம் இடம்பெற்றது. தந்தையும் மகளும் கம்பளை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில், உயிரிழந்ததாக வைத்தியர்கள் தெரிவித்தனர். சுனில் சாந்த குமார மற்றும் அவரது மகள் எஸ்.எம்.அபின்னியா என்பவர்களே இவ்வாறு உயிரிழந்துள்ளனர்.

உயிரிழந்த சுனில் சாந்தவின் மனைவி நான்கு மாதங்களுக்கு முன்னர் வெளிநாடு சென்றிருந்தார். இந்நிலையில், அவர் தனது 11, 07 வயதுகளைடைய இரண்டு மகன்கள் மற்றும் இந்த மகளுடன் வீட்டில் வசித்து வந்துள்ளார்.

வீட்டின் அருகே காய்கறித் தோட்டம் செய்து வரும் இவர், அங்குள்ள மிளகாய் செடியை விலங்குகளிடமிருந்து காப்பாற்ற, சுமார் ஒரு அடி உயரத்துக்கு கம்பி அறுத்து, மின்சாரம் இணைத்துள்ளார்.

குழந்தைகள் பாடசாலைக்கு சென்ற பிறகு, காலை 10 மணியளவில் மரக்கறி தோட்டத்துக்கு மருந்து தெளிக்கச் சென்ற இவர், மின்சாரத்தை துண்டிக்க மறந்து விட்டார். குழந்தை பிளாஸ்டிக் கோப்பையுடன் தோட்டத்துக்கு சென்றதாகவும் இருவரும் மின்சாரம் தாக்கி தரையில் விழுந்ததாகவும் சுனில் சாந்தவின் சகோதரர் பொலிஸாரிடம் தெரிவித்தார்.

## களனி கங்கையில் வீழ்ந்த பொலிஸ் உத்தியோகத்தர் மாயம்

பேலியாகொடை, விக்டோரியா பாலத்திலிருந்து பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் களனி கங்கையில் வீழ்ந்து காணாமல் போயுள்ளதாக கிராண்ட்பாஸ் பொலிஸார் தெரிவித்துள்ளனர். காணாமல்போனவர் கொழும்பு பம்பலப்பிட்டி பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் எச். ஜயலத் என்ற பொலிஸ் உத்தியோகத்தரென அடையாளம் காணப்பட்டுள்ளார். இவரது கையடக்கத்தொலைபேசி மற்றும் நாராஹென்பிட்ட பொலிஸ் வைத்தியசாலையில் இவர்,சிகிச்சைபெற்று

06

## மட்டு. சிறைச்சாலையில் கைதி ஒருவர் உயிரிழப்பு

### பிரேத பிரிசோதனைக்கு உத்தரவு

மட்டக்களப்பு சிறைச்சாலையில் வைக்கப்பட்டிருந்த கைதி ஒருவர், உயிரிழந்த நிலையில் மீட்கப்பட்டுள்ளார். இவரது சடலத்தை பிரேத பரிசோதனைக்கு உட்படுத்துமாறு மட்டக்களப்பு நீதவான் நீதிமன்ற நீதவான் பீற்றர் போல் புதன்கிழமை (29) உத்தரவிட்டார். கொக்கட்டிச்சோலை முனைக்காடு பிரதேசத்தைச் சேர்ந்த 47 வயதுடைய சோமசுந்தரம் துரைராஜா என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இந்நபர் நீதிமன்ற வழக்கொன்றில் ஆஜராகாததால் நீதிமன்ற பிடிவிறாந்து கட்டளைக்கமைய கடந்த 22 ஆம் திகதி கொக்கட்டிச்சோலை பொலிஸாரால் கைது செய்யப்பட்டு, நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டார். அவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டதையடுத்து அவர் சிறைச்சாலையில் அடைக்கப்பட்டார். சம்பவதினமான செவ்வாய்க்கிழமை (28) சிறைச்சாலையில் மயங்கி வீழ்ந்தார். வைத்தியசாலைக்கு கொண்டு சென்ற போது அவர் ஏற்கனவே உயிரிழந்துள்ளதாக வைத்தியர்கள் தெரிவித்தனர். சடலம் பிரேத அறையில் வைக்கப்பட்டிருந்தது. சிறைச்சாலைக்கு மட்டக்களப்பு நீதவான் நீதிமன்ற நீதவான் பீற்றர் போல் புதன்கிழமை (29) சென்று பார்வையிட்டு விசாரணைகளை மேற்கொண்டு சடலத்தை பிரேத பரிசோதனைக்கு உட்படுத்துமாறு உத்தரவிட்டார். இது தொடர்பான மேலதிக விசாணைகளை மட்டு தலைமையக பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர்.


# மக்கள் வங்கி

## எமது மதிப்பு மிக்க வாடிக்கையாளர்களுக்கு வழங்கும் விசேட அறிவித்தல்

எமது மதிப்பு மிக்க வாடிக்கையாளர்களுக்கு அதிசிறந்த சேவையினை வழங்கும் பொருட்டு எமது டிஜிற்றல் வங்கி முறைமையை மேம்படுத்துகின்றோம். எனவே மக்கள் வங்கியின் தனிநபர் இணைய வங்கிச் சேவைகள், பெருநிறுவன இணைய வங்கிச் சேவைகள் மற்றும் அனைத்து கையடக்க தொலைபேசி வங்கிச் செயலிகளும் (People's Pay Digital Wallet App தவிர) கீழ் குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களில் அவ்வப்போது தடைப்படக்கூடும்.

ஞாயிற்றுக்கிழமை 03 ஆம் திகதி டிசம்பர் 2023
மு.ப. 1.00 மணி முதல் மு.ப. 7.00 மணி வரை
பி.ப. 8.00 மணி முதல் திங்கள் 04 மு.ப. 12.30 மணி வரை

இதன் பொருட்டு ஏற்படக்கூடிய வசதியீனங்களுக்காக நாம் வருந்துகிறோம்.

www.peoplesbank.lk 1961 PEOPLE'S BANK CALL CENTRE
PEOPLE'S BANK Pride of the Nation
A(lka) Fitch Rating, AAA Brand Finance Rating
People's Bank is a Licensed Commercial Bank supervised by the Central Bank of Sri Lanka



# சித்தம் 2023

## சித்திரப் போட்டி

50 YEARS 1973 – 2023

நாடளாவிய சிறுவர் சித்திர மற்றும் வயது வந்தோர் படைப்புகள் போட்டித்தொடர்

2023 ஆம் வருடத்தில் தனது 50 வருட நிறைவினை முன்னிட்டு திரிபோஷா, சுபோஷா மற்றும் கலொரி பார் உடன் இணைந்து சித்திரப் போட்டித் தொடரொன்றை கல்வி அமைச்சின் அனுமதியின் கீழ் நடாத்துவதற்கு இலங்கை திரிபோஷா கம்பனி நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

| இல. | வயதுத் தொகுதி | தலைப்பு (ஒக்றோபர் – டிசம்பர்) | தலைப்பு (டிசம்பர் – பெப்ரவரி) |
|---|---|---|---|
| 01 | முன்பள்ளி பிள்ளைகள் | நான் / எனது குடும்பம் / நானும் எனது நண்பனும் | எனது வீடு / எனது பாடசாலை / எனது செல்லப்பிராணி |
| 02 | தரம் 01 – தரம் 03 | எனது வீட்டுத் தோட்டம் / எனது பாடசாலை / எனது ஊர், நகரம் / எனது ஆசிரியர் | எமது சுற்றுப்புறச் சூழல் / எனது நாடு / எதிர்காலத்தில் நான் / எனதுஆசிரியர் |
| 03 | தரம் 04 – தரம் 06 | சிறுவர்களின் பார்வையில் சிறுவர் தினம் / எமது சுற்றுப்புறச் சூழல் / எனது எதிர்கால எதிர்பார்ப்பு | சிறாராகிய எனது உலகம் / சூழல் மாசடைதல் / எனது தொழிற் கனவு |
| 04 | தரம் 07 – தரம் 09 | நீர் வளத்தை பாதுகாப்போம் / எனது கண்ணோட்டத்தில் 2050 ஆம் வருடம் / உணவு வீண் விரயத்தைத் தடுப்போம் | போஷாக்கு குறைபாடு / தாய் அன்பும் போஷாக்கும் / சமூக ஊடகங்களும் சிறுவர்களின் நாளைய எதிர்காலமும் |
| 05 | தரம் 10 – தரம் 11 | குப்பைகள் இல்லாத நாடு / உலகை காப்போம் / 2050 வருட தொழில்நுட்ப வளர்ச்சியுடன் இலங்கை | குப்பைகளை மீள் சுழற்சி செய்வோம் / சுற்றாடல் மாசு மற்றும் உலகம் / போஷாக்கு குறைபாட்டின் காணாத மறுபக்கம் |
| 06 | 12 – 13 உயர்தர மாணவர்கள் | பிள்ளை ஒரு தொழிலாளியா? / போதைப் பொருளற்ற சிறுவர் தலைமுறை / தொழில்நுட்பமும் சிறுவர்களின் நாளைய எதிர்காலமும் | இணையமும் சிறுவர்களின் நாளைய எதிர்காலமும் / AI தொழில்நுட்பமும் நாளைய உலகமும் / டிஜிட்டல் உலகம் |
| 07 | மாற்றுத் திறன் கொண்ட சிறுவர்கள் | நானும் எனது குடும்பமும் / அழகான காலைப்பொழுது / எனது உலகம் | எனது செல்லப் பிராணி / எனது சுற்றுப்புறச் சூழல் / எனது பாடசாலை |
| 08 | திறந்த பிரிவு / பாடசாலை வாழ்க்கையை முடித்தவர்கள் | இப் போட்டிக்கு தங்களின் படைப்புத் திறனை மேம்படுத்த உங்களால் ஆக்கப்பட்ட எந்தவொரு படைப்பையும் சமர்ப்பிக்கலாம். | |
| படைப்புகளை அனுப்ப வேண்டிய இறுதித் திகதி | | 15 டிசம்பர் 2023 | 29 பெப்ரவரி 2024 |

| | |
|---|---|
| பரிசுகளை வெல்லுங்கள் | 01 – 08 வரையுள்ள ஒவ்வொரு வகுதிக்குமென முதலாம் இடத்திற்கு ரூ. 20,000/- உம், இரண்டாம் இடத்திற்கு ரூ. 15,000/- உம், மூன்றாம் இடத்திற்கு ரூ. 10,000/- உம், ஆறுதல் பரிசுகளும், பாடசாலைகளுக்கு பணப் பரிசில்களும் என்றவாறு பரிசுகள்வழங்கப்படும். |
| சான்றிதழ்கள் | 01 – 07 வரையான வகுதிகளுக்குரியவர்கள் தமது சித்திரங்களுடன் சுபோஷ வெற்றுப் பக்கற்றுக்களை அனுப்புதல் கட்டாயமன்று, வெற்றுப் பக்கற்றுக்களுடன் அனுப்பும் ஒவ்வொரு சித்திரத்திற்கும் பெறுமதியான சான்றிதழொன்று வழங்கப்படும். |
| பரிசுத் தொகைகளை அதிகரித்துக் கொள்வதற்கு | முதலிடத்தை தட்டிச் செல்பவர் நீங்களாக இருப்பின், உங்களது படைப்புடன் சுபோஷ வெற்றுப் பக்கற்று ஒன்றையும் அதனை கொள்வனவு செய்த பற்றுச்சீட்டினையும் சமர்ப்பிக்கும் பட்சத்தில் வெற்றி பெற்ற தொகைக்கு மேலதிகமாக ரூ. 15,000/- உம், அப் பற்றுச்சீட்டில் குறிப்பிடப்பட்டுள்ள வியாபாரத்தின் உரிமையாளருக்கு ரூ. 10,000/- உம் வழங்கப்படும். |

| | | | |
|---|---|---|---|
| சித்திரத்தின் அளவு | முன்பள்ளி பிள்ளைகளுக்கு A4 (21 cm × 29.7 cm) ஏனைய தொகுதியினருக்கு A3 (29.7 cm × 43 cm) | கடதாசி: வெள்ளை நிற கடதாசி அல்லது குறிப்பிட்ட அளவிலான பிரிஸ்ட்டல் போர்ட் ஒன்றாக இருத்தல் வேண்டும். | வர்ண ஊடகம்: பெஸ்ட்டல், நீர்ச் சாயம், வர்ணப் பென்சில்கள் அல்லது வேறு |

ஒருவர் ஒன்று அல்லது ஒன்றிற்கு மேற்பட்ட சித்திரங்களை அனுப்ப முடியும் என்பதுடன், ஒவ்வொரு படைப்புடனும் சித்திரத் தலைப்பு மற்றும் சித்திரம் பற்றிய விபரங்களுடன், முழுப் பெயர், பிறந்த திகதி, முகவரி, தொலைபேசி இலக்கம், பாடசாலையின் பெயர், கல்வி பயிலும் தரம், முகவரி, பாடசாலை தொலைபேசி இலக்கம் ஆகிய விபரங்களுடன் "இச் சித்திரம் எனது பிள்ளையினால் வரையப்பட்டது" என்பதை பெற்றோர் / பாதுகாவலர் உறுதிப்படுத்தி, வகுப்பாசிரியரினதும் அதிபரினதும் சிபாரிசு சகிதம் பதவி முத்திரையையும் இட்டு பின்வரும் முகவரிக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கலாம். அல்லது நேரடியாக வந்து ஒப்படைக்க முடியும்.

முகவரி: இலங்கை திரிபோஷா லிமிடட் கம்பனி, த.பெ. 17, கப்புவத்த, ஜா-எல. விசாரணைகளுக்கு +94 71 2798911

சகல விபரங்களுக்கும் நிறுவனத்தின் உத்தியோகபூர்வ Facebook பக்கமான "Sri Lanka Thriposha LTD" ஐ பார்வையிடவும்.

THRIPOSHA திரிபோஷ CalorieBar

தினகரன்
THINAKARAN

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10

தபால் பெட்டி இலக்கம் : 834

தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279

பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

சோபகிருது வருடம் கார்த்திகை மாதம் 15ஆம் நாள் வெள்ளிக்கிழமை

ஹிஜ்ரி வருடம் 1445 ஜுமாதல் ஊலா பிறை 16

### குறள் தரும் சிந்தனை



நற்பொருள் நன்குணர்ந்து சொல்லினும் நல்கூர்ந்தார்
சொற்பொருள் சோர்வு படும்

*அரிய பல் நூல்களின் கருத்துகளையும் ஆய்ந்துணர்ந்து சொன்னாலும், அதனைச் சொல்பவர் வறியவராக இருப்பின் அக்கருத்து எடுபடாமற் போகும்.*

# விவசாயத்துறை அபிவிருத்தி ஊடாக பொருளாதார முன்னேற்றம்

இலங்கை உணவு உற்பத்தி விவசாயச் செய்கைக்கு அவசியமான சீதோஷண நிலையையும் இயற்கை வளங்களையும் தன்னகத்தே கொண்டுள்ளது.

இந்நாடு ஆரம்ப காலம் முதல் விவசாய நாடாக இருந்து வருகின்றது. இந்நாட்டின் நிலப்பகுதியில் 2.3 மில்லியன் ஹெக்டேயர் நிலம் பயிர்ச்செய்கை நிலமாக விளங்குகிறது. அவற்றில் 80 வீதமான நிலம் பெருந்தோட்டப் பயிர்ச்செய்கை தவிர்ந்த அரிசி, சோளம், பழங்கள், மரக்கறி வகைகள் போன்ற உணவுப் பயிர்ச்செய்கைகளுக்கு பயன்படுத்தக் கூடியதாக உள்ளது.

அந்த வகையில் நாட்டின் சனத்தொகையில் 27.1 வீதத்தினர் விவசாய நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர். அதன் ஊடாக இந்நாட்டின் மொத்த தேசிய உற்பத்திற்கு 7.4 வீதப் பங்களிப்பை இந்நாட்டு விவசாயத்துறை அளித்து வருகின்றது.

கடந்த வருடத்தின் ஆரம்பப் பகுதியில் இந்நாடு கடும் பொருளாதார நெருக்கடிக்கு முகம் கொடுத்தது. அந்நிய செலாவணி பற்றாக்குறை இந்நெருக்கடிக்கு முக்கிய பங்களிப்பை நல்கியது. அதனால் வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்படும் அத்தியாவசியப் பொருட்கள் உள்ளிட்ட அனைத்துப் பொருட்களும் இடைநிறுத்தப்பட்டன. அவற்றில் விவசாயிகளுக்கு அவசியமான இரசாயனப் பசளையும் கிருமிநாசினிகளும் அடங்கும்.

இந்நிலையில் பயிர்ச்செய்கைக்கு இயற்கைப் பசளையை அன்றைய அரசாங்கம் ஊக்குவித்தது. அப்பசளைப் பயன்பாட்டை பெரும்பாலான விவசாயிகள் நிராகரித்த போதிலும் சில விவசாயிகள் அப்பசளையைப் பயன்படுத்தி பயிர்ச்செய்கை மேற்கொண்டனர். ஆனால் அப்பசளை உரிய பிரதிபலனை அளிக்கத் தவறியது.

இவ்வாறான நிலையில் இரசாயனப் பசளை வழங்குமாறு கோரி விவசாயிகள் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டனர். அத்தோடு பாதிப்புகளுக்கு அவர்கள் நிவாரணமும் கோரினர். தமக்கான பசளையைத் தேடிக் கொள்ள முடியாத நிலையில்தான் அவர்கள் வீதியில் இறங்கிப் போராடும் நிலைக்குத் தள்ளப்பட்டனர்.

இருந்த போதிலும் விவசாயிகளின் கோரிக்கைகளுக்கும் உரிய பதிலை அளிக்க முடியாத நிலைக்கு அன்றைய அரசாங்கம் தள்ளப்பட்டிருந்தது. அதன் விளைவாக அரசாங்கமே பதவி விலகும் நிலைக்கு ஏற்பட்டது. அத்தோடு அன்றைய ஜனாதிபதியும் கூட பதவி துறக்கும் நிலைக்கு தள்ளப்பட்டார்.

ஆனால் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாட்டின் தலைமையை ஏற்றதும் விவசாயிகளின் இரசாயனப் பசளைத் தேவையை நிறைவேற்றி வைப்பதற்கு முன்னுரிமை அளித்தார். அதற்கேற்ப இரசாயனப் பசளையை இறக்குமதி செய்யவும் அதனை விவசாயிகளுக்கு தாமதமின்றி கொண்டு சேர்க்கவும் ஏற்பாடுகளைச் செய்தார். அத்தோடு விவசாயத்தை ஊக்குவிக்கவும் நடவடிக்கைகளை அவர் முன்னெடுத்தார்.

இதன் பயனாக விவசாயிகள் ஆர்வத்துடனும் உற்சாகத்தடனும் பயிர்ச்செய்கையில் ஈடுபடும் சூழல் மீண்டும் உருவானது. அதன் ஊடாக நாட்டில் ஏற்படவிருந்த உணவுப் பஞ்சம் தடுக்கப்பட்டது. ஜனாதிபதி பதவியேற்றதும் முன்னெடுத்த தூரநோக்குடனான வேலைத்திட்டத்தின் பிரதிபலனே இது.

இவ்வாறான சூழலில் விவசாய மற்றும் பெருந்தோட்ட அமைச்சர் மஹிந்த அமரவீர ஊடகமொன்றுக்கு அளித்துள்ள பேட்டியில், 'நாடு எதிர்கொண்டுள்ள பொருளாதாரப் பிரச்சினையில் இருந்து மீட்சி பெறவென ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதமாக அபிப்பிராயம் தெரிவிக்கின்றனர். என்னைப் பொறுத்தவரையில் நாம் அனைவரும் நன்கறிந்த விடயமான விவசாயத்துறையின் ஊடாக சவால்களை எதிர்கொள்ள முடியும் என்பது எனது கருத்தாகும். விவசாயத்துறையின் ஊடாக முன்னெடுக்கப்படும் செயற்பாடுகள் அனைத்தையும் முதலீடாகக் கருதி திட்டங்களை முன்னெடுப்போமாயின், நாட்டின் சகல பக்கங்களில் இருந்தும் பொருளாதாரத்துக்கு ஒத்துழைப்புக் கிடைக்கப்பெறும். வெளிநாட்டுச் சந்தையை இலக்காகக் கொண்டு எமது உணவு உற்பத்தியை அதிகரித்தால் நாட்டில் ஏற்பட்டுள்ள நெருக்கடிக்கு முகங்கொடுப்பது கடினமானதாக இருக்காது' என்று தெரிவித்துள்ளார்.

விவசாய அமைச்சரின் இக்கூற்று யதார்த்தபூர்வமானதும், நியாயபூர்வமானதும் ஆகும். பொருளாதாரத் துறையைச் சேர்ந்த பலரது கருத்தும் அதுதான்.

இந்நாட்டினர் நன்கறிந்த விடயங்களில் விவசாயத்துறை முன்னணி வகிக்கிறது. அத்துறையின் ஊடாக முன்னெடுக்கப்படும் அனைத்துத் திட்டங்களையும் முதலீடாகக் கருதிச் செயற்பட்டால் பொருளாதார சவால்களை நிச்சயம் வெற்றிகரமாக எதிர்கொள்ள முடியும். அதிலும் குறிப்பாக உணவு உற்பத்தியை வெளிநாட்டு சந்தையை இலக்காகக் கொண்டு முன்னெடுக்கும் போது பொருளாதார சவால்களை எதிர்கொள்வது கடினமாகவே இருக்கப் போவதில்லை.

ஆகவே நாட்டினதும் மக்களினதும் நலன்களுக்கு முன்னுரிமை அளித்து உணவு உற்பத்தி விவசாயத் துறையைப் பயன்படுத்துவதில் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும். அதுவே இன்றைய தேவையாகும். அதன் ஊடாக நாடும் மக்களும் எதிர்கொள்ளும் பொருளாதார சவால்களை வெற்றிகரமாக முகாமைத்துவம் செய்து கையாளக்கூடியதாக இருக்கும் என உறுதிபடக் கூறலாம்.

editor.tkn@lakehouse.lk

# அரைநூற்றாண்டு கடந்தும் அழியாத நாமம் மர்ஹூம் ஏ.எம்.ஏ. அஸீஸ்

யாழ் சோனகத் தெருவில் சட்டத்தரணியும் காதியாருமான அபூபக்கர் சுல்தான் முஹம்மது நாச்சியா தம்பதியினருக்கு மூத்த புதல்வராக ஏ.எம்.ஏ. அஸீஸ் 1911 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 4 ஆம் திகதி பிறந்தார்.

ஏ.எம்.ஏ. அஸீஸ் அவர்களின் தகப்பனார் அபூபக்கர் அவர்கள் புகழ் பெற்ற புலவர் திலகம் சு.மு. அஸனா லெப்பையின் சகோதரராவார். தந்தை அபூபக்கர் யாழ் நகரசபை உறுப்பினராக பல வருடங்கள் சேவையாற்றினார். 1941 இல் யாழ்ப்பாண நகரசபையில் உபதலைவர் பதவியையும் வகித்தவர்.

1921 இல் வண்ணார்பண்ணை இராமகிருஷ்ண மிஷன் வைத்தீஸ்வரா வித்தியாலயத்தில் தமது கல்வியை அஸீஸ் ஆரம்பித்தார். கல்வி, ஒழுக்கம், நற்பண்புகளின் வளர்ச்சி என்பவற்றில் தம்மை சிறப்பாக வழிநடத்திய கல்வி நிலையம் என வைத்தீஸ்வரா வித்தியாலயம் பற்றி அஸீஸ் தமது குறிப்புகளில் பதிவு செய்துள்ளார்.

பின்னர் அஸீஸின் இடைநிலைக்கல்வி யாழ்ப்பாண இந்துக் கல்லூரியில் 1923 இல் 06 ஆம் வகுப்பில் ஆரம்பமானது. 1929 இல் அவர் பல்கலைக்கழக பிரவேசத்திற்காக தேர்ந்தெடுக்கப்படும் வரை அவரது கல்வி வாழ்வு யாழ்ப்பாண இந்துக் கல்லூரியில் நீடித்தது. வீட்டுச் சூழலும் வைத்தீஸ்வரா மற்றும் இந்துக் கல்லூரி பிரவேசங்களும் அஸீஸ் தமிழிலும் நல்ல பயிற்சியை பெற்றுக்கொள்ள வாய்ப்பை அளித்தன. 1929 இல் இலங்கை பல்கலைக்கழகத்தில் சேர்ந்து வரலாற்று துறையை சிறப்பு பாடமாக தெரிவு செய்து 1933 இல் வரலாற்றில் (B.A.,Hons) சிறப்புப் பட்டத்தை பெற்றார். இலங்கை அரசாங்கம் 1933 இல் லண்டன் கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தின் புனித கத்தரின் கல்லூரியில் வரலாற்றுத் துறையில் மேற்படிப்பை தொடர்வதற்கு புலமைப் பரிசில் வழங்கியது. அவர் லண்டன் பல்கலைக்கழகத்தில் வரலாற்றுத் துறையில் சிறப்புப் பட்டம் பெற்றார். இவர் இலங்கை சிவில் சேவையாளருக்கான தேர்விலும் சித்தி பெற்றார். இலங்கை நிர்வாக சேவையில் சித்தியடைந்த முதலாவது முஸ்லிம் இவரே ஆவார்.



1942 இல் அஸீஸ் உதவி அரசாங்க அதிபராக கல்முனையில் சேவையில் இருக்கும் காலத்தில் அரசாங்க கடமைகளோடு, பொதுநல ஈடுபாடு, மக்கள் சேவை, வரலாற்று ஆய்வுகளுக்கான தகவல்களை சேகரித்தல் போன்ற பல பணிகளை அவர் முன்னெடுத்தார். இக்கால கட்டத்தில் சுவாமி விபுலானந்தருடனும், இஸ்லாமிய மற்றும் கல்வி எழுச்சிகளையும் பற்றி பாடி வந்த மூத்த முஸ்லிம் கவிஞரான காத்தான்குடி அப்துல் காதர் லெப்பையுடனும் நெருக்கமான உறவுகளை வைத்திருந்தார்.

1943 இல் அஸீஸ் மாற்றலாகி கண்டியில் தனது பணிகளை ஆரம்பித்தார். அவர் இஸ்லாமிய இளைஞர் இயக்கத்தை (YMMA) ஸ்தாபிப்பதிலும் வெற்றி கண்டார்.

1945 ஆம் ஆண்டு இலங்கை முஸ்லிம் கல்விச் சகாய நிதி (Ceylon Muslim Scholarship Fund) என்ற நிதி நிறுவனத்தை கொழும்பில் உருவாக்கினார்.

அஸீஸ் அவர்கள் கொழும்பு ஸாஹிரா கல்லூரி அதிபராக 1948 ஆம் ஆண்டிலிருந்து 1961 வரை பணியாற்றினார்.

1952 இல் அஸீஸ் அகில இலங்கை ஆசிரியர் சங்கத் தலைவராக இருந்த போது ஸ்மித் – மண்ட் புலமைப் பரிசில் பெற்று அமெரிக்காவில் ஆறு மாதங்கள் பயிற்சி பெற்றுத் திரும்பினார்.

அவர் 1952 தொடக்கம்1963 வரை செனட்டராகவும் பணிபுரிந்தார். 1973 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 24 ஆம் திகதி காலமாகும் வரை கல்விக்காகவும் சமூக மாற்றத்திற்காகவும் பொதுநல சேவைகளுக்காகவும் தனது வாழ்வையே அர்ப்பணித்திருந்தார்.

ஏ.எம்.ஏ. அஸீஸ் அவர்களை கௌரவிக்கும் முகமாக இலங்கை அரசாங்கம் 1986 ஆம் ஆண்டு மே மாதம் 22 ஆம் திகதி முத்திரை வெளியிட்டது. ஏ.எம்.ஏ. அஸீஸ் காலமாகி 50 வருடங்கள் கடந்தும் அவரது நாமம் நிலைத்திருக்கின்றது.

கலாபூஷணம் **பரீட் இக்பால்...**
யாழ்ப்பாணம்

# தீவிர சிகிச்சையில் விஜயகாந்த்; வென்டிலேட்டர் மூலம் சுவாசம்!

தே.மு.தி.க தலைவரும் பிரபல நடிகருமான விஜயகாந்த் உடல் நிலை மிக மோசமடைந்த நிலையில் தீவிர சிகிச்சை பெற்று வருகின்றார். சென்னை மியாட் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருக்கும் விஜயகாந்துக்கு வென்டிலேட்டர் மூலம் சிகிச்சை வழங்கப்பட்டு வருகின்றது.

தொண்டர்கள், ரசிகர்களால் கப்டன் என அன்போடு அழைக்கப்படுபவர் விஜயகாந்த். இவர் அரசியலிலும் தடம் பதித்தவர். தி.மு.கவை பின்தள்ளிவிட்டு எதிர்க்கட்சித் தலைவராக இருந்தவர். முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவையே எதிர்த்தார். அவர் நினைத்திருந்தால் கூட்டணிக் கட்சியை எதிர்க்காமல் மக்களுக்கு குரல் கொடுக்காமல் அடுத்தடுத்த நிலைகளை அடைந்திருக்க முடியும். ஆனால் மக்களுக்கு சேவை செய்வதையே இலக்காகக் கொண்டு பணியாற்றியவர் அவர். அதனால் அவர் எந்தவித சமரசங்களுக்கும் இடம்தரவில்லை.

விஜயகாந்த் பல ஆண்டுகளாக உடல் நிலை பாதிக்கப்பட்டிருக்கிறார். அவர் அவ்வபோது வெளிநாடுகளில் சிகிச்சை மேற்கொண்டு வந்தார். இந்த நிலையில் அவர் தற்போது சென்னை மியாட் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். அவரது உடல் நிலை சீராக இல்லை என மருத்துவமனை சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



விஜயகாந்துக்கு நீரிழிவு நோய், தைரோய்ட், கல்லீரல் பிரச்சினை உள்ளிட்டவை இருக்கின்றன. நீரிழிவு நோயால் கால் விரல்களுக்கு இரத்த ஓட்டம் பாயாமல் இருந்ததால் வலதுகால் விரல்களில் சிலவற்றை மியாட் மருத்துவமனை கடந்த 2022 ஆம் ஆண்டு அகற்றியது. தை ரோய்ட் பிரச்சினையால் அவரது பே ச்சு பாதிக்கப்பட்டது. அதற்குச் சிகிச்சை கொடுத்து வந்தார்கள். அதன் பிறகு அவ்வப்போது பரிசோதனைக்காக மியாட் மருத்துவமனைக்கு செல்வார், உடனே ஓரிரு நாட்களில் வீடு திரும்பி விடுவார். சிறுநீரகப் பிரச்சினைக்கு சிகிச்சை பெறுகின்றார்.

அவருக்கு முதுகுத்தண்டு வடத்திலும் பிரச்சினை இருக்கிறது. தை ரோய்ட்டும் சேர்ந்து இருப்பதால் கழுத்தில் இணைந்திருக்கும் தண்டுவடத்தின் நரம்பு பாதிக்கப்பட்டு அவருக்கு ஞாபக மறதி இருந்து வருகிறது.

இந்த நிலையில் கடந்த 18ஆம் திகதி காய்ச்சல், சளி, இருமல் உள்ளிட்ட பிரச்சினைகளுக்காக அவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். அவருக்கு மூச்சுவிடுவதில் சிரமம் இருப்பதாக மருத்துவர்கள் கூறுகிறார்கள். தானாக சுவாசிக்க அவரால் முடியவில்லை. அவர் தீவிர சிகிச்சைப் பிரிவில் தற்போது உள்ளார். இருக்கிறார். மருத்துவர்கள் தொடர்ந்து சிகிச்சை அளித்து வருகிறார்கள். அவருக்கு செயற்கைச் சுவாசம் அளிக்கப்பட்டு வருகிறது. விஜயகாந்த் பூரண நலம் பெற பிரார்த்தனைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

# வகுப்பறையை உயிரோட்டமாக்கி, மாணவருக்கு உற்சாகமளிக்கும் கவின்நிலைப் போட்டிகள்

மகிழ்ச்சிகரமான சூழலே ஆர்வமுள்ள கற்றல், கற்பித்தலுக்கான தூண்டுதல்களாகின்றன. வகுப்பறைகளை உயிரோட்டமாக்குவதில் வகுப்பறை கவின்நிலை முக்கிய பங்காற்றுகின்றது. புத்தகங்களோடும், மனனங்களோடும் மட்டுப்படுத்தப்படுகின்ற மாணவர்களை காட்சிப்படுத்தலூடாகக் கற்றலுக்குத் தூண்டும் செயற்பாட்டினை வகுப்பறைக் கவின்நிலை ஏற்படுத்தி விடுகின்றது.

கற்றலுக்கு ஆர்வமான மாணவர்களை அதிகரிக்கச் செய்து சமகாலத்திற்கிசைவான வாண்மையுள்ள கற்றல் சமூகத்தை உருவாக்குவதே இத்திட்டத்தின் நோக்கங்களில் முக்கியமானவையாகும்.

பாடசாலைகள், கோட்டங்கள், வலயங்கள் என கவின்நிலைப் போட்டிகளை நடத்தி பாடசாலைகளை ஒழுங்கமைக்கும் செயற்பாட்டில் ஈடுபட்டு வருகின்றன. அவ்வாறானதொரு செயற்பாட்டின் முன்னோடியாக கல்முனை கோட்டக் கல்வி அலுவலகம் நடத்திய கவின்நிலைப் போட்டியினைக் குறிப்பிடலாம்.

கல்முனை கோட்டத்திலுள்ள 17 பாடசாலைகளில் ஆரம்பப் பிரிவுகளை உள்ளடக்கிய 15 பாடசாலைகளில் இப்போட்டிகள் நடத்தப்பட்டன. பாடசாலை மட்டத்தில் 3, 4 ஆம் தரங்களில் தெரிவுசெய்யப்பட்ட பாடசாலைகளுக்கிடையே மேற்படி கோட்ட மட்டப் போட்டிகள் நடத்தப்பட்டன. ஆசிரியர்களின் முறையான கலைத்திட்ட முகாமை, மாணவர்களின் மனவெழுச்சி, புத்தாக்க சிந்தனைகள், கற்றல் கற்பித்தல் செயன்முறையில் நவீன தொழில்நுட்ப சாதனங்களின் பிரயோகம், பெற்றோரின் தரவட்ட பங்களிப்பு, பொலித்தீன் அற்ற வகுப்பறை கழிவு முகாமைத்துவம் என்பவற்றின் ஊடாக தயாரிக்கப்பட்ட வகைமைப்பாடுகளை உள்ளடக்கியே போட்டிகள் நடத்தப்பட்டன

தரம் 3 இல் கல்முனை அஷ்ஷுஹறா வித்தியாலயம் முதலாம் இடத்தினையும், கல்முனை அல்அஷ்ஹர் வித்தியாலயம் இரண்டாம் இடத்தினையும், அல்பஹ்ரியா மகா வித்தியாலயம் மூன்றாம் இடத்தையும் பெற்றுக் கொண்டன.

தரம் 4 இல் கல்முனை இஸ்லாமாபாத் வித்தியாலயம் முதலாம் இடத்தினையும் அல்மிஸ்பா மகா வித்தியாலயம் இரண்டாம் இடத்தினையும் மருமுனை அல்மனார் மத்திய கல்லூரி மற்றும் கல்முனை அல்அஷ்கர் வித்தியாலயம் ஆகியன மூன்றாம் இடங்களையும் பெற்றுள்ளன.

பாடசாலை மட்டத்தில் தெரிவாகி, கோட்ட மட்டத்தில் பங்கேற்ற பாடசாலைகளுக்கிடையே முதல் மூன்று இடங்களைப் பெற்ற பாடசாலைகளுக்கு வெற்றிக் கிண்ணங்களும் சான்றிதழ்களும் வழங்கி வைக்கப்பட்டன.







பரிசளிப்பு நிகழ்வானது கல்முனை வலயக்கல்வி அலுவலகத்தில் இடம்பெற்றது. கோட்டக் கல்விப் பணிப்பாளர் யூ.எல். றியால் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் வலயக்கல்விப் பணிப்பாளர் எம்.எஸ்.சஹ்துல் நஜீம் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார்.

பாடசாலைகளின் வேலைத்திட்டத்தை ஊக்குவிக்கும் நோக்கில் வெற்றியீட்டிய பாடசாலைகள் தவிர்ந்த போட்டிகளில் பங்குபற்றிய பாடசாலைகள் அனைத்திற்கும் சான்றிதழ்கள் வழங்கி வைக்கப்பட்டன.

கல்முனை வலயக்கல்வி அலுவலகத்தின் பிரதி கல்விப் பணிப்பாளர்களான எம்.எச்.எம்.ஜாபிர், பீ.ஜிஹானா ஆலிப் உட்பட கல்வித்துறை சார்ந்தோர் நிகழ்வில் பங்கேற்றனர்.

**ஜெஸ்மி எம்.மூஸா...**
*(பெரியநீலாவணை தினகரன் நிருபர்)*

# 2030 எக்ஸ்போ கண்காட்சியை சவூதியில் நடத்த தீர்மானம்

சவூதி அரேபியாவின் தலைநகரான ரியாத்தில் 2030 எக்ஸ்போ கண்காட்சியை நடத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. உலக எக்ஸ்போ 2030 என்பது ஒரு சர்தேச கண்காட்சி ஆகும். இது சவூதி அரேபியாவின் தலைநகரமான ரியாத் நகரத்தில் 2030 ஆம் ஆண்டு ஒக்டோபர் 1 முதல் 2031 மார்ச் 31 வரை நடைபெறும்.

கடந்த 28 ஆம் திகதியன்று ரோம் (இத்தாலி) மற்றும் பூசான் (தென்கொரியா) ஆகிய நகரங்களுடன் போட்டியிட்டு ரியாத் நகரம் இந்தக் கண்காட்சியை நடத்த தேர்ந்தெடுக்கப்பட்டது.

உலக எக்ஸ்போ 2030 இன் தலைப்பு 'மாற்றத்தின் சகாப்தம் நாம் ஒன்றாக எதிர்காலத்தைப் பார்க்கிறோம்' என்பதாகும். இது நவீன கண்டுபிடிப்புகள் மற்றும் தொழில்நுட்பம் வாயிலாக உலகின் மிகப்பெரிய சிக்கல்களான காலநிலை மாற்றம் வறுமை முதலியவற்றை எதிர்கொள்ளும் வழிமுறைகளை கண்டறியும் நோக்ககுடையது.

**குறிக்கோள்கள் வருமாறு:**

1. புத்தாக்கம் மற்றும் தொழில்நுட்பத்திற்கான உலகளாவிய மையமாக திகழ்ந்து சவூதி அரேபியாவின் பங்கை உலகறியச் செய்தல்.

2. உலகலாவிய சவால்களை எதிர்கொள்வதற்கு சர்வதேச ஒத்துழைப்பை வலுப்படுத்துதல்.

3. சவூதியின் பொருளாதாரத்தைத் தூண்டி வெளிநாட்டு முதலீடுகளை ஈர்த்தல்.

4. சவூதி அரேபியாவில் சுற்றுலாவை ஊக்குவித்தல்.

**எதிர்பார்ப்புகள் வருமாறு:**

எக்ஸ்போ 2030 கண்காட்சியானது உலகெங்கிலும் இருந்து 25 மில்லியனுக்கும் அதிகமான பார்வையாளர்களை ஈர்க்கும் என்றும், சவூதியின் பொருளாதாரத்திற்கு $60 பில்லியன் டொலர்களை ஈட்டித்தரும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

உலக எக்ஸ்போ 2030 ஆறு மில்லியன் சதுர மீட்டர் நிலப் பரப்பில் ரியாத்தின் வடமேற்குப் பகுதியில் நடைபெறவுள்ளது.




இது கிங் காலித் விமான நிலையத்தில் இருந்து 5 நிமிட தூரத்தில் அமைந்திருக்கும். கண்காட்சித் தளம் ஒரு எதிர்கால நகரத்தின் வடிவத்தில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

உலக எக்ஸ்போ 2030 இல் 200 இற்கும் மேற்பட்ட நாடுகள் பங்கேற்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. மேலும் நிறுவனங்கள், சர்வதேச அமைப்புகள் மற்றும் சமூக ஆர்வலர்கள் போன்ற பிற பங்கேற்பாளர்களும் இருப்பார்கள்.

இது பல்வேறு நிகழ்வுகளை உள்ளடக்கியதாகும். உதாரணமாக கலை மற்றும் கலாசார கண்காட்சிகள், அறிவியல் மற்றும் தொழில்நுட்ப மாநாடுகள், கருத்தரங்குகள், பொழுதுபோக்கு மற்றும் விளையாட்டு நடவடிக்கைகள் ஆகியனவாகும்.

உலக எக்ஸ்போ 2030 சவூதி அரேபியாவுக்கு குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்தும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இது சவூதியின் சர்தேச நிலையை வலுப்படுத்தவும், பொருளாதாரத்தை ஊக்குவிக்கவும் சுற்றுலாத் துறையை வளர்க்கவும் உதவும் என பெரிதும் எதிர்பார்கப்படுகிறது.



**கலாநிதி அப்துல் சத்தார்...**
தலைவர், இஸ்லாமிய நிலையம்
பலகத்துரை, நீர்கொழும்பு

# அல்லாஹ்வுடனான உறவை பேணுவோம்!



மனிதர்கள், சடப்பொருட்கள் உள்ளிட்ட அனைத்தையும் படைத்தவன் சர்வ வல்லமை படைத்த அல்லாஹ் ஆவான். அவனை நம்பிக்கை கொள்ளுமாறும் தொடர்பினை பேணிக் கொள்ளுமாறும்வழிகாட்டியுள்ளஅவன்இதற்காக வணக்கங்களையும் வழிபாடுகளையும் பிரார்த்தனைகளையும் காட்டித்தந்துள்ளான். அல்லாஹ் எமக்கு மிகவும் நெருக்கமானவன்.

**'நபியே..! எனது அடியார்கள் என்னைப் பற்றி கேட்டால் இதோ நான் அவர்களுக்கு நெருக்கமாக இருக்கிறேன். ஒரு அழைப்பாளர் என்னை அழைத்தால் அதற்கு நான் பதிலளிப்பேன். எனவே அவர்கள் என்னிடமே பதிலைக் கேட்கட்டும். என்னையே நம்பிக்கை கொள்ளட்டும். இதன் மூலமாக அவர்கள் நேரான பாதையை அடைந்துவிடுவார்கள்' என்று கூறுங்கள் (அல் குர்ஆன் 02:186)** என்பதாக அல்லாஹ் குறிப்பிட்டுள்ளான்.

அப்படியிருக்கையில் அல்லாஹ்வோடு தொடர்புபடுவதற்கு உள்ளங்களைத் தடுப்பவை எவை? அவனை அறிந்துகொள்வதற்கு என்னென்ன விடயங்கள் தடையாக உள்ளன? அவனை நெருங்குவதற்கான தடைகள் என்ன? நாம் ஏன் விலகியிருக்கிறோம். அல்லாஹ்வுடனான உறவை நாம் ஏன் துண்டித்துக் கொண்டிருக்கிறோம். அவனுடனான உறவை ஏன் தொடராமல் இருக்கிறோம்? இவ்வாறான கேள்விகளுக்கு அல்லாஹ் இவ்வாறு குறிப்பிடுகிறான். **'அவர்கள் செய்துகொண்டிருந்தவை அவர்களது உள்ளங்கள் மீது துருவாகப் படிந்துவிட்டன' (83:14).**

அதுதான் உண்மை. அவர்களது உள்ளங்கள் துருப்பிடித்தமைதான் அல்லாஹ்வுக்கும் அவர்களுக்குமிடையிலான தொடர்பினை அறுத்திருக்கிறது. அவனுடனான உறவின் நெருக்கத்தை தூரமாக்கியுள்ளது. இதுவே அல்லாஹ்வை நெருங்குவதைத் தடுக்கும் முக்கிய தடையாகும்.

ஆனால் படைப்பாளனுக்கும் படைப்புகளுக்குமிடையில் தொடர்பும் உறவும் இருப்பது இன்றியமையாததாகும். அதனால் அல்லாஹ்வுடனான உறவின் வாயிலைத் திறப்பதற்கு பாரிய முயற்சியை முன்னெடுக்க வேண்டும். இம்முயற்சி ஆளுக்காள் வேறுபடலாம். குறிப்பாக உள்ளத்தைச் சூழ தூவப்பட்டுள்ள நச்சின் அளவிற்கு ஏற்ப அது வேறுபடலாம். மனதில் படிந்துள்ள அலட்சியம், பொடுபோக்கு, இருள்கள் போன்றவற்றின் அளவு அவற்றை நீக்குவதற்கான முயற்சியின் அளவை தீர்மானிக்கும்.

இது பூமிக்கு அடியில் மறைந்துள்ள பொக்கிஷத்தை போன்றது. இதனை சிலர் அவசரமாக அடைந்துகொள்ளலாம். வேறு சிலர் பெரிய முயற்சியும் நீண்ட காலமும் தேவைப்படலாம். உயிரோட்டமான உள்ளங்கள் இதனை விரைவாகவே அடைந்துவிடும்.

ஒருவர் அல்லாஹ்வுடனான உறவை அடைந்து கொண்டுள்ளதை அறிந்து கொள்ள சில அடையாளங்கள் காணப்படும். அதனை அல்குர்ஆன் தெளிவாக முன்வைக்கிறது.

## அல்குர்ஆன் மூலம் கிடைக்கும் தெளிவு

**'மரணித்திருந்தவனை நாம் உயிர்ப்பித்து அவனுக்கு பிரகாசத்தையும் கொடுத்தோம். அதன் மூலம் அவன் மனிதர்களிடையே நடமாடிக்கொண்டிருக்கிறான். இத்தகையவனை இறைமறுப்பு (குப்ர்) என்ற இருளில் சிக்கி வெளியேற முடியாத நிலையில் உள்ளவனுடன் ஒப்பிட முடியுமா? ஒருபோதும் முடியாது. இவ்வாறுதான் நிராகரிப்பாளர்களுக்கு அவர்கள் செய்துகொண்டிருப்பவைகள் அலங்காரமாக காட்டப்படுகின்றன'. (6:122)**

மரணித்திருந்தவன் உயிர்ப்பிக்கப்படுகிறான். அதாவது வழிகேட்டில் இருந்தவன் அல்குர்ஆன் என்ற அறிவின் மூலம் பிரகாசம் பெறுகிறான். நேர்வழியை அடைந்த மனிதன் மக்கள் மத்தியில் தைரியமாக நடமாடுகிறான். அடுத்த புறமாக இருளில் சிக்கியுள்ளவன், வழிகேட்டில் இருப்பவன் அதிலிருந்து வெளியேற முடியாதவன். இருசாராரையும் ஒப்பிட முடியுமா? நிராகரிப்பாளர்கள் செய்துகொண்டிருந்த விடயங்கள் காரணமாக இருளில் தட்டுத்தடுமாறுவது அவர்களுக்கு அலங்காரமாக விளங்குகிறது.

## இஸ்லாத்தில் அதிக ஆர்வம்

**'யாருக்கு அல்லாஹ் நேர்வழிகாட்ட விரும்புகின்றானோ இஸ்லாத்துக்காக அவரது உள்ளத்தை விசாலமாக்கிக் கொடுப்பான்' (6:125)** என்ற வசனத்தை நபி (ஸல்) அவர்கள் ஓதினார்கள். **அப்போது 'விசாலமாக்கிக் கொடுத்தல்' என்றால் என்ன? என்று ஸஹாபாக்கள் கேட்டார்கள். அதற்கு நபியவர்கள், 'இது உள்ளத்தில் ஏற்படுத்தப்படும் பிரகாசமாகும். அப்போது அவருக்காக அவரது உள்ளம் திறந்துகொடுக்கும்' என்றார்கள். 'அதனை அடையாளம் கண்டு கொள்ள அடையாளங்கள் ஏதும் உள்ளனவா?' எனக் கேட்கப்பட்ட போது, 'ஆம்' என்று குறிப்பிட்ட நபியவர்கள், 'அவர் நிரந்தரமான உலகை நோக்கிச் செல்வார். மதிமயக்கக்கூடிய உலகிலிருந்து விலகிச் செல்வார். மரணம் ஏற்படுவதற்கு முன்னரே மரணத்துக்காக தன்னை தயாராக வைத்துக்கொள்வார்' என்றார்கள்.**

(ஆதாரம்: இப்னு அபீ ஷைபா, பைஹகி)

## உள்ளத்தில் ஏற்படும் நடுக்கம்

இறைத் தொடர்பின் மற்றொரு அடையாளம் தான் அல்லாஹ் ஞாபகப்படுத்தப்படும் போது உள்ளத்தில் பீதியும் திடுக்கமும் ஏற்படுவதாகும். **'முஃமின்கள் எத்தகையவர்கள் என்றால் அல்லாஹ் ஞாபகப்படுத்தப்பட்டால் அவர்களது உள்ளங்கள் நடுநடுங்கும். இறை வசனங்கள் ஓதிக்காண்பிக்கப்பட்டால் அவர்களது நம்பிக்கை அதிகரிக்கும். அவர்கள் அல்லாஹ்வின் மீது பொறுப்புச் சாட்டுவார்கள்'. (8:02)**

அல்லாஹ் ஞாபகப்படுத்தப்படும் போது உள்ளத்தில் ஏற்படும் திடுக்கம் வாழ்க்கை சரியான இடத்தை நோக்கி வந்துவிட்டது, சரியான இடத்தில் அது நிலைத்துவிட்டது என்பதுதான் இதன் அர்த்தமாகும்.

## இறையச்சம்

அல்லாஹ் ஞாபகப்படுத்தப்படும் போது உள்ளச்சம் ஏற்படுவதும் இறை தொடர்பின் அடையாளமாகும். **'அல்லாஹ் நினைவுபடுத்தப்படும் போதும் அல்குர்ஆன் அருளப்படும் நிலையிலும் உள்ளங்களில் உள்ளச்சம் ஏற்படும் நிலை அல்லாஹ்வை ஆழமாக நம்பியவர்களுக்கு ஏற்படவில்லையா?... (57:16)**

உணர்வோடு கருத்துணர்ந்து தொழும் போது, உள்ளம் விழிப்புடன் இருக்கும் உள்ளச்சத்தை எம்மால் உணர முடியும்.

## ஈமானின் சுவையை உணர்தல்

இறை தொடர்பினை பேணிக்கொள்கின்ற உயிரோட்டமான உள்ளத்தின் இன்னுமொரு அடையாளம்தான் ஈமானின் சுவையை உணர்வதாகும். இது வாழ்வில் கிடைக்கின்ற மிகப்பெரியதொரு உணர்வு.

**'மூன்று விடயங்கள் யாரிடம் இருக்கின்றதோ அவர் அதன் மூலம் ஈமானின் சுவையை உணர்ந்து கொள்வார். அல்லாஹ்வும் அவனது தூதரும் யாருக்கு மிக விருப்பத்துக்கு உரியவராக இருக்குமோ அத்தகையவர் ஆவார். அல்லாஹ்வுடைய திருப்தியை நாடி ஒரு மனிதனை நேசிப்பவர். இறை நிராகரிப்பிலிருந்து மீண்டதன் பின்னர் மீண்டும் அதன்பால் செல்வதை நெருப்பில் எறியப்படுவது போன்று வெறுப்பவர்' என்று நபி (ஸல்) அவர்கள் குறிப்பிட்டார்கள்.**

(ஆதாரம்: புஹாரி, முஸ்லிம்)

இமாம் ஹஸனுல் பஸரி (ரஹ்) அவர்கள் இதுபற்றிக் குறிப்பிடும்போது, **'ஈமானின் சுவையை தொழுகையில், அல்குர்ஆனில், இறை நினைவு என்ற திக்ரில் என்ற மூன்று விடயங்களில் தேடுங்கள். இவற்றில் உங்களுக்கு சுவை கிடைத்துவிட்டால் சந்தோஷமாக தொடர்ந்து பயணம் செய்யுங்கள். உங்களுக்கு நன்மாராயணம் கூறிக்கொள்கிறேன். அவற்றில் ஈமானிய சுவை கிடைக்காது விட்டால் உங்களது கதவு மூடப்பட்டுள்ளதை அறிந்து கொள்ளுங்கள்.**

(ஆதாரம்: ஹில்யதுல் அவ்லியா)

இவை அல்லாஹ்வுடனான உறவை பேணுவதற்கான சில வழிகாட்டல்களாகும். இவற்றைப் பேணி இறை தொடர்பை மேம்படுத்திக் கொள்வோம்.

அஷ் ஷெய்க் யூ.கே றமீஸ்...
எம்.ஏ. (சமூகவியல்)

ஆலமுல் இஸ்லாம்
மர்லின் மரிக்கார் aalamulislam.tkn@lakehouse.lk

# நபிகளாரின் சகோதரத்துவ வழிகாட்டல்



**'மனிதர்களே..! உங்களை ஓர் ஆணில் இருந்தும் பெண்ணில் இருந்தும் படைத்தோம்'** என்ற அல் குர்ஆன் வசனத்தை நபி (ஸல்) அவர்கள் தனது சொற்பொழிவுகளில் அடிக்கடி வழி மொழிந்தார்கள்.

மக்காவை வெற்றி கொண்டபோது இறை இல்லமான கஃபாவை வலம் வந்து 'தவாப்' செய்த பிறகு நபிகளார் உரையாற்றுகையில், **'மக்களே..! எல்லா மனிதர்களும் இரண்டே பிரிவினராய்ப் பிரிகிறார்கள். ஒருவர் நல்லவர். இறையச்சம் உள்ளவர். இன்னொருவன் தீயவன் நற்பேறற்றவன். அன்றி மனிதர்கள் அனைவரும் ஆதமின் மக்களே!' என்றார்கள்.** (நபிமொழி)

தம் இறுதி ஹஜ் பயணத்தில் நபி (ஸல்) அவர்கள் மக்கள் மத்தியில் உரை நிகழ்த்தும் போது, **'மக்களே! எச்சரிக்கையுடன் இருப்பீராக... உங்கள் அனைவரின் அதிபதி ஒருவனே..! அரேபியனுக்கு அரேபியர் அல்லாதவனை விடவோ, அரேபியர் அல்லாதவனுக்கு அரேபியனை விடவோ, கருப்பனுக்கு வெள்ளையனை விடவோ, வெள்ளையனுக்கு கருப்பனை விடவோ இறையச்சத்தைப் பொறுத்தே தவிர எந்தவித மேன்மையும் இல்லை. இறைவனிடத்தில் மிகுந்த மதிப்புள்ளவர் உங்களில் மிகுந்த இறையச்சம் உள்ளவரே!..."** என்று குறிப்பிட்டார்கள்.

(நபிமொழி)

அதேநேரம் நபி (ஸல்) அவர்கள், தன்னைப் பின்பற்றிய ஸஹாபாக்களை சீடர்கள் என்றோ, மாணவர்கள் என்றோ தொண்டர்கள் என்றோ ஒரு போதும் அழைத்ததில்லை. அவர்கள் அனைவரையும் ஸஹாபிகள் (தோழர்கள்) என்று அழைத்தார்கள். உலக வரலாற்றில் நபிகளாருக்கு முன்பு இத்தகைய தோழமை உணர்வை எவரும் தோற்றுவிக்கவில்லை என்பதே வரலாறு.

சமத்துவ, சகோதரத்துவ சமுதாயத்தை உருவாக்க விரும்பிய நபி (ஸல்) அவர்கள், **'மனிதர்கள் அனைவரும் சீப்பின் பற்களைப்போல சமமானவர்கள்'** என்ற உவமை நயத்தோடு உரைத்தார்கள். சீப்பில் ஒரு பல் உயர்ந்து இன்னொரு பல் தாழ்ந்திருந்தால் அது தலையைக் கிழித்து புண்ணாக்கிவிடும். பண்பட்ட சமுதாயம் அமைய வேண்டுமானால் ஏற்றத்தாழ்வு இல்லாத நிலை வேண்டும் என்பதை இந்த உவமை மூலம் விளக்கினார்கள்.

**ஒருமுறை நபி (ஸல்) அவர்கள் தம் தோழர்களோடு அமர்ந்திருந்தார்கள். அப்போது ஒரு யூதரின் இறுதி ஊர்வலம் அந்த வழியாகச் சென்றது. இதைக் கண்ட நபி(ஸல்) அவர்கள் எழுந்து நின்றார்கள். இதைப் பார்த்த தோழர்கள், "இறைத்தூதரே..! நமது கொள்கைகளை எதிர்க்கும் யூதர் ஒருவரின் பிரேதம் இறுதி ஊர்வலமாக எடுத்துச் செல்லப்படுகிறது. அதற்கு நீங்கள் ஏன் எழுந்து நிற்க வேண்டும்?" என்று வினா எழுப்பினார்கள். அதற்கு நபிகளார், 'அவர் மனிதரா யிற்றே' என்று பதில் அளித்தார்கள்.** (நபிமொழி)

இச்சம்பவத்தின்படி மனிதர்கள் என்ற அடிப்படையில் வேறுபாடுகள் கிடையாது என்பது தெளிவாகிறது.

கருப்பர் இனத்தைச் சேர்ந்த பிலால் (ரழி) அவர்கள் இஸ்லாம் தோன்றுவதற்கு முன்பு அடிமையாக இருந்தார். ஏக இறைக் கொள்கையை நபி (ஸல்) அவர்கள் எடுத்துரைத்த போது, பிலால் (ரழி) அவர்களும் இஸ்லாத்தில் இணைந்தார். அதனால் மதிப்பும் மரியாதையும் கௌரவமும் அவரோடு இணைந்தன. நபிகளாரும் தோழர்களும் சேர்ந்து கட்டிய 'மஸ்ஜிதுன் நபவி' பள்ளிவாசலில் முதன் முறையாக தொழுகைக்கான அழைப்பை (பாங்கு) சொல்லும் பணி அவருக்கு வழங்கப்பட்டது. இதற்கு இஸ்லாம் எடுத்துரைத்த சமத்துவமே காரணம் என்பதில் மாற்றுக்கருத்துக்கு இடமில்லை.

அறிவுரைகள் வெறும் பேச்சளவோடு நின்று விடாமல், உலகளாவிய சமத்துவ, சகோதரத்துவ சமுதாயத்தை உருவாக்கிக் காட்டிய உன்னத மார்க்கமாக இஸ்லாம் திகழ்கிறது. இந்த உலகம் முழுவதும் பரவி இருந்த பல்வேறு இனங்களைச் சேர்ந்தவர்களையும், மொழி பேசுபவர்களையும் கொள்கை அடிப்படையில் இணைத்து ஒரே சமுதாயமாக (உம்மத்) உருவாக்கிய பெருமை நபிகளாருக்கு மட்டுமே உண்டு.

'வணங்கி வாழ்வோம். பிறரோடு இணங்கி வாழ்வோம்' என்ற இலட்சிய முழக்கத்துடன் இஸ்லாம் செயல்படுகிறது 'வணங்குவதற்குரியவன் அல்லாஹ்வைத் தவிர யாருமில்லை.' என்பதே இஸ்லாத்தின் அடிப்படைக் கொள்கையாகும்.

**"கூறி விடுவீராக! ஓ! நிராகரிப்பாளர்களே! நீங்கள் எவற்றை வணங்குகிறீர்களோ அவற்றை நான் வணங்குவதில்லை. நான் யாரை வணங்குகிறேனோ அவனை நீங்கள் வணங்குபவர்கள் அல்லர். உங்களுக்கு உங்களுடைய மார்க்கம்; எனக்கு என்னுடைய மார்க்கம்"**

**(அல் குர்ஆன்109:1)**

பிந்த் இஸ்மாயீல்...

# இஸ்லாத்தில் பெண்ணுரிமைகள்



இஸ்லாம் பெண்களின் உரிமைகள் மற்றும் அபிலாஷைகள் குறித்து விசேட கவனம் செலுத்தியுள்ளதோடு அவற்றை உறுதிப்படுத்தியும் உள்ளது. குறிப்பாக ஒரு பெண்ணைத் திருமணம் செய்து கொடுப்பதற்கு பெற்றோரின் விருப்பத்தை விட பெண்ணின் விருப்பமே முக்கியமானது என்றுள்ளது இஸ்லாம்.

இஸ்லாம் தோன்றுவதற்கு முந்தைய அரேபியாவின் ஒரு நூற்றாண்டு காலத்தை சரித்திர ஆசிரியர்கள், 'அறியாமைக் காலம்' என்றே குறிப்பிடுகிறார்கள். அக்காலத்தில் பெண்களின் நிலைமை மிகவும் மோசமாக இருந்தது. பெண்கள் சந்தைகளில் அடிமைகளாக விற்கப்பட்டனர். பண்டைய அரபு மக்கள் பெண் குழந்தை பிறந்தவுடன் அதை உயிரோடு புதைத்து விடுவார்கள். நபி (ஸல்) அவர்களின் வருகைக்குப் பிறகு இச்செயலுக்கு முற்றுப்புள்ளி வைத்தார்கள்.

அதேநேரம் வறுமைக்கு அஞ்சி குழந்தைகளைக் கொல்லும் பழக்கமும் அன்றிருந்தது. இதற்கு முற்றுப்புள்ளி வைக்கும் வகையில் அல்லாஹ்தஆலா, **'வறுமைக்கு அஞ்சி உங்கள் குழந்தைகளைக் கொல்லாதீர்கள். அவர்களுக்கும், உங்களுக்கும் நாமே உணவளிக்கிறோம். அவர்களைக் கொல்வது பெரிய குற்றமாகும்' (அல் குர்ஆன் 17:31)** என்று குறிப்பிட்டுள்ளான்.

மேலும் வறுமையைத் தவிர மடமையின் காரணமாகவும் அக்கால மக்கள் குழந்தைகளைக் கொல்பவர்களாக இருந்தனர். அதையும் அல்லாஹ்தஆலா, **'எவர்கள் அறிவில்லாமல் மூடத்தனமாக தம் குழந்தைகளைக் கொலை செய்தார்களோ, இன்னும் அல்லாஹ் அவர்களுக்கு (உண்பதற்கு ஆகுமாக்கி)க் கொடுத்ததை அல்லாஹ்வின் மீது பொய் கூறி (ஆகாதென்று) தடுத்துக் கொண்டார்களோ, அவர்கள் திட்டமாக நஷ்டமடைந்து விட்டார்கள். அவர்கள் வழி கெட்டு விட்டனர்'. (6:140)** என்று குறிப்பிட்டு தடை செய்துள்ளான்.

அதேநேரம் மூடநம்பிக்கைகளின் பெயரிலும் குழந்தைகளைக் கொல்லும் வழக்கம் அன்று இருந்தது. இதை அல் குர்ஆன், **'இவ்வாறே இணைவைப்போரில் பெரும்பாலோருக்கு, அவர்களுடைய குழந்தைகளைக் கொலை செய்வதை அவர்களுடைய தெய்வங்கள் அழகாக்கி வைத்துள்ளன' (6:137)** என்று குறிப்பிட்டுள்ளன.

இவ்வாறு வறுமை, மடமை, மூடநம்பிக்கை என்பவற்றின் காரணமாக குழந்தைகளைக் கொல்லக்கூடாது என்று இறைவன் தனது வசனங்களை இறக்கி தடை செய்தான். மேலும் நபி (ஸல்) அவர்கள், **'எவருக்கு மூன்று பெண் மக்கள் இருந்து அவர்களை அரவணைத்து தேவைகளை நிறைவேற்றி கருணை காட்டி வருவாரோ அவருக்கு சொர்க்கம் உறுதியாகி விட்டது' என்று குறிப்பிட்டுள்ளார்கள். அப்போது கூட்டத்தில் இருந்த ஒருவர், 'இரு பெண் மக்கள் இருந்தாலுமா?' என்று கேட்டார். அதற்கு நபிகளார், 'ஆம்! இரு பெண் மக்கள் இருந்தாலும்' என்று பதில் கூறினார்கள்.** (நபிமொழி)

இஸ்லாம் ஒரு பெண் தூங்கிக் கொண்டிருக்கும் போதோ அல்லது மயக்க நிலையில் இருக்கும் போதோ அல்லது வலுக்கட்டாயமாக கடத்திச் சென்றோ திருமணம் செய்வதைத் தடை செய்துள்ளது. திருமணத்திற்கு சம்பந்தப்பட்ட பெண்ணின் சம்மதம் அவசியம்.

**'நம்பிக்கை கொண்டோரே! பெண்களை வலுக்கட்டாயமாக அடைவது உங்களுக்கு அனுமதி இல்லை' (அல் குர்அன் 4:19)** அல்லாஹ் குறிப்பிட்டுள்ளான். இதன் ஊடாக திருமணத்திற்கு சம்மதம் தெரிவிப்பது பெண்ணின் உரிமை என்பது தெளிவாகிறது.

திருமணத்திற்கு முன்பு கணவன் மணக்கப் போகும் தன் மனைவிக்கு அவன் சக்திக்கேற்ப மணக்கொடை (மஹர்) கொடுக்க வேண்டும். கணவனிடமிருந்து திருமணம் செய்யும் மனைவி மஹர் எனும் மணக்கொடை பெறுவதை இறைவன் உரிமையாக்கியுள்ளான். இது குறித்து அல் குர்ஆன், **'நீங்கள் திருமணம் செய்து கொண்ட பெண்களுக்கு அவர்களுடைய மஹரை மகிழ்வோடு கொடுத்து விடுங்கள்' (4:4)** என்று குறிப்பிட்டுள்ளது. அதேநேரம் இல்லற வாழ்வில் இணைந்து வாழ முடியாத நிலை வரும்போது விவாகரத்து பெறவும் கூடிய உரிமையை இஸ்லாம் ஆண்களுக்கும் பெண்களுக்கும் வழங்கி உள்ளது.

**'அல்லாஹ்வின் வரம்புகளை அவர்கள் இருவரும் நிலை நிறுத்த மாட்டார்கள் என்று நீங்கள் அஞ்சினால், அவள் (கணவனுக்கு) ஏதேனும் ஈடாகக் கொடுத்து (பிரிந்து) விடுவதில் அவர்கள் இருவர் மீதும் குற்றமில்லை. இவை அல்லாஹ்வின் வரம்புகளாகும்' (2:229)** என்ற வசனம் மூலம் கணவனை விவாகரத்து செய்யும் உரிமை மனைவிக்கு உள்ளது என்பது தெளிவாகிறது.

விவாகரத்து செய்த கணவனின் வீட்டில் 'இத்தா' காலத்தில் மனைவி வசிப்பது பெண்ணுக்கு இறைவன் அளித்த உரிமையாகும். இது குறித்து அல் குர்ஆன், **'நீங்கள் பெண்களைத் 'தலாக்' சொல்வீர்களானால் அவர்களின் 'இத்தா'வைக் கணக்கிட ஏற்ற வகையில் (மாதவிடாய் அல்லாத காலங்களில்) 'தலாக்' கூறுங்கள். இன்னும் 'இத்தா'வைக் கணக்கிட்டுக் கொள்ளுங்கள். உங்கள் இறைவனாகிய அல்லாஹ்வை அஞ்சிக் கொள்ளுங்கள். பகிரங்கமான வெட்கக்கேடான காரியத்தை அப்பெண்கள் செய்தாலே தவிர அவர்களை அவர்களின் வீடுகளில் இருந்து வெளியேற்றாதீர்கள். அவர்களும் வெளியேற வேண்டாம். இவை அல்லாஹ்வின் வரம்புகள். அல்லாஹ்வின் வரம்புகளை மீறுவோர் தமக்கே தீங்கிழைத்துக் கொண்டனர்' (65:1).** என்று குறிப்பிட்டுள்ளது.

இவ்வசனத்தின் ஊடாக 'இத்தா' காலத்தில் கணவன் வீட்டில் மனைவி வசிப்பதற்கும் அல்லாஹ் பெண்களுக்கு உரிமை அளித்துள்ளான்.

மேலும் பெண்களுக்கு சொத்தில் பங்கு வழங்கிய மார்க்கம், இஸ்லாம். **'பெற்றோரோ நெருங்கிய உறவினர்களோ விட்டுச்சென்ற சொத்தில் ஆண்களுக்கும் பாகம் உண்டு. அவ்வாறே பெற்றோரோ நெருங்கிய உறவினர்களோ விட்டுச் சென்ற சொத்தில் பெண்களுக்கும் பாகமுண்டு' (4:7)** என்பதை அல் குர்ஆன் வசனம் உறுதிப்படுத்தியுள்ளது. சொத்தில் ஆணுக்கு இரண்டு பங்கும் பெண்ணுக்கு ஒரு பங்கும் வழங்க வேண்டும் என்பது அல்லாஹ் வகுத்த கட்டளையாகும்.

அபூ முஷீரா...

## வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம்...

கையளித்தார்.

தொழில் அமைச்சின் கீழ் செயற்பட்டு வரும் இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகம் இந்த ஆண்டு ஈட்டிய மொத்த வருமானமே, (07 பில்லியன்) 700 கோடி ரூபா திறைசேரிக்கு பங்களிப்புச்செய்யப்பட்டது. ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்ற இந்நிகழ்வில், அமைச்சின் செயலாளர் ஆர்.பி.ஏ. விமலவீர, வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியக தலைவர் ஹில்மி அஸீஸ் மற்றும் ஏனைய சிரேஷ்ட பிரமுகர்கள் உட்பட அமைச்சின் முக்கிய அதிகாரிகள் பலர் கலந்துகொண்டனர். இதன்போது, அமைச்சினால் மேற்கொள்ளப்பட்ட 2023 நடவடிக்கையால் இந்த முடிவு எட்டப்பட்டதாக குழுவினர் தெளிவுபடுத்தினர். (07 பில்லியன்) 700 கோடி ரூபாவில் (03 பில்லியன்) 300 கோடி ரூபா இதற்கு முன்னர் ஜனாதிபதியிடம் வழங்கப்பட்டுள்ளது. மஹரகம அபேக்ஷா வைத்தியசாலையின் மருந்து கொள்வனவுக்காக (100 மில்லியன்) 10 கோடி ரூபாவை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

அமைச்சினால் தற்போது அமுல்படுத்தப்படும் முக்கிய வேலைத்திட்டங்கள் தொடர்பில் அமைச்சர் மனுஷ ஜனாதிபதிக்கு தெளிவுபடுத்தினார்.

வெளிநாட்டு ஊழியர்களின் சங்கங்கள் இணைந்து நாட்டுக்கு பணம் அனுப்புவதை அதிகரிப்பது குறித்தும் அமைச்சர் விளக்கமளித்தார். மின்சார கார்களை இறக்குமதி செய்வதற்கான அனுமதி முறை அறிமுகம், ஸ்மார்ட் கிளப் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படும் தொழில் வழிகாட்டல் பணிகள் குறித்தும் அமைச்சர் இதன்போது ஜனாதிபதியிடம் குறிப்பிட்டார்.

இதேவேளை, கடந்த 18 மாதங்களில் (7.5 பில்லியன்) 750 கோடி அமெரிக்க டொலர்கள் வெளிநாட்டுப் பணமாகப் பெறப்பட்டுள்ளதாக சுட்டிக்காட்டிய அமைச்சர், புலம்பெயர்ந்த தொழிலாளர்களுக்கு அறிமுகப்படுத்தப்பட்டுள்ள ஓய்வூதியத் திட்டம் மற்றும் வேலைவாய்ப்புக்காக பணம் அனுப்புவதற்கான வழிமுறைகள் அமைப்பது குறித்தும் ஜனாதிபதியிடம் தெரிவித்தார்.

## போதகர் ஜெரோம் CIDயில்...

வாக்குமூலத்தை வழங்கிய பின்னர், பாஸ்டர் ஜெரோம் பெர்னாண்டோ, நேற்று மாலை குற்றப் புலனாய்வுப் பிரிவிலிருந்து வெளியேறியுள்ளார்.

## நத்தார், புத்தாண்டை முன்னிட்டு...

திணைக்களத்தில் நடைபெற்றது. ஊடக சந்திப்பில் முதலீட்டு ஊக்குவிப்பு இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம சுதந்திர வர்த்தக வலயத்தின் வர்த்தகர் சங்கம், மற்றும் வர்த்தக சங்கத்தின் உறுப்பினர்களான தம்மிக்க பெர்ணான்டோ, எம். மர்சூக், ஹேமந்த பெரேரா ஆகியோர் கலந்து கொண்டனர்.

ஊக்குவிப்பு அமைச்சர் திலும் அமுனுகம தகவல் தருகையில்,

இத் திட்டம் சுதந்திர வர்த்தக வலயத்தில் நடைபெறுவதால் வெளிநாட்டிலிருந்து வரும் சுற்றுலாப் பிரயாணிகள் மற்றும் உள்ளூர் மக்கள் மலிவு விலையில் பொருட்களை வாங்க முடியும். இப்பிரதேசத்தில் உள்ள புடவை உற்பத்தி மற்றும் ஆடை அணிகள் விளையாட்டுப் பொருட்கள், பிளாஸ்டிக் பொருட்கள், உணவு வகைகள் என பல்தேசிய உற்பத்திகளை மலிவு விலையில் பெற்றுக் கொள்ள முடியும்.

அத்துடன் கொழும்பிலிருந்து 24 மணி நேரமும் போக்குவரத்து வசதிகள், இரவு வேலைகளில் களியாட்ட நிகழ்வுகள், பாதைகளில் மின்சார அலங்காரங்களும் காட்சிப்படுத்தப்படும்.

## சுகாதார அமைச்சின் நிறுவனங்கள்...

தெரிவிக்க முடியும் என்றும் அவர் சபையில் தெரிவித்தார். நாட்டில் நிலவும் மருந்து தட்டுப்பாட்டுக்கு விரைவில் தீர்வு காணப்படும் என குறிப்பிட்ட அமைச்சர், எதிர்காலத்தில் முறையான வழிமுறைகள் மூலமே மருந்து கொள்வனவுகள் இடம்பெறும் என்றும் தெரிவித்தார்.பாராளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற வரவு செலவுத் திட்டத்தில் சுகாதார அமைச்சுக்கான செலவினத் தலைப்பு மீதான விவாதத்தில் உரையாற்றுகையிலே, அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

விவாதத்தில் தொடர்ந்து உரையாற்றிய அமைச்சர்,

மருந்து தட்டுப்பாட்டுக்கு வெகுவிரைவில் தீர்வு காணப்படும். அத்துடன் சுகாதார சேவை ஊழியர்கள் எதிர்கொண்டுள்ள பிரச்சினைகளுக்கு பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காண உரிய நடவடிக்கை எடுக்கப்படும். நாட்டில் நிலவும் நிதி நெருக்கடிக்கு மத்தியில் சுகாதார சேவையை சிறந்த முறையில் முன்னெடுத்துச் செல்ல அனைவரதும் ஒத்துழைப்பு மிக அவசியமாகும்.

சுகாதாரத்துறை நாட்டின் ஒட்டுமொத்த மக்களையும் உள்ளடக்கியதாக காணப்படுகிறது. 23,000 மருத்துவர்கள் 43,000 தாதியர்கள் உட்பட மருத்துவ கட்டமைப்பில் 01 இலட்சத்து 46,000 ஊழியர்கள் பணி புரிகின்றார்கள்.

உதாரணமாக நாட்டில் ஐந்து கிலோ மீற்றர் தூரத்துக்கிடையில் ஒரு மருத்துவ சிகிச்சை நிலையம் அல்லது மருத்துவ மனை இயங்கி வருவது எமது சுகாதாரத் துறையின் முன்னேற்றகரமான நிலையாகும்.மருந்து தட்டுப்பாட்டிற்கு மிக விரைவில் தீர்வு காணப்படும்.

அதற்கான ஆலோசனைகள் தேசிய மருந்தாக்கற் கூட்டுத்தாபனத்துக்கு வழங்கப்பட்டுள்ளன. தரமான மருந்து கொள்வனவுக்கும்,தேசிய மட்டத்தில் உற்பத்தி செய்யப்படும் மருந்துகளுக்கும் முன்னுரிமை வழங்குமாறு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

## ஆபரண தங்கத்தின் விலை...

இதற்கமைய நேற்று வியாழக்கிழமை (30) ஒரு பவுண் 22 கரட் தங்கத்தின் விலை 1,68,000 ரூபாவாக அதிகரித்துள்ளது. இதேவேளை, ஒரு பவுண் 24 கரட் தங்கத்தின் விலை 1,85,000 ரூபாவாக அதிகரித்துள்ளது.

உலக சந்தையில் ஏற்ற இறக்கங்கள் காரணமாக தங்கம் விலை தொடர்ந்து சில நேரம் ஏற்றத்தையும் சில நேரம் வீழ்ச்சியையும் காட்டி வருகிறது. முந்தைய வாரங்களுடன் ஒப்பிடுகையில் தற்போதைய விலைகள் அதிகரிப்பை காட்டுவதாக தங்க வர்த்தகர்கள் குறிப்பிடுகின்றனர்.

அண்மைக் காலங்களில் 24 காரட் தங்கம் 1,60,000 ரூபாவுக்கும், ஒரு பவுண் 24 கரட் தங்கம் 1,70,000 ரூபாவுக்கும் விற்கப்பட்டன. தங்கம் விலை அதிகரித்து காணப்பட்டாலும், முந்தைய காலத்தை விட தங்க விற்பனை குறைந்துள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

## இலங்கையின் கடன்மறுசீரமைப்பு...

சாத்தியமான பாதையை உருவாக்குகிறது.இலங்கையின் பேண்தகு மீட்புக்கு ஆதரவாக அமெரிக்கா உள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

## வயோதிப கணவன், மனைவி...

வருகிறார். கடைக்கு பின்னாலுள்ள சிறிய வீடான்றில் வயோதிப தம்பதிகள் வசித்து வந்துள்ளனர்.நேற்று முன்தினம் (29) இரவு வழமைபோல அவர்களது மகன் கடையை மூடிவிட்டு அருகிலுள்ள தனது வீட்டுக்கு சென்றுள்ளார். இதன்போது தம்பதிகள் கடைக்கு பின்னாலுள்ள வீட்டில் உறங்கச் சென்றுள்ளனர்.

நேற்றுக் காலை கடையை திறப்பதற்காக வருகை தந்த மகன் தனது தாயும் தந்தையும் இரத்தவெள்ளத்தில் கிடந்தமையை கண்டு அதிர்ச்சியடைந்துள்ளார். சம்பவம் தொடர்பாக செட்டிகுளம் பொலிஸாருக்கு தெரியப்படுத்தப்பட்டது. சம்பவ இடத்துக்கு வந்த பொலிஸார், தடவியல் நிபுணர்களின் உதவியுடன் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். சம்பவத்தில் செட்டிகுளம் பகுதியை சேர்ந்த பசுபதிவர்ணகுலசிங்கம் (வயது72) என்ற முதியவரும், அவரது மனைவியான கனகலட்சுமி (வயது 68) என்பவருமே இவ்வாறு வெட்டிப் படுகொலை செய்யப்பட்டுள்ளனர்.

சடலங்களுக்கருகில் இரத்தம் தோய்ந்த மூன்று கத்திகள் மீட்கப்பட்டுள்ளன. இதனால் அவர்கள் வெட்டிக்கொலை செய்யப்பட்டிருக்கலாமென சந்தேகம் வெளியிட்டுள்ள பொலிஸார் சம்பவத்தில் 05 பவுண் பெறுமதி மிக்க தங்க நகை ஒன்றும் காணாமல் போயுள்ளதாக தெரிவித்துள்ளனர்.

## 21,000 மில். ரூபா பெறுமதியான...

50 கிலோ 288 கிராம் உள்ளூர் கஞ்சாவுமே, கடற்படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

இவற்றின் பெறுமதி,1,456 மில்லியன் ரூபா என கடற்படை தெரிவித்துள்ளது.

## தெங்கு வருவாயை அதிகரிக்க...

இது தொடர்பில் விவசாய அமைச்சின் அதிகாரிகளுக்கு உரிய பணிப்புரைகளை வழங்கியுள்ளதாக தெரிவித்துள்ள அமைச்சர், இதற்கென ஐந்து வருட திட்டம் நடைமுறைப்படுத்தப்படும் என்றும் குறிப்பிட்டார். இந்த ஐந்து வருடத்திட்டம் எதிர்வரும் வருடத்தில் ஆரம்பமாக உள்ளது. தெங்கு அபிவிருத்தி அதிகார சபை , தெங்குஆராய்ச்சி சபை மற்றும் லுணுவில தென்னை ஆராய்ச்சி நிறுவனம் ஆகியவற்றின் பங்கேற்புடன் இந்த திட்டம் நடைமுறைப்படுத்தப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

நாட்டின் தேங்காய் மற்றும் தெங்கு உற்பத்திப் பொருட்களுக்கு சர்வதேச சந்தையில் பெரும் கேள்வி காணப்படுகிறது. இந்நிலையில், நாட்டின் மொத்த தென்னை உற்பத்தியில் 100 க்கு 75 வீதம் தேசிய நுகர்வுக்காக பெறப்பட்டு,

மீதமான 25 வீதமே வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுவதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார். எனினும் நாட்டில் தேங்காய் தட்டுப்பாடு நிலவும் காலங்களில் ஏற்றுமதி நடவடிக்கைகளில் சிக்கல்கள் ஏற்படுவதாகவும் அவர் தெரிவித்து அவர் தெரிவித்துள்ளார்.

## வங்காள விரிகுடாவில் தாழமுக்கம்:...

கூடிய மழை பெய்யக்கூடும். நாட்டின் பெரும்பாலான மாகாணங்களின் பல இடங்களில் பிற்பகல் ஒரு மணிக்குப் பின்னர் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும்.

வடக்கு, கிழக்கு, மத்திய மற்றும் ஊவா மாகாணங்களின் சில இடங்களில் 100 மில்லிமீற்றர் வரையிலான பலத்த மழை பெய்யலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

பலத்த காற்றும் மின்னல் தாக்கங்களும் ஏற்படக்கூடிய சந்தர்ப்பங்களில் பொதுமக்கள் அவதானத்துடன் செயற்பாடு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

தென்அந்தமான் மற்றும் வங்காள விரிகுடாவின் தென்கிழக்குப் பகுதிகளுடன் இணைந்த கடல் பிராந்தியத்திற்கு மேலாக நிலைகொண்டுள்ள தாழ் அமுக்கப் பிரதேசமானது மேற்கு முதல் வட மேற்குத் திசையை நோக்கி நகர்கிறது. இன்றையளவில் மேலும் இது,தீவிரமடைந்து வங்காள விரிகுடாவின் தென்கிழக்குத் திசையில் தாழ் அமுக்கமாக மாற்றமடையும். இந்த தாழ் அமுக்கமானது மேலும் விருத்தியடைந்து சூறாவளியாக வலுவடையக்கூடும்.

ஆகையினால் மீனவர்களும் கடல் சார் ஊழியர்களும் வளிமண்டலவியல் திணைக்களத்தினால் வெளிவிடப்படுகின்ற எதிர்கால வானிலை எதிர்வு கூறல்களை கவனித்திற்கொண்டு செயற்பாடுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

## கடற்றொழில் துறை அபிவிருத்திக்கு...

அமைச்சில் சந்தித்து (29) உரையாடினார். இதன்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இச்சந்திப்பில் இலங்கை கடற்றொழில் துறையை அபிவிருத்தி செய்வதற்காக அமெரிக்க அரசின் உதவியைப் பெற்றுக் கொள்வது தொடர்பில் விரிவாக கலந்துரையாடப்பட்டது.

இலங்கையில் கடலட்டை உள்ளிட்ட நீர் வேளாண்மைத் துறையை அபிவிருத்தி செய்வது மற்றும் இலங்கை கடற்றொழிலாளர்களுக்கு நிவாரணங்களைப் பெற்றுக் கொடுப்பதற்கு அமரிக்க அரசாங்கத்தின் உதவிகள் மிகவும் இன்றியமையாததென அமைச்சர் அமெரிக்க தூதரிடம் எடுத்துரைத்தார்.

இலங்கையின் கடற்றொழில் துறையை சர்வதேச தரத்துக்கு மேம்படுத்துவதற்கு, குறிப்பாக கடற்றொழில் துறையில் வளர்ச்சியடைந்த நாடுகளின் ஒத்துழைப்பு தேவையென சுட்டிக்காட்டிய அமைச்சர், தற்போது நடைமுறையிலுள்ள சட்டங்களில் காணப்படும் குறைகளை நிவர்த்தி செய்து உலக உணவு மற்றும் விவசாய அமைப்பின் ஒத்துழைப்புடன் புதிய கடற்றொழில் சட்டமொன்று தயரிக்கப்பட்டு வருவதாகவும் அதனை விரைவில் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்து நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் தெரிவித்தார்.

இச் சந்திப்பில் இலங்கையின் தற்போதைய அரசியல் சூழ்நிலை தொடர்பாக கலந்துரையாடப்பட்டது. இலங்கையின் இனப் பிரச்சினைக்கு சிறந்த தீர்வு மாகாண சபை முறையே, என்பதை தொடர்ந்து வலியுறுத்தி வருவதாகவும் அடுத்த வருடம் நடைபெறவுள்ள ஜனாதிபதி தேர்தல் மற்றும் பொதுத் தேர்தலின் பின்னர் மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களை நடாத்துவதற்கு இலங்கை அரசாங்கம் தீர்மானித்துள்ளதாகவும்; அமைச்சர் தெரிவித்தார்.

தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர், இம் முறை வரவுசெலவு திட்டத்தில் மக்களின் நன்மைக்காகவும் நாட்டின் அபிவிருத்திக்காகவும் சிறந்த பிரேரணைகளை ஜனாதிபதி முன் வைத்துள்ளார். எதிர்க்கட்சிகள் அதனை விமர்சித்தாலும் கூட இது அபிவிருத்தியை இலக்காகக் கொண்ட ஒரு வரவுசெலவு திட்டமெனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## ஜனாதிபதி ரணில் நேற்று...

டுபாயில் நடைபெறவிருக்கும் COP 28 மாநாட்டில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் எண்ணக்கருவுக்கமைய, வெப்ப வலய நாடுகளின் ஒத்துழைப்புடன் 'காலநிலை நீதிக்கான ஒன்றியத்தை' ஆரம்பிக்க இலங்கை எதிர்பார்க்கிறது. கொள்கைத் தயாரிப்புக்கான தீர்மானங்களில் வடக்கு உலக பிரதேசங்களில் தாக்கம் செலுத்துவதே இதன் நோக்கமாகுமென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஜனாதிபதியுடன் குழுவினரும் பயணமாகியுள்ளனர்.

## அரசியல் அநாதையாக்கும் நோக்கிலே...

அவர் தெரிவித்தார். அடுத்த ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில் சுகாதார அமைச்சின் நிதி ஒதுக்கீட்டு குழு நிலை விவாதத்தில் நேற்றைய தினம் உரையாற்றிய போதே, அவர் இவ்வாறு தெரிவித்தார். விவாதத்தில் தொடர்ந்தும் உரையாற்றிய அவர்,

அரசியல் ரீதியில் என்னை இல்லாதொழிக்கும் வகையிலேயே 2010ஆம் ஆண்டு எனக்கு சுகாதார அமைச்சர் பதவி வழங்கப்பட்டது. இறுதியில் அதுவே,என்னை ஜனாதிபதி பதவி வரை உயர்த்திச் சென்றது.

நாட்டிலுள்ள 40 கிராம வைத்தியசாலைகள் தற்போது மூடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. எதிர்காலத்தில் அது நூறு என்ற எண்ணிக்கையை கடந்து செல்லலாம்.

பதிவு செய்யப்பட்ட மருத்துவர்கள் என்ற ஒரு சேவை சுகாதாரத் துறையில் காணப்பட்டது. அத்தகைய மருத்துவர்களை இவ்வாறு மூடப்பட்டு வரும் ஆஸ்பத்திரிகளுக்கு நியமிக்கலாம். இவ்வாறு செயற்பட்டால் வைத்தியசாலைகளை மூடாமல் தொடர்ந்து அவற்றை முன்னெடுத்துச் செல்ல முடியும்.

எனினும், அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கம் அந்த சேவையை நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தது.

பௌதிக வளங்களை அபிவிருத்தி செய்வது மட்டுமின்றி, நோய்களுக்கான சிகிச்சை ஆரம்ப சுகாதார சேவை ஆகியவற்றை முன்னேற்றுவது அவசியமாகும்.

போஷணை தொடர்பான அதிகாரிகள் சுகாதாரத்துறையில் மிகவும் குறைவா

## அரசி ஆலை ஊழியர்களுடன்...

விபத்து நிகழ்ந்தது.காயமடைந்த

30 பேரில் நால்வரின் நிலை, ஆபத்தாக உள்ளதாக வெலிகந்த பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இவ்விபத்தில் படுகாயமடைந்த நால்வர் பொலன்னறுவை பொது வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளதாக வெலிகந்த வைத்தியசாலையின் பேச்சாளர் குறிப்பிட்டுள்ளார். '

சாரதியின் அதிக வேகம் மற்றும் கவனக்குறைவே, விபத்துக்குக் காரணமென வெலிகந்த பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.இந்த பஸ்ஸில் 80 ஊழியர்கள் இருந்தனர்.

## அமைச்சரவை தீர்மானங்களை...

உறுப்பினர்கள் அமைச்சரவை தீர்மானங்களை, சிறப்புரிமை பிரச்சினைகளாக கருதி சவால் விடுவதாக ஆளும் கட்சி உறுப்பினர்கள் பலர் முறைப்பாடுகளை முன்வைத்துள்ளனர்.

இதை, கவனத்தில் கொண்டே மேற்படி விடயங்கள் தொடர்பில் ஆராயுமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதி அலுவலகத்துக்கு அறிவித்துள்ளார்.

இவ்வாறான சிறப்புரிமை விடயங்களை முன்வைப்பது பாராளுமன்ற சிறப்புரிமையை துஷ்பிரயோகம் செய்வதாக அமையுமா? என்பதை தெரிவிக்குமாறு ஜனாதிபதி அலுவலகம் சட்ட மாஅதிபரிடம் கோரியுள்ளது.

அமைச்சரவையில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள், ஜனாதிபதி மற்றும் நீதிபதிகளை இணைத்து பாராளுமன்றத்தில் சிறப்புரிமை பிரச்சினைகளை எழுப்புவதற்கான சாத்தியக்கூறுகள் குறித்தும் ஜனாதிபதி அலுவலகம் சட்ட மா அதிபரிடம் வினவியுள்ளது.

## பாராளுமன்றத்தில் தெரிவிக்கப்படும்...

அது தொடர்பில் உரிய கவனம் செலுத்தப்படும் என்றும் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச முன்வைத்த கேள்வியொன்றுக்குப் பதில் வழங்கும் வகையிலேயே சபாநாயகர் இவ்வாறு தெரிவித்தார்.

எதிர்க்கட்சித் தலைவர் தமது கேள்வியின் போது, ரொஷான் ரணசிங்க பாராளுமன்றத்தில் தெரிவித்த விடயமொன்று தொடர்பில் வழக்கு தொடரப்பட்டுள்ளது. இது பாராளுமன்ற சிறப்புரிமையை மீறுகின்ற விடயமாகும். அதனால் இந்த விடயத்தில் தலையிட்டு அவரது சிறப்புரிமையை பாதுகாக்க சபாநாயகர் நடவடிக்கை எடுக்கவேண்டும் என கேட்டுக் கொண்டார்.

அது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

பாராளுமன்ற அதிகாரங்களும் சிறப்புரிமைகளும் சட்டத்தின் முதலாம் பிரிவின் 3 மற்றும் 04 இன் கீழ் பேச்சு மற்றும் விவாதத்துக்கான சுதந்திரம் தொடர்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அந்த வகையில் பாராளுமன்றத்தில் பேசப்படும் விடயம் தொடர்பாக பாராளுமன்றத்துக்கு வெளியில் எத்தகைய விசாரணையையும் மேற்கொள்ள முடியாது.

அதேவேளை, அதனை அடிப்படையாகக்கொண்டு குடியியல் மற்றும் குற்றவியல் வழக்கு நடவடிக்கைகளுக்கு ,அல்லது கைது செய்யப்படுவதற்கு சம்மந்தப்பட்டவரை ஆளாக்கவும் முடியாது.

இவ்வாறான நிலையில்,ரொஷான் ரணசிங்க சபையில் தெரிவித்த கருத்தொன்றை அடிப்படையாக்கொண்டு

பாராளுமன்ற அதிகாரங்கள், சிறப்புரிமைகள் சட்டத்தை முற்றாக மீறி, ஒரு சிலரால் வழக்கு தொடுக்கப்பட்டுள்ளது.

இந்த சட்டத்தின் கீழ் ரொஷான் ரணசிங்கவின் சிறப்புரிமை மீறப்பட்டுள்ளது. பாராளுமன்ற உறுப்பினர்களின் சிறப்புரிமைகளை பாதுகாக்க கடமைப்பட்டுள்ள சபாநாயகர் இது தொடர்பாக உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

இதன்போது குறுக்கிட்ட எதிர்க்கட்சியின் பிரதம கொறடா லக்ஷ்மன் கிரியெல்ல, பாராளுமன்றத்தில் தெரிவிக்கப்பட்ட கருத்தொன்றை அடிப்படையாகக்கொண்டு எம்,பி, ஒருவருக்கு எதிராக யாராவது வழக்கு தொடுத்தால், அந்நபரை பாராளுமன்ற சிறப்புரிமை குழுவுக்கு அழைக்கும் அதிகாரம் சபாநாயகருக்கு உள்ளது. இதன்படி அவர் செயற்பட வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

இதற்கு பதிலளிக்கும் போதே சபாநாயகர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

## இன்றைய பலன்கள்

### ( 01. 12. 2023 )



கலாநிதி சிவஸ்ரீ இராமசந்திர குருக்கள் பாபு சர்மா

(ஸ்ரீ வித்யா ஜோதிட நிலையம் கொழும்பு)

**மேஷம்:**



*பண வரவு அதிகரித்தாலும் எதிர்பாராத செலவுகளும் இருக்கும். கூட்டு முயற்சியில் முன்னேற்றம் காணப்பட்டாலும் தொழில் போட்டியை சமாளிக்க வேண்டியதிருக்கும்.*

**ரிஷபம்:**



*கூட்டுத் தொழில் வியாபாரம் நன்கு நடைபெறும். மூலதனத்தை அதிகரிக்க புதிய முயற்சிகளை மேற்கொள்வீர்கள்.*

**மிதுனம்:**



*வாடிக்கையாளர்களின் திருப்திக்காக ஓய்வின்றி உழைப்பீர்கள். பணப்புழக்கம் அதிகரிக்கும்.கூட்டு தொழில் சிறப்பாக நடைபெற்று எதிர்பார்க்கும் லாபம் வந்து சேரும்.*

**கடகம்:**



*கூட்டுத் தொழில் வியாபாரத்தில் நல்ல முன்னேற்றம் காணப்படும். குடும்பத்தில் சுமூகமான போக்கு காணப்படும்.*

**சிம்மம்:**



*கூட்டுத் தொழில் சிறப்பாக நடைபெற்ற எதிர்பார்க்கும் லாபம் கிடைக்கும். குடும்பத்தில் அமைதி காணப்படும்.*

**கன்னி:**



*வாடிக்கையாளர்களின் எண்ணப்படி கொடுத்த பணி ஒன்றுக்காக பாராட்டுப் பெறுவீர்கள். கூட்டுத் தொழில் நன்றாக நடைபெறும்.*

**துலாம்:**



*கூட்டுத் தொழிலை எதிர்பார்க்கும் லாபம் கிடைக்கும். குடும்பம் சிறு சிறு பிரச்சனைகளை சந்திக்கும்.*

**விருச்சிகம்:**



*குடும்பத்தில் சிறு சிறு தொல்லைகளை சந்திக்க நேரிடும். அவசர செலவுக்கு நண்பர்கள் உதவியை நாடுவீர்கள்.*

**தனுசு:**



*கூட்டுத் தொழிலில் சுறுசுறுப்பு காணப்படும். பணியாளர்களின் ஒத்துழைப்பு பயன் தரும். குடும்பத்தில் சிறுசிறு தொல்லை சஞ்சலம் அளித்தாலும் அதிக பாதிப்பு இருக்காது.*

**மகரம்:**



*கூட்டத் தொழிலில் எதிர்பார்க்கும் லாபம் இருந்தாலும் அதிக செலவுகளால் சிரமத்தை சந்திப்பீர்கள். குடும்பத்தில் எதிர்பாராத செலவுகளால் திட்டமிட்டபடி காரியங்களை முடிக்க முடியாமல் போகலாம்.*

**கும்பம்:**



*கூட்டாளிகளில் ஒருவர் மன வேறுபாட்டால் பிரிந்து செல்ல திட்டமிடலாம். குடும்பத்தில் சிறுசிறு பிரச்சனைகள் இருந்தாலும் அவற்றை சாமர்த்தியமாக சமாளிப்பீர்கள்.*

**மீனம்:**



*பண வரவுகளில் தாமதம் ஏற்பட்டாலும் கைகளுக்கு வந்து சேர்ந்த விடும். கூட்டுத் தொழில் லாபகரமாக நடைபெறும்.*

## இரண்டாம் தவணை கடன்...

சர்வதேச நாணய நிதியத்துடனான விரிவாக்கப்பட்ட நிதி வசதி திட்டத்துக்கு சர்வதேச கடன் வழங்குநர் குழு இணக்கம் தெரிவித்துள்ளமை அரசாங்கத்திற்கு கிடைத்த பெரும் வெற்றியாகும்.

இலங்கைக்கான முக்கிய கடன் வழங்குநர்களான இந்தியா,ஜப்பான்,பிரான்ஸ் ஆகிய நாடுகளும் சீனாவும் கடன் மறுசீரமைப்புக்கு சார்பான நிலைப்பாட்டிலேயே உள்ளமை வரவேற்புக்குரியது.

அனைத்து கடன் வழங்குநர்களும் சமமான நிலையில் மதிக்கப்படுவார்கள் என்றும் எவருக்கும் சிறப்புச் சலுகைகள் வழங்கப்படமாட்டாதென ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வழங்கிய வாக்குறுதி நிறைவேற்றப்பட்டுள்ளது.

சர்வதேச நாணய நிதியத்தின் முதல் கடன் தவணையுடன் நாட்டில் பொருளாதார ஸ்திரத்தன்மை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.நாணய நிதியத்தின் நிபந்தனைகளை செயற்படுத்தும் போது ஏற்பட்ட காலதாமதத்தால் இரண்டாம் தவணை நீடிக்கப்பட்ட கடன் தவணை கிடைப்பது தாமதமானது.

அதனை எதிர்க்கட்சியினர் தமது அரசியல் பிரசாரத்துக்காக பயன்படுத்திக் கொண்டுள்ளார்கள் என்பதையும் குறிப்பிட வேண்டும்.

எவ்வாறெனினும் சர்வதேச நாணய நிதியத்தின் இரண்டாம் தவணைக் கடன் அடுத்த மாதமளவில் கிடைக்கப்பெறும் என எதிர்பார்க்கின்றோம். சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்புடன் வங்குரோத்து நிலையிலிருந்து வெகுவிரைவில் நாட்டை மீட்க முடியும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## சுகாதாரத் துறையில் மலையகத்தை...

தேசிய கொள்கை மலையகத்திலும் பின்பற்றப்படுகிறதா? என்றும் அவர் கேள்வி எழுப்பினார். பாராளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற 2024 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில் சுகாதார அமைச்சுக்கான செலவினத் தலைப்பு மீதான விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

விவாதத்தில் தொடர்ந்தும் உரையாற்றிய அவர்,

மலையகப் பெருந்தோட்டப் பகுதிகளிலுள்ள வைத்தியசாலைகளை அரசாங்கம் பொறுப்பேற்றுள்ளன. இருந்தபோதும் தற்போது அந்த வைத்தியசாலைகளில் பாரிய வளப்பற்றாக் குறை காணப்படுகின்னறன. எனவே,

சுகாதாரத்துறையில் மலையகத்தைப் புறக்கணிக்க வேண்டாம்.

பெருந்தோட்டப் பகுதிகளிலுள்ள அரச வைத்தியசாலைகளை அபிவிருத்தி செய்வதை விடுத்து அவற்றை மூடுவதற்கே அதிக கவனம் செலுத்தப்பட்டு வருகிறது.இதை கவலையுடன் தெரிவிக்க வேண்டியுள்ளது.

சுகாதாரத் துறையின் தேசிய கொள்கை மலையகத்திலும் பின்பற்றப்படுகிறதா என்ற கேள்வி நீண்டகாலமாக எழுப்பப்பட்டு வருகிறது.

.பெருந்தோட்ட பகுதிகளிலுள்ள வைத்தியசாலைகளை அரசாங்கம் பொறுப்பேற்றுள்ள நிலையிலும், அங்கு பாரிய வளப்பற்றாக்குறை காணப்படுகிறது.

2005 ஆம் ஆண்டுக்கு பின்னர் இரத்தினபுரி, பதுளை, கேகாலை , நுவரெலியா,கண்டி,மாத்தளை உள்ளிட்ட பெருந்தோட்ட பகுதிகளில் உள்ள 51 தோட்ட வைத்தியசாலைகளை அரசாங்கம் பொறுப்பேற்றிருந்தது. பின்னர் இவற்றில் பெரும்பாலான வைத்தியசாலைகள் மூடப்பட்டுள்ளன.சுகாதாரத்துறையில் மலையகத்தை புறக்கணிக்க வேண்டாம்.

மலையகத்தில் தாய் சேய் மரணம் அண்மைக்காலமாக அதிகரித்து வருகிறது. மலையகத்தில் வீதிகள் சீரமைக்கப்படாத காரணத்தால் கர்ப்பிணித் தாய்மார்களை வைத்தியசாலைக்கு கொண்டு செல்வதும் பாரிய பிரச்சினையாக உள்ளது.

## களனி கங்கையில் ......

வருவது தொடர்பான ஆவணங்கள் என்பன பாலத்துக்கருகில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. காணாமல்போனவரை தேடும் பணியில் பொலிஸார் மற்றும் பிரதேசவாசிகள் தீவிரமாக செயற்பட்டு வருகின்றனர்.

## லேக்ஹவுஸ் முன்னாள்...

பத்திரிகையான டெய்லி நியூஸ் நாளிதழின் துணை ஆசிரியராகவும் வெளிநாட்டு

செய்தி ஆசிரியராகவும் இவர்,பணியாற்றினார்.

அமரர் ரோஹன ஆரியரத்ன, பத்திரிகைத் துறையில் நீண்ட அனுபவத்தை கொண்டிருந்தார். அன்னாரது பூதவுடல் ஹொரன,வேவல இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு இறுதிக்கிரியைகள் இன்று வெள்ளிக்கிழமை ஹொரண பொது மயானத்தில் நடைபெறும்.

# இலங்கையின் பொருளாதார மேம்பாட்டுக்கு உதவிக்கரம் நீட்டும் சவுதி அரேபியா



இலங்கைக்கு எப்போதும் உதவிக் கரம் நீட்டும் நேச நாடுகளில் சவுதி அரேபியாவும் ஒன்று. சவுதி இலங் கைக்கு மனிதாபிமான உதவிகளை தொடர்ந்தும் வழங்கிக் கொண்டி ருப்பதோடு இலங்கையின் பொரு ளாதார வளர்ச்சிக்காகவும் அதன் மேம்பாட்டுக்காகவும் பல உதவி, ஒத்துழைப்புக்களையும் நல்கக்கூடி யதாகவும் உள்ளது. இலங்கையின் பல பாரிய அபிவிருத்தித் திட்டங் களுக்கும் கூட சவுதி தொடர்ந்தும் உதவி வருகிறது. இவை மாத்திரமல் லாமல் இந்நாட்டைச் சேர்ந்த சுமார் இரண்டு இலட்சம் பேருக்கு சவுதி யில் தொழில் வாய்ப்புக்கள் வழங் கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்க விடயமாகும்.

அந்த வகையில் இலங்கைப் பொருளாதாரத்தை மேம்படுத்த ஒத் துழைப்பு நல்கும் நோக்கில் சவுதி யின் இரு புனித பள்ளிவாசல்களின் பாதுகாவலரான மன்னர் சல்மான் பின் அப்துல் அஸீஸ் ஆல் ஸஊத், பட்டத்து இளவரசர் முஹம்மத் பின் சல்மான் பின் அப்துல் அஸீஸ் ஆல் ஸஊத் ஆகியோரின் "ஏழை நாடுகளை வளப்படுத்தும் திட்டத் தின் கீழ்" அவர்களது ஆலோசனை மற்றும் வழிகாட்டல்களின் பிரகா ரம் சவுதியின் பொருளாதார மற்றும் திட்டமிடல் அமைச்சர் பைசல் பாழில் அல் இப்ராஹீம் அண்மை யில் இலங்கைக்கு விஜயம் செய்தார்.

அவர் இலங்கை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை ஜனாதிபதி செய லகத்தில் சந்தித்து பேச்சுவார்த்தை நடாத்தினார். இச்சந்திப்பின் போது, இரு நாடுகளுக்கு இடையிலான நட் புறவை மேலும் வலுப்படுத்துவது குறித்தும் ஆடை மற்றும் சுற்றுலாத் துறை தொடர்பிலான பொருளாதார உறவுகளை மேம்படுத்துவது குறித்



தும் காத்திரமான பேச்சுவார்த்தை கள் நடாத்தப்பட்டுள்ளன.

தற்போதைய சூழலில் சவுதி பொருளாதார அமைச்சரின் இலங்கை விஜயம் அதிக முக்கியத்து வத்துடன் நோக்கப்படுகிறது. குறிப் பாக இந்நாட்டின் பெருளாதாரத்தை மேம்படுத்த சவுதி கைகோர்த்திருப் பது அனைவராலும் வரவேற்கப்படு கிறது. உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டு இலங்கை வந்த சவுதி அமைச்சர் பைசல் அல் இப்ராஹீம், இலங்கை ஜனாதிபதியை ஜனாதிபதி செயலகத்தில் கடந்த 28 ஆம் திகதி சந்தித்து கலந்துரையாடினார்.

இச்சமயம் இலங்கைக்கும் சவுதி அரேபியாவுக்கும் இடையில் நிலவும் பொருளாதார உறவுகளை மேலும் வலுப்படுத்துவது குறித்து நீண்ட நேரம் கலந்துரையாடப்பட் டுள்ளது.

குறிப்பாக யுத்தம் முடிவுற்ற பின்னர் முதல் அதிகளவிலான சவுதி அரேபிய சுற்றுலாத்துறையி னர் இலங்கைக்கு வருகை தந்தவண் ணம் உள்ளனர். அது இலங்கையின் பொருளாதார மேம்பாட்டுக்கு உதவக்கூடியதாக உள்ளது. அதன் விளைவாக இலங்கைக்கும் சவு திக்கும் இடையிலான சுற்றுலாத் துறையை மேலும் மேம்படுத்தும் வழிவகைகள் குறித்து கவனம் செலுத்தப்பட்டுள்ளன. அத்தோடு தைத்த ஆடை ஏற்றுமதி சம்பந்தமாக வும் இக்கலந்துரையாடலின் போது விரிவாக ஆராயப்பட்டுள்ளது.

'பிராந்திய நாடுகள் மத்தியில் பொருளாதார உறவுகளை வலுப்ப டுத்துவதில் சவுதி மிகவும் கவனம் செலுத்துகிறது' என்று இச்சந்திப்பில் குறிப்பிட்டுள்ள அமைச்சர் பைசல், 'இதில் இலங்கைக்கு முக்கிய இடம் அளிக்கப்பட்டுள்ளது' என்றுள்ளார்.

அதேநேரம், வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரிக்கும் சவுதி அமைச்சர் பைசல் அல் இப்ராஹி முக்கும் இடையலான சந்திப்பு கொழும்பு ஹோல்பேஸ் ஹோட்ட லில் இடம்பெற்றது. இச்சந்திப்பின் போது, இரு நாடுகளுக்கும் இடை யிலான பொருளாதார உறவை விரி வுபடுத்துவதற்கான ஒத்துழைப்பு, வாய்ப்புகள், பொதுவான விடயங் கள், இரு நாடுகளுக்குமிடையிலான சமீபத்திய முன்னேற்றங்கள் என்பன குறித்தும் விரிவாக ஆராயப்பட்டுள் ளன.

இச்சந்திப்பில் வெளிவிவகார இரா ஜாங்க அமைச்சர் தாரக பாலசூரிய, நிதி, பொருளாதார மற்றும் தேசிய கொள்கைகள் இராஜாங்க அமைச் சர் ஷெஹான் சேமசிங்க, மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சனா விஜேசேகர இலங்கைக்கான சவுதி அரேபிய தூதுவர் காலித் பின் ஹமூத் அல் கஹ்தானி ஆகியோர் கலந்து கொண்டனர்.

இதேவேளை சவுதி அமைச்சர் பைசல், இலங்கையின் முன்னணி தனியார் நிறுவனங்களின் பிரதம நிறைவேற்று அதிகாரிகளையும் கொழும்பில் சந்தித்து கலந்துரையா டியுள்ளார். இச்சமயம் இரு நாடுக ளுக்கும் இடையிலான பொருளாதார மற்றும் முதலீட்டு ஒத்துழைப்பின் பல முக்கிய விடயங்கள் குறித்தும் கருத்து பரிமாறப்பட்டுள்ளன.



அஷ்ஷைக் எம்.எச். ஷேஹுத்தீன் மதனி, பணிப்பாளர், அல் ஹிக்மா நிறுவனம், கொழும்பு.







சர்வதேச மனித உரிமைகள் பேரவையின் உலகளாவிய அமைப்பின் இலங்கைக்கான முதல் மாநாடு அண்மையில் இலங்கைக்கான ஏற்பாட்டாளர் ஏ.ஆர். அமீர்கானின் விசேட அழைப்பின் பேரில் கலாநிதி மது கிரிஷான் மற்றும் இந்தியாவிலிருந்து வருகை தந்த மருத்துவர் எஸ்.ஸ்ரீனிவாசமூர்த்தியும் கலந்து கொண்டனர். இந்நிகழ்வில் பிரதம அதிதியாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான், இவ் அமைப்பின் இலங்கைக்கான தலைவர் கலாநிதி எம்.ஏ.சி.மஹ்ரூம் மற்றும் நிறைவேற்றுப் பணிப்பாளர்களான எம்.குபேரலிங்கம், கலாநிதி அப்துர் ரஸாக் உட்பட சர்வ மத போதகர்கள், கல்வியியலாளர்கள், ஊடகவியலாளர்கள், தொழிலதிபர்களும் கலந்து சிறப்பித்தனர். இந்நிகழ்வில் தினகரன் பத்திரிகையில் பணியாற்றும் றிம்ஸான் நிஸாமும் கௌரவிக்கப்பட்டார்.

## கொழும்பு முஹியத்தீன் பள்ளிவாசலில் 146ஆவது ரிபாய் கந்தூரி

**ருஸைக் பாரூக்**



சுல்தானுல் ஆரிபீன் செய்யதினா அஹ்மதுல் கபீரூர்ரிபாயி அவர்க ளின் 146வது ஆண்டு ரிபாயிய்யா கந்தூரி சங்கைக்குரிய ரிபாயி மௌலானா அல் ஹாஜ் யூ. பி. செய்யித் முஹம்மத் ஆசிக் தங்கல் அவர்களது தலைமையில் ஞாயிற் றுக்கிழமை 3ம் திகதி காலை 10.30 மணிக்கு கொழும்பு 12, முஹியத் தீன் பள்ளிவாசலில் நடைபெறவுள் ளது.

அன்றைய தினம் கலீபத்துல் ரிபாயி மௌலவி ஏ.சி.ஏ. பளீல் ( காஸிமி) அவர்களின் விஷேட சொற்பொழிவும் இடம்பெறவுள் ளன. ரிபாயிய்யா அரபி மகளிர் கல்லூரி அதிபர் மௌலவி அப் துல்லா ரவ்லி உட்பட உலமாக்கள், முஹிப்பீன்கள் மற்றும் இஃவான் கள் ஆகியோர் கலந்து சிறப்பிக்க வுள்ளனர்.

### மாத்தளையில்

# தாயின் வங்கிக்கணக்கிலிருந்து சட்டவிரோதமாக பணம் பெற்ற மகள்

## சந்தேகநபரை தேடி பொலிஸார் வலை வீச்சு

**மாத்தளை சுழற்சி நிருபர்**

மாத்தளை, இரத்தோட்டைப் பிர தேசத்தில் அமைந்துள்ள தனியார் வங் கியொன்றில் தனது தாயின் வங்கிக்க ணக்கில் வைப்பிலிடப்பட்ட சுமார் 28 இலட்சம் ரூபா பணத்தை அவரது மகள் சட்டவிரோதமான முறையில் பெற்றுக்கொண்டு தலைமறைவாகி யுள்ளதாக, பொலிஸார் தெரிவித்த னர்.

தனது தாய்க்கு தெரியாமல் தாயின் தேசிய அடையாள அட்டையைப் பயன்படுத்தி இவர் இப்பணத்தை வங்கியிலிருந்து சட்டவிரோதமாக பெற்றுள்ளதாகவும், பொலிஸார் தெரிவித்தனர்.

மேற்படி தாய் குவைத்தில் பணிப்பெண்ணாகச் சென்று பணி புரிந்துவிட்டு, கடந்த 9ஆம் திகதி தனது சொந்த இடத்துக்கு திரும்பிய நிலையில், குவைத்தில் உழைத்த பணத்தை வங்கியில் வைப்பி லிட்டிருந்தார். இந்நிலையில், தனது மகனுக்கு முச்சக்கரவண்டி யொன்று கொள்வனவு செய்வதற் காக வங்கியிலிருந்து பணத்தை மீளப் பெறுவதற்காக இத்தாய் வங் கிக்கு சென்ற போது, தனது வங்கிக் கணக்கிலிருந்து சுமார் 28 இலட்சம் ரூபா மீளப்பெறப்பட்டிருந்தமை தெரியவந்ததுடன், சுமார் 850 ரூபா மாத்திரமே அவரது வங்கிக்கணக் கில் எஞ்சியிருந்தமையும் தெரிய வந்தது.

இந்தச் சம்பவம் தொடர் பாக மாத்தளை பிரதேச குற்றப் புலனாய்வுப் பொலிஸாரிடம் இத்தாய் முறைப்பாடு செய்த தைத் தொடர்ந்து பொலிஸார் விசார ணையை முன்னெடுத்த போது, தனது தாயின் அடையாள அட்டையை கள வாகப் பயன்படுத்தி அவரது மகள் பணத்தை மீளப் பெற்றிருந்தமை தெரியவந்துள்ளதாகவும், பொலிஸார் தெரிவித்தனர்.

இந்நிலையில், இந்தச் சம்பவத் துடன் தொடர்புடைய சந்தேக நபர் தலைமறைவாகியுள்ள நிலையில் இவரைக் கைது செய்வதற்காக மாத்தளை பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

### மலைச்சாரல்

## ரந்தெனிகலை வைத்தியசாலையில் சிறுத்தையின் உடல் ஒப்படைப்பு

**மஸ்கெலியா தினகரன் விசேட நிருபர்**

மஸ்கெலியா பொலிஸ் பிரிவுக் குட்பட்ட பிரவுன்ஸ்வீக் தோட் டத்தில் இறந்த சிறுத்தையின் உடலத்தை ரந்தெனிகலை மிருக வைத்தியசாலையில் வைத்து பிரேத பரிசோதனை மேற்கொள்ளப்பட வுள்ளதாக, நல்லதண்ணி வனப்



பாதுகாப்பு அதிகாரி ரத்நாயக்க தெரி வித்தார். ஹட்டன் நீதவான் நீதிமன் றத்தின் பணிப்புரைக்கமையவே இந்த நடவடிக்கை எடுக்கப்பட் டுள்ளதாகவும், அவர் தெரிவித்தார். பிரவுன்ஸ்வீக் தோட்டத்தில் 4 அடி உயரமும் 6 அடி நீளமும் கொண்ட சுமார் 6 வயது மதிக்கத்தக்க சிறுத்தை யொன்று, தேயிலை செடிகளுக்காக கட்டப்பட்ட கம்பி வலையில் சிக்கி இறந்துள்ளது.

இந்நிலையில் இச்சிறுத்தையின் உடலத்தை நேற்று முன்தினம் புதன்கிழமை (29) மீட்டெடுத்த நல் லதண்ணி வனப் பாதுகாப்பு அதிகா ரிகள், ரந்தெனிகலை மிருக வைத் தியசாலைக்கு கொண்டு சென்று ஒப்படைத்துள்ளனர்.

## எரபத்ஓயா பெருக்கெடுப்பு

**ஊவா சுழற்சி நிருபர்**

வெலிமடையிலுள்ள எரபத் ஓயா பெருக்கெடுத்துள்ளதால் எல்ல பாலம் உடைந்துள்ளது. இதனால் போக்குவரத்து பாதிக் கப்பட்டதாக, பிரதேசவாசிகள் தெரிவித்தனர். வெலிமடையில் பெய்து வரும் அடை மழை கார ணமாக எரபத் ஓயா, உமா ஓயா போன்ற ஆறுகள் பெருக்கெடுத் துள்ளன. இதனால் வயல் நிலங் கள் நீரில் மூழ்கியுள்ளதுடன், மரக்கறிச் செய்கைகளும் பாதிக் கப்பட்டுள்ளதாக, விவசாயிகள் தெரிவித்தனர்.

## பயாஸ் - ரட்ணம்; சுப்பர் சன்ஸ் வழங்கும் வசந்த கீதங்கள்




தினகரன், தினகரன் வாரமஞ்சரியின் ஊடக அனுசரணையுடன் இசைத்துறையில் 40 ஆண்டுகால ஆற்றல்கொண்ட பயாஸ் ரட்ணம்; சுப்பர் சன்ஸ் வழங்கும் வசந்த கீதங்கள் இசை நிகழ்ச்சி நாளை மறுதினம் 3ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை மாலை 6.30 மணிக்கு கொழும்பு 07, ஜே. ஆர். ஜயவர்தன நிலையத்தில் நடைபெறவுள்ளது.

பயாஸ் சவாஹிர், கலைக்கமல் ஆகியோர் இதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளனர். இந்த இசை நிகழ்ச்சியை அனைவரும் இலவசமாக கண்டு களிக்கலாம் என நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

## வாழைப்பழம் பொதி செய்யும் தொழிற்சாலையை இரத்தினபுரியில்

**இரத்தினபுரி சுழற்சி நிருபர்**



இரத்தினபுரி மாவட்டத் தில் உற்பத்தி செய்யப் பட்டு வரும் வாழைப்பழங் களை ஏற்றுமதி செய்யும் நோக்கில் வாழைப்பழங் களை பொதி செய்யும் தொழிற்சாலையொன்றை அம்மாவட்டத்தில் அமைப் பதற்கு தீர்மானம் எடுக்கப் பட்டுள்ளது. இரத்தினபுரி மாவட்ட இணைப்பு குழுக் கூட்டம் அண்மையில் நடை பெற்ற போதே, இந்தத் தீர்மா னம் எடுக்கப்பட்டுள்ளது.

இரத்தினபுரி மாவட்டத்தில் 12 ஹெக்டேயர் நிலப்பரப் பில் புளி வாழைச் செய்கை மேற்கொள்ளப்படுவதுடன், வாழைப்பழ ஏற்றுமதியை நோக்காகக் கொண்டு இந்தச் செய்கை மேற்கொள்ளப்படு கின்றது. எம்பிலிப்பிட்டி, உட வளவ கல்தோட்ட, கொலன்ன போன்ற பிரதேசங்களில் இந்தச் செய்கை மேற்கொள்ளப்பட்டு வருவதுடன், இதற்காக 100 குழாய்க் கிணறுகள் விசேட மாக அமைக்கப்பட்டுள்ளன. அத்துடன், வாழை உற்பத்திச் சங்கங்கள் மூலமாக இம்மு யற்சி முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இந்நிலையில், ஏற்றுமதிக்கு வாழைப்பழங்களை பொதி செய்யும் தொழிற்சாலையை இரத்தினபுரி மாவட்டத்துக்கு வெளியில் அமைப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டு வருகின்றது. எனவே, இரத்தினபுரி மாவட்டத்தி லும் வாழைப்பழம் பொதி செய்யும் தொழிற்சாலையை அமைத்துத் தருமாறு, இரத்தி னபுரி மாவட்ட பாராளுமன்ற உ றுப்பினர் அகில எல்லாவல வேண்டுகோள் விடுத்திருந்த நிலையிலேயே, இரத்தினபு ரியில் வாழைப்பழங்களை பொதி செய்யும் தொழிற்சா லையை அமைப்பதற்கு தீர்மா னம் எடுக்கப்பட்டது.



# உம்மு ஐமன் முஸ்லிம் மகளிர் அறபு கல்லூரியின் மூன்றாவது பட்டமளிப்பு விழா

## ✱தோற்றமும் வளர்ச்சியும்

உம்மு ஐமன் முஸ்லிம் மகளிர் அறபுக் கல்லூரி பம்பலப்பிட்டியில் 2008/01/10ஆம் திகதி 18 மாணவிகளுடனும் இரண்டு முஅல்லிமாக்களுடனும் ஆரம்பிக்கப்பட்டது. கல்லூயின் முதல்வராக அல்ஹாஜ் அப்துஸ் ஸத்தார் முஹம்மத் ஹனீபும் பணிப்பாளராக அஷ்ஷெய்க் எஸ்.ஏ.எம். ஜஃபர் ரஹ்மானியும் நிருவாக உறுப்பினர்களாக அல்ஹாபிழ் ஏ. ஆர். எம். ரியாஸ், ஹாஜி உவைஸ் ஆகியோரும் செயற்பட்டனர்.

இக்கல்லூரி ஆரம்பத்தில் தற்காலிகமாக ஆரம்பிக்கப்பட்டபோதும் நான்கு வருடங்களின் பின்னர் கல்லூரியை நிரந்தரமாக அமைத்துக் கொள்ளலாம் என்று முடிவு செய்யப்பட்டது. அதனையடுத்து, இதனை திஹாரியில் அமைக்கலாம் என்று முயற்சி செய்யப்பட்டுக் கொண்டிருந்தது.

அவ்வேளை, இவ்விடயத்தை அறிந்த எமது கிராமத்தின் நிருவாக சபை உறுப்பினர்கள் மற்றும் சன்மார்க்க விடயத்தில் ஆர்வம் கொண்ட சில வாலிப சகோதரர்கள் ஹாஜி ஹனீபுடன் பேசி மாத்தளை மாவட்டத்தில் கலேவெல, நமடகஹவத்தை கிராமத்தில் இந்தக் கல்லூரியை அமைத்துக் கொள்ள ஏற்பாடு செய்து தருமாறு கல்லூரிப் பணிப்பாளராகிய அஷ்ஷெய்க் எஸ்.ஏ.எம். ஜஃபர் ரஹ்மானியிடம் வேண்டிக்கொண்டனர். (பணிப்பாளரிடம் வேண்டுகோள் விடுத்தவர்கள் ஹாஜிகளான ஸமீர், ரவூப், மௌலவிகளான இக்ராம், இம்தியாஸ், ஜனாப்களான ஆரிப், ஹரீஸ், ரௌஷான், ஜிப்ரீ, ரிஸ்வான் ஆகியோராவர்.)

மேற்படி சகோதரர்களது வேண்டுகோளையடுத்து, பணிப்பாளர் ஹாஜி ஹனீபிடம் ஊருடைய தேவையையும் உணர்த்தியதும் அவர்கள் அந்த வேண்டுகோளை ஏற்றுக் கொண்டு இன்று நாம் பார்க்கும் உம்மு ஐமன் முஸ்லிம் மகளிர் அறபுக் கல்லூரி மிளிர்ந்துகொண்டிருக்கிறது.

அத்தோடு இவ்விடத்தில் மிகவும் நன்றியோடு நினைவுகூரப்பட வேண்டியவர்கள்தான் இந்தக் கல்லூரி அமைந்திருக்கும் நிலத்திற்குரிய சொந்தக்காரர். எம்மை விட்டும் மறைந்து மண்ணறையில் வசித்துக் கொண்டிருக்கும் ஜனாப் ரு. ஆப்தீன் என்பவரும் அவரது மனைவியுமாவார்கள்.

அன்னார் இக்காணியை இந்தக் கிராமம் மற்றும் இதனைச் சூழவுள்ள கிராமத்துச்சிறார்கள் மார்க்கக் கல்வியைக் கற்பதற்குப் பயன்படுத்தப்பட வேண்டும் என்ற நிபந்தனையுடன் 1970/12/30 ஆம் திகதி அன்றைய சந்தர்ப்பத்தில் ஊரில் நடந்துகொண்டிருந்த குர்ஆன் மத்ரஸாவுக்கு அதன் பொறுப்பாளியான ஆதம்பிள்ளை அபூபக்கர் ஆலிம் என்பவரது பெயரில் எழுதி ஒப்படைத்தார்கள்.

இங்கு ஈன்று குறிப்பிடத்தக்க விடயம் யாதெனில், அன்றைய காலகட்டத்தில் நடந்து கொண்டிருந்த மத்ரஸாவுக்கு வக்பு செய்யப்பட்ட காணியில் மேற்படி உம்மு ஐமன் மு.ம.அ. கலாசாலை அமைக்கப்பட வேண்டும் என்று ஊர் நிருவாகம் மற்றும் மார்க்க ஆர்வலர்களது வேண்டுகோளை அல்ஹாஜ் ஹனீப் அவர்களிடம் பணிப்பாளர் முன்வைத்தபோது, அவர்கள் இக்கலாசாலைக்குத் தேவையான காணியை ஊர் மக்களின் விருப்பத்துடன் மேலே பெயர் குறிப்பிடப்பட்ட கல்லூரியின் நிருவாக சபையினருக்கு பராமரிப்புப் பொறுப்பை உரித்தாக்கினால்தான் கட்டடத்தை அமைக்க தான் உடன்படுவதாக பணிப்பாளரிடம் கூறினார்.

அவ்விடயத்தை ஊர் நிருவாக சபையிடம் பணிப்பாளர் முன்வைக்க அதனை அவர்களும் முழுமனதுடன் அதற்கான இணக்கத்தைத் தெரிவித்தனர். அதன் பின்னர்தான் இக்கட்டடம் இங்கு அமைக்கப்பட்டது. அல்ஹம்துலில்லாஹ். அல்லாஹுத்தஆலா இம்முயற்சியில் ஈடுபட்ட அனைவருக்கும் குறிப்பாக நிர்வாகிகளுக்கும் அல்லாஹ்வுடைய அருள் கிடைக்கட்டும்.

அல்லாஹ்வின் அருளால் இக்கல்லூரியில் பல பாகங்களிலிருந்தும் மாணவிகள் வந்து கற்றுக் கொண்டிருப்பதால் நாடளாவிய ரீதியில் நமடகஹவத்தை பிரபல்யமடைவதற்குக் காரணமாயுள்ளது.

## ✱ கல்லூரியின் வளர்ச்சி:

இக்கல்லூரி நமடகஹவத்தைக்கு 2012/05/01ஆம் திகதி இடமாற்றப்பட்டதன் பின்னர் சுமார் 11 மாதங்கள்கழித்து முதலாவது தொகுதியாக சேர்க்கப்பட்ட14 மாணவிகள் 2012/10/21ஆம் திகதியும் இரண்டாவது தொகுதியினரான 20 மாணவிகள் 2016/11/14ஆம் திகதியும் அல்ஆலிமா சான்றிதழ் வழங்கி கௌரவிக்கப்பட்டனர். அதனையடுத்து 2021, 2022 ஆம் ஆண்டுகளில் கற்கையை முடித்துக்கொண்ட 3 தொகுதியைச் சேர்ந்த 26 ஆலிமாக்கள் 2023/12/02ஆம் திகதியாகிய நாளைய விழாவில் சான்றிதழ் வழங்கி கௌரவிக்கப்படவுள்ளமை விசேட அம்சமாகும்.

## ✱நிருவாகம்:

தலைவர்: அஷ்ஷைக் ஜஃபர் ரஹ்மானீ
செயலாளர் : ஜனாப் மஹ்மூத் ஆசிரியர்
பொருளாளர் ; அல்ஹாஜ் ஸமீர்
நிருவாகஉறுப்பினர்கள்:

அல்ஹாபிழ் இக்ராம், அல்ஹாஜ் ரவூப், ஜனாப்களான ஆரிப், ஹரீஸ், ஷம்ஸுல், கலீலுர் ரஹ்மான் ஆசிரியர், மௌலவி ஸப்வான், அல்ஹாஜ் பஸீல் ஆகியோராவர்.

## ✱ கல்லூரியின் நிலை:

தற்போது ஷரீஆ மற்றும் ஹிப்ழு ஆகிய இரு பிரிவுகளிலும் 45 மாணவிகள் கற்றுக்கொண்டிருக்கின்றனர். இரண்டாவது தொகுதியில் ஆலிமா சான்றிதழைப்பெற்ற ஒரு மாணவிக்கு ஹிப்ழ் செய்வதற்கான ஆர்வமூட்டப்பட்டு, அவர் சுமார் 10 மாத காலத்துக்குள் அல்குர்ஆனை மனனமிட்டு ஹாபிழாவாக ஆகி சாதனை படைத்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

ஏற்கனவே, ஹிப்ழுப் பிரிவு தனியாக இல்லாதபோதும் 2022ஆம் வருடமே ஹிப்ழுப் பிரிவு ஆரம்பிக்கப்பட்டது. அல்ஹம்துலில்லாஹ்.

இதுவரை இங்கிருந்து கல்வி கற்றுச்சென்ற 61 ஆலிமாக்களுள் பலர் தமது பிரதேசங்களிலும் வேறு பகுதிகளிலும் தீன் பணியாற்றிக் கொண்டிருக்கின்றனர் என்பது மகிழ்ச்சிக்குரியதாகும்.

## ✱ கல்லூரியின் இலக்கு:

எமது ஊர்; மாத்தளை, குருநாகல், அநுராதபுரம், கந்தளாய், பொலன்னறுவை ஆகிய பிரதேசங்களுக்கு மத்தியில் அமைந்திருப்பதால் எமதூர் கேந்திர ஸ்தானமாக இருக்கிறது. இலங்கையின் பல பாகங்களையும் சேர்ந்த மாணவிகள் இங்கு கல்வியைத் தேடி வருகின்றபோதும் குறிப்பாக மேலே காணப்படும் பிரதேச மாணவிகளுக்கு இங்கு வந்து கற்பதற்கான வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்து, அம்மாணவிகள் மார்க்கத்தைக் கற்று தமது பிரதேசத்தில் தீனுடைய மறுமலர்ச்சியை உண்டாக்க வேண்டுமென்பதே எமது பிரதான இலக்காகும்.




### ✱ கல்விசார் ஊழியர்கள்;

1. AshShaikh S.A.M.Jawfer (Rahmani) Director
2. AshShaikh M.I.Haneefa Muhammed (Rashadi) Lecturer
3. AshShaikh A.S.M.Shafraz (Raheemi) Lecturer
4. AshShaikh A.C. Ajmad (Hashimi) Lecturer
5. Moulaviya M.B.Hafsa Beevi (Salihath) Lecturer
6. Moulaviya A.Khadheeja (Bareeriyyah) Lecturer
7. Moulaviya M.H.Fathima (Bareeriyyah) Lecturer

### ✱ பொதுக்கல்விக்கான ஆசிரியர்கள்;

1. Mr. B.Mahmood (B.A., Dip.In Edu.)
2. MoulaviyaI.L.Jameela (B.A., Hon.In Econ. PGDE)
3. Mrs. N.P.SulhaBeebi (M.A. , Dip.In Edu.)
4. Mrs. M.S.Yasmin (Trained. In Eng.)
5. Mrs. I.hisnul Haseena (B.A., PGDE, HND.in Eng.)
6. Mrs. M.F. Inaya (Home Sci. Trained)
7. Mrs. H.Nisra (Dr. Yoonani Medicine)
8. Mrs. I.F. Rifna Banu (Dip.in Sinhala)

### ✱ கல்விசாரா ஊழியர்கள்;

1. Mr.I.M. Basheer
2. Mrs. A.A.Nafeela
3. Mrs. Noor Muzakkira

**ஷரீஆ துறையோடு மேலதிகமாக உர்தூ, தமிழ், சிங்களம், ஆங்கிலம் போன்ற மொழிகளும் இணைத்துக் கொள்ளப்படுகின்றன.**

**அல்லாஹ் எம்மனைவருக்கும் மௌத்துவரை இஃலாஸுடன் தீனுடையபணியில் ஈடுபடும் நற்பாக்கியத்தை வழங்கியருள்வானாக!**

### ● VISION தூரநோக்கு

***"ஈமானிய உணர்வையும் வாழ்வையும் கொண்ட ஒரு சமூகம்"***

### ● MISSION பணிக்கூற்று

***"புனித குர்ஆன், ஹதீஸ் ஆகியவற்றை உள்ளடக்கிய, பல்கலைத் தேர்ச்சியுடன், தேவையான மொழிகளுடன் கூடிய இஸ்லாமிய ஷரீஆவின் அனைத்துத் துறைகளிலும் ஆழ்ந்த புலமையை ஏற்படுத்தி,***

***அதன் வழியில் தானும் வாழ்ந்து பிறரையும் அவ்வழியில் இட்டுச்செல்லும் ஈமானிய உணர்வுள்ள மானிட சமூகம் பயன்பெறும் பெண்கள் சமுதாயத்தை உருவாக்குதல்."***

#### ★ ஆப்தீன் தம்பதிகளும் மத்ரஸாக் காணியும்

யூஸுபிய்யா மத்ரஸா மற்றும் உம்மு ஐமன் மு. ம. அ. கல்லூரி ஆகிய இரு மத்ரஸாக்களும் அமைந்திருக்கும் நிலம் சம்பந்தமான சில தகவல்கள்,

இந்த மத்ரஸாக்கள் அமைந்திருக்கும் நிலத்திற்குரிய சொந்தக்காரர், எம்மை விட்டும் மறைந்து மண்ணறையில் வாழ்ந்து கொண்டிருக்கும் மர்ஹூம் யூ. ஆப்தீன் மற்றும் அன்னாரது மனைவி அலுத்கெதர உதுமாலெப்பை ரஹியா உம்மா என்பவருமாவார்கள். அவர்கள் இக்காணியை,

இந்தக் கிராமம் மற்றும் இதனைச் சூழவுள்ள கிராமத்துச் சிறார்கள் மார்க்கக் கல்வியை கற்பதற்குப் பயன்படுத்தப்பட வேண்டும் என்ற நிபந்தனையுடன் 1970/12/30ஆம் திகதி அன்றைய சந்தர்ப்பத்தில் ஊரில் நடந்து கொண்டிருந்த குர்ஆன் மத்ரஸாவுக்கு அதன் பொறுப்புதாரியான ('ஓதித்தார அப்பா' என்று அன்று ஊர் மக்களால் அறியப்பட்ட) ஆதம்பிள்ளை அபூபக்கர் ஆலிம் என்பவரது பெயரில் எழுதி ஒப்படைத்தார்கள்.

எவ்வாறு காணி எழுதப்பட்டது? எவரது பெயருக்கு எழுதப்பட்டது என்ற விபரங்களை இங்கு பதியப்பட்டுள்ள காணி உறுதிப்பத்திரத்தின் மூலம் விளங்கிக் கொள்லாம். (காணியின் உறுதி)

இந்தக் காணி மேற்குறிப்பிட்ட பிரகாரம் எழுதப்பட்டதையடுத்து, எமது ஊரை நீண்டகாலம் நிர்வகித்துக் கொண்டிருந்த மர்ஹூம் அல்ஹாஜ் அப்துல் ஹமீத் அவர்கள் அக்காணியின் ஒருபகுதியில் 1971ஆம் ஆண்டு இறுதிப் பகுதியில் ஒரு கட்டடத்தை நிர்மாணித்தார்கள். அத்தோடு அதற்கு யூஸுபிய்யா அரபுக் கல்லூரி என்று பெயர் சூட்டப்பட்டது. அவ்வாறு பெயர் வைக்கப்படுவதற்குக் காரணம் அக்கரைப்பற்றைச் சேர்ந்த (சூபி அப்பா என்று பிரபல்யம் பெற்ற) யூஸுப் ஆலிம் என்பவர் ஆப்தீன் அப்பா வீட்டில்தான் வசித்து வந்தார்கள். அவர்களது அடக்கஸ்தலம் நமடகஹவத்தை பள்ளிவாயில் வளாகத்தில் காணப்படுகின்றது. அன்னாரது நினைவாகவே மத்ரஸாவுக்கும் யூஸுபிய்யா என்று பெயர் சூட்டப்பட்டது. இந்த விடயங்களை எமது ஊர் மூத்த மனிதர்கள் அறிவர்.

மேற்படி ஆப்தீன் அப்பா தம்பதிகளின் நிய்யத்தின் பிரகாரம் இரு மத்ரஸாக்களும் இக்காணியிலே அமையப்பெற்றிருக்கின்றன. எனவே இக்காணியின் அமானிதம் பேணப்பட வேண்டுமானால் இங்கு கல்வி சம்பந்தமான ஆக்க பூர்வமான செயற்பாடுகள் தவிர இக்காணி வேறு எந்த விடயங்களுக்கும் பாவிக்கப்படலாகாது என்பது கவனத்தில் கொள்ளப்படவேண்டும்.

ஜனாப் ஆப்தீன் தம்பதிகள் தமக்குப் பின்னால் வாரிசுகள் இல்லாத காரணத்தால் மறுமையில் சுவனத்தை ஈட்டுத்தரக்கூடிய இந்த மாபெரும் நற்காரியத்தைச் செய்துள்ளார்கள். எனவே, அவர்களது மேலெண்ணத்தின் பிரகாரம் அனைத்து விடயங்கள் நடந்தேறுவதற்கும் அன்னாருக்கு அல்லாஹுத்தஆலா ஜன்னதுல் பிர்தௌஸை வழங்கியருள வேண்டுமென்றும் பிரார்த்திப்போமாக!

***உம்மு ஐமன் மு.அ. கல்லூரி பணிப்பாளர்***
***அஷ்ஷைக் எஸ்.ஏ.எம். ஜஃபர் றஹ்மானீ***
***வழங்கிய ஆசிச்செய்தி***
***அனைத்துப் புகழும் அல்லாஹ்வுக்கே....***

ஒரு சமூகத்தின் உயர்வும் தாழ்வும் அச்சமூகத்திலுள்ள பெண் குலத்தின் உயர்வு தாழ்விலேயே தங்கியிருக்கின்றது. அவ்வாறிருக்கும் நிலையில் பெண்ணின் பெருமையறியாது அவளை வியாபார நிலையங்களில், அலுவலகங்களில் ஒருகாட்சிப் பொருளாகவே பயன்படுத்துவதை நாம் பார்த்துக் கொண்டிருக்கின்றோம். அதன் விளைவுகளை சமூகம் இன்று அனுபவித்துக் கொண்டுதான் இருக்கின்றது.

இந்த நிலைமாறி அல்லாஹ்வின் ரஹ்மத்தைப் பெற்ற ஒரு சமூகம் உருவாக வேண்டுமானால் பெண்களுக்கான ஆன்மீகக் கல்வியைக் கொடுத்து அவர்களது உள்ளங்களில் இறையச்சத்தை உண்டாக்கி, அவர்களுக்கான சரியான வழிகாட்டல் செய்யப்படுவதே தகுந்த வழியாகும். இதனை சமூகம் ஓரளவு உணர்ந்ததனால்தான் இன்று எமது நாட்டில் ஆண்களுக்கான கலாபீடங்களை விட பெண்களுக்கான கலாபீடங்கள் துரித வேகத்திலே பரவிக் கொண்டிருப்பதைக் காணலாம்.

எனது அறிவுக்கெட்டிய வகையில் ஈமானிய உழைப்பின் வெளிப்பாடாக சுமார் இருபத்தைந்து வருட காலத்துக்குள் 100க்கும் மேற்பட்ட பெண்கள் அறபுக் கல்லூரிகள் நாடளாவிய ரீதியில் உருவாக்கப்பட்டு, அவற்றின் மூலம் தாய்க்குலத்தின் கல்வித்தாகத்தைத் தீர்ப்பதற்காக பல்முனை முயற்சிகள் நடைபெறுவதை அவதானிக்கலாம்.

அந்தத் தொடரில் 2008ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டதே எமது உம்மு ஐமன். அல்ஹம்துலில்லாஹ், இன்று பதினைந்தாவது ஆண்டையும் தாண்டிக் கொண்டிருக்கும் நிலையில் 61 ஆலிமாக்களையும் ஒரு ஹாபிழாவையும் உருவாக்கி விட்ட மனக்களிப்பில் விழாக் கொண்டாடுகிறது.

இந்த உம்மு ஐமனில் உருவான முத்துக்களான ஐமனிய்யாக்கள் நாட்டின் பல திசையிலும் தமது தீன் பணியில் ஈடுபட்டிருப்பதை நினைக்கும்போது, மனம் பூரிப்படைகின்றது. (அல்ஹம்துலில்லாஹ்).

இங்கு கல்வி பயின்று வெளியேறுவோர் தாமும் பயன்பெற்று சமூகமும் அவர்கள் மூலமாகப் பயன்பெற வேண்டுமென்பதே எமது அவா.

**● எம்.சதுர்தீன் (JP)**
**(மாத்தளை சுழற்சி நிருபர்)**





பிரதான நுழைவாயில்


நிர்மாணிக்கப்பட்டு வரும் புதிய கட்டிடம்



# கிழக்கின் குரல்



## காத்தான்குடியில் வெள்ள அனர்த்தம்





(புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்)

கடும் மழை காரணமாக காத்தான்குடியில் பல பிரதேசங்களிலும் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளதுடன் பல வீடுகள் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ளன.

காத்தான்குடி பிரதேச செயலகப் பிரிவிலுள்ள புதிய காத்தான்குடி வடக்கு, புதிய காத்தான்குடி தெற்கு, புதிய காத்தான்குடி கிழக்கு போன்ற பகுதிகளிலும் தோணாவை அண்டிய பகுதிகளிலும் பல வீதிகள் வெள்ளத்தால் மூழ்கியுள்ளதுடன் பல வீடுகளிலும் வெள்ளநீர் புகுந்துள்ளது.

காத்தான்குடி ஹிஸ்புல்லாஹ் விளையாட்டு மைதான வீதி, புதிய காத்தான்குடி பெண்கள் சந்தை வீதி என பல்வேறு வீதிகளிலும் வெள்ளநீர் தேங்கி நிற்பதுடன் இப்பகுதியிலுள்ள வீடுகளிலும் வெள்ள அபாயம் ஏற்பட்டுள்ளது.

வீடுகளில் வெள்ளம் புகுந்துள்ளதால் குடும்பங்கள் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கியுள்ளன.

இதேபோன்று காத்தான்குடி வாவிக் கரையை அண்டிய பகுதிகளிலும் பல வீடுகளில் வெள்ள நீர் புகுந்துள்ளது.

வெள்ள அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட வீடுகள் தொடர்பில் கிராம உத்தியோகத்தர்களினால் விபரங்கள் சேகரிக்கப்பட்டு வருகின்றன.

## மட்டக்களப்பு மாநகரசபை அலுவலகத்துக்கு தென்னாபிரிக்க உயர்ஸ்தானிகர் விஜயம்





(புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்)

மட்டக்களப்பு மாநகரசபைக்கு தென்னாபிரிக்க உயர்ஸ்தானிகர் (Sandile Edwin Schalk) சாண்டிலே எட்வின் ஷால்க் அண்மையில் விஜயமொன்றை மேற்கொண்டுள்ளார். மாநகரசபை ஆணையாளர் எந்திரி என்.சிவலிங்கத்தினால் வரவேற்கப்பட்ட தென்னாபிரிக்க உயா்ஸ்தானிகருக்கு மாநகரசபையின் செயற்பாடுகள் மற்றும் தேவைப்பாடுகள் தொடர்பாக விளக்கமளிக்கப்பட்டிருந்தன.

இவ்விஜயத்தின் போது கிழக்கு மாகாண சுற்றுலாத்துறை பணியகத்தின் தவிசாளர் ஏ.பீ.மதனவாசன் மற்றும் உயர்ஸ்தானிகரின் செயலாளர் உள்ளிட்டோர் வருகை தந்திருந்தனர். இதன்போது உயர்ஸ்தானிகர் மற்றும் கிழக்கு மாகாண சுற்றுலாத்துறை பணியகத்தின் தவிசாளர் உள்ளிட்டோருக்கு மாநகர ஆணையாளரினால் நினைவுச் சின்னம் வழங்கி கௌரவிக்கப்பட்டதுடன், மட்டக்களப்பு மாநகரசபையை தமது நாட்டு உள்ளூராட்சி மன்றத்திற்கு நிகரான முறையில் மேம்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகளை தாம் எதிர்காலத்தில் முன்னெடுக்கவுள்ளதாக தென்னாபிரிக்க உயர்ஸ்தானிகர் இதன்போது தெரிவித்துள்ளார்.

இந்நிகழ்வில் மாநகர சபையின் கணக்காளர், மாநகர சுகாதார பரிசேதகர் த.டமராஜ், தீயணைக்கும் படையின் பொறுப்பதிகாரி விவேகானந்தன் பிரதீபன் உள்ளிட்ட உத்தியோகத்தர்கள் மற்றும் மாநகர சபையின் உத்தியோகத்தர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

## நீரில் மூழ்கி சிறுவன் உயிரிழப்பு

(ஏறாவூர் நிருபர்)

மட்டக்களப்பு புன்னக்குடா கடலில் தனது நண்பர்களுடன் நீராடிக் கொண்டிருந்த 15 வயது சிறுவனொருவன் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளதாக ஏறாவூர் பொலிஸார் தெரிவித்தனர். இவரது சடலம் நேற்றுமுன்தினம் இரவு கரையொதுங்கியுள்ளது. மட்டக்களப்பு செங்கலடி ஏறாவூர் எல்லை வீதியைச் சேர்ந்த ஜெகன் லதுஷன் என்ற சிறுவனே இவ்வாறு உயிரிழந்துள்ளார். கடந்த செவ்வாய்க் கிழமை மாலை புன்னக்குடா கடலில் தனது நண்பர்கள் நால்வருடன் நீராடிக்கொண்டிருந்த போதே அவர் காணாமல் போனதாக தெரிவிக்கப்பட்டது. இந்நிலையில் கடல் கொந்தளிப்பு காணப்பட்டமையால் தேடுதல் முயற்சி மேற்கொள்ளப்படவில்லை. இந்நிலையில் புன்னக்குடா பிரதேசத்திலிருந்து சுமார் மூன்று கிலோமீற்றர் தொலைவிலுள்ள களுவன்கேணி பிரதேசத்தில் சடலம் கரையொதுங்கியுள்ளது.

### தம்பலகாமம்

## மத்தியஸ்த சபை உறுப்பினர்களுக்கு நியமனக் கடிதங்கள் வழங்கிவைப்பு



(தம்பலகாமம் குறூப் நிருபர்)

திருகோணமலை தம்பலகாமம் பிரதேச செயலகத்துக்குட்பட்ட புதிய மத்தியஸ்த சபை உறுப்பினர்களுக்கான நியமனக் கடிதங்கள் நேற்று (30) பிரதேச செயலக மண்டபத்தில் வைத்து வழங்கி வைக்கப்பட்டன. தம்பலகாமம் பிரதேச செயலாளர் ஜெ.ஸ்ரீபதி தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் மத்தியஸ்த சபையின் தவிசாளர் உட்பட 19 உறுப்பினர்கள் நியமனத்தை பெற்றுக் கொண்டனர். இதன்போது உரையாற்றிய பிரதேச செயலாளர் இங்கு நியமனம் பெறுவோர் அனுபவம் வாய்ந்தவர்களாக உள்ளீர்கள். சொந்த பிரதேசம் என்றில்லாது எல்லோராலும் ஏற்கக் கூடிய தீர்மானங்களை திறம்பட நடைமுறைப்படுத்தி இந்த சபை எதிர்காலத்தில் இயங்க வேண்டும் என்றார்.

இந்நிகழ்வில் பிரதி திட்டமிடல் பணிப்பாளர் ஐ.முஜீப், நிர்வாக உத்தியோகத்தர் உடகெதர, தம்பலகாமம் பொலிஸ் நிலைய பதில் பொலிஸ் பொறுப்பதிகாரி உட்பட பலர் கலந்துகொண்டனர்.





கல்முனை கல்வி வலய மாணவர் பாராளுமன்றத்தின் முதல் அமர்வு சாய்ந்தமருது அல்ஹிலால் வித்தியாலயத்தில் வலய பாராளுமன்ற செயலாளர் நாயகம், வலயக் கல்விப் பணிப்பாளர் எம்.எஸ்.சஹுதுல் நஜீம் தலைமையில் இடம்பெற்றது.

வலயத்திலுள்ள 43 பாடசாலைகளின் 86 உறுப்பினர்கள் அமர்வில் பங்கேற்றனர்.

(பெரியநீலாவணை தினகரன், நற்பிட்டிமுனை தினகரன் நிருபர்கள்)

## சம்பூரில் முதலையிடம் அகப்பட்டு ஒருவர் மரணம்

(றொட்டவெவ குறூப் நிருபர்)

சம்பூர் தொடுவான் குளத்தில் குளிப்பதற்கு சென்றவரை தண்ணீருக்குள் முதலை இழுத்துச் சென்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

வயல் ஒன்றை பார்வையிடுவதற்காக சென்ற போது அங்கு கணவனும் மனைவியும் குளிப்பதற்காக குளத்தில் இறங்கியுள்ளனர். இதன்போதே கணவரை முதலை இழுத்துச் சென்றதாக ஆரம்ப கட்ட விசாரணையின் மூலம் தெரியவந்துள்ளது.

இவ்வாறு உயிரிழந்தவர் தோப்பூர்பாட்டாளிபுரத்தில் வசித்து வரும் கதிர்காமத் தம்பி நிதுர்ஷன் (20 வயது) என பொலிஸார் தெரிவித்தனர்.

கணவனை காப்பாற்ற முயற்சித்த போதும் அது முடியாது போனதாகவும் இதனையடுத்து பிரதேச மக்கள் ஒன்றிணைந்து பல மணி நேரம் குளத்தில் தேடுதல் மேற்கொண்ட பின்னர் சடலம் மாலை 5.30 மணியளவில் கண்டெடுக்கப்பட்டதாகவும் தெரியவருகின்றது. உயிரிழந்தவரின் சடலம் மூதூர் தள வைத்தியசாலை பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளதுடன் விசாரணைகளை சம்பூர் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## சிறுகதைகள் நூல் அரங்கேற்றம்

செங்கதிரோன் த.கோபாலகிருஷ்ணன் எழுதிய சிறுகதைகள் நூல் எதிர்வரும் சனிக்கிழமை (02) மாலை 3.00 மணிக்கு மட்டக்களப்பு பொதுநூலக பித்தன் ஷா அரங்கில் அரங்கேற்றம் செய்யப்படவுள்ளது.

கிழக்குப் பல்கலைக்கழக வேந்தர் பேராசிரியர் மா.செல்வராஜா முன்னிலை வகிக்க, மட்டக்களப்புத் தமிழ்ச் சங்கத் தலைவர் சைவப் புரவலர் வி.றஞ்சிதமூர்த்தி தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வுக்கு அதிதிகளாக கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் சரவணமுத்து நவநீதன், மட்டக்களப்பு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருமதி சுதர்சினி ஸ்ரீகாந்த், கிழக்குப் பல்கலைக்கழக முதுநிலை விரிவுரையாளர் அ.அ. நவரெத்தினம் சிரேஷ்ட எழுத்தாளர் உமா வரதராஜன் மற்றும் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன பிறை எவ்.எம்மின் பிரதிப் பணிப்பாளர் பஷீர் அப்துல் ஹயும் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். இங்கு வெளியீடு செய்யப்படவுள்ள "யாவும் கற்பனையல்ல" சிறுகதை நூலின் முதல் பிரதியை 'மெல்வேன் பாடுமீன் பழைய மாணவர் அமைப்புத் தலைவர் எந்திரி பரமானந்தன் தேவானந்தன் பெற்றுக் கொள்வார்.

இதன்போது அரங்கு அறிமுகம் மற்றும் வரவேற்புரை செங்கதிர் இலக்கிய வட்டத் தலைவர் கவிஞர் அன்பழகன் குரூஸும், வெளியீட்டு உரையினை கிழக்குப் பல்கலைக்கழக சுவாமி விபுலானந்தா அழகியற் கற்கைகள் நிறுவக முதுநிலை விரிவுரையாளர் கலாநிதி சு.சிவரெத்தினமும், திறன் நோக்கு 1 இனை கிழக்குப் பல்கலைக்கழக தமிழ்த்துறை முதுநிலை விரிவுரையாளர் திருமதி றூபி வலன்றீனா பிரான்சிஸ்சும், திறன் நோக்கு 2 இனை இரண்டாம் விசுவாமித்திரன் ஏ.பீர்முகம்மதுவும் நிகழ்த்தவுள்ளனர்.

இறுதியில் நன்றியுரை மற்றும் ஏற்புரையினை நூலாசிரியர் செங்கதிரோன் த.கோபாலகிருஷ்ணன் ஆற்றவுள்ளார்.



உலக நீரிழிவு தினத்தை முன்னிட்டு அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலை நலன்புரிச்சங்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட தொற்றா நோய் தடுப்பு விழிப்புணர்வு சைக்கிளோட்ட நிகழ்வு அக்கரைப்பற்றில் அண்மையில் நடைபெற்றது. இவ் விழிப்புணர்வு நிகழ்வில் வைத்திய நிபுணர்கள், வைத்தியர்கள், உத்தியோகத்தர்கள், சுகாதார ஊழியர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

(படம் அட்டாளைச்சேனை தினகரன் நிருபர்)

## சம்மாந்துறையில் பிரதேச கலை இலக்கிய விழா

(அக்கரைப்பற்று வடக்கு தினகரன் நிருபர்)

சம்மாந்துறை பிரதேச செயலக பிரிவில் தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்க அலுவலகத்தின் அனுசரணையில் 'பிரதேச கலை இலக்கிய விழா 2023' சம்மாந்துறை பிரதேச செயலாளர் எஸ்.எல்.எம். ஹனீபா தலைமையில் சம்மாந்துறை அப்துல் மஜீட் மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் சிந்தக்க அபேவிக்ரம, கௌரவ அதிதிகளாக கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்கள பணிப்பாளர் நவநீதன், மேலதிக மாவட்ட செயலாளர் வீ.ஜெகதீசன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

கலை கலாசார நிகழ்வுகள், போட்டி நிகழ்ச்சிகளுக்கான பரிசில்கள் வழங்கல் மற்றும் கலைஞர் கௌரவிப்பு என பல நிகழ்வுகள் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

## அரச உத்தியோகத்தர்களுக்கான இரண்டாம் மொழி பயிற்சிநெறி



(மட்டக்களப்பு விசேட நிருபர்)

அரச உத்தியோகத்தர்களுக்கான தேசிய மொழிக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனத்தினால் இரண்டாம் மொழி பயிற்சி நெறி நாடளாவியரீதியில் நடைபெற்று வருகின்றன.

மட்டக்களப்பு மாவட்டத்தின் அரச உத்தியோகத்தர்களுக்கான சிங்கள பயிற்சி நெறியின் ஆரம்ப நிகழ்வு மண்முனை வடக்கு பிரதேச செயலக டேபா மண்டபத்தில் (30) இடம் பெற்றது. உத்தியோகத்தர்களின் இரண்டாம் மொழியாற்றலை அதிகரிப்பதுடன் அலுவலக கடமையில் ஈடுபடும் போது தொடர்பாடலை மேம்படுத்துவதாக இக்கற்கை நெறி அமையவுள்ளது. 150 மணித்தியாலங்களைக் உள்ளடக்கிய இக்கற்கை நெறியை அரச திணைக்களங்களில் கடமையாற்றும் உத்தியோகத்தர்கள் ஆர்வமாக கற்றல் நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

இந்நிகழ்விற்கு மாவட்ட செயலகத்தின் இரண்டாம் மொழி கற்கையின் இணைப்பாளர் வி.சந்திரகுமார்,பயிற்சி நெறியின் வளவாளர்களாக செல்வி.எம்.கே.திலினி மதுசிகா, திருமதி. சுதேசி தில்ருக்சி ஆகியோர் கலந்து கொண்டு நிகழ்வை சிறப்பித்துள்ளனர்.

## அஸ்வெசும கொடுப்பனவு பெறாதவர்களுக்கான நடமாடும் சேவை

(திருக்கோவில் தினகரன் நிருபர்)

அம்பாறை திருக்கோவில் பிரதேச செயலகப் பிரிவில் அஸ்வெசும நலன்புரி நன்மைகள் கொடுப்பனவுகள் கிடைக்கப் பெறாதவர்களின் பிரச்சினைகள் தொடர்பாக ஆராயும் நடமாடும் சேவையொன்று நேற்று திருக்கோவில் பிரதேச செயலகத்தில் இடம் பெற்றது.

நடமாடும் சேவையானது திருக்கோவில் பிரதேச செயலாளர் தங்கையா கஜேந்திரனின் தலைமையில் பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றிருந்ததுடன் சுமார் 200ற்கும் மேற்பட்ட பயனாளிகள் கலந்து கொண்டிருந்தனர்.

இதன்போது அஸ்வெசும கொடுப்பனவுக்கு அரசாங்கத்தினால் தெரிவு செய்யப்பட்டு இதுவரை கொடுப்பனவுகள் கிடைக்கப்பெறாத பயனாளிகளின் பிரச்சினைகள் தொடர்பாக நடமாடும் சேவையின் ஊடாக ஆராயப்பட்டு தீர்வுகள் வழங்கப்பட்டிருந்தன.

இதேவேளை இரண்டு இடங்களில் பதிவு செய்யப்பட்டிருந்த குடும்பங்கள் தொடர்பில் ஆராயப்பட்டு வருகின்றன

நடமாடும் சேவையில் உதவிப் பிரதேச செயலாளர் திட்ட அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், கிராம சேவை உத்தியோகத்தர்கள், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர்.





கிழக்கு மாகாண சமூக சேவைகள் திணைக்களத்தின் ஊடாக, அக்கரைப்பற்று பிரதேச செயலக சமூக சேவைகள் உத்தியோகத்தர் அ.லே. பைசாத்தின் ஏற்பாட்டில் வறுமைக்கோட்டின் கீழ் வாழும் விசேட தேவையுடையோருக்கு உபகரணங்கள் பிரதேச செயலாளர் ரீ.எம்.முஹம்மட் அன்சார் நழிமி தலைமையில் நேற்று வழங்கி வைக்கப்பட்டன. இதில் உதவி பிரதேச செயலாளர் ராஷித் யஹ்யா, நிர்வாக உத்தியோகத்தர் எம்.எஸ்.பாறூக் மற்றும் சமூக சேவைப் பிரிவின் உத்தியோகத்தர்களும் கலந்துகொண்டனர்.

(படம் ;திராய்க்கேணி தினகரன் நிருபர்)



# புலமைக் கதிர்

தரம்–5 வகுப்பு மாணவர்களுக்கான





திருமதி.பத்மா சந்திரமோகன்
புனித அந்தோனியார் கல்லூரி
கொழும்பு - 13

## புலமைப் பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள் - I

1 மணித்தியாலம் 15 நிமிடம்

எல்லா வினாக்களுக்கும் விடையளிக்குக. சரியான விடையின் கீழ்க் கோடிடுக.

01. ஊர்வன, கால்களற்றவை, ஊனுண்ணி

i.  ii.  iii. 

02. மீனுக்கு – பூ போன்று, நாய்க்கு - ..............................
i. மூக்கு ii. தோல் iii. வாய்

03. பூவிதழ்களில் வெவ்வேறு நிறங்கள் தோன்றக் காரணமாவது,
i. சூரிய ஒளியை பெற ii. பூச்சிகளைக் கவர iii. மனிதர்களைக் கவர

04. ஒரு குளத்தில் பூக்கும் பூக்கள் அடுத்த நாள் இரண்டு மடங்காக மாறும் எனில் ஐந்தாவது நாள் காணப்பட்ட பூக்களின் எண்ணிக்கை 40 எனில் மூன்றாவது நாள் காணப்பட்ட பூக்கள் எத்தனை?
i. 30 ii. 20 iii. 10

05. ஹரனிசின் வயதுடன் 5 வயதைக் கூட்டினால் அவன் சபரியை விட 2 வயது சிறியவனாக இருப்பான். சபரியின் வயது 17 எனில் ஹரனிசின் வயது என்ன?
i. 10 ii. 12 iii. 13

06. ஒரு வேலியின் ஒவ்வொரு 3m இடைவெளியிலும் ஒரு தூண் நடப்பட்டது. அவ்வேலியின் நீளம் 36m எனின் அவ்வேலியிலுள்ள தூண்களின் எண்ணிக்கை யாது?
i. 6 ii. 9 iii. 12

07. நட்டாற்றில் விடுதல் என்பதன் கருத்து
i. ஆற்றிலே விடுதல் ii. ஆபத்தில் கைவிடுதல் iii. ஆற்றிலே நீராடுதல்

08. இவ்வெண் கோலத்தில் அடுத்து வரும் எண்ணானது? 7, 15, 31, 63, ...?....
i. 127 ii. 126 iii. 120

09. 1959 ஆம் ஆண்டு எத்தனையாம் தசாப்தம்?
i. 05 ஆம் தசாப்தம் ii. 4 ஆம் தசாப்தம் iii. 6 ஆம் தசாப்தம்

10. 6kg சீனி ரூபாய் 1800.00 எனில் 1500g சீனி எவ்வளவு?
i. ரூபாய் 450.00 ii. ரூபாய் 300.00 iii. ரூபாய் 600.00

11. கீழ்வருவனவற்றுள் ஒரே ஒரு முகத்தை மட்டும் கொண்டுள்ள திண்மவுரு எது?
i. உருளை ii. கோளம் iii. கூம்பு

12. பின்வருவனவற்றுள் செங்கோணத்தை கொண்டிராத உரு எது?

i.  ii.  iii. 

13. ஒரு கடிகார முகத்தில் மணித்தியால முள் இரண்டு தடவை சுற்றி வருமாயின் அதன் கால அளவு எவ்வளவு?
i. இரண்டு நாட்கள் ii. ஒரு நாள் iii. ஒன்றரை நாள்

14. இரண்டு இரட்டை எண்களை கூட்டி அதிலிருந்து ஒரு ஒற்றை எண்ணை கழித்தால் வருவது
i. ஒற்றை எண் ii. இரட்டை எண் iii. கூறமுடியாது

15. பின்வருவனவற்றுள் எப்போதும் உண்மையான கூற்றானது
i. நாளை மழை பெய்யும்
ii. வானவில் தோன்றுவது சூரியன் இருக்கும் திசைக்கு எதிர்த் திசையில்
iii. மலர்கள் மணமுடையவை




மேலே உள்ள தகவல்களை அவதானித்து கீழே கேட்கப்பட்ட கேள்விகளுக்கு விடை தருக.

16. வட்டத்திலுள்ள இலக்கங்கள் எவை?
i. 1, 2, 4, 7 ii. 1, 2, 3, 5 iii. 7, 4, 2, 6

17. முக்கோணத்துக்கு மட்டும் உரிய இலக்கம் எது?
i. 2, 3, 4, 6 ii. 3, 6 iii. 6

18. சதுரத்திற்கும் வட்டத்திற்கும் மட்டும் உரிய இலக்கம் எது?
i. 1 ii. 1, 2, 4 iii. 1, 5, 7

19. ஜனவரி மாதம் ஏழாம் திகதி புதன்கிழமை எனில் அதே மாதத்தில் 15ஆம் திகதி என்ன கிழமை?
i. புதன் கிழமை ii. வியாழக் கிழமை iii. வெள்ளிக் கிழமை

20. பின்வரும் கோலத்துக்கு அமைய அடுத்து வரவேண்டிய உரு எது?

| A | B |
|---|---|
| C | D |

| B | A |
|---|---|
| D | C |

| A | B |
|---|---|
| C | D |

? ________

i.

| A | C |
|---|---|
| D | B |

ii.

| B | D |
|---|---|
| A | C |

iii.

| B | A |
|---|---|
| D | C |

21. 
இவ்வுருவில் நிழற்றப்படாத பகுதி முழு உருவின் என்ன பின்னமாகும்?
i. 1/8
ii. 7/8
iii. 4/8

22. இவ்வுருவிலுள்ள செங்கோணங்களின் எண்ணிக்கை யாது?
i. 4
ii. 8
iii. இல்லை



23. காலை 10 மணிக்கு வீட்டிலிருந்து புறப்பட்ட மிதுர்ஷனி பகல் 2 மணிக்கு வீட்டை அடைந்தாள். அவள் வீட்டுக்கு வெளியே செலவழித்த கால அளவு யாது?
i. 4 மணித்தியாலம் ii. 5 மணித்தியாலம் iii. 3 மணித்தியாலம்

24. ரித்திக் அதிகாலை 5 மணிக்கு எழுந்து 1 ½ மணித்தியாலங்கள் படித்தான் எனின் அவன் படித்து முடித்த நேரத்தை நியம நேரமாக எழுதுக.
i. 6.30 ii. 12 : 30 iii. 06 : 30

25. ரவி தன்னிடமிருந்த 250 பந்துகளில் 3/5 பங்கை தம்பிக்கும் 1/5 பங்கை தங்கைக்கும் கொடுத்தான். அவன் தம்பிக்கு கொடுத்த பந்துகளின் எண்ணிக்கை யாது?
i. 150 ii. 100 iii. 50

26. ஒரு மின்விளக்கு தோரணத்தில் நீலம், சிவப்பு, பச்சை என வரிசைப்படி மூன்று நிற விளக்குகளும் மாறி மாறி எரிந்தன. அவ்வரிசையில் 15ஆவது மின்விளக்கு என்ன நிறம்?
i. நீலம் ii. சிவப்பு iii. பச்சை

27. 1m நாடாவை 5 சமபங்காக வெட்டினால் ஒரு துண்டின் நீளம் யாது?
i. 20cm ii. 20 m iii. 50cm

28. காகம் Black எனில் வெற்றிலை
i. Green ii. Red iii. Yellow

29. ஒரு புத்தகத்தின் உயரம் 5cm அதுபோல 10 புத்தகங்களின் உயரம் யாது?
i. 50cm ii. 5m iii. 500cm

30. 






i. 15 ii. 20 iii. 23

31. 

இச் செவ்வகத்தை சதுரமாக மாற்ற வேண்டுமாயின் அகலப் பக்கம் இரண்டிலும் கூட்டப்பட வேண்டிய மொத்த அளவு யாது?
i. 6m ii. 12 m iii. 12 cm

32. இவ்வுருவின் சுற்றளவு எவ்வளவு?
i. 30m
ii. 15m
iii. 18m




33. 
இவ்வுருவில் நிழற்றப்பட்ட அளவை தசம எண்ணாக எழுதினால்
i. 0.6
ii. 0.3
iii. 0.5

34. ஒரு எண்ணும் அதன் மூன்று மடங்கையும் கூட்டினால் 36 எனில் அவ்வெண் யாது?
i. 3 ii. 6 iii. 9

35. 






i. 8 ii. 9 iii. 6

36. [27 + 4] x __?__ = 62
i. 4 ii. 3 iii. 2

37. கந்தகம் எனும் சொல்லை 23425 என எழுதினால் மருந்தகம் எனும் சொல்லின் இலக்கங்களாக வருவது
i. 163425 ii. 263425 iii. 123425

38.  A  B  C

இவ்வுருக்களில் சமச்சீர் அச்சு இரண்டை மட்டும் கொண்ட உரு
i. A ii. B iii. C

39. ஒருவருக்கு சுவர் ஒன்றுக்கு வர்ணம் பூச 8 நாட்கள் தேவைப்பட்டன. அதே சுவரை இரண்டு பேர் சேர்ந்து வர்ணம் பூசினால் எத்தனை நாட்கள் தேவைப்படும்?
i. 6 ii. 4 iii. 2

40. கோழி மிதித்து குஞ்சு சாகாது என்பதன் கருத்தானது
i. சிறு குற்றமும் செய்யக் கூடாது ii. வீணாக சண்டையிடாதே
iii. அன்பு தண்டனை அளிக்காது

(11ஆம் பக்கம் பார்க்க)

(10 ஆம் பக்கத் தொடர்)

# கடந்த வார (24.11.2023) வினாத்தாள்- II இற்கான விடைகள்

**I.**

01. தோழர்களோடு
02. கற்பிப்போர்
03. நற்பெயர் எடுத்திட வேண்டும்
04. கண் / செவி
05. தோழர்கள்
06. i. பண் ii. விழி
iii. நண்பர்களோடு iv. காது

**II.**

07. கறி
08. போன்றன
09. மும்முரமாக

**III.**

10. i. கைம்மாறு ii. எண்ணெய்
11. எக்காளமிடும்
12. வடவை

**IV.**

13. மறைந்து பேசுதல்
14. யாருக்கும் கொடுக்காமல் சேர்த்தல்
15. ( ✓ )
16. ( ✓ )
17. ( X )
18. i. Peacock ii. Horse
19. i. நான் உதவி செய்யவா?
ii. உங்கள் பெயர் என்ன?
20. i. Please give me an umbrella
ii. These are my frocks

**V.**

21. i. මම නාන්ඩ ii. මම ස්කෝලේ යනවා
22. 4/16
23. எண்ணாயிரத்து ஐந்நூற்று ஐம்பத்து மூன்று
24. i. VII ii. XX, XII, IX, IV, III
25. i. 6 ii. 12
26. 6500ml
27. 01 : 05
28. 76
29. 20

**VI.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 30. | 3 | 39. | 2 | 49. | 2 |
| 31. | 2 | 40. | 1 | 50. | 2 |
| 32. | 3 | 41. | 1 | 51. | 1 |
| 33. | 1 | 42. | 2 | 52. | 3 |
| 34. | 2 | 43. | 3 | 53. | 2 |
| 35. | 1 | 44. | 1 | 54. | 3 |
| 36. | 2 | 45. | 2 | 55. | 1 |
| 37. | 3 | 46. | 3 | 56. | 3 |
| 38. | 1 | 47. | 2 | 57. | 2 |
| | | 48. | 3 | 58. | 1 |
| | | | | 59. | 3 |

# வட்டிக்கு பணம் வழங்கி சொத்துகளை பறிமுதல் செய்யும் கும்பல் அதிகரிப்பு

## யாழ். பொலிஸார் எச்சரிக்கை

*(யாழ். விசேட நிருபர் )*

வட்டிக்கு பணம் வழங்கி, சொத்துகளை பறிமுதல் செய்யும் கும்பல் யாழ்ப்பாணத்தில் அதிகரித்துள்ளதாகத் தெரிவித்த யாழ். மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஜெகத் நிஷாந்த, இவர்கள் தொடர்பாக தகவல்கள் தெரிந்தவர்கள் மற்றும் இவர்களால் பாதிக்கப்பட்டவர்கள் தம்மிடம் நேரடியாக முறைப்பாடு செய்ய முடியுமென தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாக பொது மக்கள் எச்சரிக்கையாக இருக்க வேண்டுமெனவும், அவர் கேட்டுக்கொண்டார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்த போது,

"அதீத வட்டி, மீற்றர் வட்டிக்கு கொடுப்பவர்கள் பெருந்தொகைப் பணம் வழங்குவதுடன், அப்பணத்தை வட்டிக்கு வாங்கியோர் மீள செலுத்த முடியாத சந்தர்ப்பத்தில், அவர்களிடமிருந்து சட்டவிரோதமாக சொத்துகளை பறிமுதல் செய்யும் சம்பவங்கள் தொடர்பாக எமக்கு தகவல்கள் கிடைத்துள்ளன.

இதனால் பாதிக்கப்பட்டவர்கள் உரிய முறையில் முறைப்பாடு செய்யத் தயங்குவதால், பொலிஸாரால் மேலதிக நடவடிக்கை எடுக்க முடியாத நிலைமை உள்ளது.

பாதிக்கப்பட்டவர்கள் துணிந்து முறைப்பாடு செய்யும் பட்சத்தில் அவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க முடியும்" எனத் தெரிவித்தார்.

மேலும், தற்போது யாழ்ப்பாணத்தில் மீற்றர் வட்டி கும்பல் அதிகரித்துள்ளதாகவும், அவர் தெரிவித்தார்.

மன்னார் வைத்தியசாலையின் நிலைமை

# இந்திய உயர்ஸ்தானிகருடன் விரிவாகக் கலந்துரையாடல்

கிராமியப் பொருளாதார இராஜாங்க அமைச்சர் கே.காதர் மஸ்தானின் அழைப்பில் இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே, மன்னார் பொது வைத்தியசாலைக்கு நேற்று முன்தினம் (29) விஜயம் செய்து, வைத்தியசாலையின் தற்போதைய நிலைமை தொடர்பாக விரிவாகக் கலந்துரையாடினார்.

இதன்போது, மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலைப் பணிப்பாளர் எட்வேட் புஸ்பகாந்தன், மன்னார் மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் த.வினோதன் உள்ளிட்டவர்களுடன் இந்திய உயர்ஸ்தானிகர் கலந்துரையாடினார்.



விபத்து மற்றும் அவசர சிகிச்சை பிரிவை நிறுவுதல், CT ஸ்கேனர் தொடர்பாகக் கலந்துரையாடியதாகவும் இவை தொடர்பாக இந்திய உயர்ஸ்தானிகர் சாதகமான பதில் தந்துள்ளதாகவும், இராஜாங்க அமைச்சர் தெரிவித்தார்.

வடக்கின் உதயம்

## கோப்பாய் கலாசாலையில் நூற்றாண்டுகால ஒளி விழா

யாழ். கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் நூற்றாண்டுகால ஒளி விழா இன்று வெள்ளிக்கிழமை (01) காலை 9.00 மணிக்கு கலாசாலை ரதி லட்சுமி மண்டபத்தில் நடைபெறும்.

கலாசாலை அதிபர் சந்திரமௌலீசன் லலீசன் தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் பிரதம விருந்தினராக யாழ். மறைமாவட்ட பேராயர் கலாநிதி யஸ்டின் ஞானப்பிரகாசம் ஆண்டகை கலந்துகொள்கிறார். சிறப்பு விருந்தினராக வலிகாமம் கல்வி வலயப் பணிப்பாளர் கே.ஜே.பிரெட்லீ கலந்துகொள்கிறார்.



இந்தியா மற்றும் இலங்கை இடையே படகு சேவைகள் மீண்டும் தொடங்கவுள்ள நிலையில், இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே நேற்று முன்தினம் காங்கேசன்துறை மற்றும் தலைமன்னார் துறைமுகங்களுக்கு விஜயம் செய்துள்ளார். (படம்: யாழ். விசேட நிருபர்)

## கடலட்டை பிடித்த 12 பேர் சிலாவத்துறையில் கைது

*(மன்னார் குறூப் நிருபர்)*

சிலாவத்துறை, கொண்டச்சிக்குடா கடற்பரப்பில் சட்டவிரோதமாக கடலட்டை பிடித்துக்கொண்டிருந்த குற்றச்சாட்டில் 12 பேரை கடற்படையினர் நேற்று முன்தினம் புதன்கிழமை (29) அதிகாலை கைது செய்ததுடன், இவர்களிடமிருந்து 4 டிங்கிப் படகுகள் உள்ளிட்ட உபகரணங்களையும் கடலட்டைகளையும் கைப்பற்றினர்.

கற்பிட்டி, சிலாவத்துறை, வங்காலை, மன்னாரைச் சேர்ந்த 23 வயது முதல் 48 வயதுக்கு இடைப்பட்டவர்களையே கைது செய்ததாக, கடற்படையினர் தெரிவித்தனர்.

கைப்பற்றப்பட்ட உபகரணங்கள் மற்றும் கடலட்டையுடன் கைதான 12 பேரையும் மேலதிக சட்ட நடவடிக்கைக்காக சிலாவத்துறை கடற்றொழில் பரிசோதகரிடம் ஒப்படைத்துள்ளதாகவும், கடற்படையினர் தெரிவித்தனர்.

யாழ். மாவட்ட செயலகத்தில்

# 300 மாற்றுத்திறனாளிகளுக்கு தினகரன், சங்கவி பிலிம்ஸின் கலாவிபூஷண விருது

சர்வதேச மாற்றுத்திறனாளிகள் தினம் எதிர்வரும் புதன்கிழமை (06) யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தின் பிரதான மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

யாழ். மாவட்ட மாற்றுத்திறனாளிகள் அமைப்பின் ஏற்பாட்டில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் 300 மாற்றுத்திறனாளிகள் கௌரவிக்கப்படவுள்ளனர்.

தினகரன் வாரமஞ்சரி





யாழ். மாவட்ட மாற்றுத்திறனாளிகள் அமைப்பின் தலைவர் எ.பெலிக்ஸ் ஜோய் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம அதிதியாக யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் அ.சிவபாலசுந்தரன், இனிய விருந்தினர்களாக தினகரன் நாளிதழ் மற்றும் தினகரன் வாரமஞ்சரியின் பிரதம ஆசிரியர் தே.செந்தில்வேலவர், வடமாகாண சமூக சேவைத் திணைக்களப் பணிப்பாளர் அகல்யா செகராசா, சங்கவி பிலிம்ஸ் மற்றும் சங்கவி தியேட்டர் பணிப்பாளர் கலாநிதி துரைராசா சுரேஸ், கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபையின் மாகாணப் பணிப்பாளர் சி.சிவகெங்காதரன், வடமாகாண கைத்தொழில் அபிவிருத்திச் சங்கத் தலைவரும் கைப்பணிப் பணிப்பாளருமான தம்பிராசா சுரேஸ்குமார் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

இதன்போது, 15 பிரதேச செயலகங்களிலுள்ள மாற்றுத்திறனாளிக் கலைஞர்கள், சுயதொழில் முயற்சியாளர்கள், சமூக சேவையாளர்கள் ஆகியோர் கௌரவிக்கப்படவுள்ளனர். மாற்றுத்திறனாளிக் கலைஞர்களுக்கான கலாவிபூஷண விருதை சங்கவி பிலிம்ஸ் மற்றும் சங்கவி தியேட்டருடன் இணைந்து தினகரன் நாளிதழ் மற்றும் தினகரன் வாரமஞ்சரி வழங்கவுள்ளது. சுயதொழில் முயற்சியாளர்களுக்கான விருது, சமூக சேவையாளருக்கான விருதை யாழ். மாவட்ட மாற்றுத்திறனாளிகள் அமைப்பு வழங்கவுள்ளது.

# யாழ்ப்பாணத்தில் பாதயாத்திரை




*(நாகர்கோவில் விசேட நிருபர்)*

நாட்டை பாதுகாத்துவரும் முப்படையினருக்கும் இலங்கை மக்களுக்கும் ஆசீர்வாதம் வேண்டி யாழ். பருத்தித்துறை சுப்பர்மடத்திலிருந்து நேற்று வியாழக்கிழமை (30) காலை 8.00 மணிக்கு மழைக்கு மத்தியில் பாதயாத்திரை ஆரம்பமாகியது.

தியபிட கல்லன சோபித தேரர், கே.கே.லஹிரு நேவில் சதுரங்க ஆகியோரே பாதயாத்திரை மேற்கொண்டுள்ளனர்.

நாவலடிச் சாந்தி, மந்திகை கொடிகாமம், கிளிநொச்சி, வவுனியாவினூடாக தெய்வேந்திரமுனையை அவர்கள் சென்றடையவுள்ளனர்.

# மக்களின் பிரச்சினைகளுக்கு குரல் கொடுக்க தாம் தயங்குவதில்லை

## புதிய ஜனநாயக மக்கள் முன்னணி தலைவர்



பொதுமக்களின் பிரச்சினைகளுக்கு குரல் கொடுப்பதற்கு புதிய ஜனநாயக மக்கள் முன்னணி என்றைக்கும் தயங்குவதில்லையென்பதுடன், தாம் மக்களுடன் மக்களாகவே உள்ளதாக, அக்கட்சியின் தலைவரும் கொழும்பு மாநகர சபையின் முன்னாள் உறுப்பினருமான நடராஜா ரவிக்குமார் தெரிவித்தார். வவுனியா ஊடக அமையத்தில் அண்மையில் நடைபெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பின் போதே, அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்தச் சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்த போது, வட்டுக்கோட்டை இளைஞர் உயிரிழந்த விவகாரம் தொடர்பாக நீதியான, நியாயமான தீர்வை அவ்விளைஞரின் குடும்பத்துக்கு பெற்றுக்கொடுக்க வேண்டுமெனவும் வேண்டுகோள் விடுத்தார்.

தவறு இழைப்பவர்களை உரிய முறையில் விசாரணை செய்வதற்கு பல விதிமுறைகள் உள்ளதாகவும், அவர் தெரிவித்தார். இதேவேளை, காணாமல் போனவர்களின் குடும்ப உறுப்பினர்கள் சிலர் பல வருடங்களாக தமது உறவுகளைத் தேடி வீதிகளில் நிற்கின்றனர். ஆயினும், இதற்கு உரிய தீர்வு கிடைக்கப் போவதில்லை. ஆகையால், காணாமல் போனவர்களின் உறவினர்கள் ஆர்ப்பாட்டங்களை செய்து, தமது காலத்தை வீணாடிக்காமல் தமது வேலைகளில் கவனம் செலுத்துவதே சிறந்ததாகுமெனவும், அவர் தெரிவித்தார்.

# 'யாழில் மலையகத்தை உணர்வோம்' நிகழ்வு

**கோப்பாய் குறூப், யாழ். விசேட நிருபர்கள்**

'யாழில் மலையகத்தை உணர்வோம்' எனும் தொனிப்பொருளின் கீழ் நிகழ்வொன்று நேற்று வியாழக்கிழமை (30) யாழ்ப்பாணம் தந்தை செல்வா கலையரங்கில் ஆரம்பமாகியது.

எதிர்வரும் 3ஆம் திகதி வரை யாழ்ப்பாணம் சிவில் அமைப்புகள், கண்டி சமூக அபிவிருத்தி நிறுவனத்துடன் இணைந்து நடத்தும் இதன் ஆரம்ப நிகழ்வில் வடமாகாணக் கல்விப் பணிப்பளர் ஜோன் குயின்ரஸ், யாழ். மாவட்ட முன்னாள் அரசாங்க அதிபர் நா.வேதநாயகன், கண்டி சமூக அபிவிருத்தி நிறுவனத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் பி.முத்துலிங்கம் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர். அத்துடன், அக்கலையரங்கில் மலையக மக்களின் கடந்தகால மற்றும் தற்போதைய வாழ்வியலை உணர்த்தும் கண்காட்சியும் நடைபெறுகின்றமை குறிப்பிடத்தக்கது.



# நெல்லியடியில் வயோதிபப் பெண் கொலை; மூவருக்கு வி. மறியல் நீடிப்பு

*(நாகர்கோவில் விசேட நிருபர்)*

யாழ். நெல்லியடி, அல்வாய் கிழக்கு பிரதேசத்தில் வயோதிபப் பெண் ஒருவர் கழுத்து நெரிக்கப்பட்டு கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பான 3 சந்தேக நபர்களை எதிர்வரும் டிசெம்பர் 12ஆம் திகதிவரை மீண்டும் விளக்கமறியலில் வைக்க, பருத்தித்துறை நீதவான் நீதிமன்ற நீதவான் கிரிசாந்தன் பொன்னுத்துரை உத்தரவிட்டார்.

கடந்த ஒக்டோபர் 5ஆம் திகதி அல்வாய் கிழக்கிலுள்ள வீடொன்றிலிருந்து 89 வயதுடைய பழனிப்பிள்ளை தில்லைராணி சடலமாக மீட்கப்பட்டிருந்தார்.

இந்நிலையில், சடலத்தில் காயங்கள் காணப்பட்டமை மற்றும் பிரேத பரிசோதனை அறிக்கையில் மரணத்தில் சந்தேகம் இருப்பதாக தெரிவித்து, பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை சட்ட வைத்திய அதிகாரி உடற்பாகங்களை இரசாயனப் பகுப்பாய்வுக்கு அனுப்பியிருந்தார்.

பகுப்பாய்வு அறிக்கையில், இந்த வயோதிபப் பெண் கழுத்து நெரிக்கப்பட்டு கொலை செய்யப்பட்டமை உறுதி செய்யப்பட்டதைத் தொடர்ந்து, அவ்வீட்டிலிருந்த கணவன், மனைவி மற்றும் வீட்டுப் பணிப்பெண்ணாகிய 3 பேர் நெல்லியடிப் பொலிஸாரால் நவம்பர் மாதம் 9ஆம் திகதி கைது செய்யப்பட்டு, பருத்தித்துறை நீதவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்.

# உரும்பிராய் காளி கோயிலில் ஐம்பொன் அம்மன் சிலை திருட்டு

*(யாழ். விசேட நிருபர் )*

யாழ்ப்பாணம், உரும்பிராய் பிரதேசத்தில் அமைந்துள்ள காளி கோயிலிலிருந்து பெறுமதி வாய்ந்த அம்மன் சிலையொன்று உட்பட பல இலட்சம் ரூபா பெறுமதியான பொருட்கள் திருட்டுப் போயுள்ளதாக, பொலிஸார் தெரிவித்தனர். வழமை போன்று நேற்று முன்தினம் புதன்கிழமை (29) காலை கோயில் பூசகர் கோயிலைத் திறந்து பூஜை வழிபாட்டை செய்ய சென்ற போதே, கடந்த செவ்வாய்க்கிழமை இரவு கோயிலில் திருட்டுப் போனமையை அவதானித்தார். இது தொடர்பாக கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் அப்பூசகர் முறைப்பாடு செய்ததுடன், சுமார் 4 இலட்சம் ரூபா பெறுமதியான நான்கடி உயரம் கொண்ட ஐம்பொன்னிலான அம்மன் சிலையொன்று, அம்மனுக்கு அணிவிக்கப்பட்ட தாலி மற்றும் தோடு கொண்ட ஒன்றரை பவுண் தங்கநகைகள், உண்டியல் பணம் ஆகியவையே திருட்டுப் போயுள்ளதாக பூசகர் முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார்.

இந்த முறைப்பாட்டின் அடிப்படையில் கோப்பாய் பொலிஸார் விசாரணையை முன்னெடுத்துள்ளனர்.

# சுகாதார விழிப்புணர்வு நூல்கள் அன்பளிப்பு

*(சாவகச்சேரி விசேட நிருபர்)*

வட்டுக்கோட்டை பிரதேச வைத்தியசாலைகளுக்கு சுகாதார விழிப்புணர்வு நூல்கள் நேற்று முன்தினம் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஈஸ்வரபாதம் சரவணபவனால் அன்பளிப்பாக வழங்கப்பட்டன. வைத்தியசாலைகளுக்கு வருகை தரும் நோயாளர்களுக்கு சுகாதார ரீதியான விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாக ஆரம்ப சுகாதார வழிகாட்டி நூல்கள் வழங்கி வைக்கப்பட்டன.

# இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு

## துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும் விமான சேவைகள் அமைச்சு

## சர்வதேச போட்டி ரீதியிலான விலைக்கோரல்

**கிழக்கு கொள்கலன் முனைய அபிவிருத்தி செயற்றிட்டம்**

**இலங்கைத் துறைமுகங்கள் அதிகார சபையின் (SLPA) கிழக்குக் கொள்கலன் முனையத்திற்கு (ECT) கொள்கலன்களைக் கையாளும் உபகரணங்களின் பெறுகை - 15 எண்ணிக்கையான Straddle Carriers**

1. பின்வருமாறு விபரிக்கப்பட்டுள்ள சேவைகளுக்காக தகுதி மற்றும் தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்களை இலங்கை துறைமுக அதிகார சபையின் சார்பில் அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட பெறுகைக் குழுத் தலைவர் இப்போது கோருகிறார்.

| கேள்வி இல. | கேள்வியின் பெயர் | கேள்வி கோரல் முறை | கேள்விப் பிணைத் தொகை | ஆவணக் கட்டணம் (VAT உள்ளடக் கப்பட்டுள்ளது) | முடிவுறுத்தல் திகதி மற்றும் நேரம் |
|---|---|---|---|---|---|
| CES/FP/04 / PT/6461 III (MP) | கிழக்குக் கொள்கலன் முனையத்திற்கு (ECT) கொள்கலன்களைக் கையாளும் உபகரணங்களின் பெறுகை - 15 எண்ணிக்கையான Straddle Carriers | சர்வதேச போட்டி ரீதியிலான விலைக்கோரல் | 250,000 USD அல்லது அதற்குச் சமமான தொகை | 100,000.00 இல. ரூபா (அல்லது 300 USD தொகைக்கான வங்கி வரைவு) | 2024-01-16 பி.ப. 2.00 மணி |

**விலைமனுதாரர்களுக்கான அறிவுரைகள்:**

| | |
|---|---|
| 1. | 5 மில்லியன் ரூபாவிற்கு மேற்படும் கேள்விகளுக்கு 1987இன் 03ம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் ஏற்பாடுகள் பிரயோகிக்கப்படும் என விலைமனுதாரர்கள் இத்தால் அறிவுறுத்தப்படுகிறார்கள். இதற்கமைய சகல தரப்பினரும் மேற்குறிப்பிட்ட ஒவ்வொரு கேள்வியின் பொருட்டும் ஒப்பந்தக் காலப்பகுதியில் கூறப்பட்ட சட்டத்தை கண்டிப்பாக பின்பற்றுதல் வேண்டும். மேலும் வெளிநாட்டு உற்பத்தியாளர் அல்லது வழங்குநர் சார்பில் முகவராக, உப முகவராக, பிரதிநிதியாக அல்லது பெயர் குறிப்பிடப்பட்டவராக செயற்பட விரும்பும் எந்தவொரு விலைமனுதாரரும் தம்மை பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் பிரகாரம் பதிவுசெய்துகொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர் என்பதுடன் முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட பதிவுச் சான்றிதழை கேள்வி ஆவணங்களுடன் சமர்ப்பித்தல் வேண்டும். |
| 2. | விலைமனுதாரர் கடந்த ஐந்து (05) வருடங்களில் மேற்கூறிய தேவைப்படும் இதுபோன்ற உபகரணங்களைத் தயாரித்தல்/ விநியோக வியாபாரத்தில் ஈடுபட்டிருக்க வேண்டும். |
| 3. | ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிகத் தகவல்களை கொழும்பு-01, இல. 45. லேடன் பஸ்தியன் மாவத்தை, இலங்கை துறைமுக அதிகார சபை, வழங்கல் பிரிவு, பிரதான பொறியியலளர் (வழங்கல்கள்) அவர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். தொலைபேசி: 0094 11-2323102/ தொலைநகல்: 0094 11-2381652 மின்னஞ்சல்: cms@slpa.lk என்பதுடன் விலைமனு ஆவணங்களை 2023-12-04ஆம் திகதி முதல் வேலை நாட்களில் அலுவலக நேரங்களில் இதே முகவரியில் பரீட்சித்துப் பார்க்கலாம். விலைக்கோரல் முன்னோடிக் கூட்டமொன்று கொழும்பு-01, இல. 45. லேடன் பஸ்தியன் மாவத்தை, இலங்கை துறைமுக அதிகார சபை, மத்திய நூலகத்தில் 2023-12-21ஆம் திகதி மு.ப. 10.30 மணிக்கு இடம்பெறும். |
| 4. | ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் 2024-01-16ஆம் திகதி தொடக்கம் வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 2.00 மணி வரையான நேரத்தில் மூடும் திகதிக்கு முதல் நாள் வரை 100,000.00 ரூபா (ரொக்கப் பணமாக) அல்லது 300 USD (வங்கி வரைவாக) மீளளிக்கப்படாத கட்டணத்தைச் செலுத்தி மற்றும் மேற்கூறப்பட்ட முகவரியில் உள்ள பிரதான பொறியியலாளர் (வழங்கல்) அவர்களுக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம் ஆங்கில மொழியிலான விலைமனு ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம். |
| 5. | முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைக்கோரல் பிணை முறியுடனான விலைமனுக்களை விலைக்கோரல் முடிவுறுத்தப்படும் நேரமான 2024-01-16ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு பிந்தாமல் தலைவர், அமைச்சரவையால் நியமிக்கப்பட்ட பெறுகைக் குழு (CAPC), துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும் விமான சேவைகள் அமைச்சு, இல. 19, சைத்திய வீதி, கொழும்பு-01 எனும் முகவரிக்கு ஒப்படைத்தல் வேண்டும். பிந்திக் கிடைக்கும் விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. விலைக்கோரலில் கலந்துகொள்வதற்கு விலைமனுதாரரினால் பெயர் குறிப்பிடப்பட்ட பிரதிநிதிகள் முன்னிலையில் விலைக்கோரல் முடிவுறுத்தலின் பின் பின்வரும் முகவரியில் உடனடியாக விலைமனுக்கள் திறக்கப்படும். |

**தலைவர் - அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட பெறுகைக் குழு (CAPC),**
**துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும் விமான சேவைகள் அமைச்சு,**
**இல. 19, சைத்திய வீதி,**
**கொழும்பு-01.**

# தேசிய அபிவிருத்திக்கு பங்களிப்பதில் பெருமை கொள்வோம்

Uva Wellassa University

ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகமானது தேசிய வளத்தை மையப்படுத்தி அதற்கான மேலதிக செயற்பாட்டை முன்னெடுத்துச் செல்வதுடன் பட்டப்படிப்பு, நிபுணத்துவம், கூட்டுறவு என்பனவற்றின் புதிய போக்குகளையும் ஏற்படுத்துகின்றது. பல்கலைக்கழக கல்விசார் திட்டங்கள் கவனமாக வடிவமைக்கப்பட்டு தங்கள் தொழில் வழங்குநருக்கு பெறுமதி சேர்க்கும் தேர்ச்சி வாய்ந்த புதிய மாணவர் பரம்பரையை முன்கொணர்கின்றது. தேசியரீதியிலான இப்பாரிய முயற்சியில் நீங்களும் ஓர் அங்கத்தவராகலாம்.

## பெறுகை அறிவித்தல்

பின்வரும் சேவைகளை வழங்குவதற்காக தகுதிவாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகத்தின் பெறுகைக் குழுத் தலைவர் விலைமனுக்களைக் கோருகின்றார்.

| விபரம் | வாகனங்க-ளின் எண்ணி-க்கை | கேள்வி இல. | கேள்விப் படிவக் கொள்வனவுத் தொகை |
|---|---|---|---|
| மாதாந்த வாடகை அடிப்படையில் வாகனங்களை பெற்றுக்கொள்ளல் (மூன்று (03) வருட காலத்திற்கு) | | | |
| 01. பயணிகள் வேன் (ஒன்பது ஆசனங்கள் அல்லது அதற்கு மேல் (சாரதி ஆசனம் தவிர்த்து) / டீசல் அல்லது பெட்ரல் / இரட்டை வளிச்சீராக்கம் சகிதம்) | 04 | UWU/ GA/V/05/23/07 | ரூபா 2,000.00 |
| 02. முச்சக்கர வண்டி (பெட்ரல்) | 01 | UWU/ GA/V/05/23/07 | ரூபா 2,000.00 |
| 03. சிறிய ரக மோட்டார் கார் (வளிச்சீராக்கம் சகிதம் 850CC - 1000 CC பெட்ரல் / 650 CC அல்லது அதற்கு மேல் ஹைபிரிட்) | 01 | UWU/ GA/V/05/23/07 | ரூபா 2,000.00 |
| 04. செடான் மோட்டார் கார் - பீடாதிபதி மற்றும் நிதியாளரின் பாவனைக்கு (1490CC - 1600CC / பெட்ரல் / ஹைபிரிட் / ஹைபிரிட் அற்ற டொயோட்டா, நிசான் மற்றும் அதற்கு நிகரான / வளிச்சீராக்கம் சகிதம்) | 02 | UWU/ GA/V/05/23/08 | ரூபா 2,000.00 |

| விபரம் | கேள்வி இல. | கேள்விப் படிவக் கொள்வனவுத் தொகை |
|---|---|---|
| 01. பிரதான சிற்றுண்டிச்சாலையின் காகிதாதிகள் மற்றும் புகைப்படப்பிரதி சேவையை நடாத்திச் செல்லல் (02 வருடங்களுக்கு) | UWU/GA/05/BS/23/01 | ரூபா 2,000.00 |

கேள்விதாரர்கள் ஒவ்வொரு கேள்விக்கும் மேற்படி அட்டவணையில் குறிப்பிடப்பட்டள்ள மீளளிக்கப்படாத கட்டணத்தை எந்தவொரு வேலை நாளிலும் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணிக்கிடையில் மேலே குறிப்பிட்டுள்ள ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழக சிறாப்பரிடம் அல்லது இலங்கை வங்கியின் 3114820 என்ற கணக்கிலக்கத்திற்கு ரொக்கப் பணத்தில் நேரடியாக செலுத்திய பின்னர், இக்கொடுப்பனவிற்கான பணப்பற்றுச்சீட்டுடன் பிரதி பதிவாளர் (பொது நிர்வாகம்) அவர்களுக்கு எழுத்து மூலமான வேண்டுகோள் ஒன்றைச் சமர்ப்பிப்பதன் பேரில் 2023-06-19ஆம் திகதி முதல் 2023-12-01ஆம் திகதி வரையில் எந்தவொரு விலைமனுதாரரும் முழுமையான விலைமனுக்கோரல் ஆவணங்களின் தொகுதியொன்றை கொள்வனவு செய்யலாம். http://www.uwu.ac.lk/procurement என்ற பல்கலைக்கழக இணையதளத்திலிருந்தும் விலைமனுதாரர் விலைமனுக்கோரல் ஆவணங்களை பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். பல்கலைக்கழக இணையதளத்திலிருந்து விலைமனுக்கோரல் ஆவணங்களை பெற்றுக் கொள்வோர், மீளளிக்கப்படாத கட்டணத்தை "ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகத்தின்" பெயரில் வழங்கப்பட்ட வங்கி வரைவுடன் பூர்த்தி செய்யப்பட்ட ஆவணங்களைச் சமர்ப்பித்தல் வேண்டும் அல்லது 3114820 என்ற கணக்கிலக்கத்தையுடைய ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகத்தின் பெயரில் இலங்கை வங்கியின் எந்தவொரு கிளையிலும் கொடுப்பனவை மேற்கொள்ளலாம் என்பதுடன், பணப்பற்றுச்சீட்டு/பணவைப்புத்துண்டு ஆகியவை விலைமனுக்கோரல் ஆவணங்களுடன் இணைக்கப்படல் வேண்டும். விலைமனுதாரர் விலைமனுக்கோரல் ஆவணங்களை இலவசமாக பரீட்சித்துப் பார்க்கலாம்.

விலைமனுக்களை 2023-12-22ஆம் திகதி பி.ப. 2.30 மணி அல்லது அதற்கு முன்னராகக் கிடைக்கும் வகையில் ஒப்படைக்கப்படல் வேண்டும் அல்லது பதிவுத்தபாலில் அனுப்பப்படல் வேண்டும் என்பதுடன் அவைகள் அதன் பின்னர் உடனடியாகவே திறக்கப்படும். விலைமனுக்களைக் திறக்கும் வேளையில் விலைமனுதாரர் அல்லது அவரது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதி, (அதிகாரமளிக்கப்பட்ட கடிதத்துடன்) சமுகமளிக்க அனுமதிக்கப்படுவார். கேள்விகளை முத்திரைக் குறியிடப்பட்ட தபாலுறையில் உள்ளடக்கி அதன் இடது பக்க மேல் மூலையில் இயைபுடைய கேள்வி இலக்கம் எழுதப்பட்டு பதிவுத் தபாலில் "தலைவர், திணைக்கள பெறுகைக் குழு, ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகம், பசறை வீதி, பதுளை" என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும் அல்லது ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழக பதிவாளரின் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும்.

மேலதிக விபரங்களை அலுவலக நேரங்களில் 055-2226470 எனும் தொலைபேசி இலக்கத்தின் ஊடாக பிரதிப் பதிவாளர் (பொது நிர்வாகம்) அவர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகம்,**
**பதுளை.**
**2023-12-01.**

**Repeat Your ad For Better Offers**




# Mahindra IDEAL FINANCE

# மஹிந்திரா ஐடியல் பினான்ஸ் லிமிடெட்

பதிவுசெய்யப்பட்ட அலுவலகம்: 299, Colvin R. De Silva Mawatha (Union Place), Colombo 02, Sri Lanka. Tel: +94112 396 060 Fax: +94112 396 757 Email:info@mahindraifl.lk Web:www.mahindraifl.lk

2011இன் 42ஆம் இலக்கச் சட்ட நிதியியல் வர்த்தகத்தின் கீழ் இலங்கை மத்திய வங்கியினால் கண்காணிக்கபடும் உரிமம் பெற்ற நிதி நிறுவனம். பதிவிலக்கம் PB - 4963

**2023 செப்டெம்பர் 30இல் முடிவடைந்த காலப்பகுதிக்கான முக்கிய நிதியியல் தரவுகள் (கணக்காய்வு செய்யப்படாதது)**

| ரூபா மில்லியனில் | நடைமுறைக் காலம் | | முன்னைய காலம் | |
|---|---|---|---|---|
| | 01/04/2023 இலிருந்து 30/09/2023 வரை | வட்டி வருமானத்தின் % ஆக | 01/04/2022 இலிருந்து 30/09/2022 வரை | வட்டி வருமானத்தின் % ஆக |
| வட்டி வருமானம் | 1,096 | 100% | 805 | 100% |
| வட்டிச் செலவு | (561) | -51% | (379) | -47% |
| **தேறிய வட்டி வருமானம்** | **535** | **49%** | **425** | **53%** |
| வர்த்தகப்படுத்தல் நடவடிக்கைகளிலிருந்தான இலாபம்/(நட்டம்) | - | - | - | - |
| ஏனைய வருமானம் | 53 | 5% | 52 | 7% |
| தொழிற்பாட்டு செலவினங்கள் (பெறுமதி இழப்பு நீங்கலாக) | (431) | -39% | (317) | -39% |
| பெறுமதி இழப்பு | 11 | 1% | (56 | -7% |
| **வரிக்கு முன்னரான இலாபம்/ (நட்டம்)** | **169** | **15%** | **104** | **13%** |
| வரிகள் | (114) | -10% | (71) | -9% |
| **வரிக்குப் பின்னரான இலாபம்/ (நட்டம்)** | **55** | **5%** | **33** | **4%** |

**2023 செப்டெம்பர் 30இல் உள்ளவாறு முக்கிய நிதியியல் தரவுகள் (கணக்காய்வு செய்யப்படாதது)**

| ரூபா மில்லியனில் | 30/09/2023 இல் உள்ளவாறு | மொத்த சொத்துக்களின் % ஆக | 30/09/2023 இல் உள்ளவாறு | மொத்த சொத்துக்களின் % ஆக |
|---|---|---|---|---|
| **சொத்துக்கள்** | | | | |
| காசு மற்றும் வங்கி மீதிகள் | 879 | 10% | 453 | 6% |
| அரச பிணையங்கள் | 1,116 | 12% | 317 | 4% |
| தொடர்பான தரப்பினரிடமிருந்து வர வேண்டியவை | 29 | 0% | 14 | 0% |
| கடன்கள் (தொடர்பான தரப்பினரிடமிருந்து வரவேண்டியவை நீங்கலாக) | 6,533 | 71% | 6,358 | 82% |
| பங்குரிமை மூலதனத்திலுள்ள முதலீடுகள் | - | - | - | - |
| சொத்துக்கள், பொறிகள் மற்றும் சாதனங்கள் | 520 | 6% | 471 | 6% |
| ஒத்திவைக்கப்பட்ட வரி சொத்துகள் | 140 | 2% | 157 | 2% |
| மொத்தச் சொத்துக்கள் | 9,218 | 100% | 7,770 | 100% |
| **பொறுப்புக்கள்** | | | | |
| வங்கிகளுக்கு செலுத்தவேண்டியவை | 2,437 | 26% | 1,529 | 20% |
| தொடர்பான தரப்பினருக்கு செலுத்தவேண்டியவை | 260 | 3% | 360 | 4% |
| வைப்பு | 3,073 | 33% | 2,102 | 27% |
| ஏனைய கடன்பாடுகள் | 467 | 5% | 590 | 8% |
| ஏனைய பொறுப்புக்கள் | 92 | 1% | 467 | 6% |
| **மொத்தப் பொறுப்புக்கள்** | **6,328** | **69%** | **4,991** | **64%** |
| **பங்குரிமை மூலதனம்** | | | | |
| கூறப்பட்ட மூலதனம் | 1,908 | 21% | 1,908 | 25% |
| நியதி ஒதுக்கு நிதியம் | 48 | 1% | 44 | 1% |
| பிடித்துவைக்கப்பட்ட வருவாய்கள் | 933 | 10% | 827 | 11% |
| **மொத்த பங்குரிமை மூலதனம்** | **2,890** | **31%** | **2,779** | **36%** |
| **பங்கொன்றிற்கான தேறிய சொத்துப் பெறுமதி** | **19.84** | | **19.08** | |

குறிப்பு: கூறப்பட்ட தொகை பெறுமதி இழப்பு மற்றும் தேய்மானம் நீங்கலானவையாகும்.

**தெரிந்தெடுக்கப்பட்ட முக்கிய செயலாற்ற குறிகாட்டிகள்**

| விடயம் | 30/09/2023 இல் உள்ளவாறு | | 30/09/2022 இல் உள்ளவாறு | |
|---|---|---|---|---|
| ஒழுங்குமுறைப்படுத்தல் மூலதனப் போதுமை (%) | உண்மை | தேவையானது | உண்மை | தேவையானது |
| அடுக்கு 1 மூலதன போதுமை விகிதம் | 45.19 | 8.50 | 41.96 | 8.50 |
| மொத்த மூலதன போதுமை விகிதம் | 46.20 | 12.50 | 43.02 | 12.50 |
| வைப்பு பொறுப்புக்களுக்கான மூலதன நிதிய விகிதம் | 86.71 | 10.00 | 115.54 | 10.00 |
| கடன் சொத்துப்பட்டியலின் தரம் (%) 90 நாள்அடிப்படையில் | | | | |
| மொத்த நிலை 3 கடன் விகிதம் | 16.74 | | 13.73 | |
| நிகர நிலை 3 கடன் விகிதம் | 14.26 | | 10.98 | |
| முக்கிய மூலதன விகிதத்திற்கு நிகர நிலை 3 கடன்கள் | 33.31 | | 26.22 | |
| நிலை 3 குறைபாடுகவரேஜவிகிதம் | 14.81 | | 20.05 | |
| மொத்த குறைபாடு கவரேஜ விகிதம் | 3.87 | | 4.61 | |
| **இலாபத்தன்மை (%)** | | | | |
| தேறிய வட்டி இலாபம் | 11.62 | | 11.42 | |
| சொத்துக்கள் மீதான வருவாய் | 2.30 | | 1.44 | |
| பங்குரிமை மூலதனம் மீதான வருவாய் | 3.81 | | 2.36 | |
| வருமானத்திற்கான செலவு விகிதம் | 73.24 | | 70.67 | |
| **திரவத்தன்மை (%)** | | | | |
| தேவையான திரவச் சொத்துகளுக்கான கிடைக்கத்தக்க திரவச் சொத்து (குறைந்தபட்சம் 100%) | 429.01 | | 197.65 | |
| வெளிவாரி நிதியத்திற்கான திரவச் சொத்துக்கள் | 24.78 | | 10.51 | |
| **விஞ்ஞாபனத் தகவல்கள்** | | | | |
| கிளைகளின் எண்ணிக்கை | 30 | | 24 | |
| வெளிவாரி கொடுகடன் தரமிடல் | Fitch Ratings AA- (lka) Watch Negative | | Fitch Ratings AA- (lka) Outlook Stable | |
| கடந்த 6 மாதங்களில் விதிக்கப்பட்ட ஒழுங்குமுறைப்படுத்தல் தண்டங்கள் (ரு. மில்) | 0.000229 | | - | |

**உறுதிப்படுத்தல்:**

கீழே கையொப்பமிட்டுள்ள மஹிந்திரா ஐடியல் பினான்ஸ் லிமிட்டெட்டின் பிரதான நிறைவேற்று அதிகாரி, பிரதான நிதி அதிகாரி மற்றும் உதவி பொது முகாமையாளர் - முறைப்பாடு ஆகியோர் கூட்டாக இணைந்து பின்வனருவனவற்றை உறுதிப்படுத்துகின்றோம்.

(அ) மேற்குறிப்பிட்ட கூற்றுக்கள் இலங்கை மத்திய வங்கியினால் பரிந்துரைக்கப்பட்ட படிவம் மற்றும் வரைவிலக்கணங்களுடன் இணங்கிச் செல்லும் விதத்தில் தயாரிக்கப்பட்டுள்ளன.

(ஆ) இக்கூற்றுக்களில் அடங்கியுள்ள தகவல்கள் கணக்காய்வு செய்யப்பட்டவை எனக் குறிப்பிடப்பட்டிருந்தாலொழிய, உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளின் கணக்காய்வு செய்யப்படாத நிதியியல் கூற்றுக்களிலிருந்து பிரித்தெடுக்கப்பட்டவையாகும்.

டி.எம். வீரசேக்கர
(கையொப்பம்) பிரதான நிறைவேற்று அதிகாரி
திகதி: 27.11. 2023

ரோஹித் அகர்வாலா
(கையொப்பம்) பிரதான நிதி அதிகாரி
திகதி: 27.11. 2023

சமீரா கௌமுதி
(கையொப்பம்) உதவி பொது முகாமையாளர் - முறைப்பாடு
திகதி: 27.11. 2023

# உலக எய்ட்ஸ் தினம்

2023 டிசம்பர் 1

## தேசிய STD/AIDS கட்டுப்பாட்டு திட்டம் - சுகாதார அமைச்சு

### "சமூகங்கள் வழிநடத்தட்டும்"

உலக எய்ட்ஸ் தினம் (WAD) என்பது எய்ட்ஸ் நோயை முடிவுக்குக் கொண்டுவருவதற்கான உலகளாவிய போராட்டத்தை நினைவூட்டும் ஒரு வருடாந்த நிகழ்வாகும், எச்.ஐ.வி தொடர்பான களங்கத்தை குறைத்து, எச்.ஐ.வி பொது சுகாதார அச்சுறுத்தலாக இல்லாத ஒரு நாளுக்காக தமது உயிர்களை இழந்தவர்களைக் கௌரவிக்கும் வாய்ப்பாகும்.

டிசம்பர் 1, 2023 அன்று, எச்.ஐ.வி-யால் ஆபத்தில் உள்ளவர்கள் அல்லது பாதிக்கப்பட்டவர்களுடன் ஒற்றுமையைக் காட்ட, "சமூகங்கள் வழிநடத்தட்டும்" என்ற கருப்பொருளின் கீழ் உலகம் தனது 35வது ஆண்டை நினைவுகூருகிறது. எச்.ஐ.வி-யால் ஆபத்தில் அல்லது பாதிக்கப்பட்டுள்ள சமூகங்கள் எச்.ஐ.வி தொடர்பில் சாதகமான மாற்றத்தை உருவாக்குவதில் முன்னிலையில் உள்ளன.

### இலங்கையில் எச்.ஐ.வி

1986ஆம் ஆண்டு இலங்கையில் முதல் எச்ஐவி நோயாளி கண்டறியப்பட்டார். எச்ஐவி/எய்ட்ஸ் பாதிப்பு குறைவாக உள்ள நாடாக இலங்கை உள்ளது மேலும் எச்ஐவி பாதிப்பு <0.1% ஆக உள்ளது. இருப்பினும், ஒவ்வொரு ஆண்டும் கண்டறியப்பட்ட நோயாளர்களின் எண்ணிக்கை தெளிவான அதிகரித்து வரும் போக்கைக் காட்டுகிறது.

2022ஆம் ஆண்டின் இறுதியில், 5011 எச்.ஐ.வி தொற்றுக்கு உள்ளானவர்கள் இலங்கையில் தேசிய STD/AIDS கட்டுப்பாட்டு திட்டத்தில் பதிவாகியுள்ளனர் மற்றும் HIV ஆல் பாதிக்கப்பட்டவர்களில் 698 இறப்புகள் பதிவாகியுள்ளன. கடந்த ஆண்டில் கண்டறியப்பட்ட புதிய எச்ஐவி நோயாளிகளின் எண்ணிக்கை 607 ஆக இருந்தது. இது முந்தைய ஆண்டை விட அதிகமாகும். ஆண், பெண் விகிதத்தில் 7:1 என்ற விகிதத்தில் பெண்களை விட ஆண்களே அதிகம் பாதிக்கப்பட்டுள்ளனர். 15-24 வயதுக்குட்பட்டவர்களிடையே எச்.ஐ.வி நோயால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை படிப்படியாக அதிகரித்து வருகிறது.




### எச்.ஐ.வி சுய பரிசோதனை

#### வழக்கமான இரத்த பரிசோதனைகளுக்கு கூடுதலாக, எச்.ஐ.வி சுய-பரிசோதனை

வாய்வழி திரவங்களைப் பயன்படுத்தி நாமே பரிசோதிக்க வடிவமைக்கப்பட்டுள்ளது. NSACP ஆனது, தங்கள் வீட்டில் தாங்களாகவே பரிசோதனை செய்துகொள்ள விரும்பும் எவருக்கும் சுய-பரிசோதனை கருவிகளை வழங்குவதன் மூலம் கூடுதல் வசதிகளைச் செய்துள்ளது. மற்றும் வீடுகளுக்கு கருவிகளை வழங்குவதற்கான வசதிகள் விரிவுபடுத்தப்பட்டுள்ளன. 2030க்குள் எய்ட்ஸ் நோயை முடிவுக்குக் கொண்டு வருவதற்கான அனைத்து வழிகளிலும் எச்.ஐ.வி பரிசோதனையை அதிகரிப்பதற்கு WHO பரிந்துரைகளுடன் சுகாதார அமைச்சு கடுமையாக உழைக்கிறது.

### STD சிகிச்சை இடங்கள்



### PLHIV குழுக்களின் செய்தி

'தேசிய பாலியல் நோய்/ எய்ட்ஸ் தடுப்பு வேலைத்திட்டம் (NSACP) மூலம் பெற்றுத்தரப்படும் சேவையுடன் எமது மக்களுக்கு சிறந்த வாழ்வொன்றை முன்னெடுப்பதற்கு நாம் கரிசனை மற்றும் ஆதரவை வழங்குவோம். 2030 ஆம் ஆண்டாகும்போது எய்ட்ஸை ஒழிக்கும் தேசிய திட்டத்திற்கு உதவுவதற்கு எமது அனைத்து மக்களும் ஆதரவு வழங்குவார்கள்.'

நேர்மறை பெண்கள் வலையமைப்பு - இலங்கை
லங்கா பிளஸ்
பாசிட்டிவ் ஹோப்ஸ் கூட்டணி

**2030ஆம் ஆண்டளவில் எய்ட்ஸ் நோய்க்கு முற்றுப்புள்ளி வைக்கும் நோக்கில், சமூகங்களை வழிநடத்தும் நோக்கில் இலங்கை செயற்பட்டு வருகின்றது.**




#### எச்.ஐ.வி தொற்றும் மூலங்கள்

1. பாதுகாப்பற்ற பாலியல் வெளிப்பாடுகள்
2. இரத்தம் மற்றும் வேறு சில உடல் திரவங்கள் மூலம் முக்கியமாக ஊசிகள் மற்றும் உபகரணங்களை உட்செலுத்துபவர்களிடையே பகிர்ந்து கொள்ளுதல்
3. பாதிக்கப்பட்ட தாயிடமிருந்து தன் குழந்தைக்கு

பாலியல் ரீதியான பரவலைப் பொறுத்தவரை, எச்.ஐ.வி இருபாலினம் மற்றும் ஓரினச்சேர்க்கை நடத்தைகள் மூலம் பரவுகிறது மற்றும் 2022ஆம் ஆண்டில் ஆணிலிருந்து ஆணுக்கு பரவும் எச்.ஐ.வி தொற்றின் அதிகபட்ச விகிதம் 48.5% ஆகப் பதிவாகியுள்ளது. ஆணிலிருந்து ஆணுக்கு உடலுறவின் மூலம் எச்.ஐ.வி பரவும் இந்த முறை உலகின் பல நாடுகளில் ஆண்களுடன் உடலுறவு கொள்ளும் ஆண்களை (எம்.எஸ்.எம்) எச்.ஐ.வி பரவுவதற்கான அதிக ஆபத்துள்ள குழுவாகக் கண்டறிந்துள்ளது.

சில நபர்கள் தங்கள் பாலியல் மற்றும் போதைப்பொருள் பாவனை நடத்தைகள் தொடர்பாக அதிக ஆபத்தில் உள்ளனர். பாதுகாப்பற்ற உடலுறவு மூலம் ஆண்களுடன் உடலுறவு கொள்ளும் ஆண்களுக்கு எச்.ஐ.வி தொற்று ஏற்படுவதற்கான வாய்ப்பு 28 மடங்கு அதிகம். போதை ஊசி ஏற்றுபவர்களுக்கு 35 மடங்கும், பாலியல் தொழிலாளிகளுக்கு 30 மடங்கு அபாயமும், திருநங்கைகளுக்கு 14 மடங்கும் எச்.ஐ.வி பரவுவதற்கான சாத்தியக்கூறுகள் உள்ளன.

பாதிக்கப்பட்ட தாயின் கர்ப்பம், பிரசவம் மற்றும் பாலூட்டும் போது எச்.ஐ.வி பரவலாம் மற்றும் தாயிடமிருந்து குழந்தைக்கு பரவும் அபாயம் 25 முதல் 45% ஆகும். இருப்பினும், தாயிடமிருந்து குழந்தைக்கு பரவுவதைத் திட்டமிட்டுத் தடுப்பதன் மூலம் (பி.எம்.டி.சி.டி) இந்த அபாயத்தை பூஜ்ஜியமாகக் குறைக்கலாம் மற்றும் 2019ஆம் ஆண்டில், உரிய இடையீடுகளுடன் தாயிடமிருந்து குழந்தைக்கு பரவுவதை வெற்றிகரமாக தடுத்த நாடாக இலங்கையை WHO சான்றளித்தது.

எச்.ஐ.வி தொற்று எய்ட்ஸாக மாறுவதை ஆரம்பகால நோயறிதல் மற்றும் சிகிச்சையின் மூலம் கட்டுப்படுத்தலாம், இதனால் பாதிக்கப்பட்ட நபர் சிறந்த வாழ்க்கைத் தரத்தைப் பெற முடியும். எனவே, எச்.ஐ.வி நோயால் கண்டறியப்பட்டவர்கள் சிகிச்சை பெறுவது அவர்கள் உயிர்வாழ்வதற்கும் பரவலைக் குறைப்பதற்கும் மிக முக்கியமானது. சிகிச்சை பெறுபவர்கள் மற்றும் பாலியல் நடத்தைகளை நன்கு கட்டுப்படுத்தும் போது வைரஸை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரலாம் என்று நல்ல அறிவியல் ஆய்வுகள் காட்டுகின்றன, எனவே எச்ஐவி நோயாளி வாழ்நாள் முழுவதும் ஆன்டி-ரெட்ரோவைரல் சிகிச்சை (ART) பெறுவது மிகவும் முக்கியம்.

#### இலங்கையில் தேசிய திட்டத்தின் மூலம் கிடைக்கும் சேவைகள்

தேசிய STD/AIDS கட்டுப்பாட்டுத் திட்டம் என்பது நாட்டின் 25 மாவட்டங்களையும் உள்ளடக்கிய 41 பாலியல் சுகாதார கிளினிக்குகள் மூலம் இலங்கையில் HIV மற்றும் STI தொற்றுக்கான விரிவான பராமரிப்பு மற்றும் சிகிச்சையை வழங்கும் சுகாதார அமைச்சின் கீழ் உள்ள பிரதான அரசாங்க அமைப்பாகும்.

● STI/HIV தடுப்பு

**ஆணுறைகள் மற்றும் லூப்ரிகண்டுகள்:-** ஆணுறைகள் மற்றும் லூப்ரிகண்டுகள் எச்ஐவி தடுப்பு முறையாக அனைத்து பாலியல் சுகாதார கிளினிக்குகளிலும் வழங்கப்படுகின்றன. எச்.ஐ.வி பரவுவதைத் தடுக்க சரியான மற்றும் நிலையான ஆணுறை பயன்பாடு பயனுள்ளதாக இருக்கும் மற்றும் குறைந்தபட்ச பக்க விளைவுகளுடன் குறைந்த விலையில் கிடைக்கும்.

கிளினிக்குகளுக்குச் செல்லும் நோயாளிகள் மற்றும் அதிக ஆபத்து மற்றும் பாதிக்கப்படக்கூடிய குழுக்களுக்கு NSACP ஆணுறைகளை வழங்குகிறது. தேசிய திட்டத்தின் பொது சுகாதார ஆய்வாளர்கள் NGOS மற்றும் CBOS களுடன் நெருக்கமாகப் பணிபுரிந்து, ஆணுறைகளை விளம்பரப்படுத்தவும் விநியோகிக்கவும் செய்கிறார்கள். மேலும் ஆணுறை விநியோகம் அடையாளம் காணப்பட்ட பொது இடங்களில் நடைபெறுகின்றது. அவை ஆபத்துக்களை எதிர்கொள்ளும் நபர்களுக்கு கிடைக்கின்றன.

**பிந்தைய வெளிப்பாடு தடுப்பு** (PEP):- எச்.ஐ.விக்கு ஆபத்தான பாலுறவு வெளிப்பாட்டைத் தொடர்ந்து உடனடியாக ஆன்டிரெட்ரோவைரல் சிகிச்சையை எடுத்துக்கொள்வது, PEP என அழைக்கப்படும் ஒரு பயனுள்ள தடுப்பு நடவடிக்கையாகும். இது அனைத்து அரச STD கிளினிக்குகள் மற்றும் மருத்துவமனைகளில் 24/7 அவசர சிகிச்சையாக கிடைக்கிறது. வேலையின் போது ஊசி குத்திய காயங்கள் போன்ற தொழில் அபாயத்திற்கு ஆளான அனைத்து சுகாதாரப் பணியாளர்களுக்கும் PEP கிடைக்கிறது.

**முந்தைய வெளிப்பாட்டுத் தடுப்பு** (PrEP):- PrEP என்பது HIV தடுப்புக்கான ஒரு புதிய முறையாகும், இது ஆணுறைகளைப் பயன்படுத்த விரும்பாத ஆண்களுடன் (MSM) உடலுறவு கொள்ளும் ஆண்களுக்கு குறிப்பாக பரிந்துரைக்கப்படும் அதிக ஆபத்துள்ள குழுக்களுக்கு ஏற்றது. ஓரினச்சேர்க்கையாளர்களிடையே எச்ஐவி பரவுவதைக் குறைப்பதற்கான வெற்றிகரமான உத்தியாக PrEP ஐ உலகின் பல்வேறு பகுதிகளில் இருந்து பல ஆராய்ச்சி சான்றுகள் காட்டுகின்றன. இலங்கையில் எச்.ஐ.வி பரவுவதற்கான பிரதான வழிமுறையாக எம்.எஸ்.எம்., எம்.எஸ்.எம் மத்தியில் எச்.ஐ.வி பரவுவதைக் கட்டுப்படுத்துவதில் PrEP முக்கியமானது என்பதை தற்போதைய தொற்றுநோயியல் தரவுகள் தெளிவாகக் குறிப்பிடுகின்றன. எய்ட்ஸ், காசநோய் மற்றும் மலேரியாவை எதிர்த்துப் போராடுவதற்கான உலகளாவிய நிதியத்தின் கீழ் (GFATM) கவனமாக மருத்துவ மேற்பார்வையின் கீழ் அரச பாலியல் சுகாதார கிளினிக்குகள் மூலம் அதிக ஆபத்துள்ள மக்கள் குழுக்களுக்கு இலவசமாக கிடைக்கக்கூடிய PrEP ஐ ஆதரிக்கிறது.




### சமூகக் குழுக்களின் செய்தி

'எமது மக்கள் குழுக்களாக, எச்.ஐ.வி சோதனைக்காக அதிக கவனத்திற்குரிய குழுக்களை நெருங்குவதற்கு மற்றும் அவர்களை சிகிச்சைக்காக ஈடுபடுத்துவதற்கு முயற்சிப்போம். இதற்காக தேசிய பாலியல் நோய்/ எய்ட்ஸ் தடுப்பு வேலைத்திட்டம் (NSACP) மற்றும் மற்ற தரப்புகள் மூலம் வழங்கப்படும் ஒத்துழைப்புகள் அவசியமானது"

ஹார்ட் டு ஹார்ட் லங்கா

- **பாலியல் சுகாதார சேவைகள்**

பாலியல் சுகாதாரம் மற்றும் STI சேவைகளை வழங்குதல், பரிசோதனை, கண்டறிதல் மற்றும் சிகிச்சை உள்ளிட்டவை, நாடளாவிய ரீதியில் உள்ள அனைத்து கிளினிக்குகளிலும் நன்கு பயிற்சி பெற்ற தகுதி வாய்ந்த ஊழியர்களால் உறுதி செய்யப்படுகின்றன. களங்கம் மற்றும் பாகுபாட்டைக் குறைக்க வாடிக்கையாளர் நட்பு சூழலில் தனியுரிமை மற்றும் ரகசியத்தன்மை பராமரிக்கப்படுகிறது.

- **எச்.ஐ.வி சிகிச்சை மற்றும் பராமரிப்பு சேவைகள்.**

எச்.ஐ.வியால் பாதிக்கப்பட்ட அனைத்து நோயாளிகளுக்கும் சிகிச்சை இலவசமாக வழங்கப்படுகிறது. இதில் மிகவும் மேம்பட்ட ஆன்டி-ரெட்ரோவைரல் சிகிச்சையும் அடங்கும். இது உலகின் ஒரு வசதியான நாடு போன்றது. எச்.ஐ.வி ரேபிட் சோதனை விரைவான மதிப்பீடு மற்றும் நோயின் ஆரம்பத்திலேயே சிகிச்சை பெற வாய்ப்பளிக்கிறது.

**NGO க்கள் மற்றும் CBO க்களுடன் பணிபுரிதல்.**

எச்.ஐ.வி சேவைகளை வழங்குவதற்கு ஆபத்துள்ள மக்கள் குழுக்களில் குறிப்பாக MSM, TG, பாலியல் தொழிலாளர்கள் மற்றும் போதைப்பொருள் பாவனையாளர்களை சென்றடைவது மிகவும் முக்கியமான ஆனால் எப்போதும் களங்கத்துடன் பார்க்கப்படும் சவாலான தெரிவாக உள்ளது. NSACP நாட்டில் 15 மாவட்டங்களில் உள்ள பல்வேறு NGOக்கள் மற்றும் CBOக்களுடன் இணைந்து செயல்படுகிறது. அதனால் இந்த விளிம்புநிலை மக்கள் கவனிப்பு மற்றும் ஆதரவுக்கு சமமான அணுகலைப் பெறுகிறார்கள். பெரும்பாலான STD கிளினிக்குகள் NGO க்கள் மூலம் HIV பரிசோதனை மற்றும் பிற எச்ஐவி சேவைகள் மிகவும் பயனுள்ள முறையில் ஆதரிக்கப்படுகின்றன. மேலும், எச்.ஐ.வி உடன் வாழும் மக்களுக்கு உகந்த எச்.ஐ.வி சிகிச்சையை வழங்குவதற்காக சுகாதார ஊழியர்களுடன் நெருக்கமாக பணியாற்றும் மூன்று தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் செயற்படுகின்றன. கொள்கைகளுக்கான முக்கிய பங்குதாரர் குழுக்களில் உறுப்பினர்களாகவும், நாட்டிற்கான எச்ஐவி தேசிய மூலோபாயத் திட்டத்திலும் கூட தேசிய அளவில் முடிவெடுப்பதில் அவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படுகிறது.

**"Know4sure" இணையவழி சேவைகள்**

விளிம்புநிலை மக்கள் மற்றும் இளைய தலைமுறையினரை இலக்காகக் கொண்டு HIV சேவைகளை மிகவும் திறம்பட வழங்க புதிய தொழில்நுட்பம் பயன்படுத்தப்படுகிறது. NSACP ஆனது "KNOW4SURE" என்ற இணைய அடிப்படையிலான செயலியை அறிமுகப்படுத்தியது. இது எந்தவொரு நபரும் STI/HIVக்கான தனிப்பட்ட ஆபத்தை மதிப்பிடுவதற்கும், பாலியல் சுகாதார கிளினிக்கில் சந்திப்பை பதிவு செய்வதற்கும், HIV சுயபரிசோதனைப் பொதி மற்றும் ஆணுறைகளை இரகசியமாக அவர்களின் வீடுகளுக்கு வழங்குவதற்கும் உதவுகிறது.

இந்த கூட்டு முயற்சிகள் அனைத்தும் 2030ஆம் ஆண்டளவில் எய்ட்ஸ் நோயை முடிவுக்குக் கொண்டுவருவதற்காகும். மேலும் இந்த நிலைத்தை அனுஷ்டிப்பதற்கு ஏற்ப, பொது இலக்கை நோக்கி ஒன்றிணைந்து செயல்படுவதற்கான விழிப்புணர்வையும் முக்கியத்துவத்தையும் உயர்த்துவதற்காக இலங்கை நாடளாவிய ரீதியிலான நடவடிக்கைகளை திட்டமிட்டுள்ளது.

**உலக எய்ட்ஸ் தின நடவடிக்கைகள்:**

2023ஆம் ஆண்டு டிசம்பர் 1ஆம் திகதி கொழும்பிலும் நாடளாவிய ரீதியிலும் நடைபெறவுள்ள உலக எய்ட்ஸ் தினத்தின் 35ஆவது கொண்டாட்டத்துக்கான சமூக அமைப்புகளுடன் இணைந்த தேசிய நிகழ்ச்சித்திட்டமாக நடத்தப்படவுள்ளது.

1) எய்ட்ஸ் தின நடைப் பயணம் டிசம்பர் 1, 2023 அன்று காலை 9 மணிக்கு கொழும்பு விஹாரமகா தேவி பூங்காவில் இருந்து தொடங்குகிறது. இது புதிய பொரளை, மருதானை வழியாக நடந்து மீண்டும் விஹாரமகா தேவி பூங்காவை வந்தடையும். இதன் மூலம் பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும். சுகாதாரப் பணியாளர்கள், முப்படைகள், இளைஞர் மன்றங்கள், எச்ஐவியால் பாதிக்கப்பட்டவர்கள், ஆபத்தில் உள்ள மக்கள் குழுக்கள், அரசு சாரா நிறுவனங்கள் மற்றும் சிவில் சமூகங்கள் ஆகியவற்றை பிரதிநிதித்துவப்படுத்தி 1000 பேர் இதில் பங்கேற்பார்கள். இறுதிக் கூட்டம் விஹாரமகா தேவி பூங்காவில் நடைபெறும். மற்றும் சில பொழுதுபோக்கு நிகழ்வுகள் முக்கிய மக்கள் குழுவால் நடத்தப்படும். இந்த நிகழ்வு UNFPA மற்றும் FPA ஆகியவற்றின் ஒத்துழைப்புடன் NSACP ஆல் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

2) 2023 நவம்பர் 15 முதல் நவம்பர் 29 வரை தேர்ந்தெடுக்கப்பட்ட வழித்தடங்களில் கொழும்பு நகரங்களைச் சுற்றி இரட்டை அடுக்குப் பேருந்தைப் பயன்படுத்துவதன் மூலம் எச்.ஐ.வி/எய்ட்ஸ் குறித்து பொது மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது. இந்த நிகழ்வின் மூலம் எச்.ஐ.வி சுய பரிசோதனை ஊக்குவிக்கப்படும்.

3) 22 நவம்பர் 2023 அன்று காலை 10 மணி முதல் நண்பகல் 12 மணி வரை சுகாதார மேம்பாட்டு சபையில் (HPB) எய்ட்ஸ் தின நடவடிக்கைகள் மற்றும் எச்ஐவி தொற்றுநோயின் தற்போதைய போக்கை அறிமுகப்படுத்தும் ஊடக மாநாடு நடைபெற்றது.

4) எச்.ஐ.வி தடுப்பு உத்திகள், பரிசோதனை, பராமரிப்பு மற்றும் சிகிச்சைகள் ஆகியவற்றின் அடிப்படையில் நவம்பர் மாதத்தில் ஒரு சமூக ஊடக பிரச்சாரம் தொடங்கப்பட்டது.

5) எய்ட்ஸ் தின நடவடிக்கைகளுக்கு இணையான துண்டுப் பிரசுரங்கள், புத்தகங்கள் மற்றும் சுவரொட்டிகளை உருவாக்குவதன் மூலம் எச்.ஐ.வி சுய-பரிசோதனை மற்றும் பிற சேவைகளை மேம்படுத்தும் புதிய தடுப்பு நடவடிக்கை முன்-வெளிப்பாடு தடுப்பு (PrEP) ஆன்லைன் செயலியான "know4sure" இணையதளம் பற்றிய தகவல்கள்.

6) 2023 அக்டோபர் 26 முதல் நவம்பர் 24 வரை, குடும்பக் கட்டுப்பாடு சங்கத்தின் (FPA) கூட்டாண்மையுடன், ஒதுக்கப்பட்ட நாட்கள் மற்றும் நேரத்தின்போது, கொழும்பு மற்றும் புறநகர்ப் பகுதிகளில் உள்ள பல்வேறு முக்கிய இடங்களில் தொடங்கப்பட்ட மக்கள் குழுக்களை இலக்காகக் கொண்டு NSACP, HIV பரிசோதனையை நடத்துகிறது.



**"சமூகங்கள் வழிநடத்தட்டும்"**

சமூகங்கள் மக்களை மையமாகக் கொண்ட பொது சுகாதார சேவைகளுடன் மக்களை வழிநடத்தும் மற்றும் இணைக்கும் போது, நம்பிக்கையை உருவாக்குதல், புதுமைப்படுத்துதல், கொள்கைகள் மற்றும் சேவைகளை செயல்படுத்துவதை கண்காணித்தல் மற்றும் வழங்குநர்களை பொறுப்புக்கூற வைக்கும். உலக எய்ட்ஸ் தினம் அனைத்து சமூகக் குழுக்களும் செயல்படுவதையும், அவர்களின் தலைமைப் பாத்திரங்களில் ஆதரவளிக்கும் சமூகங்களை செயல்படுத்துவதையும் உள்ளடக்கியது. எச்.ஐ.வி தொடர்பான களங்கம் மற்றும் பாகுபாடுகளைக் குறைத்தல் அல்லது நீக்குதல், பாலின அடிப்படையிலான வன்முறையைக் குறைத்தல் அல்லது நீக்குதல் மற்றும் சட்ட ரீதியான சூழலை மேம்படுத்துவதற்கு ஆதரவளித்தல் ஆகியவற்றில் சமூக அமைப்புகளுக்கு பெரும் பங்கு உள்ளது.

கலாநிதி அசேல குணவர்தன
சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம்
சுகாதார அமைச்சு



**"சமூகங்கள் வழிநடத்தட்டும்"**

சமூக ஈடுபாடும் ஒட்டுமொத்த இலங்கையின் ஈடுபாடும் இலங்கையில் எச்.ஐ.வியின் குறைந்த பரவலைப் பேணுவதற்கும் தாயிடமிருந்து குழந்தைக்கு எச்.ஐ.வி மற்றும் சிபிலிஸ் பரவுவதை தடுப்பதற்கும் வழிவகுத்தது. 2030ஆம் ஆண்டளவில் எச்ஐவி தொடர்பான நிலையான வளர்ச்சி இலக்குகளை அடைவதற்கு எச்ஐவிக்கான தேசிய பதிலை இந்த ஆண்டு உலக எய்ட்ஸ் தின தொனிப்பொருள் மேலும் வலுப்படுத்துகிறது. சமூக ஈடுபாடு என்பது பயனுள்ள மனித வள முதலீடு மற்றும் நாட்டில் வயதுக்கு ஏற்ற பாலியல் சுகாதார கல்வியை மேம்படுத்துவதற்கும் ஒரு சக்திவாய்ந்த கருவியாகும். அத்துடன் அது நாட்டில் இளைஞர்கள் மற்றும் பெண்கள் வாழ்வினை மேம்படுத்துகின்றது

டாக்டர் எஸ்.எம். அர்னல்ட்
பிரதிப் பணிப்பாளர் நாயகம்
பொதுச் சுகாதார சேவைகள் -I
சுகாதார அமைச்சு



**"சமூகங்கள் வழிநடத்தட்டும்"**

தற்போது, முக்கிய எச்.ஐ.வி பரிசோதனைக்கான சேவைகள் கணிசமான அளவில் அரச சாரா நிறுவனங்கள் மற்றும் சமூக அமைப்புகளால் மேற்கொள்ளப்படுகின்றன. இந்த ஆண்டின் தொனிப்பொருள் சமூக ஈடுபாட்டை மேலும் பலப்படுத்தும். சமூக ஒப்பந்த மாதிரியானது சமூகங்கள் மற்றும் அரசாங்கங்களுக்கு இடையேயான இணைப்புகளை வலுப்படுத்துகிறது. மக்கள் மற்றும் சமூகங்களுக்கு சேவைகளை வழங்குவதை சாத்தியமாக்குகிறது. எச்.ஐ.வி (HIV) மற்றும் முக்கிய மக்கள் குழுக்களுடன் வாழும் மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தவும், களங்கம் மற்றும் பாகுபாடுகளை அகற்றவும் சமூக ஈடுபாடு சாதகமாக எடுத்துக்கொள்ளப்படலாம்.

டாக்டர் ஜானகி விதானபத்திரன
பணிப்பாளர் தேசிய எய்ட்ஸ் கட்டுப்பாட்டு திட்டம்
சுகாதார அமைச்சு

# பொது அறிவித்தல்

## ரிதீபனா ஹைட்ரோ (PVT) LTD (Reg. No. PV 71591)

கூறப்பட்ட கம்பனிகள் சட்டத்தின் 242 (1) ஆம் பிரிவு அடிப்படையில், கட்டம் 4, Access No. 278, யூனியன் பிளேஸ், கொழும்பு 02 இன் விதுல்லங்கா பீஎல்சி (Reg. No PQ 83) உடன் ரிதீபனா ஹைட்ரோ (பிறைவெட்) லிமிடெட் (Reg. No. PV 71591) இன் முன்மொழியப்பட்ட கூட்டிணைவு தொடர்பில், திருத்தப்பட்டவாறு 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 242(3)(b) ஆம் பிரிவின் கீழ் (கம்பனிகள் சட்டம்) இத்தால் அறிவிக்கப்படுகிறது.

சபையின் தீர்மானங்களின்படி RHL இன் பணிப்பாளர்கள் மூலம் 2023 நவம்பர் 28 ஆம் திகதி கையெழுத்திடப்பட்டதும் அங்கீகரிக்கப்பட்டதும் (VLL இன் முழு சொந்தமான துணை நிறுவனமாக இருத்தல்), (அதன் விளைவாக கூட்டிணைக்கப்பட்ட நிறுவனமான) RHL இன் இருப்பு நிறுத்தப்பட்டு VLL வின் இருப்பு தொடரப்படும், கம்பனி சட்டத்தின் 242(1) பிரிவின் கீழ் விதுல்லங்கா பீஎல்சி (VLL) உடன் ரிதீபனா ஹைட்ரோ (பிறைவெட்) லிமிடெட் (RHL) இன் கூட்டிணைவுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டது. கூட்டிணைவு செயற்படுத்தப்படும்போது RHL இன் வழங்கப்பட்ட ஒட்டுமொத்த பங்குகள், கொடுப்பனவு அல்லது கருத்தில்கொள்ளப்படாது இரத்துச் செய்யப்படும்.

இந்த அறிவித்தல் திகதியில் இருந்து 20 வேலை நாட்களின் பின் பதிவுக்காக கம்பனிகள் பதிவாளருக்கு கம்பனிகள் சட்டத்தின் 243 ஆவது பிரிவில் கூறப்பட்ட ஆவணங்களை சமர்ப்பிப்பதற்கு VLL மற்றும் RHL கோரப்படுவதோடு சட்டத்தின் 244(1) ஆம் பிரிவின் விதிகளில் கம்பனிகள் பதிவாளர் மூலம் கையொப்பமிடப்பட்ட கூட்டிணைவு சான்றிதழ் வழங்கப்பட்ட பின் இந்த கூட்டிணைவு உடன் அமுலுக்கு வரும்.

கம்பனிகள் சட்டத்தின் 241(4) ஆம் பிரிவின் விதிகளில், RHL மற்றும் VLL இன் பணிப்பாளர் சபை மூலம் பணிப்பாளர் சபையின் கூட்டிணைவை அங்கீகரிக்கும் சபையின் தீர்மானங்களின் பிரதிகளை கூட்டிணைக்கப்பட்ட நிறுவனங்களின் பங்குதாரர்கள் அல்லது கடனாளிகள் அல்லது கூட்டிணைக்கப்பட்ட நிறுவனங்களில் ஏதேனும் கடமையின் கீழ் இருக்கும் எந்த ஒரு தனிநபர்கள் மூலம் சாதாரண அலுவலக நேரங்களில் பரீட்சிப்பதற்காக இல. 08, டிக்கேல் வீதி, கொழும்பு 08 என்ற முகவரியில் மனேஜர்ஸ் அண்ட் செக்ரடரிஸ் (பிறைவெட்) லிமிடெட், செயலாளர்களின் பதிவு செய்யப்பட்ட அலுவலகத்தில் வைக்கப்பட்டிருத்தல் வேண்டும் அல்லது கூட்டிணைக்கப்பட்ட நிறுவனங்களின் எந்த ஒரு மேற்கூறிய நபர்கள் மூலமும் மேற்கொள்ளப்படும் கோரிக்கைக்கு அமைய பிரதிகள் கட்டணம் இன்றி வழங்கப்படுதல் வேண்டும்.

**சபை பணிப்பாளர்கள் ஆணைப்படி**
**ரிதீபனா ஹைட்ரோ (Pvt) Ltd (Reg. No. PV 71591)**
**நடாஷா அரவ்வாவல**
**நிறுவன செயலாளர்**
**கட்டம் 4, Access Towers**
**No. 278, யூனியன் பிளேஸ்,**
**கொழும்பு 02**
**2023 நவம்பர் 29**

# விலைமனுக்களுக்கான அழைத்தல்

வரையறுக்கப்பட்ட (தனியார்) (ஸ்ரீலங்கா) விமானநிலையம் மற்றும் விமான சேவைகள்

**BID No.: 037/T/2023**

**SUPPLY, INSTALLATION & COMMISSIONING OF STORAGE SOLUTION FOR USER DATA AT BANDARANAIKE INTERNATIONAL AIRPORT, KATUNAYAKE**

இலங்கை, கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்தில் Storage Solution for User Data ஐ வழங்கல், நிறுவுதல் மற்றும் செயற்பட வைத்தல் ஆகியவற்றிற்காக வரையறுக்கப்பட்ட (தனியார்) (ஸ்ரீலங்கா) விமானநிலையம் மற்றும் விமானசேவைகள் ஆகியவற்றின் தலைவரினால் விலைமனுக்கள் அழைக்கப்படுகின்றன.

விலைமனுதாரரினால் வழங்கப்பட்ட உத்தியோகபூர்வமான கோரிக்கைக் கடிதத்துடன் மீளளிக்கப்படாத **விலைமனுக்கோரல் ஆவண கட்டணமாக பதினெட்டாயிரம் ரூபாவை (18,000 ரூபா) ரொக்கப் பணத்தில் செலுத்திய பின்னர்** கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையம், வரையறுக்கப்பட்ட (தனியார்)(லங்கா) விமானநிலையம் மற்றும் விமான சேவைகளின் வழங்கல் சங்கிலி முகாமைத்துவ பிரிவிலிருந்து பெற்றுக் கொண்ட ஆவணங்களிலேயே விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

**2023.12.04 ஆம் திகதியிலிருந்து 2024.01.02 ஆம் திகதி வரையும் எந்தவொரு வேலை நாளிலும் மு.ப. 9 மணிக்கும் பி.ப. 3 மணிக்குமிடையில்** கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையம், வரையறுக்கப்பட்ட (தனியார்)(லங்கா) விமானநிலையம் மற்றும் விமான சேவைகளின் வழங்கல் சங்கிலி முகாமைத்துவ அலுவலகத்திலிருந்து விலைமனுக்கோரல் ஆவணங்கள் கொள்வனவு செய்யப்படலாம். மேலேயுள்ள முகவரியில் விலைமனுக்கோரல் ஆவணங்கள் இலவசமாக பரீட்சிப்பதற்கு வைக்கப்பட்டுள்ளன.

கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையம், வரையறுக்கப்பட்ட (தனியார்) (லங்கா) விமானநிலையம் மற்றும் விமான சேவகளின் வழங்கல் சங்கிலி முகாமைத்துவ பிரிவில் வைக்கப்பட்டுள்ள பெட்டியில் விலைமனுக்கள் சேர்க்கப்படல் வேண்டும். விலைமனுதாரர்கள் அதிகமாக விரும்பின், மேலேயுள்ள முகவரியில் நேரடியாகவே முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை ஒப்படைக்கலாம்.

விலைமனுக்கள் **2024.01.03 ஆம் திகதி புதன்கிழமையன்று பி.ப. 2 மணிக்கு** மூடப்பட்டு அதன்பின்னர் உடனடியாகவே கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையம், வரையறுக்கப்பட்ட (தனியார்)(லங்கா) விமானநிலையம் மற்றும் விமான சேவகளின் வழங்கல் சங்கிலி முகாமைத்துவ பிரிவில் திறக்கப்படும். விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் உரிய முறையில் சட்டபூர்வமாக அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிகள் விலைமனுக்களை திறக்கும் வேளையில் சமுகமளிக்கலாம்.

வரையறுக்கப்பட்ட (தனியார்)(ஸ்ரீலங்கா) விமானநிலையம் மற்றும் விமான சேவைகளின் தலைவரின் பெயரில் வழங்கப்பட்டதும் இலங்கையில் செயற்படும் வங்கியொன்றினால் வழங்கப்பட்டதும் மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்டதும் கோரும்போது பெறக்கூடிய வங்கி உத்தரவாதமொன்றின் பாங்கில் **பன்னிரண்டு இலட்சம் ரூபாவிற்கு (1,2000,000 இ. ரூபா)** நிகரான விலைமனுப்பிணையொன்று விலைமனுவுடன் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையம், வரையறுக்கப்பட்ட (தனியார்)(லங்கா) விமானநிலையம் மற்றும் விமான சேவகளின் 4 ஆம் மாடியின் புதிய நிருவாக கட்டிடத்தின் மாநாட்டு அறையில் **2023 டிசம்பர் 15 ஆம் திகதி** வெள்ளிக்கிழமையன்று விலைமனு முன்னோடிக் கூட்டமொன்று நடைபெறும்.

எந்தவொரு மேலதிக தகவலையும் கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையம், வரையறுக்கப்பட்ட (தனியார்)(லங்கா) விமானநிலைய சேவைகளின் வழங்கல் சங்கிலி முகாமைத்துவ பிரிவிலிருந்து 011-2264103/011-2264106 ஆகிய தொலைபேசி இலக்கங்களினூடாகவும் head.scm@airport.lk என்ற மின்னஞ்சலூடாகவும் அல்லது www.airport.lk என்ற எமது இணையதளத்தை பார்வையிடுவதன் மூலமாகவும் பெற்றுக் கொள்ளலாம்.

**தலைவர்,**
**வரையறுக்கப்பட்ட (தனியார்)(லங்கா) விமானநிலையம் மற்றும் விமான சேவைகள்**
**பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையம், கட்டுநாயக்க.**

# இலங்கை துறைமுக அதிகாரசபை

## பதவி வெற்றிடங்கள்

இலங்கை துறைமுக அதிகாரசபையில் கீழ்க் குறிப்பிடப்படும் பதவிகளுக்கு வேண்டப்படும் தகைமைகளையுடைய அபேட்சகர்களிடமிருந்து ஒப்பந்த அடிப்படையின் மீது ஆட்சேர்ப்பதற்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**01. பதவி : கட்டிடக் கலை வடிவமைப்பாளர் (POST OF ARCHITECT)**

(மத்திய முகாமைத்துவ முதலாம் மட்டம்) – ஒப்பந்த அடிப்படை

**(அ) தகுதித்திறன்**

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட கட்டிடக் கலை வடிவமைப்பு தொடர்பான பட்டம் பெற்றிருத்தல்.

மற்றும்

இலங்கை கட்டிடக் கலை வடிவமைப்பு நிறுவனத்தில் சார்ந்ததான அங்கத்துவம் (AIA(SL))

அத்துடன்

பட்டத்தினை பெற்றுக் கொண்டதன் பின்னர் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றிலிருந்து பெற்றுக் கொண்ட வணிக கட்டிடங்களில் கட்டிடக் கலை திட்டமிடுதல் தொடர்பாக ஆகக் குறைந்தது ஒரு(01) வருட அனுபவம்.

**(ஆ) சம்பளம் :**

மாத மொத்தச் சம்பளம் ரூ.180,000 /= (கலந்துரையாடலாம்)

**குறிப்பு:** விண்ணப்பதாரிகளினால் கட்டிடக் கலை வடிவமைப்பாளர்களை பதிவு செய்யும் சபையில் பதிவு பெற்றிருத்தல் வேண்டும். விண்ணப்பங்கள் பொறுப்பேற்கப்படும் இறுதித் தினத்தன்று அது புதுப்பிக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

**02. பதவி: கட்டிட உள்ளக வடிவமைப்பாளர் (POST OF INTERIOR DESIGNER)**

மத்திய முகாமைத்துவ முதலாம் மட்டம்) – ஒப்பந்த அடிப்படை

**(அ) தகுதித்திறன்**

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட கட்டிட உள்ளக திட்டமிடல் வடிவமைப்பு தொடர்பான பட்டம் பெற்றிருத்தல் அல்லது அத்துடன் அதற்குச் சமனான விடய துறைக்குரிய பட்டம் பெற்றிருத்தல்.

அத்துடன்

பட்டத்தினை பெற்றுக் கொண்டதன் பின்னர் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றிலிருந்து பெற்றுக் கொண்ட கட்டிட உள்ளக திட்டமிடல் வடிவமைப்பு தொடர்பாக ஆகக் குறைந்தது இரண்டு (02) வருட அனுபவம்.

**(ஆ) சம்பளம் :**

மாத மொத்தச் சம்பளம் ரூ.180,000 /= (கலந்துரையாடலாம்)

**வயதெல்லை**

45 வயதை விடக் குறைந்தவராக இருத்தல் வேண்டும். (இவ்வயதெல்லை அரச சேவை அல்லது நியதிச்சபை கூட்டுத்தாபனங்களின் சேவையிலுள்ள விண்ணப்பதாரிகளுக்கு ஏற்புடையதல்ல)

விண்ணப்பங்கள் வயது, கல்வி, தொழில் தகைமைகள், அனுபவம் ஆகியவற்றின் சான்றிதழ்களின் பிரதிகளுடன் பிரதான மனிதவள முகாமையாளர், மனிதவளப் பகுதி, இலங்கை துறைமுக அதிகாரசபை, கொச்சிக்கடை, கொழும்பு -13 என்ற முகவரிக்கு கிடைக்கக் கூடியதாக 2023.12.19ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் பதிவுத் தபாலில் அனுப்பப்படுதல் வேண்டும். விண்ணப்பங்கள் அனுப்பப்படும் உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கப்படும் பதவி தெளிவாக குறிப்பிடப்படுதல் வேண்டும்.

**சம்பந்தப்பட்ட சான்றிதழ்களின் பிரதிகள் இணைக்கப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.**

அரசஅல்லதுஅரச கூட்டுத்தாபனங்களில் சேவையிலுள்ளஊழியர்களின் விண்ணப்பங்கள் அவர்களது திணைக்களம் / கூட்டுத்தாபனதலைவர்கள் ஊடாகசமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். மேலே பதவிகளுக்குவிண்ணப்பதாரிதெரிவுசெய்யப்படின் குறித்ததிணைக்கள / கூட்டுத்தாபனத்தின் சேவையிலிருந்துவிடுவிக்க இணங்கும் குறிப்பொன்றும் அதில் இடப்பட்டிருத்தல் வேண்டும்.

**தலைவர்**

## 2024/2025ஆம் வருடங்களுக்காக காணி பொதுச் செயலாளர் அலுவலகம் மற்றும் காணி ஆணையாளர் நாயகம் திணைக்களத்திற்குரித்தான அலுவலகங்களுக்கு சுத்திகரிப்புச் சேவைகளை வழங்குவதற்காக விலைமனுக்கள் கோரல்

பத்தரமுல்ல, ரஜமல்வத்த வீதி, இல. 1200/6, 'மிஹிகத மெதுர', காணி பொதுச் செயலாளர் அலுவலகத்தின் பின்வரும் அலுவலகங்களுக்கு 2024/2025ஆம் வருடங்களில் சுத்திகரிப்புச் சேவையை வழங்குவதற்காக தகுதி வாய்ந்த சுத்திகரிப்புச் சேவை நிறுவனங்களிடமிருந்து விலைமனுக்கள் கோரப்படுகின்றன. இந்த அனைத்து அலுவலகங்களுக்காகவும் விலைமனுக்களைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

(அ) காணி பொதுச் செயலாளர் அலுவலகம், 'மிஹிகத மெதுர', இல. 1200/6, ரஜமல்வத்த வீதி, பத்தரமுல்ல
(ஆ) அரச காணி தகவல் மற்றும் முகாமைத்துவ நிலையம் மற்றும் உலக உணவு களஞ்சியசாலை மற்றும் அலுவலகம், பொப்ருபன வீதி, இரத்மலானை.
(இ) காணி ஆணையாளர் அலுவலகம், தெபரவெவ, திஸ்ஸமஹாராம
(ஈ) காணி ஆணையாளர் அலுவலகம், வாடிவீடு வீதி, மஹியங்கனை.
உ) உதவி காணி ஆணையாளர் அலுவலகம், கந்தளாய்

02. இதில் ஆர்வம் காட்டும் தகுதிவாய்ந்த விலைமனுதாரர்கள் 2023 டிசம்பர் 01ஆம் திகதி முதல் 2023 டிசம்பர் 20ஆம் திகதி வரையான அலுவலக நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரை ஒரு பெறுகை ஆவணத் தொகுதிக்கு 3,500.00 ரூபா மீளளிக்கப்படாத கட்டணத்தை காணி ஆணையாளர் நாயகம் திணைக்களத்தின் சிறாப்பருக்கு செலுத்தி விலைமனு ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளலாம். இந்தக் கொடுப்பனவுகளை ரொக்கப் பணத்தில் மாத்திரம் மேற்கொள்ளல் வேண்டும். விலைமனு ஆவணங்களை பின்வரும் முகவரியில் இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம்.

03. விலைமனுக்களைச் சமர்ப்பிக்கும்போது 112,300.00 ரூபாவுக்கான விலைமனுப் பிணை முறியொன்றை சகல விலைமனுக்களுடன் சமர்ப்பித்தல் வேண்டும். (இதை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக வங்கியில் பெற்றுக்கொண்ட முறியொன்றாகச் சமர்ப்பிக்கலாம்) 2023-12-21ஆம் திகதி முதல் முன்வரும் 60 நாட்களுக்குச் செல்லுபடியாகும் வகையில் சமர்ப்பித்தல் வேண்டும்.

04. முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை பதிவுத் தபாலில் "தலைவர், பெறுகைக் குழு, காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம், காணி பொதுச் செயலகம், "மிஹிகத மெதுர", இல. 1200/6, ரஜமல்வத்த வீதி, பத்தரமுல்ல" என்ற முகவரிக்கு அனுப்பலாம் அல்லது திணைக்களத்தின் நிர்வாகப் பிரிவில் வைக்கப்பட்டுள்ள விலைமனுப் பெட்டியில் உள்ளிடலாம். விலைமனுக்களைத் தாங்கி வரும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "சுத்திகரிப்புச் சேவைகளை வழங்குவதற்கான விலைமனு 2024/2025" என்று குறிப்பிடுதல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கப்பெறும் விலைமனு ஆவணங்கள் நிராகரிக்கப்படும்.

05. விலைமனுக்களை ஏற்றுக்கொள்ளல் 2023-12-21ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு நிறைவுறும் என்பதுடன் அந்நேரத்தின் பின் உடனடியாக விலைமனுக்கள் திறக்கப்படும். விலைமனுதாரர் அல்லது அவரது அதிகாரபூர்வ பிரதிநிதியொருவர் இந்நிகழ்வில் கலந்துகொள்ளலாம்.

06. மேலதிக விபரங்கள் தேவையானால் காணி ஆணையாளர் நாயகம் திணைக்களத்தின் பின்வரும் தொலைபேசி இலக்கங்கள் ஊடாக பெற்றுக்கொள்ளலாம்.

| | | |
|---|---|---|
| பிரதான கணக்காளர் | - | தொலைபேசி இலக்கம்: 011-2875833 |
| கணக்காளர் (வழங்கல்) | - | தொலைபேசி இலக்கம்: 011-2797434 |

**காணி ஆணையாளர் நாயகம்,**
**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்,**
**"மிஹிகத மெதுர", இல. 1200/6, ரஜமல்வத்த வீதி,**
**பத்தரமுல்ல.**
**2023-12-01.**

SUNDAY OBSERVER adz it's what you want | Silumina Vaasi | தினகரன் வாரமஞ்சரி

Promotional Rates for Classified Advertisements
(Only 15 Words)

| Any Single Newspaper | Two Newspapers | Three Newspapers |
|---|---|---|
| Rs. 800/- (Expect Thinakaran Vaaramanjari) | Rs. 1,000/- (Expect Thinakaran Vaaramanjari) | Rs. 1,300/- |

Gampaha District

Mahara - 011 2 925 168
1474 - H. M. Induka Herath - Adz soon Advertising, 57/D, Kandy Road, Mahara.

Mirigama - 033 22 740 19
1964 - M. D. Mohan Jayalal - No. 219, Pasyala Road, Mirigama.

Veyangoda - 033 22 903 86
1984 - H. M. De Seram - No. 37, Main Street, Veyangoda.

Weliweriya - 077 4 965 266
1986 - K. L. P. Perera - Nilanka Stores, No. 4, New Kandy Road, Weliweriya.

Kaluthara District

Panadura - 072 6 267 432
1730 - B. D. P. Perera - Sausiri Adds, No. 121, Horana Road, Mahawila, Panadura.

Panadura - 038 22 324 80
1776 - Mahen Silva - Suwena News and Adds, 28/A, Weeraman Road, Panadura.

Panadura - 038 22 400 60
1819 - G. R. Gunasingha - 467, Media Lick, Main Street, Panadura.

Mathugama - 076 6 589 582
1737 - D. C. S. Lakmal - Janahitha Newspaper Agency - Mathugama.

Ingiriya - 077 9 806 680
1757 - A. D. Nimal Chandra - Chandra Stores, No. 03, Main Street, Ingiriya.

Beruwala - 034 22 775 84
1784 - Upali Weerasingha - Kanthi Book Shop, No. 10, Market Road, Beruwala.

Bandaragama - 071 4 475 504
1785 - Sumith Kumara - Dawasa Book Shop, No. 17, Panadura Road, Bandaragama.

Wadduwa - 077 2 671 013
1850 - Chinthaka Cooray - No. 509, Galle Road, Wadduwa.

Horana - 071 8 863 522
1852 - D. Nandawathi - Add House, No. 262A, Rathnapura Road, Horana.

Bandaragama - 070 2 424 240
1860 - W. A. V. Perera - Nearest Gelanigama Highway Entrance, Kothalawala, Bandaragama.

Kegalle District

Mawanella - 071 6 946 452
9113 - D. K. R. Ranasingha - No.132, Main Street, Mawanella.

Kegalle - 077 6 778 481
9119 - M. M. Salgado & Sons - No. 88, Kandy Road, Kegalle.

Mawanella - 077 0 217 854
9131 - P. M. A. Indunil Bandara - Nimalasiri Book Shop, No. 14, Main Street Mawanella.

Kegalle - 0702651515
9145 - J. T. F. Corera - Kandy Road, Kegalle.

Warakapola - 071 7 112 567
9158 - A. A. Ariyawathi - Piumi Book Shop, Bus Satnd, Warakapola.

Ruwanwella - 071 3 117 535
9192 - U. K. D. Ariyawansa - No. 44, Kalyani Book Shop, Main Street, Ruwanwella.

Rathnapura District

Sooriyawewa - 076 6 032 171
9345 - M. A. Chaminda Kumara - Chathumi Agencies, Sooriyawewa.

Kuruvita - 077 7 123 149
9371 - Y. M. Roshan Bandara - Yapa Agencies, Kuruvita.

Rathnapura - 071 2 900 035
9377 - G. G. Karunarathne - Karunarathna Brothers, Rathnapura.

Rathnapura - 077 7 221 939
9378 - D. Liyanarachchi - Lake House Media Center, Rathnapura.

Balangoda - 045 22 862 84
9402 - B. K. D. Padmasiri Jinadasa - Jinadasa Trade Center, Balangoda.

Eheliyagoda - 0712362035
9404 - K. A. Premasinghe Kuruppu - Famous Cafe, Eheliyagoda.

Embilipitiya - 0714784294
9449 - K. V. D. Teja Karavita - Queens Agencies, Pallegama, Embilipitiya.

ADZ HOTLINE - 011 2 429 369
CALL - 011 2 429 342/ 343

Daily News Classifieds, the Housewives' companion

SUNDAY OBSERVER adz it's what you want | Thinakaran Vaaramanjari

Promotional Rates for Classified Advertisements (Only 15 Words)

| Any Single Newspaper | Two Newspapers | Three Newspapers |
|---|---|---|
| Rs. 800/- (Expect Thinakaran Vaaramanjari) | Rs. 1,000/- (Expect Thinakaran Vaaramanjari) | Rs. 1,300/- |

Badulla & Nuwaraeliya District

Hatton - 051 22 225 63
2145 - T. P. C. Chinthaka Nanayakkara - Hatton Stores, No. 3, Main Street, Hatton.

Hatton - 052 22 773 47
2506 - C. T. Perumal - Hatton Stores, No. 3, Main Street, Hatton.

Nuwaraeliya - 052 22 341 34
2507 - A. Rajalingam - No. 6, New Market Building, Nuwaraeliya.

Thalawakele - 071 7 236 799
2517 - G. G. L. Ravindra Kumara - No. 119, 121, Nuwaraeliya Road, Thalawakele.

Kotagala - 051 4 924 447
2555 - D. Deonis Kodikara & Sons - Rosita Bazaar, Kotagala.

Haputale - 077 7 278 899
8117 - R. M. K. Fizar Khan - Multi Centre, No. 2, Main Street, Haputale.

Bandarawela - 071 0 796 060
8126 - L. Eubert Silva - Nayana Book Shop, No. 343, Main Street, Bandarawela.

Kandy - 055 22 571 30
8131 - Nimal Attanayake - Per Siripura Contractor, Ex-Kandy, Kandy.

Haputale - 057 22 443 92
8139 - A. K. P. Hemawathi - Multi Centre, No. 2, Main Street, Haputale.

Lunugala - 055 22 639 84
8140 - E. M. Lal - Maduka Gold House, No. 111, Main Street, Lunugala.

Bandarawela - 057 22 301 60
8172 - K. P. Kodagoda - 'Sri Subasetha', 2nd Floor, Sinhagiri Building, Bandarawela.

Badulla - 055 22 256 16
8196 - Advertising Office (Lake House), No. 14, Opposite Muthiyangana Clock Tower, Badulla.

Passara - 055 22 888 89
8202 - M. K. M. Ismath - Rishana Book Shop, No. 354, Main Street, Passara.

Badulla - 072 7 998 533
8207 - K. G. Prasanna Kumara - No. 9, Nadukara Kanda Road, Badulla.

Diyatalawa - 057 22 290 24
8228 - A. S. De Alwis - Alwis Book Shop, No. 16, Main Street, Diyatalawa.

Colombo City Area

Borella - 0112268251
1040 - Gunasiri Book Shop - No. 685, Maradana Road, Punchi Borella.

Dematagoda - 075 7 222 878
1044 - No. 166/17, Kolonnawa Road, Dematagoda.

Colombo 02 - 078 5 200 648
1046 - R. P. C. Jayawardana - Chiththampalam A Gardiner Mawatha, Colombo 02.

Kirulapane - 071 5 439 396
1051 - Ramani Book Shop - 27/A, High Level Road, Kirulapane.

Mattakuliya - 011 2 521 160
1060 - M. N. E. Ratnayake - No. 89, Church Road, Mattakuliya.

Colombo 14 - 011 2 434 711
1071 - A. L. F. D. Managama - No. 331, Leyards Broadway, Colombo 14.

Wellawatta - 071 7 182 900
1107 - No. 288, Vijaya Enterprise, Wellawatta.

Colombo 15 - 077 7 510 139
1226 - No. 45, Eli House Road, Colombo 15.

Borella - 077 7 649 801
1292 - No. 151/22, Cotta Road, Borella.

Thimbirigasyaya - 0714414285
2818 - Jayasinghe - No. P-06, Thimbirigasyaya Market, Thimbirigasyaya.

Colombo 8 - 071 2 005 787
2822 - Punchi Borella, Colombo 8.

Delkanda - 070 777 99 99
2622 - No. 4, High Level Plaza, Delkanda, Nugegoda.

Galle District

Galle - 075 9 699 402
3222 - J. A. S. Jayakodi - 28, P&J City, Gamini Mawatha.

Ambalangoda - 091 22 557 44
3132 - H. D. Mendis - 264, Cooperative Building, Main Street, Ambalangoda.

ADZ HOTLINE - 011 2 429 369
CALL - 011 2 429 342/ 343

# பொது அறிவித்தல்

## விதுல்லங்கா பீஎல்சி (Reg. No. PQ 83)

கூறப்பட்ட கம்பனிகள் சட்டத்தின் 242 (1) ஆம் பிரிவு அடிப்படையில், லோவர் கொத்மலே ஓயா ஹைட்ரோ பவர் (Pvt) லிமிடெட் (LKOHL) (Reg. No. PV 71859), உடவல ஹைட்ரோ (Pvt) லிமிடெட் (UHL) (Reg. No. PV 70106) மற்றும் கட்டம் 4, Access No. 278, யூனியன் பிளேஸ், கொழும்பு 02 இன் ரிதீபனா ஹைட்ரோ (Pvt) லிமிடெட் (RHL) (Reg. NoPV 71591) உடன் விதுல்லங்கா பீஎல்சி (Reg. No PQ 83) இன் முன்மொழியப்பட்ட கூட்டிணைவு தொடர்பில், திருத்தப்பட்டவாறு 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 242(3)(b) ஆம் பிரிவின் கீழ் (கம்பனிகள் சட்டம்) இத்தால் அறிவிக்கப்படுகிறது.

சபையின் தீர்மானங்களின்படி VLL இன் பணிப்பாளர்கள் மூலம் 2023 ஒக்டோபர் 25 ஆம் திகதி கையெழுத்திடப்பட்டதும் அங்கீகரிக்கப்பட்டதும் (VLL இன் முழு சொந்தமான துணை நிறுவனமாக இருத்தல்), (அதன் விளைவாக கூட்டிணைக்கப்பட்ட நிறுவனமான) LKOHL, UHL மற்றும் RHL இன் இருப்பு நிறுத்தப்பட்டு VLL வின் இருப்பு தொடரப்படும், கம்பனி சட்டத்தின் 242(1) பிரிவின் கீழ் லோவர் கொத்மலே ஓயா ஹைட்ரோ பவர் (Pvt) லிமிடெட் (LKOHL), உடவல ஹைட்ரோ (Pvt) லிமிடெட் (UHL) மற்றும் ரிதீபனா ஹைட்ரோ (Pvt) லிமிடெட் (RHL) உடன் விதுல்லங்கா பீஎல்சி (VLL) இன் கூட்டிணைவுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டது. கூட்டிணைவு செயற்படுத்தப்படும்போது LKOHL, UHL மற்றும் RHL வின் வழங்கப்பட்ட ஒட்டுமொத்த பங்குகள், கொடுப்பனவு அல்லது கருத்தில் கொள்ளப்படாது இரத்துச் செய்யப்படும்.

இந்த அறிவித்தல் திகதியில் இருந்து 20 வேலை நாட்களின் பின் பதிவுக்காக கம்பனிகள் பதிவாளருக்கு கம்பனிகள் சட்டத்தின் 243 ஆவது பிரிவில் கூறப்பட்ட ஆவணங்களை சமர்ப்பிப்பதற்கு VLL, LKOHL, UHL மற்றும் RHL கோரப்படுவதோடு சட்டத்தின் 244(1) ஆம் பிரிவின் விதிகளில் கம்பனிகள் பதிவாளர் மூலம் கையொப்பமிடப்பட்ட கூட்டிணைவு சான்றிதழ் வழங்கப்பட்ட பின் இந்த கூட்டிணைவு உடன் அமுலுக்கு வரும்.

கம்பனிகள் சட்டத்தின் 241(4) ஆம் பிரிவின் விதிகளில், VLL, LKOHL, UHL மற்றும் RHL இன் பணிப்பாளர் சபை மூலம் பணிப்பாளர் சபையின் கூட்டிணைவை அங்கீகரிக்கும் சபையின் தீர்மானங்களின் பிரதிகளை கூட்டிணைக்கப்பட்ட நிறுவனங்களின் பங்குதாரர்கள் அல்லது கடனாளிகள் அல்லது கூட்டிணைக்கப்பட்ட நிறுவனங்களில் ஏதேனும் கடமையின் கீழ் இருக்கும் எந்த ஒரு தனிநபர்கள் மூலம் சாதாரண அலுவலக நேரங்களில் பரீட்சிப்பதற்காக இல. 08, டிக்கேல் வீதி, கொழும்பு 08 என்ற முகவரியில் மனேஜர்ஸ் அண்ட் செக்ரடரிஸ் (பிறைவெட்) லிமிடெட், செயலாளர்களின் பதிவு செய்யப்பட்ட அலுவலகத்தில் வைக்கப்பட்டிருத்தல் வேண்டும்; அல்லது கூட்டிணைக்கப்பட்ட நிறுவனங்களின் எந்த ஒரு மேற்கூறிய நபர்கள் மூலமும் மேற்கொள்ளப்படும் கோரிக்கைக்கு அமைய பிரதிகள் கட்டணம் இன்றி வழங்கப்படுதல் வேண்டும்.

**சபை பணிப்பாளர்கள் ஆணைப்படி**
**விதுல்லங்கா பீஎல்சி**
**மனேஜர்ஸ் அண்ட் செக்ரடரிஸ் (பிறைவெட்) லிமிடெட்,**
**நிறுவன செயலாளர்கள்.**
**இல 08 டிக்கேல் வீதி**
**கொழும்பு 08**
**2023 ஒக்டோபர் 26**

## வலயக் கல்வி அலுவலகம் - பிலியந்தலை

# வழங்குநர்களைப் பதிவு செய்தல் – 2024

2024ஆம் வருடத்தில் பின்வரும் பொருட்கள் மற்றும் சேவைகளை பிலியந்தலை கல்வி வலயம் மற்றும் அதற்குரித்தான பாடசாலைகளுக்கு வழங்குவதற்காக வழங்குநர்கள் மற்றும் நபர்களை இந்த நிறுவனத்தின் வழங்குநர்களாகப் பதிவு செய்துகொள்வதற்காக பின்வரும் நிபந்தனைகளின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப் படிவங்கள் 2023-12-15ஆம் திகதி பி.ப. 2.00 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

**01 வழங்கல்**

1) காகிதாதிகள் மற்றும் உபகரணங்கள்
2) நூலகப் புத்தகங்கள்
3) பாடசாலை உபகரணங்கள்
   - i. கணித உபகரணங்கள்
   - ii. விவசாயப் பொருட்கள் மற்றும் உபகரணங்கள்
   - iii. விளையாட்டுப் பொருட்கள் மற்றும் உபகரணங்கள்
   - iv. சங்கீதம், நடனம், சித்திர உபகரணங்கள்
   - v. கட்புல செவிப்புல மற்றும் இலத்திரனியல் உபகரணங்கள்
   - vi. விசேடக் கல்விக்குத் தேவையான சகல உபகரணங்கள்
   - vii. விஞ்ஞான ஆய்வுகூடப் பொருட்கள் மற்றும் உபகரணங்கள்
4) அலுவலக உபகரணங்கள் (கணனி, கணனி அச்சுப்பொறிகள், ஸ்கேன் உபகரணங்கள் ஏனைய கணனி துணைப்பாகங்கள், புகைப்படப் பிரதி இயந்திரங்கள், டுப்ளோ இயந்திரங்கள், ஏனைய அதுசார்ந்த உபகரணங்கள் மற்றும் உதிரிப்பாகங்கள்
5) புகைப்படப் பிரதி இயந்திரங்கள் / அச்சுப் பொறிகளுக்கான டோனர், கார்ட்ரிச், ரிபன் (போலி அற்றது)
6) வளிச்சீராக்கி இயந்திரங்கள்
7) கமெரா முறைமை, பாதுகாப்பு கமெரா முறைமை
8) அலுவலக உபகரணங்கள் (உருக்கு மற்றும் மரம்), பாடசாலை மேசை, கதிரை, பிளாஸ்டிக் கதிரை
9) துப்புரவேற்பாட்டுப் பொருட்கள் (சவர்க்காரம், கழுவும் திரவங்கள், கிருமி நாசினிப் பொருட்கள்)
10) மோட்டார் வாகன உதிரிப்பாகங்கள் / டயர், டியூப், பெட்டறி போன்றன வழங்குதல்

**02. சேவை வழங்கல்**

1) அச்சிடல் சேவைகள்
2) அலுவலக இயந்திரங்களின் சிறிய திருத்தவேலைகள் மற்றும் சேர்விஸ் செய்தல் (கணனி, அச்சுப்பொறி, புகைப்படப் பிரதி இயந்திரம், டுப்ளோ இயந்திரம்)
3) மென்பொருள் மற்றும் கனணி முறைமை வலையமைப்பு
4) கட்டிட திருத்தவேலைகள், மின்னியல் வேலைகள்
5) வளிச்சீராக்கி இயந்திரங்களின் திருத்தவேலைகள்
6) வாகன தவணை சேர்விஸ்கள்
7) மோட்டார் வாகன திருத்தவேலைகள் / டீசல் - (பொறிமுறை திருத்தவேலைகள்)
8) உற்சவங்கள் மற்றும் ஏனைய விசேட வேளைகளுக்கான உணவு பானங்கள் வழங்குதல்

**நிபந்தனைகள்:**

1. ஒவ்வொரு வழங்கல் மற்றும் சேவைகளுக்காக மேற்கூறப்பட்ட மாதிரிப் படிவத்தின் பிரகாரம் வெவ்வேறாக A4 தாளில் தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்களைச் சமர்ப்பித்தல் வேண்டும்.
2. மீளளிக்கப்படாத பதிவுக் கட்டணமாக ஒவ்வொரு விடயத்திற்கும் 1000.00 ரூபா செலுத்துதல் வேண்டும். இந்தத் தொகையை 2023-12-14ஆம் திகதி வரையான வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 10.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரை அலுவலகத்தின் சிறாப்பருக்கு பணம் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை விண்ணப்பத்துடன் இணைத்தல் வேண்டும்.
3. விண்ணப்பங்களைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''2024ஆம் வருடத்திற்கான வழங்குநர்களைப் பதிவு செய்தல்'' எனக் குறிப்பிட்டு 2023-12-15ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு முன் கிடைக்கும் வகையில் வலயக் கல்விப் பணிப்பாளர், வலயக் கல்வி அலுவலகம், பிலியந்தலை எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும் அல்லது இந்த அலுவலகத்தின் நிர்வாகப் பிரிவில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும்.
4. வழங்கல் மற்றும் சேவைகளுக்காக பதிவு செய்துகொண்டுள்ள வழங்குநர்களின் பட்டியலிலிருந்தே விலைகளைக் கோருவதற்கு முன்னுரிமை வழங்கப்படும் என்பதுடன் பதிவு செய்யப்படாத ஏனைய அங்கீகரிக்கப்பட்ட வழங்குநர்களிடமிருந்து விலைகளைக் கோரும் உரிமையை பிலியந்தலை வலயக் கல்விப் பணிப்பாளர் தன்னகத்தே கொண்டுள்ளார்.

மேலதிக விபரங்களை 0112614200 (பொதுநிர்வாகப் பிரிவு) எனும் தொலைபேசி இலக்கத்தினூடாகப் பெற்றுக்கொள்ளலாம்.

**வலயக் கல்விப் பணிப்பாளர்,**
**பிலியந்தலை.**
**2023-12-01.**

**வலயக் கல்வி அலுவலகம் - பிலியந்தலை**
**2024ஆம் வருடத்திற்கான வழங்குநராக பதிவு செய்வதற்கான விண்ணப்பப்படிவம்**

1. வியாபாரத்தின் / வழங்குநரின் பெயர்:
2. நிரந்தர முகவரி:
3. வியாபாரத்தின் பதிவிலக்கம் மற்றும் திகதி:
   (சான்றுபடுத்திய பிரதியொன்றை இணைத்தல் வேண்டும்)
4. வியாபார நிறுவனத்தின்
   தொலைபேசி இல:................................. தொலைநகல்:................................. மின்னஞ்சல்:
5. வெட் பதிவுசெய்திருந்தால் இலக்கம்:
   (சான்றுபடுத்திய பிரதியொன்றை இணைத்தல் வேண்டும்)
6. பதிவு செய்வதற்கு உத்தேசிக்கும் வழங்கல் / சேவை:
7. அதன் இலக்கம்: வழங்கல்:.................................... சேவை:....................................................
8. கொள்வனவு செய்யப்படும் பொருட்களை இலவசமாக போக்குவரத்து செய்யமுடியுமா என்பது பற்றி:
9. வழங்கப்படும் பொருட்களுக்காக தரப்படும் கடன் கால எல்லை:

**விண்ணப்பதாரரின் கையொப்பம்**

**பெயர்:**
**உத்தியோகபூர்வ முத்திரை:**
**முகவரி:**
**திகதி:**

## கமத்தொழில் மற்றும் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு

# தேயிலை சிறு பற்றுநிலங்கள் அபிவிருத்தி அதிகார சபை

## பதவி வெற்றிடங்கள்

தேயிலை சிறு பற்றுநிலங்கள் அபிவிருத்தி அதிகார சபையில் நிலவும் பின்வரும் வெற்றிடங்களுக்காக தகைமை வாய்ந்த இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**முகாமையாளர் (மனித வளங்கள் / நிர்வாகம்) - 01 பதவி**

1. சேவை வகுதி : முகாமைத்துவ சேவை வகுதி
2. தரம் : **(MM 1-1)** - தரம் II
3. தகைமைகள் : (அ) வெளிவாரி விண்ணப்பதாரிகள்
   பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட மனிதவள முகாமைத்துவம் / அரச முகாமைத்துவம் / வியாபார நிர்வாகம் அல்லது முகாமைத்துவம் தொடர்பான பட்டத்தைப் பெற்றிருத்தல் மற்றும்
   பட்டத்தைப் பெற்றுக்கொண்டதன் பின் அரச, அரச கூட்டுத்தாபனம், நியாயாதிக்கச் சபை நிறுவனமொன்றில் அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார் நிறுவனமொன்றில் நிர்வாகம் / மனித வள முகாமைத்துவத் துறை பதவியொன்றில் ஆகக்குறைந்தது ஐந்து (05) வருட அனுபவத்தைப் பெற்றிருத்தல்
   (ஆ) உள்வாரி விண்ணப்பதாரிகள்
   மேற்படி வெளிவாரி விண்ணப்பதாரிகளுக்குரித்தான தகைமைகள்
   அல்லது
   தேயிலை சிறு பற்றுநிலங்கள் அபிவிருத்தி அதிகார சபையில் MM 1-1 IIஆந் தரத்தில் நிர்வாகம் மற்றும் மனித வள முகாமைத்துவத் துறைக்கு இயைபான பதவியொன்றில் ஐந்து (05) வருட உயிர்ப்புடைய சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல்
4. சம்பள அளவு : இப்பதவிக்கு முகாமைத்துவச் சேவை 02/2016ஆம் இலக்க சுற்றுநிருபத்தின் பிரகாரம் ரூபா 53,175 – 10x1375 – 15x1910 – 95,575.00 (மாதாந்தம்) சம்பளம் உரித்தாகும். இதற்கு மேலதிகமாக அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட கொடுப்பனவுகள் வழங்கப்படும்.
5. ஆட்சேர்க்கும் முறை : கட்டமைக்கப்பட்ட நேர்முகத் தேர்வின் மூலம் தெரிவுகள் மேற்கொள்ளப்படும் என்பதுடன் புள்ளிகள் பின்வரும் வகையில் வழங்கப்படும்.

| | |
|---|---|
| இயைபுடைய அனுபவம் | - 30 புள்ளிகள் |
| இயைபுடைய மேலதிகக் கல்வித் தகைமை | - 30 புள்ளிகள் |
| ஏனைய செயற்றிறன் மற்றும் திறமைகள் | - 15 புள்ளிகள் |
| நேர்முகத் தேர்வின்போதான செயற்றிறன் | - 25 புள்ளிகள் |
| மொத்தப் புள்ளிகள் | - 100 புள்ளிகள் |

நேர்முகத் தேர்வின்போது அதிகூடிய புள்ளிகளைப் பெற்றவர்களுக்கிடையில் திறமை வரிசைக்கிரம புள்ளிகளின் அடிப்படையில் தேர்வுகள் இடம்பெறும்.

**02. நிர்வாக அதிகாரி - 03 பதவிகள்**

1. சேவை வகுதி : கனிஷ்ட முகாமையாளர்
2. தரம் : **(JM 1-1 - II)**
3. தகைமைகள் : வெளிவாரி விண்ணப்பதாரிகளை ஆட்சேர்த்தல்
   தகைமைகள்:
   பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட மனிதவள முகாமைத்துவம் / அரச முகாமைத்துவம் / வியாபார நிர்வாகம் அல்லது முகாமைத்துவம் தொடர்பான பட்டத்தைப் பெற்றிருத்தல்
   உள்வாரி விண்ணப்பதாரிகளை ஆட்சேர்த்தல்
   மேற்படி வெளிவாரி விண்ணப்பதாரிகளுக்குரித்தான தகைமைகள்
   அல்லது
   நிர்வாக நடவடிக்கைகளுக்கு இயைபாக தேயிலை சிறு பற்றுநிலங்கள் அபிவிருத்தி அதிகார சபையில் முகாமைத்துவ உதவியாளர் (தொழில்நுட்பம் அல்லாத) MA 1-2 சேவை வகுதியில் IIஆம் தரப் பதவியொன்றில் ஐந்து (05) வருடங்களுக்குக் குறையாத உயிர்ப்புடைய சேவை காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல்
4. சம்பள அளவு : இப்பதவிக்கு முகாமைத்துவச் சேவை 02/2016ஆம் இலக்க சுற்றுநிருபத்தின் பிரகாரம் ரூபா 42,600 – 10x755 – 18x1,135 – 70,580.00 (மாதாந்தம்) சம்பளம் உரித்தாகும். இதற்கு மேலதிகமாக அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட கொடுப்பனவுகள் வழங்கப்படும்.
5. ஆட்சேர்க்கும் முறை : நியமன அதிகாரியினால் தீர்மானிக்கப்படும் வகையில் விண்ணப்பங்கள் கோரப்பட்டதன் பின் எழுத்துமூல போட்டிப் பரீட்சை மற்றும் / அல்லது நியமன அதிகாரியினால் நியமிக்கப்படும் குழுவினால் நடாத்தப்படும் கட்டமைக்கப்பட்ட நேர்முகத் தேர்வின் அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்பட்டு ஆட்சேர்ப்பு இடம்பெறும்.

எழுத்துமூலப் பரீட்சைக்கான பாடப்பரப்புகள் பின்வருமாறாகும்.

- மொழித் தேர்ச்சி
- உளச்சார்புப் பரீட்சை
- பதவிக்கு இயைபான வகையில் விடய அறிவு

**மொழித் தேர்ச்சி:**
வெளிப்படுத்தல், புரிந்துகொள்ளல், அரிச்சுவடு ஒழுங்கு, சரள இலக்கணப் பாவனை போன்ற விடயங்கள் தொடர்பில் அபேட்சகரின் அறிவை அளவிடுவதற்கான வினாப் பத்திரம்.

**உளச்சார்பு பரீட்சை:**
தமது உத்தியோகபூர்வ கடமைகளை செவ்வனே நிறைவேற்றுவதற்கான அபேட்சகரின் உளச்சார்பையும் இயலுமையையும் அளவிடுவதற்கான வினாப் பத்திரம்.

**பதவிக்கு இயைபான வகையிலான விடய அறிவு:**
பதவிக்கு இயைபான வகையில் குறித்த விடயங்கள் தொடர்பில் அபேட்சகரின் அறிவை அளவிடுவதற்கான வினாப் பத்திரம்.

**பரீட்சையில் சித்தியடைவதற்கு அபேட்சகர்கள் ஒரு விடயத்தில் ஆகக் குறைந்தது** 40% புள்ளிகளைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும் என்பதுடன் மொத்தப் புள்ளிகளின் கூட்டுத்தொகையாக ஆகக்குறைந்தது 50% பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

கட்டமைக்கப்பட்ட நேர்முகத் தேர்வின் மூலம் ஆட்சேர்க்கப்படும்
கட்டமைக்கப்பட்ட நேர்முகத் தேரிவில் பின்வரும் வகையில் புள்ளிகள் வழங்கப்படும்.

| | | |
|---|---|---|
| 1. இயைபுடைய மேலதிக அனுபவம் | - | 30 புள்ளிகள் |
| 2. இயைபுடைய மேலதிக தகைமை | - | 30 புள்ளிகள் |
| 3. ஏனைய செயற்றிறன் மற்றும் திறமைகள் | - | 15 புள்ளிகள் |
| 4. நேர்முகத் தேர்வின்போது காட்டும் திறமை | - | 25 புள்ளிகள் |
| மொத்தப் புள்ளிகள் | - | 100 புள்ளிகள் |

- எழுத்துமூல போட்டிப் பரீட்சை மற்றும் கட்டமைக்கப்பட்ட நேர்முகத் தேர்வின் மூலம் ஆட்சேர்க்கப்படும் போது போட்டிப் பரீட்சையில் பெற்றுக்கொண்ட 60% மொத்தப் புள்ளிகள் மற்றும் நேர்முகத் தேர்வில் பெற்றுகொண்ட 40% புள்ளிகள் எனும் வகையில் திறமை வரிசைக்கிரமத்தின் அடிப்படையில் தெரிவுகள் மேற்கொள்ளப்படும்.
- கட்டமைக்கப்பட்ட நேர்முகத் தேர்வினால் மட்டும் தெரிவு செய்யப்படும் போது வெறுமனே அந்த நேர்முகத் தேர்வில் பெற்றுக்கொள்ளப்படும் திறமை வரிசைக்கிரமத்தின் அடிப்படையில் தெரிவுகள் மேற்கொள்ளப்படும்.

மேற்கூறப்பட்ட 01ஆம் இலக்கம் மற்றும் 02ஆம் இலக்கம் வரைக்குமான வயதெல்லை:
22 வயதிற்குக் குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். உள்ளக விண்ணப்பதாரிகளுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதல்ல.

**ஏனையவை** : அனைத்து ஆட்சேர்ப்பு தொடர்பிலும் நிறுவன கடமைசார் ஒழுங்குவிதி கோவையின் விதிமுறைகள் உரித்தாகும்.

**மேலதிக அனுகூலம்** : தங்கியிருந்து மற்றும் வெளிவாரியாக சிகிச்சை பெறும் மருத்துவத் திட்டத்தின் கீழான வசதிகள்
1958இன் 15ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதிச் சட்டம் மற்றும் அல்லது அச்சட்டத்தின் கீழ் உள்ள ஊழியர்களின் வேறு சேமலாப நிதிக்கு தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரரினால் சிறு பற்றுநிலங்கள் அதிகார சபையில் சேவையாற்றும் முழுமையான காலத்திற்கு அவரின் முழுமையான சம்பளத்தின் 10%த்திற்குக் குறையாத தொகை செலுத்தப்படும் என்பதுடன் அதிகார சபையினால் 15% த்திற்குக் குறையாத தொகை அங்கத்துவத் தொகையாகச் செலுத்தப்படும்.
இதற்கு மேலதிகமாக ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்கு 3% அதிகார சபையினால் செலுத்தப்படும்.

**விண்ணப்பப்படிவம்** : விண்ணப்பதாரர்கள் தமது அனைத்து விபரங்களையும் உள்ளடக்கிய விண்ணப்பங்களை பிறப்புச் சான்றிதழ், கல்விச் சான்றிதழ் மற்றும் அனுபவத்தைக் காட்டும் சான்றிதழ் மற்றும் வினை திறன் மற்றும் திறமைகளுக்கு இயைபான சான்றிதழ்களின் பிரதிகளுடன் பின்வரும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். விண்ணப்பங்களைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயரைக் குறிப்பிடுதல் வேண்டும். அரச / அரச கூட்டுத்தாபனம் / நியாயாதிக்கச் சபைகளில் சேவையாற்றும் ஊழியர்கள் தமது நிறுவனத் தலைமையின் ஊடாக அவர்களின் சிபாரிசு சகிதம் விண்ணப்பத்தைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

**விண்ணப்பங்களை**
ஏற்றுக்கொள்ளும் இறுதி நாள் : 2023 டிசம்பர் மாதம் 14ஆம் திகதி அல்லது அதற்கு முன் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ளவருக்குக் கிடைக்கச் செய்தல் வேண்டும்.

**தலைவர்,**
**தேயிலை சிறு பற்றுநிலங்கள் அபிவிருத்தி அதிகார சபை,**
**இல. 70, பாராளுமன்ற வீதி,**
**பெலவத்த, பத்தரமுல்ல.**

# டி20 உலகக் கிண்ணத்தின் 20 அணிகளும் தேர்வு: உகண்டா முதல் முறையாக தகுதி



அடுத்து ஆண்டு அமெரிக்கா மற்றும் மேற்கிந்திய தீவுகளில் நடைபெறவுள்ள டி20 உலகக் கிண்ணப் போட்டிக்கு 20 ஆவது மற்றும் கடைசி அணியாக உகண்டா தகுதி பெற்றுள்ளது. இதன்படி இந்த உலகக் கிண்ணத்தில் பங்கேற்கும் அனைத்து அணிகளும் உறுதி செய்யப்பட்டுள்ளன.

இதில் கிரிக்கெட் உலகக் கிண்ணத் தொடர் ஒன்றில் உகண்டா தகுதி பெறுவது இது முதல் முறையாகும். நமீபியாவில் நடைபெற்று வரும் டி20 உலகக் கிண்ண தகுதிகாண் தொடரின் மூலம் ஏற்கனவே நமீபிய அணி உலகக் கிண்ணத்திற்கு தகுதி பெற்ற நிலையில் டெஸ்ட் ஆடும் நாடான சிம்பாப்வே மற்றும் கென்ய அணிகள் தகுதியை இழந்தன.

உகண்டா இந்தத் தொடரில் ஆறு போட்டிகளில் ஐந்தில் வென்று முதல் இரு இடங்களுக்கு முன்னேறியதை அடுத்து உலகக் கிண்ண தகுதியை உறுதி செய்தது.

அடுத்த ஆண்டு ஜூன் மாதத்தில் நடைபெறவுள்ள டி20 உலகக் கிண்ணத்திற்கு போட்டியை நடத்தும் மேற்கிந்திய தீவுகள் மற்றும் அமெரிக்க அணிகள் நேரடி தகுதி பெற்றன. முந்தைய 2022 டி20 உலகக் கிண்ணத்தில் முதல் எட்டு இடங்களை பிடித்த இங்கிலாந்து, பாகிஸ்தான், நியூசிலாந்து, இந்தியா, தென்னாபிரிக்கா, நெதர்லாந்து மற்றும் இலங்கை அணிகளும் உலகக் கிண்ணத்திற்கு தகுதியை உறுதி செய்தன. டி20 தரவரிசையில் அடுத்து உச்ச தரநிலையை பெற்ற ஆப்கானிஸ்தான் மற்றும் பங்களாதேஷ் அணிகளும் உலகக் கிண்ணத்திற்கு தகுதி பெற்றன. மற்ற இடங்கள் பிராந்திய மட்டத்தில் இடம்பெற்ற தகுதிகாண் தொடர்கள் மூலம் தேர்வு செய்யப்பட்டன. ஐரோப்பிய தகுதிகாண் தொடரின் மூலம் ஸ்கொட்லாந்து தெரிவானதோடு கிழக்காசிய பசிபிக் தகுதிகாண் சுற்று மூலம் பப்புவா நியுகினி அணி தேர்வானது.

அமெரிக்க தகுதிகாண் சுற்றில் வெற்றியீட்டிய கனடா தனது அண்டை நாட்டில் நடைபெறும் உலகக் கிண்ணத்திற்கு தகுதி பெற்றது. ஆசிய தகுதிகாண் சுற்றின்மூலம் நேபாளம் மற்றும் ஓமான் அணிகள் உலகக் கிண்ணத்திற்கு முன்னேறின.

2024 ஜூன் 3 தொடக்கம் 30 ஆம் திகதி வரை நடைபெறும் டி20 உலகக் கிண்ணப் போட்டியில் 20 அணிகளும் ஐந்து அணிகள் என நான்கு குழுக்களாக பிரித்து ஆரம்ப சுற்றுப் போட்டிகள் நடைபெறவுள்ளன.

ஒவ்வொரு குழுவிலும் முதல் இரு இடங்களை பிடிக்கும் அணிகள் சுப்பர் 8 சுற்றுக்கு முன்னேறும். சுப்பர் 8 சுற்றில் நான்கு அணிகள் கொண்ட இரு குழுக்களில் போட்டிகள் நடைபெறவுள்ளன. இரு குழுக்களிலும் முதல் இரு இடங்களை பிடிக்கும் அணிகள் அரையிறுதிக்கு முன்னேறும்.

# மாத்தறை புனித தோமஸ்–ராகுல 'தங்கச் சமர்' கால்பந்து இன்று



நுவன் கொடிகார

மாத்தறை புனித தோமஸ் கல்லூரி மற்றும் மாத்தறை ராகுல கல்லூரிக்கு இடையிலான வருடாந்த 'தங்கச் சமர்' கால்பந்து போட்டி 19 ஆவது முறையாக மாத்தறை உயன்வத்த கால்பந்து மைதானத்தில் இன்று (01) பிற்பகல் 2.30க்கு நடைபெறவுள்ளது.

2002 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இந்த கால்பந்து போட்டியில் புனித தோமஸ் கல்லூரி 08 போட்டிகளிலும் ராகுல கல்லூரி 09 போட்டிகளிலும் வெற்றியீட்டியதோடு கடந்த ஆண்டு வெற்றி ராகுல கல்லூரிக்கி கிடைத்தது.

2018 ஆம் ஆண்டு நடைபெற்ற 17 ஆவது தங்கச் சமர் வெற்றி தோல்வியின்றி நிறைவடைந்தது. 2019, 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் நாட்டில் இருந்த கொவிட்19 பெருந்தொற்று காரணமாக போட்டிகள் நடைபெறவில்லை.

இம்முறை கால்பந்து தொடரில் போட்டியை நடத்தும் பாடசாலையாக ராகுல கல்லூரி செயற்படுவதோடு ராகுல கல்லூரி அதிபர் சமித் குருகுலசூரிய, புனித தோமஸ் கல்லூரி அதிபர் பீ.ஏ. வீரக்கொடி ஆகியோரின் வழிகாட்டலில் புனித தோமஸ் கல்லூரி பயிற்சியாளராக கயன்திக்க ரணசிங்க, விசேட பயிற்சியாளராக பிரின்ஸ் போது, ராகுல கல்லூரியின் பயிற்சியாளராக ஏ.பி. வீரப்புலி அகியோர் செயற்படுகின்றனர். புனித தோமஸ் அணியின் தலைவராக டீ.டி. தம்ரு வத்சிலு மற்றும் ராகுல கல்லூரி அணியின் தலைவராக கே.பீ. ரவிது சமீர செயற்படுகின்றனர்.



## சர்வதேச செய்திகள்

# காசாவில் கடைசி நிமிடத்தில் மேலும் ஒரு தினத்திற்கு போர்நிறுத்தம் நீடிப்பு



போர் நிறுத்தத்தை ஏழாவது நாளாக நேற்று (30) ஒருநாளைக்கு நீடிப்பதற்கு இஸ்ரேல் மற்றும் ஹமாஸ் அமைப்புக்கு இடையே கடைசி நிமிடத்தில் உடன்பாடு எட்டப்பட்டது. இதன்மூலம் போர் நிறுத்தம் மேலும் நீடிக்கப்படுவதற்கும் மேலும் பணயக் கைதிகள் விடுவிக்கப்படுவதற்குமான எதிர்பார்ப்பு அதிகரித்துள்ளது.

கடந்த ஒக்டோபர் 7 ஆம் திகதி ஆரம்பமான போரில் காசா மீது இஸ்ரேல் ஏழு வாரங்கள் இடைவிடாது வான், தரை மற்றும் கடல் மார்க்கமாக சரமாரி தாக்குதல்களை நடத்தி பெரும் அழிவை ஏற்படுத்தியுள்ள சூழலில் போர் நிறுத்த காலத்தில் காசாவுக்கு மனிதாபிமான உதவிகளும் சென்று வருகின்றன. 2.3 மில்லியன் மக்கள் தொகை கொண்ட காசாவில் மூன்றில் ஒரு பங்கினர் வீடுகளை இழந்துள்ளனர்.

எவ்வாறாயினும் ஜெரூசலத்தில் நேற்று இடம்பெற்ற துப்பாக்கிச் சூடு பிராந்தியத்தில் வன்முறையை அதிகரிக்கும் அச்சுறுத்தலை ஏற்படுத்தியுள்ளது.

போர் நிறுத்தத்தை தக்கவைக்க நாளொன்றுக்கு குறைந்தது 10 பணயக்கைதிகளை விடுவிப்பதற்கு இஸ்ரேல் நிபந்தனை விதித்து வருகிறது. இந்நிலையில் நேற்றுக் காலை போர் மீண்டும் ஆரம்பிக்கப்படும் அச்சுறுத்தலுக்கு மத்தியில் நேற்று விடுவிக்கப்படுவோரின் பட்டியல் கடைசி நேரத்தில் வெளியிடப்பட்டது.

"பணயக்கைதிகளை விடுவிக்கும் மத்தியஸ்தர்களின் முயற்சி தொடர்வதால் போர் நிறுத்தம் தொடர்ந்து நீடிக்கப்படுகிறது" என்று இஸ்ரேல் இராணுவம் வெளியிட்ட அறிவிப்பில் குறிப்பிடப்பட்டது. போர் நிறுத்தம் காலாவதியாவதற்கு சில நிமிடங்களுக்கு முன்னரே இந்த அறிவிப்பு வெளியானது.

ஹமாஸ் அமைப்பு கடந்த புதனன்று 16 பணயக்கைதிகளை விடுவித்த நிலையில் அன்றைய தினத்தில் இஸ்ரேல் 30 பலஸ்தீன கைதிகளை விடுவித்தது. இதனைத் தொடர்ந்தே இந்தப் போர் ஏழாவது நாளைக்கு நீடிக்கப்பட்டது.

அமெரிக்க இராஜாங்கச் செயலாளர் அன்டனி பிளிங்கன் போர் வெடித்தது தொடக்கம் 3 ஆவது முறையாக மத்திய கிழக்கிற்கான விஜயத்தை நேற்று ஆரம்பித்தார்.

"பணயக்கைதிகள் வீட்டிற்கு வருவதையும், அவர்களது குடும்பங்களுடன் மீண்டும் இணைவதையும் கடந்த வாரத்தில் பார்த்தோம். அது இன்றும் தொடர வேண்டும்" என்று இஸ்ரேலிய ஜனாதிபதி இசாக் ஹெர்சொக்கை சந்தித்த பிலிங்கன் தெரிவித்தார்.

"காசாவில் உள்ள அப்பாவி பொது மக்களுக்கு மிகவும் தேவையான மனிதாபிமான உதவிகளை வழங்கவும் இது உதவுகிறது. எனவே இந்த செயல்முறை தீர்வுகளை தருகின்றன. இது முக்கியமானது. இது தொடர முடியும் என்று நாம் எதிர்பார்க்கிறோம்" என்றும் அவர் கூறியுள்ளார்.

நேற்றைய தினம் தவிர்த்து இதுவரை 97 பணயக்கைதிகளை பலஸ்தீன போராளிகள் விடுவித்துள்ளனர். இதில் 70 இஸ்ரேலிய பெண்கள் மற்றும் சிறுவர்கள் உள்ளனர். இஸ்ரேல் திரும்பும் ஒவ்வொரு பணயக்கைதிகளுக்காகவும் இஸ்ரேலிய சிறையில் இருக்கும் மூன்று பலஸ்தீன பெண்கள் மற்றும் பதின்ம வயதினர் விடுவிக்கப்படுகின்றனர். தவிர 27 வெளிநாட்டு பணயக்கைதிகள் அந்தந்த நாடுகளுடன் இடம்பெற்ற தனியான பேச்சுவார்த்தைகள் மூலம் விடுவிக்கப்பட்டுள்ளனர்.



### ஜெரூசலத்தில் துப்பாக்கிச் சூடு



ஜெரூசலத்திற்கான நுழைவாயிலில் நேற்று (30) இரு பலஸ்தீன தாக்குதல்கதாரிகள் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் இருவர் கொல்லப்பட்டு எட்டுப் பேர் காயமடைந்ததாக இஸ்ரேல் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.
Green Light for Online Transfer
Lake House Branch
Acc. No. 000000377
E-mail - classified@lakehouse.lk
077 7 270 067
077 7 278 948/ 011 2 429 347
011 2 429 383 I 011 2 429 342/ 343


# இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம்

## 2024ஆம் வருடத்திற்கான வழங்குநர்கள், ஒப்பந்தக்காரர்கள் மற்றும் கொள்வனவாளர்களைப் பதிவு செய்தல்

### பிரதான அலுவலகம் - கொழும்பு, பிராந்திய அலுவலகம் - பன்வில, மாத்தளை, கண்டி, ஹல்துமுல்ல மற்றும் காலியில் அமைந்துள்ள தோட்டங்களுக்கு

2024ஆம் வருடத்தில் பின்வரும் பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்குதல் மற்றும் கொள்வனவாளர்களை எமது நிறுவனத்தில் பதிவு செய்து கொள்ளும் பொருட்டு அரச நிறுவனங்கள், கூட்டுத்தாபனங்கள் மற்றும் சபைகள், பிரசித்த வழங்குநர்கள் மற்றும் கொள்வனவு நிறுவனங்கள், உற்பத்தியாளர்கள், முகவர்கள் மற்றும் கூட்டுறவுச் சங்கங்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**(1) பொருட்கள் வழங்குதல்**

அலுவலக காகிதாதிகள்
அலுவலக மரத் தளபாடங்கள் மற்றும் உபகரணங்கள் (மேசைகள், கதிரைகள், உருக்கு அலுமாரிகள், பெட்டகங்கள்)
அலுவலக இலத்திரனியல் உபகரணங்கள் (கணனிகள், மின் பிறப்பாக்கிகள், தொலைநகல், அச்சு மற்றும் புகைப்படப் பிரதி இயந்திரங்கள், ஏனைய மின்சார உபகரணங்கள் மற்றும் துணைப்பாகங்கள், சுடுநீர் ஹீட்டர்கள், நீர்க் குழாய்கள் மற்றும் துணைப்பாகங்கள், குளிர்சாதனப் பெட்டிகள் மற்றும் துணைப்பாகங்கள்)
மோட்டார் வாகன உதிரிப்பாகங்கள் (டயர், டியூப், பெட்டறிகள் மற்றும் ஏனைய பாகங்கள்)
பொதி செய்யும் பொருட்கள் (கன்டெய்னர்கள், சாக்குகள், காகித உறைகள், மெட்டலயிஸ் உறைகள், சொலோபோன் மற்றும் அலுபொயில் உறைகள் மற்றும் ஏனைய பொதி செய்யும் பொருட்கள்)
பாரம் நிறுக்கும் தராசுகள் மற்றும் உதிரிப்பாகங்கள்
துப்புரவேற்பாட்டு துணைப்பொருட்கள் மற்றும் பொருட்கள்
தேயிலை மற்றும் தொழிற்சாலைகளுக்கான இயந்திரங்கள் மற்றும் உதிரிப்பாகங்கள்
விவசாய உபகரணங்கள், உரம் மற்றும் டொலமைட்
இரசாயனப் பொருட்கள், கலைநாசினிகள்
வீட்டு உபகரணங்கள் (தோட்ட விடுதிகள் மற்றும் பங்களாக்களுக்கு)
வாடகை அடிப்படையில் மோட்டார் வாகனங்கள்

**(2) சேவைகள் வழங்குதல்**

அச்சு வேலைகள் (காகிதாதிகள்)
திருத்தவேலைகள் மற்றும் பராமரிப்புகள் (வாகனங்கள் / கராஜ்)
திருத்தவேலைகள் மற்றும் பராமரிப்புகள் (மின்னியலாளர்கள் / மின்னியல் நிறுவனங்கள்)
திருத்தவேலைகள் மற்றும் பராமரிப்புகள் (கட்டிடங்கள் மற்றும் அலுவலக தளபாடங்கள்)
திருத்தவேலைகள் மற்றும் பராமரிப்புகள் (அனைத்து வகையான தராசுகள்)
திருத்தவேலைகள் மற்றும் பராமரிப்புகள் (தேயிலைத் தொழிற்சாலை இயந்திராதிகள்)
ஏனைய உற்பத்திகள்
அலுமினியத்தைப் பயன்படுத்தி செய்யப்படும் நிர்மாணங்கள்
அளத்தல் மற்றும் டெலிமெட்ரி வேலைகள்
அலுவலக சுத்திகரிப்பு மற்றும் துப்புரவேற்பாட்டு சேவை வழங்குநர்கள்
போக்குவரத்து நடவடிக்கைகளுக்கான சேவை வழங்குநர்கள்
இணையதள வடிவமைப்பாளர்கள் மற்றும் சேவை வழங்குநர்கள்
தேயிலைக் கன்று வழங்குநர்கள்
ஒப்பந்தத் தோட்டங்களின் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள்
பாதுகாப்புச் சேவை வழங்கும் நிறுவனங்கள்

**(3) விற்பனைகள்**

மரமாகப் பாவிக்கப்படும் பெறுமதியான தாவரங்கள் மற்றும் ஏனைய மரத் தாவரங்கள்
உடைந்த பொருட்கள்
மோட்டார் வாகனங்கள், டிராக்டர்கள்
சிறிய ஏற்றுமதிப் பயிர்கள்
கழிவுத் தேயிலைகள்
தேயிலைக் கொழுந்து

**நிபந்தனைகள்**

பதிவு செய்துகொள்வதற்கான விண்ணப்பப் படிவங்களை வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 4.00 மணி வரை 3000.00 ரூபா மீளளிக்கப்படாத கட்டணத்தை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தின் காசாளருக்குச் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டைச் சமர்ப்பித்து தலைமை அலுவலகத்தின் பெறுகைப் பிரிவிலிருந்து பெற்றுக்கொள்ளலாம். ஒவ்வொரு உருப்படிக்கும் வெவ்வேறான விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும் என்பதுடன் அந்த உருப்படியை தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும். சகல விண்ணப்பப் படிவங்களுடனும் அந்தப் பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்குவதற்காக ஒவ்வொரு நிறுவனத்திடமுள்ள தகைமைகள், பதிவுச் சான்றிதழ் மற்றும் அந்த நிறுவனங்களுக்கு இதற்கு முன் பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்கிய நிறுவனங்களின் தகவல்களைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

பொதுவாக பொருட்கள் மற்றும் சேவை வழங்குவதற்காக விலைகளைக் கோரும் பொருட்டு வழங்குநர்களின் பெயர்ப் பட்டியல் பயன்படுத்தப்படும் என்பதுடன் அவ்வாறே ஏனைய வெளி வழங்குநர்களிடமிருந்து கேள்விகளைப் பெற்றுக்கொள்வதற்கும் கொள்வனவு செய்யும் உரிமையை கூட்டுத்தாபனம் தன்னகத்தே கொண்டுள்ளது.

சகல விண்ணப்பப் படிவங்களும் ''வழங்குநர்களைப் பதிவு செய்தல் - 2024'' என இடதுபக்க மேல் மூலையில் குறிப்பிடப்பட்ட கடித உறையில் இட்டு பதிவுத் தபாலில் தலைவர், இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம், இல. 257, ஸ்ரீ தம்ம மாவத்தை, கொழும்பு 10'' எனும் முகவரிக்கு 2024-02-28ஆம் திகதிக்கு முன் கிடைக்கச் செய்தல் வேண்டும்.

விண்ணப்பப் படிவங்கள் 2023-12-04ஆம் திகதி வரை இந்த நிறுவனத்தின் தலைமை அலுவலகம் மற்றும் கல்பிஹில்ல பிராந்திய அலுவலகத்தினால் வழங்கப்படும்.

கிடைக்கும் விண்ணப்பப் படிவங்களை காரணம் காட்டாமல் ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் உரிமையை நிறுவனம் தன்னகத்தே கொண்டுள்ளது.

தேவையான தகவுத்திறனை பூர்த்தி செய்யும் வகையில் பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்கியதன் பின் மட்டுமே கொடுப்பனவுகள் செய்யப்படும் என்பதுடன் கட்டணம் செலுத்துவதற்கு ஒரு மாத நிவாரண காலத்தை வழங்குநர்கள் வழங்குதல் வேண்டும்.

**தலைவர்,**
**இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம்,**
**இல. 257, ஸ்ரீ தம்ம மாவத்தை,**
**கொழும்பு 10. தொலைபேசி: 0114-194879**

**2023-11-29.**

# இலங்கை வங்கி

**1968ஆம் ஆண்டின் 34ஆம் இலக்கச்சட்டத்தாலும் 1974ஆம் ஆண்டின் 10ஆம் இலக்க அதிகாரச்சட்டத்தாலும் 2000ஆம் ஆண்டின் 54ஆம் இலக்கச்சட்டத்தாலும் திருத்தப்பட்டவாறு இலங்கை வங்கிக் கட்டளைச்சட்டத்தின் 21 ஆம் பிரிவின்கீழ் (397ஆம் அத்தியாயம்) வெளியிடப்படும் அறிவித்தல்.**

இல.717, டனிஸ்ரர் டி சில்வா மாவத்தை, தெமட்டகொட, கொழும்பு 09 எனும் முகவரியிலுள்ள வரையறுக்கப்பட்ட டி.பி. ஜயசிங்க பைலிங் கம்பனி (தனியார்) நிறுவனம் மற்றும் வரையறுக்கப்பட்ட டி.பி. ஜயசிங்க ருவஸ் அன்ட் ட்ரான்ஸ்போட் (தனியார்) நிறுவனம் என்பவற்றின் கடன் பொறுப்புகளுக்காக இல. 717, 715A, 715B, 715C என்ற வரிமதிப்பீட்டு இலக்கங்களுடன் டனிஸ்ரர் டி சில்வா மாவத்தை, தெமட்டகொட, கொழும்பு 09 எனும் முகவரியிலுள்ள ஈடுவைக்கப்பட்ட ஆதனங்களின் விற்பனை.

2023.11.21 அன்று நடைபெற்ற கூட்டத்தில் இவ்வங்கியின் பணிப்பாளர் சபை விசேடமாகவும் ஏகமனதாகவும் தீர்மானித்ததாவது:-

1. கீழே நன்கு விபரிக்கப்படும் கடன் வசதிகளின் பொருட்டு வரையறுக்கப்பட்ட டி.பி. ஜயசிங்க பைலிங் கம்பனி (தனியார்) நிறுவனத்தாரிடமிருந்து மொத்தமாக 771,474,166.10 ரூபாய் (எழுநூற்று எழுபத்தொரு மில்லியன் நானூற்று எழுபத்து நான்காயிரத்து நூற்று அறுபத்தாறு ரூபாய் பத்துச் சதம்) வருமதியாகவுள்ளது.

   பிரசித்த நொத்தாரிசு ஜே.சி. மஹாரச்சி அத்தாட்சிப்படுத்திய 2014.04.10ஆம் திகதிய 189ஆம் இலக்க ஈட்டுமுறி, 2015.09.04ஆம் திகதிய 288ஆம் இலக்க ஈட்டுமுறி, 2017.12.04ஆம் திகதிய 510ஆம் இலக்க ஈட்டுமுறி என்பவற்றின் பேரில் பெற்றுக்கொள்ளப்பட்ட 150,000,000.00 ரூபாய் (நூற்றைம்பது மில்லியன் ரூபாய்) நிரந்தர மேலதிகப் பற்று வசதியின் 2023.11.10 வரையான வட்டி மற்றும் முதல் நிலுவை மீது 187,657,899.97 ரூபாயும் (நூற்று எண்பத்தேழு மில்லியன் அறுநூற்று ஐம்பத்தேழாயிரத்து எண்ணூற்றுத் தொண்ணூற்றொன்பது ரூபாய் தொண்ணூற்றேழு சதம்) அத்துடன் 127,875,852.16 ரூபாய் (நூற்று இருபத்தேழு மில்லியன் எண்ணூற்று எழுபத்தையாயிரத்து எண்ணூற்று ஐம்பத்திரண்டு ரூபாய் பதினாறு சதம்) முதல் நிலுவை மீது ஆண்டுக்கு AWPLR+3.0 வீதப்படி 2023.11.11 தொடக்கம் கொடுப்பனவுத் திகதி வரையான மேலதிக வட்டியும் தவணைச் சலுகைக் கடனாக மாற்றப்பட்ட 9,000.000.00 ரூபாய் (ஒன்பது மில்லியன் ரூபாய்) உப கடன் வசதியின் 2023.11.10 வரையான வட்டி மற்றும் முதல் நிலுவை மீது 10,454,866.31 ரூபாயும் (பத்து மில்லியன் நானூற்று ஐம்பத்து நான்காயிரத்து எண்ணூற்று அறுபத்தாறு ரூபாய் முப்பத்தொரு சதம்) அத்துடன் 8,945,496.36 ரூபாய் (எட்டு மில்லியன் தொள்ளாயிரத்து நாற்பத்தைந்தாயிரத்து நானூற்றுத் தொண்ணூற்றாறு ரூபாய் முப்பத்தாறு சதம்) முதல் நிலுவை மீது ஆண்டுக்கு 6.93 சதவீதப்படி 2023.11.11 தொடக்கம் கொடுப்பனவுத் திகதி வரையான மேலதிக வட்டியும்

   பிரசித்த நொத்தாரிசு ஜே.சி. மஹாரச்சி அத்தாட்சிப்படுத்திய 2014.04.10ஆம் திகதிய 189ஆம் இலக்க ஈட்டுமுறி, 2015.09.04ஆம் திகதிய 288ஆம் இலக்க ஈட்டுமுறி, 2017.12.04ஆம் திகதிய 510ஆம் இலக்க ஈட்டுமுறி, பிரசித்த நொத்தாரிசு சி.எல். யாப்பா அத்தாட்சிப்படுத்திய 2019.07.23ஆம் திகதிய 2026ஆம் இலக்க ஈட்டுமுறி என்பவற்றின் பேரில் பெற்றுக்கொள்ளப்பட்ட 334,000,000.00 ரூபாய் (முந்நூற்று முப்பத்து நான்கு மில்லியன் ரூபாய்) தவணைக் கடன் வசதியின் 2023.11.10 வரையான வட்டி மற்றும் முதல் நிலுவை மீது 465,037,253.99 ரூபாயும் (நானூற்று அறுபத்தைந்து மில்லியன் முப்பத்தேழாயிரத்து இருநூற்று ஐம்பத்து மூன்று ரூபாய் தொண்ணூற்றொன்பது சதம்) அத்துடன் 328,600,000.00 ரூபாய் (முந்நூற்று இருபத்தெட்டு மில்லியன் அறுநூறாயிரம் ரூபாய்) முதல் நிலுவை மீது ஆண்டுக்கு AWPLR+2.0 வீதப்படி (அடித்தள வீதம் ஆண்டுக்கு 12.0%) 2023.11.11 தொடக்கம் கொடுப்பனவுத் திகதி வரையான மேலதிக வட்டியும் தவணைச் சலுகைக் கடனாக மாற்றப்பட்ட 58,900,000.00 ரூபாய் (ஐம்பத்தெட்டு மில்லியன் தொள்ளாயிரமாயிரம் ரூபாய்) உப கடன் வசதியின் 2023.11.10 வரையான வட்டி மற்றும் முதல் நிலுவை மீது66,435,501.61 ரூபாயும் (அறுபத்தாறு மில்லியன் நானூற்று முப்பத்தையாயிரத்து ஐந்நூற்று ஒரு ரூபாய் அறுபத்தொரு சதம்) அத்துடன் 57,652,501.21 ரூபாய் (ஐம்பத்தேழு மில்லியன் அறுநூற்று ஐம்பத்திரண்டாயிரத்து ஐந்நூற்று ஒரு ரூபாய் இருபத்தொரு சதம்) முதல் நிலுவை மீது ஆண்டுக்கு 8.0 சதவீதப்படி 2023.11.11 தொடக்கம் கொடுப்பனவுத் திகதி வரையான மேலதிக வட்டியும்.

   பிரசித்த நொத்தாரிசு ஜே.சி. மஹாரச்சி அத்தாட்சிப்படுத்திய 2014.04.10ஆம் திகதிய 189ஆம் இலக்க ஈட்டுமுறி, 2015.09.04ஆம் திகதிய 288ஆம் இலக்க ஈட்டுமுறி, 2017.12.04ஆம் திகதிய 510ஆம் இலக்க ஈட்டுமுறி, பிரசித்த - நொத்தாரிசு சி.எல். யாப்பா அத்தாட்சிப்படுத்திய 2019.07.23ஆம் திகதிய 2026ஆம் இலக்க ஈட்டுமுறி, பிரசித்த நொத்தாரிசு சத்துரிக்கா விஜேசிங்க அத்தாட்சிப்படுத்திய 2020.06.08ஆம் திகதிய 3229ஆம் இலக்க ஈட்டுமுறி என்பவற்றின் பேரில் பெற்றுக்கொள்ளப்பட்ட 9,000,000.00 ரூபாய் (ஒன்பது மில்லியன் ரூபாய்) தவணைக் கடன் தொழிற்படு மூலதனம்) வசதியின் 2023.11.10 வரையான வட்டி மற்றும் முதல் நிலுவை மீது 5,059,187.17 ரூபாயும் (ஐந்து மில்லியன் ஐம்பத்தொன்பதாயிரத்து நூற்று எண்பத்தேழு ரூபாய் பதினேழு சதம்) அத்துடன் 4,626,611.21 ரூபாய் (நான்கு மில்லியன் அறுநூற்று இருபத்தாறாயிரத்து அறுநூற்றுப் பதினொரு ரூபாய் இருபத்தொரு சதம்) முதல் நிலுவை மீது ஆண்டுக்கு 4.0 சதவீதப்படி 2023.11.11 தொடக்கம் கொடுப்பனவுத் திகதி வரையான மேலதிக வட்டியும்

   பிரசித்த நொத்தாரிசு ஜே.சி. மஹாரச்சி அத்தாட்சிப்படுத்திய 2014.04.10ஆம் திகதிய 189ஆம் இலக்க ஈட்டுமுறி, 2015.09.04ஆம் திகதிய 288ஆம் இலக்க ஈட்டுமுறி, 2017.12.04ஆம் திகதிய 510ஆம் இலக்க ஈட்டுமுறி, பிரசித்த நொத்தாரிசு சி.எல். யாப்பா அத்தாட்சிப்படுத்திய 2019.07.23ஆம் திகதிய 2026ஆம் இலக்க ஈட்டுமுறி, பிரசித்த நொத்தாரிசு சத்துரிக்கா விஜேசிங்க அத்தாட்சிப்படுத்திய 2020.06.08ஆம் திகதிய 3229ஆம் இலக்க ஈட்டுமுறி, பிரசித்த நொத்தாரிசு சி.எல். யாப்பா அத்தாட்சிப்படுத்திய 2020.07.30ஆம் திகதிய 2119ஆம் இலக்க ஈட்டுமுறி என்பவற்றின் பேரில் பெற்றுக்கொள்ளப்பட்ட 8,100,000.00 ரூபாய் (எட்டு மில்லியன் நூறாயிரம் ரூபாய்) தவணைக் கடன் (தொழிற்படு மூலதனம்) வசதியின் 2023.11.10 வரையான வட்டி மற்றும் முதல் நிலுவை மீது 6,992,610.55 ரூபாயும் (ஆறு மில்லியன் தொள்ளாயிரத்துத் தொண்ணூற்றிரண்டாயிரத்து அறுநூற்றுப் பத்து ரூபாய் ஐம்பத்தைந்து சதம்) அத்துடன் 6,390,660.60 ரூபாய் (ஆறு மில்லியன் முந்நூற்றுத் தொண்ணூறாயிரத்து அறுநூற்று அறுபது ரூபாய் அறுபது சதம்) முதல் நிலுவை மீது ஆண்டுக்கு 4.0 சதவீதப்படி 2023.11.11 தொடக்கம் கொடுப்பனவுத் திகதிவரையான மேலதிக வட்டியும் 25,000,000.00 ரூபாய் (இருபத்தைந்து மில்லியன் ரூபாய்) தவணைக் கடன் (தொழிற்படு மூலதனம்) வசதியின் 2023.11.10 வரையான வட்டி மற்றும் முதல் நிலுவை மீது 22,066,299.38 ரூபாயும் (இருபத்திரண்டு மில்லியன் அறுபத்தாறாயிரத்து இருநூற்றுத் தொண்ணூற்றொன்பது ரூபாய் முப்பத்தெட்டுச் சதம்) அத்துடன் 20,151,512.00 ரூபாய் (இருபது மில்லியன் நூற்று ஐம்பத்தோராயிரத்து ஐந்நூற்றுப் பன்னிரண்டு ரூபாய்) முதல் நிலுவை மீது ஆண்டுக்கு 4.0 சதவீதப்படி 2023.11.11 தொடக்கம் கொடுப்பனவுத் திகதி வரையான மேலதிக வட்டியும்

   பிரசித்த நொத்தாரிசு சத்துரிக்கா விஜேசிங்க அத்தாட்சிப்படுத்திய 2020.01.21ஆம் திகதிய 3211ஆம் இலக்க ஈட்டுமுறியின் பேரில் பெற்றுக்கொள்ளப்பட்ட 5,000,000.00 ரூபாய் (ஐந்து மில்லியன் ரூபாய்) தவணைக் கடன் வசதியின் 2023.11.10 வரையான வட்டி மற்றும் முதல் நிலுவை மீது 6,065,385.46 ரூபாயும் (ஆறு மில்லியன் அறுபத்தையாயிரத்து முந்நூற்று எண்பத்தைந்து ரூபாய் நாற்பத்தாறு சதம்) அத்துடன் 4,286,000.00 ரூபாய் (நான்கு மில்லியன் இருநூற்று எண்பத்தாறாயிரம் ரூபாய்) முதல் நிலுவை மீது ஆண்டுக்கு AWPLR+2.0 (அடித்தள வீதம் ஆண்டுக்கு 12.0%) வீதப்படி 2023.11.11 தொடக்கம் கொடுப்பனவுத் திகதி வரையான மேலதிக வட்டியும் தவணைச் சலுகைக் கடனாக மாற்றப்பட்ட 1,600,000.00 ரூபாய் (ஒரு மில்லியன் அறுநூறாயிரம் ரூபாய்) உப கடன் வசதியின் 2023.11.10 வரையான வட்டி மற்றும் முதல் நிலுவை மீது 1,705,161.66 ரூபாயும் (ஒரு மில்லியன் எழுநூற்று ஐயாயிரத்து நூற்று அறுபத்தொரு ரூபாய் அறுபத்தாறு சதம்) அத்துடன் 1,480,546.38 ரூபாய் (ஒரு மில்லியன் நானூற்று எண்பதாயிரத்து ஐந்நூற்று நாற்பத்தாறு ரூபாய் முப்பத்தெட்டுச் சதம்) முதல் நிலுவை மீது ஆண்டுக்கு 8.0 சதவீதப்படி 2023.11.11 தொடக்கம் கொடுப்பனவுத் திகதி வரையான மேலதிக வட்டியும் வருமதியாகவுள்ளது.

   மற்றும்

   கீழே நன்கு விபரிக்கப்படும் கடன் வசதிகளின் பொருட்டு வரையறுக்கப்பட்ட டி.பி. ஜயசிங்க ருவஸ் அன்ட் ட்ரான்ஸ்போட் (தனியார்) நிறுவனத்தாரிடமிருந்து மொத்தமாக 394,243,678.12 ரூபாய் (முந்நூற்றுத் தொண்ணூற்று நான்கு மில்லியன் இருநூற்று நாற்பத்து மூவாயிரத்து அறுநூற்று எழுபத்தெட்டு ரூபாய் பன்னிரண்டு சதம்) வருமதியாகவுள்ளது.

   பிரசித்த நொத்தாரிசு ஜே.சி. மஹாரச்சி அத்தாட்சிப்படுத்திய 2010.02.09ஆம் திகதிய 19ஆம் இலக்க ஈட்டுமுறி, 2010.07.22ஆம் திகதிய 33ஆம் இலக்க ஈட்டுமுறி, 2012.01.30ஆம் திகதிய 75ஆம் இலக்க ஈட்டுமுறி பிரசித்த நொத்தாரிசு என்.ரி. பத்திநாயக்க அத்தாட்சிப்படுத்திய 2014.01.03ஆம் திகதிய 2383ஆம் இலக்க ஈட்டுமுறி, 2014.06.24ஆம் திகதிய 2413ஆம் இலக்க ஈட்டுமுறி, பிரசித்த நொத்தாரிசு ஜே.சி. மஹாரச்சி அத்தாட்சிப்படுத்திய 2015.09.04ஆம் திகதிய 287ஆம் இலக்க ஈட்டுமுறி, 2016.06.01ஆம் திகதிய 332ஆம் இலக்க ஈட்டுமுறி என்பவற்றின் பேரில் பெற்றுக்கொள்ளப்பட்ட 209,000,000.00 ரூபாய் (இருநூற்றொன்பது மில்லியன் ரூபாய்) மறுசீரமைக்கப்பட்ட கடன் A வசதியின் 2023.11.10 வரையான வட்டி மற்றும் முதல் நிலுவை மீது 349,509,455.95 ரூபாயும் ((முந்நூற்று நாற்பத்தொன்பது மில்லியன் ஐந்நூற்று ஒன்பதாயிரத்து நானூற்று ஐம்பத்தைந்து ரூபாய் தொண்ணூற்றைந்து சதம்) அத்துடன் 205,333,332.00 ரூபாய் (இருநூற்றைந்து மில்லியன் முந்நூற்று முப்பத்து மூவாயிரத்து முந்நூற்று முப்பத்திரண்டு ரூபாய்) முதல் நிலுவை மீது ஆண்டுக்கு AWPLR+4.0 (அடித்தள வீதம் ஆண்டுக்கு 12.0%) சதவீதப்படி 2023.11.11 தொடக்கம் கொடுப்பனவுத் திகதி வரையான மேலதிக வட்டியும் தவணைச் சலுகைக் கடனாக மாற்றப்பட்ட 8,349,603.74 ரூபாய் (எட்டு மில்லியன் முந்நூற்று நாற்பத்தொன்பதாயிரத்து அறுநூற்று மூன்று ரூபாய் எழுபத்து நான்கு சதம்) உப கடன் வசதியின் 2023.11.10 வரையான வட்டி மற்றும் முதல் நிலுவை மீது 10,002,133.70 ரூபாயும் (பத்து மில்லியன் இரண்டாயிரத்து நூற்று முப்பத்து மூன்று ரூபாய் எழுபது சதம்) அத்துடன் 8,349,603.74 ரூபாய் (எட்டு மில்லியன் முந்நூற்று நாற்பத்தொன்பதாயிரத்து அறுநூற்று மூன்று ரூபாய் எழுபத்து நான்கு சதம்) முதல் நிலுவை மீது ஆண்டுக்கு 6.11 சதவீதப்படி 2023.11.11 தொடக்கம் கொடுப்பனவுத் திகதி வரையான மேலதிக வட்டியும் 7,000,000.00 ரூபாய் (ஏழு மில்லியன் ரூபாய்) மறுசீரமைக்கப்பட்ட கடன் B வசதியின் 2023.11.10 வரையான வட்டி மற்றும் முதல் நிலுவை மீது 7,222,788.16 ரூபாயும் (ஏழு மில்லியன் இருநூற்று இருபத்திரண்டாயிரத்து எழுநூற்று எண்பத்தெட்டு ரூபாய் பதினாறு சதம்) அத்துடன் 6,027,775.00 ரூபாய் (ஆறு மில்லியன் இருபத்தேழாயிரத்து எழுநூற்று எழுபத்தைந்து ரூபாய்) முதல் நிலுவை மீது ஆண்டுக்கு 4.0 சதவீதப்படி 2023.11.11 தொடக்கம் கொடுப்பனவுத் திகதி வரையான மேலதிக வட்டியும்

   பிரசித்த நொத்தாரிசு ஜே.சி. மஹாரச்சி அத்தாட்சிப்படுத்திய 2010.02.09ஆம் திகதிய 19ஆம் இலக்க ஈட்டுமுறி, 2010.07.22ஆம் திகதிய 33ஆம் இலக்க ஈட்டுமுறி, 2012.01.30ஆம் திகதிய 75ஆம் இலக்க ஈட்டுமுறி பிரசித்த நொத்தாரிசு என்.ரி. பத்திநாயக்க அத்தாட்சிப்படுத்திய 2014.01.03ஆம் திகதிய 2383ஆம் இலக்க ஈட்டுமுறி, 2014.06.24ஆம் திகதிய 2413ஆம் இலக்க ஈட்டுமுறி, பிரசித்த நொத்தாரிசு ஜே.சி. மஹாரச்சி அத்தாட்சிப்படுத்திய 2015.09.04ஆம் திகதிய 287ஆம் இலக்க ஈட்டுமுறி, 2016.06.01ஆம் திகதிய 332ஆம் இலக்க ஈட்டுமுறி, பிரசித்த நொத்தாரிசு சி.எல். யாப்பா அத்தாட்சிப்படுத்திய 2020.10.08ஆம் திகதிய 2144ஆம் இலக்க ஈட்டுமுறி என்பவற்றின் பேரில் பெற்றுக்கொள்ளப்பட்ட 25,000,000.00 ரூபாய் (இருபத்தைந்து மில்லியன் ரூபாய்) தவணைக் கடன் வசதியின் 2023.11.10 வரையான வட்டி மற்றும் முதல் நிலுவை மீது 27,509,300.31 ரூபாயும் (இருபத்தேழு மில்லியன் ஐந்நூற்று ஒன்பதாயிரத்து முந்நூறு ரூபாய் முப்பத்தொரு சதம்) அத்துடன் 24,811,908.15 ரூபாய் (இருபத்து நான்கு மில்லியன் எண்ணூற்றுப் பதினோராயிரத்துத் தொள்ளாயிரத்து எட்டு ரூபாய் பதினைந்து சதம்) முதல் நிலுவை மீது ஆண்டுக்கு 4.0 சதவீதப்படி 2023.11.11 தொடக்கம் கொடுப்பனவுத் திகதி வரையான மேலதிக வட்டியும் வருமதியாகவுள்ளது.

2. மேற்குறிப்பிட்ட ஈட்டுமுறி இலக்கங்கள் 189, 288, 510, 2026,3229,2119,3211,19,33,75, 2383, 2413,287,332 மற்றும் 2144 என்பவற்றின் பேரில் டி.பி. ஜயசிங்க பைலிங் கம்பனி (தனியார்) நிறுவனத்திடமிருந்து வருமதியாகவுள்ள மேற்குறித்த 771,474,166.10 ரூபாயையும் (எழுநூற்று எழுபத்தொரு மில்லியன் நானூற்று எழுபத்து நான்காயிரத்து நூற்று அறுபத்தாறு ரூபாய் பத்துச் சதம்) வரையறுக்கப்பட்ட டி.பி. ஜயசிங்க ருவஸ் அன்ட் ட்ரான்ஸ்போட் (தனியார்) நிறுவனத்திடமிருந்து வருமதியாகவுள்ள மேற்குறித்த 394,243,678.12 ரூபாயையும் (முந்நூற்றுத் தொண்ணூற்று நான்கு மில்லியன் இருநூற்று நாற்பத்து மூவாயிரத்து அறுநூற்று எழுபத்தெட்டு ரூபாய் பன்னிரண்டு சதம்) அத்துடன் 2023.11.11 தொடக்கம் விற்பனைத் திகதி வரையான மேற்குறிப்பிட்ட வட்டியையும் இலங்கை வங்கிக் கட்டளைச்சட்டத்தின் 26ஆம் பிரிவின்கீழ் அறவிட வேண்டிய செலவுகள் மற்றும் பணங்களையும் அறவிடும் பொருட்டு இலங்கை வங்கிக் கட்டளைச்சட்டத்தின் 19ஆம் பிரிவு (397ஆம் அத்தியாயம்) மற்றும் அதன் திருத்தங்களுக்கமைய இங்கு கீழேயுள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள இலங்கை வங்கிக்கு ஈடுவைத்த ஆதனங்களைப் பகிரங்க ஏலத்தில் விற்பதற்கு இல. 6A, பெயாபீல்ட் காடின், கொழும்பு 08 என்னும் முகவரியைச் சேர்ந்த M/s ஷொக்மன் மற்றும் சமரவிக்ரம ஏலதாரருக்கும் இலங்கை வங்கிக் கட்டளைச்சட்டத்தின் 21ஆம் பிரிவுக்கமைய இத்தீர்மானத்தின் அறிவித்தலை வெளியிடுவதற்கு இலங்கை வங்கி பெருநிறுவன அறவீட்டுப் பிரிவின் பிரதான முகாமையாளருக்கும் இத்தால் அனுமதியும் அதிகாரமும் வழங்கப்படுகின்றது.

   **ஈட்டுமுறி இலக்கங்கள் 189, 288, 510,2026,3229, 2119,19,33,75,2383,2413,287,332, 2144 என்பவற்றில் குறிப்பிடப்பட்ட அட்டவணை**

   உரிமம் பெற்ற நில அளவையாளர் காமினி பி. தொடன்வெல தயாரித்த 2004.01.17ஆம் திகதிய 4646A என்ற இலக்கமுடைய வரைபடத்தில் விபரிக்கப்பட்டுள்ள காணித்துண்டு 1 என அடையாளப்படுத்தப்பட்ட பிரிக்கப்பட்டதும் எல்லை வரையறுக்கப்பட்டதுமான காணி அதன்கண் காணப்படும் இல.717, 715A, 715B மற்றும் 715C டனிஸ்ரர் டி சில்வா மாவத்தை, தெமட்டகொட, கொழும்பு 09 என்ற வரிமதிப்பீட்டு இலக்கங்களைக் கொண்ட கட்டடங்களுடன் மேல் மாகாணம் கொழும்பு மாவட்டம் சல்பிட்டி கோரளை, பள்ளே பற்று, கொழும்பு மாநகரசபை மற்றும் பிரதேச செயலக எல்லைகட்குட்பட்ட கிராண்ட்பாஸ் தெற்கு கிராம சேவகர் பிரிவிலுள்ள கிராண்ட்பாஸ் பிரதேசத்தின் 14ஆம் வட்டாரத்தில் அமைந்துள்ளது. வடக்கில் இலக்கங்கள். 733, 741 மற்றும் 743 டனிஸ்ரர் டி சில்வா மாவத்தை என்ற வரிமதிப்பீட்டு இலக்கத்தைக் கொண்ட நிலமனைகளையும் கிழக்கில் டனிஸ்ரர் டி சில்வா மாவத்தையையும் தெற்கில் சிறி சதாராம மாவத்தை, காணித்துண்டு 2 என்பவற்றையும் மேற்கில் காணித்துண்டு 2, முஸ்லிம்களின் மயானம் என்பவற்றையும் எல்லைகளாகக் கொண்டுள்ள இக்காணி முப்பது தசம் ஐந்து இரண்டு (A0.RO.P30.52) பேர்ச்சுகள் பரப்பளவைக் கொண்டுள்ளதோடு கொழும்பு காணிப் பதிவகத்தில் D 282/46 என்ற இலக்கத்தின்கீழ் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

   **மேலே ஈட்டுமுறி இல. 3211இல் குறிப்பிடப்பட்ட அட்டவணை**

   உரிமம் பெற்ற நில அளவையாளர் காமினி பி. தொடன்வெல தயாரித்த 2004.01.17ஆம் திகதிய 4646A என்ற இலக்கமுடைய வரைபடத்தில் விபரிக்கப்பட்டுள்ள காணித்துண்டு 2 என அடையாளப்படுத்தப்பட்ட பிரிக்கப்பட்டதும் எல்லை வரையறுக்கப்பட்டதுமான காணி அதன்கண் காணப்படும் இல. 717, 715A, 715B, 715C டனிஸ்ரர் டி சில்வா மாவத்தை, தெமட்டகொட, கொழும்பு 09 என்ற வரிமதிப்பீட்டு இலக்கங்களைக் கொண்ட கட்டடங்களுடன் மேல் மாகாணம் கொழும்பு மாவட்டம் சல்பிட்டி கோரளை, பள்ளே பற்று, கொழும்பு மாநகரசபை மற்றும் பிரதேச செயலக எல்லைகட்குட்பட்ட கிராண்ட்பாஸ் தெற்கு கிராம சேவகர் பிரிவிலுள்ள கிராண்ட்பாஸ் பிரதேசத்தின் 14ஆம் வட்டாரத்தில் அமைந்துள்ளது. வடக்கில் காணித்துண்டு 1ஐயும் கிழக்கில் காணித்துண்டு 1ஐயும் தெற்கில் சிறி சதாராம மாவத்தையையும் மேற்கில் முஸ்லிம்களின் மயானத்தையும் எல்லைகளாகக் கொண்டுள்ள இக்காணி ஒன்பது தசம் ஆறு ஒன்பது (A0.R0.P9.69) பேர்ச்சுகள் பரப்பளவைக் கொண்டுள்ளதோடு கொழும்பு காணிப் பதிவகத்தில் D 66/95 என்ற இலக்கத்தின்கீழ் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

மேலும், மேற்குறிப்பிட்ட அட்டவணைகளில் நன்கு விபரிக்கப்பட்டுள்ள காணி மற்றும் நிலமனைகளுடன் தற்போது இணைக்கப்பட்டுள்ள ஏனைய அனைத்தும் இதில் அடங்கும்.

இலங்கை வங்கிப் பணிப்பாளர் சபைக் கட்டளைப்படி.

**திருமதி.D.K.S.N குணவர்தன**
**பிரதான முகாமையாளர்**
**பெருநிறுவன அறவிடற் பிரிவு**

**இலங்கை வங்கி**
**பெருநிறுவன அறவிடற் பிரிவு**
**3ஆம் மாடி, "BOC சதுக்கம்"**
**இல.1, இலங்கை வங்கி மாவத்தை கொழும்பு 01.**

1975 BOC CALL CENTRE www.boc.lk
A (lka) Fitch Rating, AAA Brand Finance Rating.
Bank of Ceylon is a Licensed Commercial Bank supervised by the Central Bank of Sri Lanka.
Head Office, BOC Square, No.1, Bank of Ceylon Mawatha, Colombo 1.
BANK OF CEYLON BOC Bankers to the Nation

# பெறுகை அறிவித்தல்

## தேசிய வைத்தியசாலை - கண்டி

## மின் அமைப்பு பராமரிப்பு மற்றும் சேர்விஸ் செய்தல் – 2024

கண்டி தேசிய வைத்தியசாலையின் 2024ம் ஆண்டிற்கு கீழ்க்காணும் வேலைகளை நிறைவேற்றுவதற்காக தகைமையுள்ள ஒப்பந்தக்காரர்களிடமிருந்து கேள்விகள் கோரப்படுகின்றன.

**கோவை இலக்கம் : NHK-AB-4-2024**

| வேலைகள் | தரம் | கேள்விப்பிணை ரூ | மீளளிக்கப்படாத கட்டணம் ரூ. |
|---|---|---|---|
| மின் அமைப்பு பராமரிப்பு மற்றும் சேவை விடயங்களில் எல்லை 2024 ஜனவரி 15 முதல் 2025 ஜனவரி 14 வரை | EM - 04 | ரூ. 100,000.00 | ரூ. 5,000.00 |

கேள்விதாரர்கள் கீழ்க்காணும் தேவைப்பாடுகளை பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

1. நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையின் (CIDA) EM 04 அல்லது அதற்கு மேல் தரங்களுக்கான பதிவு செய்திருத்தல் மற்றும் 2023ம் ஆண்டிற்காக பதிவு செல்லுபடியானதாக இருத்தல்.
2. இலங்கை நிர்மாண ஒப்பந்தக்காரரின் சங்கத்தின் (NCASL) பதிவைப் பெற்றிருத்தல்.
3. பொது வைத்தியசாலை அல்லது அரச நிறுவனமொன்றில் மேற்படி வேலையுடன் சம்பந்தப்பட்ட பராமரிப்பு / மற்றும் சேவை விடயங்களை நடத்திச் செல்லல் சம்பந்தமாக 05 வருடத்திற்கு மேற்பட்ட அனுபவம் பற்றிய சான்றிதழ்
4. வியாபார பதிவுச் சான்றிதழின் பிரதி
5. 05 மில்லியனுக்கு மேற்பட்ட கேள்விப் பத்திரங்களுக்கு இலங்கை கம்பனிகள் பதிவாளர் திணைக்களத்தின் பதிவுச் சான்றிதழ் (PCA3) 2023.12.01 மு.ப 9.00 முதல் 2023.12.21 பி.ப 2.00 வரை வாரத்தின் வேலை நாட்களில் மீளளிக்கப்படாத ரூ. 5000.00 தொகையை இவ்வைத்தியசாலையின் காசாளர் பிரிவிற்கு செலுத்திய பின்பு பெற்றுக் கொண்ட பற்றுச்சீட்டை தலைமையகத்திற்கு சமர்ப்பித்து கேள்விப் பத்திரங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

இரு பிரதிகளுடன் முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட கேள்விப் பத்திரங்களை கண்டி தேசிய வைத்தியசாலையின் காசாளர் பிரிவிற்கு கேள்விப் பிணைக்காக காசு செலுத்திப் பெற்றுக் கொண்ட பற்றுச்சீட்டு அல்லது அங்கீகரிக்கப்பட்ட வங்கி அல்லது - காப்புறுதி நிறுவனத்தில் இருந்து பணிப்பாளர், தேசிய வைத்தியசாலை, கண்டி பெயரில் பெற்றுக் கொண்ட ரூ. 100,000.00 பெறுமதியான 2024.03.10 வரை செல்லுபடியாகும் கேள்வி பிணையொன்றுடன் மூலப்பிரதி மற்றும் நகல்பிரதியை வேறு வேறு உறைகளில் இட்டு அவ் உறைகளின் இடது பக்க மேல் மூலையில் மூலப்பிரதி மற்றும் நகல் பிரதியென குறிப்பிட்டு இரு உறைகளையும் தனி உறையில் உள்ளிட்டு 2023.12.22 மு.ப 10.30 இற்கு முன் பதிவுத் தபாலில் கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்பலாம் அல்லது இவ் வைத்தியசாலையின் பிரதம கணக்காளர் பணிமனையில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் கையோடு கொண்டு வந்து உள்ளிடலாம். கேள்விப் பத்திரங்கள் உள்ளிட்டு அனுப்பப்படும் உறையின் இடது பக்க மேல் மூலையில் “2024 ஆண்டிற்கான மின் பராமரிப்பு விடயங்களுக்கு கேள்வி கோரல்” என்று தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும். 2023.12.22ம் திகதி மு.ப 10.30 இற்கு கேள்விப் பத்திரங்கள் திறக்கப்படுவதுடன் அவ்வேளைக்காக கேள்விதாரர்களின் பிரதிநிதியொருவர் சமுகமளிக்கலாம். கேள்வி பற்றிய வைத்தியசாலை பெறுகைச் சபையின் தீர்மானம் இறுதித் தீர்மானமாகும்.

மேலதிக விபரங்களுக்காக கண்டி தேசிய வைத்தியசாலையின் பணிப்பாளரை அழையுங்கள் (தொ.பே: 081 - 22333337 முதல் 42 வரை) திறந்த போட்டி முறையில் கேள்விகள் கோரப்படும்.

**பணிப்பாளர்,**
**தலைவர், பெறுகைக் குழு,**
**தேசிய வைத்தியசாலை, கண்டி.**

# கெபித்திகொல்லாவ பிரதேச சபைக்குச சொந்தமான பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட ஆதனங்களின் விற்பனை உரிமையை 2024ஆம் வருடத்தில் குத்தகைக்கு வழங்குவதற்காக கேள்விப் படிவங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்

| | | |
|---|---|---|
| கேள்விப் படிவங்கள் வழங்குதல் | - | 2023-12-01ஆம் திகதி முதல் 2023-12-14ஆம் திகதி பி.ப. 2.30 மணி வரை |
| கேள்விப் படிவங்கள் ஏற்றுக்கொள்ளல் | - | 2023-12-15ஆம் திகதி மு.ப. 10.00 மணி வரை |
| கேள்விப் படிவங்கள் திறக்கப்படுதல் | - | 2023-12-15ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு கெப்பித்திகொல்லாவ பிரதேச சபை கூட்ட மண்டபத்தில் இடம்பெறும். |

**அட்டவணை**

| தொ. இல. | கேள்வியிடப்படும் விற்பனை உரிமையின் தன்மை | வருடாந்த ஆகக் குறைந்த கேள்வி | மீளளிக்கப் படும் கேள்விப் பிணை வைப்புத் தொகை | கேள்விப் படிவக் கட்டணம் |
|---|---|---|---|---|
| 01 | கெபித்திகொல்லாவ வாரச்சந்தை சிற்றுண்டிச்சாலையுடன் | 3,000.000.00 | 60,000.00 | 2,000.00 |
| 02 | கெபித்திகொல்லாவ நகரத்தின் மீன் தட்டு | 150,000.00 | 3,000.00 | 2,000.00 |
| 03 | கெபித்திகொல்லாவ வாரச் சந்தை மீன் தட்டு இலக்கம் 01 | 40,000.00 | 800.00 | 2,000.00 |
| 04 | கெபித்திகொல்லாவ வாரச் சந்தை மீன் தட்டு இலக்கம் 02 | 40,000.00 | 800.00 | 2,000.00 |
| 05 | கெபித்திகொல்லாவ வாரச் சந்தை மீன் தட்டு இலக்கம் 03 | 40,000.00 | 800.00 | 2,000.00 |
| 06 | கெபித்திகொல்லாவ வாரச் சந்தை மீன் தட்டு இலக்கம் 04 | 40,000.00 | 800.00 | 2,000.00 |
| 07 | கெபித்திகொல்லாவ சந்தை இடப்பரப்பிலுள்ள பன்றியிறைச்சிக் கடை | 200,000.00 | 4,000.00 | 2,000.00 |
| 08 | முஸ்லிம் எட்டவிருவெவ மாட்டிறைச்சிக் கடை | 100,000.00 | 2,000.00 | 2,000.00 |
| 09 | எல்லவெவ மாட்டிறைச்சிக் கடை | 100,000.00 | 2,000.00 | 2,000.00 |
| 10 | வஹல்கட வாரச்சந்தை | 500,000.00 | 10,000.00 | 2,000.00 |
| 11 | போகஸ்வெவ வாரச்சந்தை | 20,000.00 | 400.00 | 2,000.00 |
| 12 | நாமல்கம வாரச்சந்தை | 20,000.00 | 400.00 | 2,000.00 |
| 13 | கெபித்திகொல்லாவ பொது மலசலகூடம் | 95,000.00 | 1,900.00 | 2,000.00 |
| 14 | வஹல்கட வாரச்சந்தை மலசலகூடம் | 5,000.00 | 100.00 | 2,000.00 |

01. மேற்படி அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள வகையில் மீளளிக்கப்படும் கேள்விப் பிணை முறித் தொகை, மீளளிக்கப்படாத கேள்விப் படிவக் கட்டணத்தை கெப்பித்திகொல்லாவ பிரதேச சபைக்கு ரொக்கப் பணமாகச் செலுத்தியதன் பின் 2023-12-14ஆம் திகதி பி.ப. 2.30 மணி வரை கேள்விப் படிவங்களைப் பெற்றுக்கொள்ளலாம். இவ்வேளையில் தேசிய அடையாள அட்டை அல்லது அதற்குச் சமமான செல்லுபடியாகும் ஏனைய அதிகாரப்பத்திரமொன்றைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

02. முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட கேள்விப்படிவங்களை நிர்ணயிக்கப்பட்ட நேரத்திற்கு முன் கெப்பித்திகொல்லாவ பிரதேச சபையில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் நேரில் கொண்டுவந்து உள்ளிடலாம் அல்லது பதிவுத் தபாலில் தலைவர், பிரதேச சபை, கெப்பித்திகொல்லாவ எனும் முகவரிக்கு அனுப்பலாம்.

03. முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை இரு நகல்களில் சமர்ப்பித்தல் வேண்டும். விண்ணப்பங்களை மூலப் பிரதி மற்றும் நகல் பிரதியென பூர்த்தி செய்து இரு வெவ்வேறு உறைகளில் இட்டு முத்திரைக் குறி பொறித்து பின் அதன் இடதுபக்க மேல் மூலையில் மூலப் பிரதி மற்றும் நகல் பிரதியெனக் குறிப்பிட்டு பின் அவ்விரு உறைகளையும் வேறொரு உறையில் இட்டு முத்திரைக் குறி பதித்து அதன் இடதுபக்க மேல் மூலையில் விற்பனை உரிமையைக் குறிப்பிட்டு சமர்ப்பித்தல் வேண்டும்.

04. கேள்விகள் திறக்கப்படும் வேளையில் கேள்விதாரர் அல்லது அவரது எழுத்துமூலம் அதிகாரம் வழங்கப்பட்ட பிரதிநிதியொருவர் கலந்துகொள்வதற்கு அனுமதி வழங்கப்படும்.

05. எல்லவெவ மற்றும் முஸ்லிம் எட்டவிருவெவ மாட்டிறைச்சி விற்பனை நிலையத்திற்காக கொலைக்கள வசதிகள் பிரதேச சபையினால் வழங்கப்பட மாட்டாது என்பதுடன் அதற்கான வசதிகளை இயைபுடைய நிறுவனத்தின் அனுமதியின் கீழ் கேள்வியைப் பெற்றுக்கொள்பவரே ஏற்படுத்திக்கொள்ள வேண்டும்.

06. அலுவலத்தில் சேவையாற்றும் அதிகாரிகள் மற்றும் அவர்களின் குடும்ப உறுப்பினர்களுக்கு இந்தக் கேள்விக்காக விண்ணப்பிக்க முடியாது.

07. கேள்வி நிபந்தனைகள் மற்றும் மேலதிக விபரங்களை கெப்பித்திகொல்லாவ பிரதேச சபை அலுவலகத்தில் அல்லது 025 2298675 எனும் தொலைபேசி இலக்கத்தில் அறிந்துகொள்ளலாம். கேள்விகள் தொடர்பில் கேள்விச் சபையின் தீர்மானமே இறுதித் தீர்மானமாகும்.

**செயலாளர்,**
**பிரதேச சபை,**
**கெப்பித்திகொல்லாவ.**

**2023-11-29ஆம் திகதி கெப்பித்திகொல்லாவ பிரதேச சபை அலுவலகத்தில்.**

# குருநாகல் நீதவான் நீதிமன்றம்

## நீ.வ.வி.தி. 431 பிரிவின் கீழ் மேற்கொள்ளப்படும் அறிவித்தல்

குருநாகல் நீதவான் நீதிமன்றத்தின் வழக்கு இல. 51729 என்ற வழக்கின் உரிமையாளர்கள் சமர்ப்பிக்காத பொருட்கள் சம்பந்தமாக பொருத்தமான உரிமையாளர்கள் இருப்பின் இவ் அறிவித்தல் பிரசுரிக்கப்பட்ட தினம் முதல் 06 மாதத்திற்குள் இந்த நீதிமன்றத்திற்கு சமுகம் தந்து தமது உரிமையை உறுதி செய்து பொருட்களை விடுவித்துக் கொள்ள முடியும் என தெரிவித்துக் கொள்கிறேன். உரிமையாளர் ஒருவர் முன்வராத பட்சத்தில் மேற்படி பொருட்களை அரசுரிமையாக்கப்படுவதாக இத்னால் அறிவிக்கிறேன்.

**பொருட்களின் பட்டியலை காட்சிப்படுத்தப்பட்டுள்ள இடங்கள்**

* நீதவான் நீதிமன்றம் - குருநாகல்
* பொலிஸ் நிலையம், கொகரெல்ல
* பிரதேச சபை, இப்பாகமுவ

**2023.11.06ம் திகதி**
**குருநாகல் மாவட்ட நீதிமன்றம்**

**நீதிமன்றத்தின் கட்டளைப் பிரகாரம்**
**பதிவாளர்**




# கொழும்பு மாநகர சபை

## விலைக்கோரல் / கேள்விக்கான அழைப்பு

தகுதியும் தகைமையுமுள்ள கேள்விதாரர்கள்/விலைமனுதாரர்களிடமிருந்து பின்வரும் பொருட்கள்/சேவை வழங்கல்களுக்காக பொறியிடப்பட்ட கேள்விகள் கொழும்பு மாநகர சபையின் மாநகர ஆணையாளரால் அழைக்கப்படுகின்றன.

| தொ. இல. | கேள்வி இல. | விபரம் | கேள்விதாரர்கள்/ விலைமனு தாரர்களின் தகைமை | மீளளிக்கப் படாத கேள்வி / விலைமனு ஆவணக் கட்டணம் | விலைமனு முறி / பிணை பெறுமதி ரூபா |
|---|---|---|---|---|---|
| 1. | CPD/ 17/ 2805/ 2023 | பத்தரமுல்லையிலுள்ள சிறுவர் இல்லம் மற்றும் வயோதிபர் இல்லத்திற்கான மரணச் சடங்கு நடவடிக்கைகள் | வர்த்தகப் பதிவுடன் இந்த வகையான வழங்கல்கள்/ சேவைகளில் அனுபவத்தை பெற்ற வழங்குநர்கள்/ சேவை வழங்குநர்கள் | ரூபா 2,300.00 | 10,000.00 ரூபாவுக்கான நிபந்தனையற்ற உடன் பணம் பெற்றுக்கொள்ள முடியுமான பிணை முறி |
| 2. | CPD/ 17/ 2800/ 2023 | அடையாளம் காண முடியாத ஏழ்மையானவர்களின் சடலங்களைப் புதைத்தல் மற்றும் சட்ட வைத்திய அதிகாரியினால் வழங்கப்பட்ட கட்டளையின் பிரகாரம் பொரளை பொலிஸ் பிரேத அறையில் உள்ள உரிமை கோர முன்வராத சடலங்களை பொரளை மயானத்தில் புதைத்தல் | | ரூபா 2,300.00 | 25,000.00 ரூபாவுக்கான நிபந்தனையற்ற உடன் பணம் பெற்றுக்கொள்ள முடியுமான பிணை முறி |
| 3. | CPD19/ 2671/ 2023 | சப்பாத்துகள், மேஸ்கள் மற்றும் சப்பாத்து பொலிஷ் வழங்குவதற்கான விலைக்கோரல் | | ரூபா 5,750.00 | 50,000.00 ரூபாவுக்கான நிபந்தனையற்ற உடன் பணம் பெற்றுக்கொள்ள முடியுமான பிணை முறி |
| 4. | CPD19/ 2672/ 2023 | சீருடைத் துணிகளை வழங்குவதற்கான விலைக்கோரல் | | ரூபா 5,750.00 | 150,000.00 ரூபாவுக்கான நிபந்தனையற்ற உடன் பணம் பெற்றுக்கொள்ள முடியுமான பிணை முறி |
| 5. | CPD10/ 2883/ 2023 | 2024ஆம் வருடத்திற்கான வீதிகளுக்கு அடையாளமிடும் தேர்மோபிளாஸ்டிக் பொருட்கள் (மஞ்சள் மற்றும் வெள்ளை நிற வெப்ப பிரயோகங்கள்) | | ரூபா 5,750.00 | 300,000.00 ரூபாவுக்கான நிபந்தனையற்ற உடன் பணம் பெற்றுக்கொள்ள முடியுமான பிணை முறி |
| 6. | CPD02/ 2806/ 2023 | ஒரு வருட காலத்திற்கு ஆற்று மணல், செங்கற்கள் மற்றும் மண் வழங்குவதற்கான விலைகளை அழைத்தல் | | ரூபா 5,750.00 | 300,000.00 ரூபாவுக்கான நிபந்தனையற்ற உடன் பணம் பெற்றுக்கொள்ள முடியுமான பிணை முறி |
| 7. | CPD17/ 2860/ 2023 | மேற்கத்திய மருந்துகளுக்கான பெறுகை | | ரூபா 5,750.00 | 500,000.00 ரூபாவுக்கான நிபந்தனையற்ற உடன் பணம் பெற்றுக்கொள்ள முடியுமான பிணை முறி |
| 8. | CPD24/ 0065/ 2023 (Part I) | 47 எண்ணிக்கையான மேசைக் கணனிகள், 05 எண்ணிக்கையான மடிக் கணனிகள், | | ரூபா 5,750.00 | 750,000.00 ரூபாவுக்கான நிபந்தனையற்ற உடன் பணம் பெற்றுக்கொள்ள முடியுமான பிணை முறி |
| 9. | CPD24/ 0065/ 2023 (Part II) | 04 எண்ணிக்கையான 10KV UPS களுக்கான பெறுகை | | ரூபா 5,750.00 | 100,000.00 ரூபாவுக்கான நிபந்தனையற்ற உடன் பணம் பெற்றுக்கொள்ள முடியுமான பிணை முறி |
| 10. | CPD02/ 2890/ 2023 | ஒரு வருட காலத்திற்கு கட்டிடம் மற்றும் வீதி நிர்மாணப் பொருட்களை (கற் தூள்கள்) வழங்குவதற்கான விலைகளை அழைத்தல் | | ரூபா 5,750.00 | 1,000,000.00 ரூபாவுக்கான நிபந்தனையற்ற உடன் பணம் பெற்றுக்கொள்ள முடியுமான பிணை முறி |

விலைமனு ஆவணங்களை (மூலப் பிரதி மற்றும் நகல் பிரதி) இரண்டு முறைகளில் பெற்றுக்கொள்ளலாம்.

**முறை 01 -** கொழும்பு மாநகர சபையின் இணையதளத்திலிருந்து (www.colombo.mc.gov.lk) தரவிறக்கம் செய்துகொள்ளலாம்.

i. மீளளிக்கப்படாத விலைமனு ஆவணக் கட்டணத்தை பின்வரும் வகையில் செலுத்துதல் வேண்டும்.
   அ) எந்தவொரு மக்கள் வங்கிக் கிளையிலும் மக்கள் வங்கி நகர மண்டப கிளையில் பேணப்படும் 167-1-001-6-3169425 எனும் கணக்கிலக்கத்திற்கு வரவு வைக்கலாம்.
   ஆ) கொழும்பு மாநகர சபை எல்லைக்குள் அமைந்துள்ள பின்வரும் கொடுப்பனவு கருமபீடங்களில் வார நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரை செலுத்தலாம்.
      ➢ வட்டார அலுவலகம் 04, இல. 147, ஹைலெவல் வீதி, கிருலப்பனை, கொழும்பு 06.
      ➢ வடிகாலமைப்பு மற்றும் நீர் வழங்கல் பிரிவு, மாளிகாகந்த, கொழும்பு 10.

ii. பற்றுச்சீட்டு / வங்கி வரவுத் துண்டை விலைமனு ஆவணங்களுடன் கட்டாயம் இணைத்தல் வேண்டும்.

**முறை 02 - நகர மண்டப வளவில் பெற்றுக்கொள்ளலாம்.**

அ. ஒவ்வொன்றிற்கும் மீளளிக்கப்படாத விலைமனுக்கோரல் / கேள்வி ஆவணக் கட்டணத்தை 2023-12-20ஆம் திகதி வரையான வேலை நாட்களில் மு.ப. 9.00 மணியிலிருந்து பி.ப. 3.00 மணி வரையும் நகர மண்டப காசாளர் கருமபீடத்திற்கு செலுத்தி மற்றும் எழுத்து மூலமான கோரிக்கையொன்றை சமர்ப்பிப்பதன் மூலம், கொழும்பு-07, நகர மண்டபம், கொழும்பு மாநகர சபை, மத்திய பெறுகை திணைக்கள அலுவலகத்திலிருந்து விலைமனுக்கோரல் / கேள்வி ஆவணங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

ஆ. விலைமனுக்கோரல் / கேள்வி ஆவணங்கள் 2023 டிசம்பர் 20ஆம் திகதி பி.ப. 3.00 மணிக்குப் பின் வழங்கப்படமாட்டாது / இணையதளத்தில் பெற்றுக்கொள்ள முடியாது.

இ. நிபந்தனையற்ற கோரும்போது பெறத்தக்கதான விலைமனு முறி/ பிணை கேள்விமனுக்கள்/ விலைமனுக்கள் மூடப்படும் திகதியிலிருந்து 150 நாட்கள் வரை செல்லுபடியாதல் வேண்டும். விலைமனு முறி/ பிணை 2024.05.19ஆம் திகதி வரை செல்லுபடியாதல் வேண்டும்.

ஈ. உரிய முறையில் பூர்த்தி செய்யப்பட்டு முத்திரையிடப்பட்ட விலைமனுக்கோரல் / கேள்வி ஆவணங்களை மூலப் பிரதி மற்றும் நகல் பிரதிகளில் கொழும்பு-07, நகர மண்டபம், செயலாளரின் திணைக்களத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் 2023 டிசம்பர் 21ஆம் திகதி மு.ப. 10.00 மணி அல்லது அதற்கு முன்னர் உள்ளிடல் வேண்டும்.

உ. 2023 டிசம்பர் 21ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு கேள்வி/ விலைமனு ஏற்றுக்கொள்வது முடிவுறுத்தப்படும் என்பதுடன் இறுதி நேரத்திற்கு பின் கிடைக்கப்பெறும் கேள்வி/ விலைமனுக்கள் நிராகரிக்கப்படும் என்பதோடு அதன் பின்னர் கேள்வி/ விலைமனுக்கள் உடன் திறக்கப்படும். இந்த நாள் பொது விடுமுறை தினமாக அறிவிக்கப்பட்டால், அடுத்து வரும் வேலை நாளில் 10.00 மணிக்கு கேள்வி/ விலைமனுக்கள் மூடப்படும். கேள்வி/விலைமனுக்கள் திறக்கப்படும் நிகழ்வில் பங்கேற்பதற்கு கேள்விதாரர்கள்/ விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் அங்கீகாரம் பெற்ற பிரதிநிதிகள் அனுமதிக்கப்படுவர். 0112-686389, 0112-686369, 0112-662329 என்ற தொலைபேசி இலக்கங்களில் தலைமை கணக்காளர் (பெறுகை) அவர்களிடமிருந்து மேலதிக விபரங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

ஊ. 5.0 மில்லியன் ரூபாவுக்கு மேற்பட்ட கேள்வி/ விலைமனுக்களைக் கொண்ட கேள்விதாரர்கள்/ விலைமனுதாரர்கள் 1987ஆம் ஆண்டின் 03ஆம் இலக்க பொது ஒப்பந்த சட்டத்திற்கு அமைய பொது ஒப்பந்தப் பதிவுடன் பதிவு செய்த பின் PCA (3) ஆவணத்தை சமர்ப்பித்தல் வேண்டும்.

**ஜே.எம். பத்ராணி ஜயவர்தன,**
**மாநகர ஆணையாளர்,**
**கொழும்பு மாநகர சபை.**

www.adz.lk
it's what you want

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2023 டிசம்பர் மாதம் 1ம் திகதி வெள்ளிக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.

## குருவிட்ட பிரதேச சபை

# சபைக்குச் சொந்தமான "போபத்எல்ல" காட்சிப் பிரவேசம் மற்றும் வாகனவரி பெற்றுக் கொள்வதற்கான கேள்வி கோரல் – 2024

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்படும் சொத்துக்களை குத்தகை அடிப்படையில் வழங்குவதற்காக பொறியிடப்பட்ட கேள்விப்பத்திரங்கள் என்னால் ஏற்கப்படும்.

**01. கேள்விப்படிவம் விநியோகிக்கப்படும் திகதி மற்றும் நேரம்**
**2023 டிசம்பர் 01 முதல் 2023 டிசம்பர் 21 பி.ப. 3.00**

**02. கேள்விப்படிவம் ஏற்றுக் கொள்ளும் இறுதித் திகதி மற்றும் நேரம்**
**2023 டிசம்பர் 22 மு.ப. 10.00**

**03. கேள்விப்படிவம் திறக்கப்படும் தினம் மற்றும் நேரம்**
**2023. டிசம்பர் 22 மு.ப. 10.30**

(இவ் வேளையில் கேள்விதாரர் அல்லது அவரது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதியொருவர் சமுகமளிக்கலாம்)

கேள்விப்படிவக் கட்டணம் மற்றும் பிணை வைப்பிற்காக காசோலைகள் அல்லது காசுக்கட்டளைகள் ஏற்கப்படமாட்டாது. கேள்வி பற்றிய இறுதித் தீர்மானம் குருவிட்ட பிரதேச சபைக்கு உரியது.

சகல கேள்விப்பத்திரங்களும் 2023 டிசம்பர் 22 மு.ப. 10.00 இற்கு முன் கிடைத்தல் வேண்டும் அத்துடன், சகல கேள்விப்பத்திரங்களையும் குருவிட்ட பிரதேச சபையின் கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும். இது பற்றிய மேலதிக விபரங்களை அலுவலக நேரங்களில் நேரில் அல்லது குருவிட்ட பிரதேச சபையின் செயலாளரின் 045 - 2262276, என்ற, தொலைபேசி இலக்கத்தின் மூலம் விசாரித்து அறிந்து கொள்ளலாம்.

**அட்டவணை**

| தொடர் இலக்கம் | சொத்தின் பெயர் | கேள்விப் படிவக் கட்டணம் ரூ. | மீளளிக்கப்படும் கேள்விப் பிணை வைப்புத் தொகை ரூ. | குறைந்தபட்ச கேள்வித் தொகை ரூ. |
|---|---|---|---|---|
| 01 | போத் எல்ல காட்சிப் பிரவேசம் மற்றும் வாகன நிறுத்துமிடம் | 5000.00 | 5000.00 | 5,536,048.00 |

**2023 டிசம்பர் 01ம் திகதி**
**குருவிட்ட பிரதேச சபை**
**அலுவலகத்தில்**

**எஸ்.எச்.ஆர். வீரக்கொடி**
**செயலாளர் மற்றும் அதிகாரம் மற்றும் செயற்பாடுகளை அமுல்படுத்தும் அதிகாரி,**
**பிரதேச சபை**
**குருவிட்ட**

## பெயர் மாற்றம்

கவுஸ்வத்த வீதி, கொடபிடிய அகுறஸ்ஸயில் வசித்துவரும் "பஞ்சவர்ணன் ஷானிகா" ஆகிய நான் இஸ்லாம் மதத்தை தழுவி எனது பெயரை மொஹமட் ஹமத் பாத்திமா ஷாமிலா (MOHAMED HAMADH FATHIMA SHAMILA) என மாற்றியுள்ளேன் என்பதனை இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசுக்கும் பொது மக்களுக்கும் அறியத்தருகின்றேன்.

**மொஹமட் ஹமத் பாத்திமா ஷாமிலா**

**Repeat Your Ad For Better Offers**

it's what you want **www.adz.lk**

## பெறுகை அறிவித்தல்

### மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபை (மே.மா)

(மாகாண வீதிகள், போக்குவரத்து, கூட்டுறவு அபிவிருத்தி, வர்த்தகம், வீடமைப்பு நிர்மாணத்துறை, தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் கிராமிய அபிவிருத்தி அமைச்சு – மேல் மாகாணம்)

### தரையோடு, கிரனைட் மற்றும் கூரை நிர்மாணத்திற்குத் தேவையான பொருட்களைக் கொள்வனவு செய்தல்

**விலைமனு இல. PRDA/WP/PRO/2023/104**

இந்த அதிகார சபையினால் பின்வருவனவற்றைக் கொள்வனவு செய்வதற்காக இவ்வாறான வழங்கல்களை மேற்கொள்ளும் அங்கீகரிக்கப்பட்ட வழங்குநர்களிடமிருந்து திறந்த கேள்விகள் கோரப்படுகின்றன.

| தொ. இல. | விபரங்கள் | விலைக்கோரல் பிணை முறி (ரொக்கப் பணமாக) | விலைக்கோரல் பிணை முறி (வங்கி / காப்புறுதி நிறுவனம்) |
|---|---|---|---|
| 01 | மீகொட ஆயுர்வேத சிசிச்சை நிலையத்திற்குத் தேவையான தரையோடுகளைக் கொள்வனவு செய்தல் | 5,000.00 | 10,000.00 |
| | மீகொட தங்கி சிகிச்சைபெறும் நோயாளர் விடுதி 5 அலகிற்கு தரையோடு மற்றும் கிரனைட் கொள்வனவு செய்தல் | 5,000.00 | 10,000.00 |
| | வகவத்த அஸ்போல்ட் முற்றவெளியில் கற்தூளை மூடுவதற்காக கூரையை நிர்மாணிப்பதற்குத் தேவையான பொருட்களை கொள்வனவு செய்தல் | 8,000.00 | 16,000.00 |

02. மேற்கூறப்பட்ட உருப்படிகளுக்கு இயைபான விபரமான தகவல்கள் கேள்விப் படிவத்தில் தரப்பட்டுள்ளன.

03. இதன் பொருட்டான கேள்வி ஆவணத் தொகுதியினை 2023.12.01ஆம் திகதியிலிருந்து 2023.12.08ஆம் திகதி மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 2.30 மணி வரை 1,178.75 ரூபா கேள்விப்படிவக் கட்டணத்தைச் செலுத்தி (அதிகார சபையில் பதிவு செய்துள்ளவர்கள் தவிர்ந்தவர்கள்) இவ்வதிகார சபையின் கேள்விப் பிரிவிலிருந்து பெற்றுக் கொள்ளலாம். இதற்கான கேள்விப் பிணையை பணமாக அல்லது வங்கிப் பிணை முறி மூலம் மேற்குறிப்பிடப்பட்டுள்ள பெறுமதிக்கு கேள்வி ஆவணத்தில் தரப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு அமைவாக சமர்ப்பித்தல் வேண்டும்.

04. இந்தக் கேள்விகளை ஏற்றுக்கொள்ளல் மற்றும் திறக்கப்படுதல் 2023-12-11ஆம் திகதி மு.ப. 11.00 மணிக்கு இந்த அலுவலகத்தில் இடம்பெறும் என்பதுடன் இந்நிகழ்வில் கேள்விதாரர் அல்லது அவரது அதிகாரபூர்வ பிரதிநிதியொருவர் கலந்து கொள்ளலாம்.

**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**மாகாண வீதி. அபிவிருத்தி அதிகார சபை (மே.மா),**
**இலக்கம் 59, புனித செபஸ்தியன் மேடு,**
**கொழும்பு -12.**
**தொ. இலக்கம் 011-4849825**

## டெண்டர் அறிவித்தல்

### வலப்பனை பிரதேச சபை

வலப்பனை பிரதேச சபைக்கு சொந்தமான கீழ்வரும் அட்டவணையில் குறிப்பிட்டுள்ள இடங்கள் 2024.12.01ம் திகதி முதல் 2024.12.31 வரை கால வரையறைக்குள் குத்தகைக்கு விடுவதற்கு சீல் வைக்கப்பட்ட டெண்டர் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

- டெண்டர் விண்ணப்பப்பத்திரம் வெளியிடல் - 2023.12.01ம் திகதி முற்பகல் 9.00 முதல் 2023.12.19ம் திகதி பிற்பகல் 3.00 வரை
- டெண்டர் விண்ணப்பப்பத்திரம் பொறுப்பேற்று கொள்ளல் - 2023.12.01 திகதி மு.ப 10.00 முதல் 2023.12.20 பிற்பகல் 1.30 வரை
- டெண்டர் விண்ணப்பப்பத்திரம் திறத்தல் - 2023.12.20 திகதி பிற்பகல் 2.00 இற்கு

| இல | டெண்டர் படி குத்தகைக்கு வழங்கும் இடம் | | மீண்டும் செலுத்தாத டெண்டர் படிவ தொகை | மீண்டும் செலுத்தும் டெண்டர் வைப்புத் தொகை | குறைந்த ஏலம் | கடை அறை வைப்பு |
|---|---|---|---|---|---|---|
| 01 | இராகலை வாரச்சந்தை | | 1,500.00 | 25,000.00 | 735,000.00 | - |
| 02 | இராகலை பொதுமலசலகூடம் | | 1,500.00 | 25,000.00 | 916,000.00 | - |
| 03 | வலப்பனை வாரச்சந்தை இலக்கம் 03 | | 1,500.00 | 25,000.00 | 609,000.00 | - |
| 04 | வலப்பனை பொது மலசலகூடம் (பஸ் நிலைய அருகில் புதிய மலசலகூடம்) | | 1,500.00 | 25,000.00 | 300,000.00 | - |
| 05 | நில்தண்டாஹின்ன பொது மலசலகூடம் | | 1,500.00 | 25,000.00 | 500,000.00 | - |
| 06 | வலப்பனை பொதுச்சந்தை கடை அறை | இலக்கம் 62/7 | 1,500.00 | 25,000.00 | 3,500.00 | 35,000.00 |
| | | இலக்கம் 62/6/1 | 1,500.00 | 25,000.00 | 4,000.00 | 40,000.00 |
| 07 | ராகல மீன் கடை (ராகல குறுக்கு வீதி மேல் மாடியின் கடை அறை 01) | | 1,500.00 | 25,000.00 | 250,000.00 | - |
| 08 | ராகல மீன் கடை (ராகல குறுக்கு வீதி மேல் மாடியின் கடை அறை 02) | | 1,500.00 | 25,000.00 | 250,000.00 | - |
| 09 | ராகல மீன் கடை (ராகல குறுக்கு வீதி மாடியின் கடை அறை 03) | | 1,500.00 | 25,000.00 | 250,000.00 | |

- இந்த டெண்டர் அறிவிப்பின் நிபந்தனைகள் மற்றும் விவரக் குறிப்புகளை விட அதிகமான நிபந்தனைகள் மற்றும் விவரக் குறிப்புகள் டெண்டர் படிவங்களைப் பெற்றவுடன் அலுவலகத்தில் இருந்து வழங்கப்படும்.
- கடந்த ஆண்டின் குத்தகை வழங்கலை மீறியுள்ளவர்களால் சமர்ப்பிக்கப்படும் கேள்வி விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.
- அலுவலகத்தால் வழங்கப்பட்ட டெண்டர்களின் இரண்டு நகல்களைத் தயாரித்து, ஒவ்வொரு கடித உறையின் மேல் வலது மூலையில் அசல் பிரதி மற்றும் உப பிரதி என பெயரிட்டு, அந்த இரண்டு கடித உறைகளையும் ஒரு கடித உறையில் வைத்து இடதுபுற மேல் மூலையில், டெண்டரை அழைப்பதற்கு உரிய டெண்டரின் பெயரை குறிப்பிட்டு, தலைவர், பிரதேச சபை, வலப்பனை என்ற முகவரிக்கு பதிவு தபால் மூலமாகவோ அல்லது நேரடியாக கொண்டு வந்து அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள டெண்டர் பெட்டியில் இடவும் முடியும்.
- டெண்டர் படிவம் ஏற்றுக்கொள்ளப்பட்டது என அறிவித்து 07 நாட்களுக்குள் வெற்றிபெற்ற டெண்டர் தொகையில் 06 மாதகால வைப்பு தொகையாக வைப்பிலிட்டு ஒப்பந்தம் கையொப்பமிடப்படுதல் வேண்டும்.
- டெண்டர் ஏற்றுக்கொள்ளுதல் மற்றும் நிராகரித்தலின் அதிகாரம் கொள்முதல் குழுவிற்கு உரியது.
- மேலதிக விபரங்களுக்காக அலுவலக நேரத்தினுள் 052-2279410 தொலைபேசி இலக்கத்தின் ஊடாக தொடர்புகொண்டு பெற்றுகொள்ள முடியும்.

**2023.12.01**
**வலப்பனை பிரதேசசபை**

**டி.எம்.டி.பீ. சேனாநாயக்க**
**செயலாளர்**
**வலப்பனை பிரதேசசபை**

Daily News **Classifieds, the Housewives' companion**

## கொள்முதல் அறிவித்தல்

### நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சு
### தேசிய சமூக நீர் வழங்கல் திணைக்களம்

DNCWS

## கேள்வி மனுக்கோரல்

திணைக்கள கொள்முதல் குழுவின் தலைவரினால் பின்வரும் பணிகளுக்கு தகுதியான மனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட மனுக்கள் கோரப்படுகின்றன.

| பெயர் மற்றும் ஒப்பந்தத்தின் பெயர் | தகமைகள் | மீளளிக் கப்படாத கட்டணம் LKR | மனு செல்லுபடியாகும் (நாட்கள்) | மனுப் பாதுகாப்பு LKR | மனுப் பாதுகாப்பு செல்லுபடியாகும் (நாட்கள்) | மனுக்கள் மூடப்படும் திகதி மற்றும் நேரம் |
|---|---|---|---|---|---|---|
| Civil Works at Nuwaraeliya District, Magasthota, Ruwaneliya, Senthamil CBOs Contract No : **DNCWS/PRO/2023/ CV/NE/05** | ICTAD Grade C9/C8/C7 | **2,000** | 63 | **40,000** | 30.03.2024 | 15.12.2023 |
| Civil Works at Nuwaraeliya District, Kothmale, Dombadahthalawa, Randiya CBOs Contract No : **DNCWS/ PRO/2023/ CV/NE/06** | ICTAD Grade C9/C8/C7 | **2,000** | 63 | **40,000** | 30.03.2024 | |
| Civil Works at Polonnaruwa District, Dibulagala, Ihalaellawala, Suwashakthi CBOs Contract No : **DNCWS/PRO/2023/ CV/PO/01** | ICTAD Grade C8/C7/C6 | **3,500** | 77 | **95,000** | 30.03.2024 | |
| Civil Works at Kandy District, Delthota Little Velly, Litter velly CBO Contract No : **DNCWS/PRO/2023/ CV/KA/02** | ICTAD Grade C7/C8/C9 | **1,500** | 63 | **40,000** | 16.03.2024 | |
| Civil Works at Kurunegala District, Bamunukotuwa, Ganthiriyawa, Ganthiriyawa CBO Contract No : **DNCWS/PRO/2023/ CV/KN/02** | ICTAD Grade C7/C8/C9 | **1,500** | 63 | **25,000** | 16.03.2024 | |
| Supply & Delivery of Advanced Water Treatment Plant Lot 01 Contract No : **DNCWS/PRO/2023/ Advanced Water Filter Systems/Lot 01** | Advanced Water Treatment Plant Suppliers | **5,000** | 77 | **200,000** | 30.03.2024 | |
| Supply & Delivery of Advanced Water Treatment Plant, Puttalam District WT/04 Contract No : **DNCWS/PRO/2023/ Advanced Water Filter Systems/WT 04** | Advanced Water Treatment Plant Suppliers | **3,500** | 77 | **100,000** | 30.03.2024 | |

**பொதுப் பணிகள் மற்றும் குழாய் பதிக்கும் பணிகளுக்கு, ICTAD தரநிலைகள் நீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் எனக் கருதப்படுகின்றன.**

**மேல் குறிப்பிடப்பட்ட விடயங்களுக்கான பொது விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் :**

01. கோள்விப்பத்திரங்களை **கடிதத்தலைப்பில் எழுதப்பட்ட கோரிக்கை மற்றும் மீளச்செலுத்தப்படாத கட்டணத்தைச் செலுத்தி பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டினை** தேசிய சமூக நீர் வழங்கல் திணைக்களத்தின் 2வது மாடியில் உள்ள கொள்முதல் பிரிவில் சமர்ப்பித்து **2023.12.01 ஆம் திகதி முதல் 2023.12.14 ஆம் திகதி வரை மு.ப.9.00 மணி முதல் பி.ப.3.00** வரையான காலப்பகுதியினுல் மனு ஆவணங்கள் பெற்றுக்கொள்ளலாம் (மனு ஆவணங்களைப் பெற்றுக்கொள்ள கொள்முதல் பிரிவைத் தொடர்பு கொள்ளவும்)

02. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் மேலதிக விபரங்களை தேசிய சமூக நீர் வழங்கல் திணைக்களத்திடமிருந்து பெற்றுக்கொள்வதுடன் **சாதாரண வேலை நாட்களில் (9.00 மணிமுதல் 3.00 மணிவரை) 2023.12.01 ஆம் திகதியிலிருந்து 2023.12.14 ஆம் திகதி வரை மனு** ஆவணங்களை வழங்கும் இடத்தில் இலவசமாகப் பரிசீலனை செய்யலாம்.

03. கேள்வி மனுக்களை திணைக்களத்தின் 2வது மாடியில் **(கொள்முதல் பிரிவில்)** வைக்கப்பட்டுள்ள **விலைமனுக்கோரல் பெட்டியினுள்** இடல் அல்லது கீழே கொடுக்கப்பட்டுள்ள முகவரிக்கு **பதிவுதபால் மூலமாக அல்லது விரைதூதர் மூலமாக** அனுப்பிவைக்க வேண்டும்.

04. மேலதிக தகவலுக்கு, பணிப்பாளரை **(கொள்முதல்)** தொடர்பு கொள்ளவும் - **தொலைபேசி 011 2 774927.**

05. **கேள்வி மனுக்கள் கேள்வி மனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் கீழே குறிப்பிடப்பட்டுள்ள அதே முகவரியில் 2023.12.15** ஆம் திகதி **மு.ப.10.15** மணிக்கு மேலே உள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளபடி கலந்துகொள்ளத் தேர்ந்தெடுக்கும் ஏலதாரரின் பிரதிநிதி முன்னிலையில் திறக்கப்படும். **தாமதமான ஏலங்கள் திறக்கப்படாமல் திருப்பி அனுப்பப்படும்.**

06. மனுப் பாதுகாப்பு பணிப்பாளர் நாயகம், தேசிய சமூக நீர் வழங்கல் திணைக்களம், இல-1114, பன்னிபிட்டிய வீதி, தலவத்துகொடைக்கு முகவரியிடப்படல் வேண்டும்.

**தலைவர்,**
